நாலாயிர திவ்ய பிரபந்தம்.

P.B. அண்ணங்கராச்சாரியார்

நெ. 2 20—3—1944 இரண்டாம் பகுதி

ஸ்ரீ:

சென்னைத் தொண்டமண்டலம் வித்யா நிலயத்தில்
நடைபெற்றுவரும் பகவத் கதா ப்ரஸங்க ஸபையின்

நீடூழி ஞாபக சின்னமாக

வெளியிடப்பட்டுவரும்

நாலாயிர திவ்ய ப்ரபந்தவுரை

★

உரையாசிரியர்

ஸ்ரீ காஞ்சி P. B. அண்ணங்கராசாரியர்

—: கிடைக்குமிடம் :—

Sri. A. Shanmugasundara Mudaliar Avl.,

Secretary, Bhagavathkatha Prasanga Sabha and Hony. Presidency Magistrate.

76, Nattupillayar Koil St., G.T., MADRAS.

விலை ஒரு ரூபாய்] [தபால் செலவு தனி

படர் பங்கயம் மலர் வாய் நெகிழ	படர்ந்திருக்கிற பெருத்திருந்துள்ள தாமரைப்பூ (மொட்டாயிராமல்) வாய்திறந்து மலர
	(அதில் நின்றும் பெருகுகின்ற)
பனி படு சிறு துளி போல	குளிர்ச்சி பொருந்திய (தேனினுடைய) சிறுத்த துளியைப்போலே
இடம் கொண்ட செவ்வாய் ஊறி ஊறி	பெருமை கொண்டுள்ள தனது சிவந்த வாயினின்றும் (ஜலமானது) இடைவிடாமற் சுரந்து
இற்று இற்று வீழ நின்று	(நடுவே) முறிந்து முறிந்து கீழேவிழும்படி நின்று
கடும் சே கழுத்தில் மணி குரல் போல்	கொடிய ரிஷபத்தின் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியினுடைய ஒலி போலே
உடை மணி கண கண என	(தனது) திருவரையிற் கட்டிய மணி கணகணவென் றொலிக்க

[சடந்தா ளித்யாதி முதற்பாட்டிற்போல் பொருள் காண்க.]

* * *—மலர்ந்த தாமரைப்பூவில் நின்றும் தேன் சிறு சிறு துளியாய்ப் பெருகி வடிவதுபோலத் தனது வாயில் நின்றும் இடைவிடாமல் ஜலம் பெருகவும், எருது நடந்து போம்போது அதன் கழுத்திற் கட்டிய மணி கணகணவென்று சப்திப்பதுபோலத் திருவரையில் சாத்திய மணி சப்திக்கவும் தளர் நடை நடந்து வரவேணு மென்கை. ... ... (எ)

93 பக்கங்கருஞ்சிறுப்பாறைமீதே அருவிகள்பகர்ந்தனைய*
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல்புடைபெயர*
மக்களுலகினிற்பெய்தறியா மணிக்குழவியுருவின்*
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (அ)

கரு சிறு பாறை பக்கம் மீது	கருநிறமான சிறிய மலையினுடைய பக்கத்திலே
	(மேடும்பள்ளமுமான இடங்களிற் பாய்கிற)
அருவிகள்	நீரருவிகள்
பகர்ந்து அனைய	ப்ரகாசிப்பதை ஒத்திருக்கிற
	(திருவரையிற்சாத்திய)
அக்கு வடம்	சங்குமணி வடமானது
ஏறி இழிந்து தாழ	உயர்ந்தும் தாழ்ந்தும் தொங்கி ப்ரகாசிக்கவும்
அணி அல்குல் புடை பெயர	அழகிய நிதம்பம் பக்கங்களிலே அசையவும்
உலகினில் மக்கள் பெய்து அறியா	உலகத்திலுள்ள மனிதர் பெற்றறியாத
மணி குழவி உருவின்	அழகிய குழந்தை வடிவத்தை யுடையவனும்

[தக்க இத்யாதி இரண்டாம் பாட்டிற் போலப் பொருள் காண்க]

* * *—கருநிறத்தையுடைய திருவரையிற் சாத்திய வெண்ணிறமான சங்குமணி வடமானது, தளர்நடை நடக்கும்போது முன்பின்னாக மாறிமாறி ப்ரகாசிப்பதானது-கரிய சிறுமலையின் பக்கத்திலே வெள்ளருவி மேடும் பள்ளமுமான இடங்களில் ப்ரகாசிப்பதை ஒத்திருக்கிறபடி. பாறை-இலக்கணையால் மலையை உணர்த்திற்று, பகர்ந்தனைய-'பகர்ந்ததனைய' என்பதன் விகாரம். அன்றி வினையெச்சத்திரிபாகக்கொண்டு-பகர்ந்தால் (அதை) அனைய என்று கொள்ளினுமாம். ... ... (அ)

94 வெண்புழுதிமேற்பெய்துகொண்டளைந்ததோர் வேழத்தின்கருங்கன்றுபோல்*
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்படவியர்த்து*
ஒண்போதலர்கமலச் சிறுகாலுறைத்தொன்றும்நோவாமே*
தண்போதுகொண்டதவிசின்மீதே தளர்நடைநடவானோ. (கூ)

திரிவிக்கிரமன்	(தனது) மூவடியால் (உலகங்களை) அளந்தவனாகிய இவன்
வெள் புழுதி	வெளுத்த புழுதியை
மேல் பெய்துகொண்டு	மேலே போகட்டுக்கொண்டு
அளைந்தது	அளைந்ததாகிய
ஓர் வேழத்தின் கரு கன்று போல்	ஒருகரிய குட்டியானைபோல்,
தெள் புழுதி ஆடி	தெளிவான புழுதியிலே விளையாடி
சிறு புகர் பட வியர்த்து	சிறிது காந்தி உண்டாக வேர்த்துப்போய்,
போது அலர் ஒள் கமலம் சிறு கால்	உரியகாலத்திலே மலர்ந்த அழகிய தாமரைப்பூவை ஒத்த சிறியபாதங்கள்

உறைத்து	(ஏதேனும் ஒன்று) உறுத்த (அதனால்)
ஒன்றும் நோவாமே	சிறிதும் நோவாதபடி
தண் போது கொண்ட தவிசின் மீது	குளிர்ந்த புஷ்பங்களையுடைய மெத்தையின் மேலே
	தளர்நடை நடவானோ—.

* * *—பரந்த திருவடிகளைக் கொண்டு உலக மூன்றையுமளந்த இவன் தனது சிறிய அடிகளைக்கொண்டு புஷ்பமெத்தையின்மேல் காலுறுத்தாமல் மெல்ல நடக்கவேணுமென்கிறார். கருநிறமான கண்ணன் திருமேனியிற் படிந்த புழுதியில் வேர்வைநீர் அழகியதாய்க் காணப்படுதலால், 'புழுதியாடிச் சிறுபுகர்பட வியர்த்து' எனப் பாராட்டிக்கூறினர். உறைத்து—உறைக்க;எச்சத்திரிபு. (௯)

95 திரைநீர்ச்சந்திரமண்டலம்போல் செங்கண்மாற்கேசவன்றன்*
திருநீர்முகத்துத்துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும்புடைபெயர*
பெருநீர்த்திரையெழுகங்கையிலும் பெரியதோர்தீர்த்தபலந்
தருநீர்*சிறுச்சண்ணந்துள்ளஞ்சோரத் தளர்நடைநடவானோ. (௰)

செம் கண் மால் கேசவன்	சிவந்த கண்களையும் கருநிறத்தையுமுடைய இவன்,–
திரை நீர்	அலைகின்ற நீரையுடைய ஸமுத்ரத்தின் நடுவில்
	(அசைந்து தோன்றுகிற)
சந்திரன் மண்டலம் போல்	ப்ரதிபிம்ப சந்த்ரமண்டலத்தைப்போல
தன் திரு நீர் முகத்து துலங்கு சுட்டி	தன்னுடைய அழகிய ஒளியையுடைய திருமுகத்திலே விளங்குகின்ற சுட்டியானது
எங்கும்	எல்லாவிடத்திலும்
திகழ்ந்து	ப்ரகாசித்துக்கொண்டு
புடை பெயர	இடமாகவும் வலமாகவும் அசையவும்
பெரு நீர் திரை எழு கங்கையிலும்	சிறந்த தீர்த்தமாகிய அலையெறிகிற கங்கையிற் காட்டிலும்
பெரியது ஓர் தீர்த்த பலம் தரும் நீர்	அதிகமான ஒப்பற்ற தீர்த்த பலத்தைக் கொடுக்கின்ற ஜலத்தை உடைத்தான
சிறு சண்ணம்	சிறிய சண்ணமானது
துள்ளம் சோர	துளிதுளியாகச் சொட்டவும்
	தளர்நடை நடவானோ—.

* * *—நெற்றியில் தொங்குகின்ற சுட்டி அசையவும், குறியில் நின்றும் மூத்திரநீர் துளிதுளியாகச் சிந்தவும் தளர்நடை நடந்து வரவேணு மென்கை· கருநிறத்தனான கண்ணனது திருநெற்றியிலசைந்துகொண்டு விளங்குஞ் சுட்டிக்கு, கருநிறமான கடலின் நடுவில் அசைந்துகொண்டு தோன்றும் சந்த்ர ப்ரதிபிம்பம் ஏற்ற உவமையாம். சண்ணம்-ஆண்குறி. ... ... (௧௰)

96 ஆயர்குலத்தினில்வந்துதோன்றிய அஞ்சனவண்ணன்றன்னை*
தாயர்மகிழவொன்னார்தளரத் தளர்நடைநடந்ததனை*
வேயர்புகழ்விட்டுசித்தன் சீரால்விரித்தனவுரைக்கவல்லார்*
மாயன்மணிவண்ணன்தாள்பணியும் மக்களைப்பெறுவர்களே. (௧௧)

ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய	இடையர் குலத்திலே வந்து அவதரித்த
அஞ்சனம்வண்ணன்	மைபோன்ற கருநிறமுடையனான கண்ணன்
தன்னை	தன்னை(க் கண்டு)
தாயர் மகிழ ஒன்னார் தளர	தாய்மார்கள் மனமுகக்கவும் சத்ருக்கள் வருத்தமடையவும்
தளர்நடை நடந்ததனை	தளர்நடை நடந்ததை
வேயர் புகழ்	வேயர்குடியிலிருப்பவரெல்லாராலும் புகழப்பெற்ற
விட்டுசித்தன்	பெரியாழ்வார்
சீரால் விரித்தன	சிறப்பாக விவரித்துச் சொன்ன பாசுரங்களை
உரைக்க வல்லார்	சொல்ல வல்லவர்கள்
மாயன் மணி வண்ணன் தாள் பணியும் மக்களை பெறுவர்கள்	ஆச்சர்யமான குணங்களையுடையவனும் நீலமணி போன்ற நிறமுடையனுமான எம்பெருமானுடைய திருவடிகளை வணங்க வல்ல பிள்ளைகளை அடைவார்கள்.

* * *-'தாயர்' எனப்பன்மையாகக் கூறியது-பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய்,கைத்தாய், செவிலித்தாய் எனத் தாய்மார் ஐவராதலாலும், சிறுதாய் முதலியோரும் தாய்மாரே யாவராதலாலுமாம். தொட்டிற் பருவத்திலேயே பூதனை சகடாஸுரன் முதலியோர்களை முடித்ததனால், கண்ணபிரான் மெல்ல

அடியிட்டு நடக்கத் தொடங்கினபோதே 'இனி, இவனால் நமக்கு என்ன தீங்கு நேரிடுமோ!' என்று கம்ஸாதிகள் நடுங்கி ஒடுங்கினராதலால் 'ஒன்னார்தளர' என்றாரென்க. ஒன்னார்-ஒன்றார்; (தம்மோடு மனம்) பொருந்ாதவர்; எனவே, பகைவராவர். பெரியாழ்வார் பிறந்தகுடி—வேயர்குடி எனப்படும். (கக)

அடிவரவு:—தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னல் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்.

முதற்பத்து—எட்டாந்திருமொழி. பொன்னியற்கிண்கிணி

(ஓடிவந்து அணைத்துக்கொள்ளுமாறு கண்ணனை வேண்டுதல்.)

97 **பொன்னியற்கிண்கிணி சுட்டிபுறங்கட்டி***
தன்னியலோசை சலன்சலனென்றிட*
மின்னியல்மேகம் விரைந்தெதிர்வந்தாற்போல்*
என்னிடைக்கோட்டராவச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ. (க)

பொன் இயல் கிண் கிணி சுட்டி	பொன்னாற்செய்த அரைச் சதங்கை பாதச் சதங்கை களையும் சுட்டியையும்	விரைந்து எதிர் வந்தால்போல்	வேகமாக ஓடிவந்து எதிரே வந்தாற்போலே
புறம் கட்டி	(அதற்கு உரிய) இடங்களிலே அணிந்து	என் இடைக்கு ஓட்டரா	என் இடையிலிருக்க (விரும்பி) ஓடிவந்து
தன் இயல் ஓசை சலன்சலன் என்றிட	சதங்கைக்குப் பொருந்திய சப்தமானது சலன் சலனென்று ஒலிக்க	அச்சோ அச்சோ.	(என்னை) அணைத்துக் கொள்ளவேணும், அணைத்துக்கொள்ளவேணும்;
மின் இயல் மேகம்	மின்னலோடுபொருந்திய மேகமானது	எம்பெருமான் வாரா அச்சோ அச்சோ.	எங்களுடைய தலைவனே! வந்து அணைத்துக்கொள்ள வேணும்.

* * *—மிகவும் ஒளிவீசுகின்ற ஆபரணங்களை அணிந்துகொண்டுள்ள கண்ணன் ஓடிவருவது மின்னலைக்கொண்டுள்ள மேகம் விரைந்து ஓடிவருவதை ஒக்கும். உபமேயத்தில், 'சலன்சலனென்றிட' என்றதனால், உபமானத்தில் சிறிய இடிகளிடித்தலைக்கொள்க. குழந்தைகள் தாய்மாரிடுப்பில் ஏறுவதற்காக ஓடிவந்து அத்தாய்மார்களைத் தழுவி அணைத்துக்கொள்ளும் இயல்பைப் பிரார்த்திக்கிறபடி. 'அச்சோ' என்பது - முற்காலத்திலே குழந்தையை 'அணைத்துக்கொள்' என்றுவேண்டுதற்கு ஏற்ற குறிப்புச்சொல்லாக விருந்ததெனக் கொள்ளத்தகும்; இனி, 'அச்சோ' என்பது, அதிசயத்தைக் குறிப்பதோரிடைச்சொல்லெனக்கொண்டு, கண்ணன் தன்னை அணைத்துக்கொள்ளுதலை நினைக்கும்போது தோன்றும் பரமாநந்தத்தில் மூழ்கி நெஞ்சுருகிச் சொல்லிடிந்து வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் அவ்வாச்சர்யத்தை ஒருதரத்துக்கிருதரம் 'அச்சோ அச்சோ' என்கிறாள் என்னவுமாம்; எனவே, இது-இங்கு, 'அணைத்துக்கொள்' என்ற பொருளை ஸந்தர்ப்பத்தால் குறிப்பிக்கின்றதென்க. ஓட்டம்+தரா = ஓட்டரா. விகாரப்புணர்ச்சி. ஓட்டரா, வாரா—'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டிறந்தகால வினையெச்சங்கள்: ... (க)

98 **செங்கமலப்பூவில் தேனுண்ணும்வண்டேபோல்***
பங்கிகள்வந்து உன்பவளவாய்மொய்ப்ப*
சங்குவில்வாள்தண்டு சக்கரமேந்திய*
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ. (உ)

செங்கமலம் பூ வில் தேன் உண்ணும் வண்டே போல்	செந்தாமரைப் பூவில் தேனைக் குடிப்பதற்காக மொய்க்கின்ற வண்டுகளைப்போல	சங்கு வில் வாள் தண்டு சக்கரம் ஏந்திய அம் கை களாலே	பஞ்சாயுதங்களை (பூவேந்தினாற்போலே) தரித்துக் கொண்டுள்ள அழகிய கைகளாலே
			அச்சோ அச்சோ—;
பங்கிகள் வந்து உன் பவளம் வாய் மொய்ப்ப	(உனது) கூந்தல் மயிர்கள் வந்து பவளம்போற் செந்நிறமான உனது வாயில் மொய்த்துக்கொள்ளும்படி	வந்து ஆர தழுவா	ஓடிவந்து த்ருப்தியுண்டாகும்படி நன்றாகத்தழுவி
வந்து	ஓடிவந்து		அச்சோ அச்சோ—.

* * *—ஓடிவிளையாடும்போது வாரின கூந்தலும் கலைந்துவிடுமாதலால் அங்ஙனங்கலைந்து தொங்கும் கறுத்தமயிர்கள் செந்நிறமான வாயிற்படிதல்—செந்தாமரைப்பூவில் கருவண்டுகள் மொய்த்துக் கிடத்தலை ஒத்திருக்குமென்க. பங்கி—ஆண்மயிர், "பங்கியே பிறமயிர்க்கும் பகருமாண் மயிர்க்கும் பேராம்" என்ற நிகண்டுகாண்க. தழுவா=கீழ்ப்பாட்டில் 'வாரா' என்றதுபோலக் கொள்க. (௨)

99 பஞ்சவர்தூதனாய்ப் பாரதங்கைசெய்து*
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு*
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த*
அஞ்சனவண்ணனேயச்சோவச்சோ ஆயர்பெருமானேயச்சோவச்சோ. (௩)

பஞ்சவர் தூதன் ஆய் — பாண்டவர்களுக்காக (துர்யோதநாதிகளிடம்) தூதனாய்ப்போய்,
(அந்த துர்யோதநாதிகள் தன் சொற்படி இசைந்து வராமையால்)
பாரதம் கைசெய்து — பாரதயுத்தத்தை அணிவகுத்துச் செய்து
நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நல் பொய்கை புக்கு — விஷத்தைக் கக்குகின்ற (காளிய) ஸர்ப்பம் இருந்த கொடிய மடுவிலே புகுந்து
அஞ்ச — (ஆய்ச்சிகளும் ஆயரும் பயப்படும்படி
பணத்தின் மேல் பாய்ந்திட்டு — (அப்பாம்பின்) படத்திலே குதித்து
(நடமாடி அக்காளியனை இளைப்பித்துப் பின்பு அவன் ப்ரார்த்திக்க)
அருள் செய்த — (அப்பாம்பின் ப்ராணனைக்) கருணையால் விட்டிட்ட
அஞ்சனம் வண்ணனே! அச்சோ அச்சோ—;
ஆயர் பெருமானே — இடையர்களுக்கு தலைவனானவனே!
அச்சோ அச்சோ—.

* * *—காளியனை அடக்கியது முன்னும், பாரதம் கை செய்தது அதற்குப் பின்னும் நடந்ததாயினும் அம்முறையைக் கருதாமல் இங்ஙனமருளிச் செய்தாரென்க. 'கைசெய்து' என்றவிடத்து,கை-தமிழ் உபஸர்க்கமென்பர். நல் பொய்கை—எதிர்மறையிலக்கணை [விபரீதலக்ஷணை]. அஞ்ச—காளியன் அஞ்சும்படி எனினுமொக்கும். ... ... (௩)

100 நாறியசாந்தம் நமக்கிறைநல்கென்ன*
தேறியவளுந் திருவுடம்பில்பூச*
ஊறியகூனினை உள்ளேயொடுங்க* அன்
றேறவுருவினையச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ. (௪)

நாறிய சாந்தம் நமக்கு இறை நல்கு என்ன — 'நல்லவாஸனை வீசுகின்ற சந்தனத்தை எங்களுக்குக் கொஞ்சம் கொடு' என்று (நீ) கூனியைக்கேட்க
அவளும் — அந்தக்கூனியும் ('இவர்கட்குக் கொடுத்தால் நம்மைக் கம்ஸன் தண்டிப்பனே!' என்று அஞ்சாமல்)
தேறி — மனம் தெளிந்து
திருஉடம்பில் பூச — (உனது) திருமேனியிலே சாத்த
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க — வெகுநாளாயிருக்கிற (அவளுடைய) கூனை (அவள்) சரீரத்திற்குள்ளே அடங்கும்படி
அன்று ஏற உருவினை — அக்காலத்திலே நிமிர்த்து உருவினவனே!
அச்சோ அச்சோ—;
எம்பெருமான்! வந்து அச்சோ அச்சோ.

101 கழல்மன்னர்சூழக் கதிர்போல்விளங்கி*
எழலுற்றுமீண்டே யிருந்துன்னைநோக்கும்*
சுழலைப்பெரிதுடைத் துச்சோதனனை*
அழலவிழித்தானேயச்சோவச்சோ ஆழியங்கையனேயச்சோவச்சோ (௫)

கழல் மன்னர் சூழ	வீரக்கழலையணிந்த ராஜாக்கள் தன்னைச் சுற்றியிருக்க (அவர்கள் நடுவில்)
கதிர்போல் விளங்கி	ஸூரியன்போல ப்ரகாசமாயிருந்து

(‘கண்ணனுக்கு எழுந்திருத்தல் குசல ப்ரச்நம் பண்ணுதல் முதலிய மர்யாதை ஒன்றும் செய்யக்கூடாது’ என்று கட்டளையிட்டிருந்த தானே தனக்குத்தெரியாமல்)

எழல் உற்று	(முதலில்) எழுந்திருந்து
மீண்டு இருந்து	மறுபடியும் (தானெழுந்தது தெரியாதபடி) உட்கார்ந்துகொண்டு
உன்னை நோக்கும்	உன்னை (பொய்யாஸநமிடுதல் முதலியவற்றால் கொல்வதாகப்) பார்த்த
பெரிது சுழலை உடை	மிகவும் (வஞ்சனையான) ஆலோசனையையுடைய
துச்சோதனனை	துர்யோதநனை (திருவுள்ளத்திலுள்ள சீற்றமெல்லாம் பார்வையிலே தோன்றும்படி)
அழல விழித்தானே	உஷ்ணமாகப் பார்த்தவனே!

அச்சோ அச்சோ—;

ஆழி	திருவாழியாழ்வானை
அம் கையனே	அழகிய கையிலேந்தியவனே!

அச்சோ அச்சோ—.

* * *—கண்ணபிரான் பாண்டவதூதனாய்த் துர்யோதநனிடமெழுந்தருள, அக்கண்ணனது வருகையை அறிந்த துர்யோதநன் ‘கண்ணன் வரும்போது ஒருவருமெழுந்து மர்யாதை செய்யலாகாது’ என்று உறுதியாய் நியமித்துத் தானும் ஸபையிலே உறுதியுடனிருக்க, கண்ணபிரான் அங்கேற எழுந்தருளினவளவிலே ஸபையிலிருந்த அரசர்களனைவரும் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் சோதியைக் கண்டு பரவசராயெழுந்திருந்துவிட, துர்யோதநன் தானும் துடை நடுங்கி எழுந்திருந்துவிட்டு உடனே கறுக்கொண்டு தானெழுந்தது தெரியாதபடியிருந்தானென்க. ‘சுழலை’ என்று மொரு தனிச்சொல் உண்டென்க; “சுழலையில் நின்றுய்துங்கொலோ” என்ற நாச்சியார் திருமொழி காண்க. (ரு)

102 போரொக்கப்பண்ணி யிப்பூமிப்பொறைதீர்ப்பான்*
தேரொக்கவூர்ந்தாய் செழுந்தார்விசயற்காய்*
காரொக்குமேனிக் கரும்பெருங்கண்ணனே*
ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ ஆயர்கள்போரேறேயச்சோவச்சோ. (சா)

இ பூமி பொறை தீர்ப்பான்	இந்தப் பூமியினுடைய பாரத்தைத் தீர்ப்பதற்காக
போர் ஒக்க பண்ணி	யுத்தத்தை (துர்யோதநாதிகளோடு) ஸமமாகச் செய்து,
செழு தார் விசயற்கு ஆய்	அழகிய மாலையையுடைய அர்ஜுநனுக்காக
தேர் ஒக்க ஊர்ந்தாய்	(அவனுடைய) தேரை (எதிரிகள் தேர் பலவற்றிற்கும் இது ஒன்றுமே) ஸமமாம்படி பாகனாய்ச்செலுத்தினவனே!
கார் ஒக்கும் மேனி	மேகத்தோடு ஒத்த திருமேனியையும்
கரும்பெருங் கண்ணனே	கரியவாகிப் புடைபரந்த கண்களையுமுடையவனே!
வந்து ஆர தழுவா	ஓடிவந்து நன்றாகத் தழுவிக்கொண்டு

அச்சோ அச்சோ—;

ஆயர்கள் போர் ஏறே	இடையர்களுக்கு (அடங்கிநிற்கின்ற) போர்செய்யுந் தன்மையுள்ள ரிஷபம் போன்றவனே!

அச்சோ அச்சோ—.

* * *—துர்யோதனாதிகளுக்குப் பதினொரு அக்ஷௌஹிணி சேனையும் பாண்டவர்களுக்கு ஏழு அக்ஷௌஹிணி சேனையுமாயிருக்கவும், இவ்விருதிறத்தாரும் போர்செய்யும்போது இருவரும் சரிசமமாகவே யுத்தஞ் செய்பவர்களாகவே நிற்குமாறு செய்தனன் கண்ணபிரானென்க. பகைவர்களோடு போர்புரியும்போது தும்பைப்பூமாலையும், வெற்றிகொண்டபோது வாகைப்பூமாலையும் வீரர்சூடுவரெனக் கூறுதல் தமிழர் வழக்கமாதலால், இவ்விரு பூமாலையையும் அவ்வப்போது அர்ஜுனன் அணிவனென்பதைத் தெரிவிக்க, பொதுவாகச் ‘செழுந்தார்விசயன்’ என்றார். விசயன் அர்ஜுனனுக்கு, ‘விஜயன்’ என்று வடமொழி நாமம். (சா)

... ...

103 மிக்கபெரும்புகழ் மாவலிவேள்வியில்*
தக்கதிதன்றென்று தானம்விலக்கிய*

சுக்கிரன்கண்ணைத் துரும்பால்கிளறிய*
சக்கரக்கையனேயச்சோவச்சோ சங்கமிடத்தானேயச்சோவச்சோ. (எ)

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில் — (ஔதார்யத்தால்) மிகுந்த கீர்த்தியையுடைய மஹாபலி (செய்த) யாகத்திலே
(வாமனனுய்ச்சென்ற உனக்கு அந்த மஹாபலி நீ கேட்டதைக்கொடுக்க முயன்றவளவிலே.)
இது தக்கது அன்று என்று — 'நீ கொடுக்கிற இது தகுதியானதன்று' என்று முறையிட்டு
தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணை — பூமிதானத்தை (அவன் தத்தம் பண்ணும்போது நீர் விழவொட்டாமல்) தடுத்த சுக்கிராசாரியனுடைய ஒருக்கண்ணை

துரும்பால் கிளறிய — (உன் கையிலணிந்திருந்த) தர்ப்பபவித்ரத்தின் நுனியால் கலக்கின
சக்கரம் கையனே — சக்ராயுதமேந்திய கையையுடையவனே!
அச்சோ அச்சோ—;
சங்கம் இடத்தானே — பாஞ்சஜந்யத்தை இடக்கையிலேந்தினவனே!
அச்சோ அச்சோ—.

* * *—'துரும்பாற் கிளறிய சக்கரம்' என்றதனல், "கருதுமிடம் பொருது-கைந்நின்ற சக்கரத்தன்" என்கிறபடியே திருமால் விரும்பிய இடங்களில் விரும்பின வடிவங்கொண்டு செல்லுந் தன்மையையுடைய திருச்சக்கரமே பவித்ரத்தின் வடிவத்துடன்நின்று சுக்ரனது கண்ணைக் கலக்கிற்றென்பது பெறப்படும். ... ... (எ

104 என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன்*
முன்னையவண்ணமேகொண்டு அளவாயென்ன*
மன்னுநமுசியை வானிற்சுழற்றிய*
மின்னுமுடியனேயச்சோவச்சோ வேங்கடவாணனேயச்சோவச்சோ. (அ)

(வாமனனுய்ச்சென்ற திருமால் மாவலியிடத்தில் நீரேற்றுத் திரிவிக்கிரமனுய் வளர்ந்து அளக்கப் புகும்போது, அதுகண்ட மஹாபலிபுத்ரனை நமுசி ஓடிவந்து.)
இது என் மாயம் — ('யாசிக்கும்போதிருந்த வடிவம் மாறியளக்கிற) இது என்ன மாயச் செய்கை!;
என் அப்பன் அறிந்திலன் — என் தகப்பன் (நீ செய்யும் இந்தமாயத்தை) அறியவில்லை,
முன்னைய வண்ணமே கொண்டு — நீ யாசிக்கவந்தபோதிருந்த வடிவத்தையேகொண்டு

அளவாய் — அளப்பாயாக'
என்ன — என்றுசொல்ல,
மன்னு நமுசியை — (இப்படி)பிடிவாதமாய்நின்ற (அந்த) நமுசியென்பவனை
வானில் சுழற்றிய — ஆகாயத்திலே சுழலச்செய்த
மின்னு முடியனே — விளங்குகின்ற கிரீடத்தையுடையவனே!
அச்சோ அச்சோ—;
வேங்கடம் வாணனே — திருமலையிலே வாழுமவனே!
அச்சோ அச்சோ—.

* * *—நமுசி, திரிவிக்கிரமனேடு வெகு நாழிகை வழக்காடி, எம்பெருமான் சொன்ன ஸமாதானங்களைக் கேளாமல் தான் பிடித்த திருவடியின் பிடியை விடாமல் உறுதியாயிருக்க, எம்பெருமான் வளர்ந்த திருவடியினல் அவனை ஆகாசத்திலே கொண்டுபோய்ச் சுழன்று விழும்படிசெய்த வரலாறு காண்க. 'சுழற்றிய' என்ற பெயரெச்சம் முடியனைக்கொண்டு முடியும். ... (அ)

105 கண்டகடலும் மலையுமுலகேழும்*
முண்டத்துக்காற்ரு முகில்வண்ணஓவென்று*
இண்டைச்சடைமுடி யீசனிரக்கொள்ள*
மண்டைநிறைத்தானேயச்சோவச்சோ மார்வில்மறுவனேயச்சோவச்சோ. (கூ)

கண்ட கடலும்	"கண்ணுற்கண்ட ஸமுத்ரங்களும்
மலையும்	மலைகளும்
உலகு ஏழும்	கீழ் ஏழ் மேல் ஏழ் என்ற பதினலு லோகங்களும் (ஆகிய எல்லாவற்றையுமிட்டு நிறைக்கப் பார்த்தாலும்)
முண்டத்துக்குஆற்ரு	(என் கையிலிருக்கிற ப்ரஹ்ம) கபாலத்துக்குப் போதாவாம்;
முகில் வண்ணு	மேகவண்ணனே!
ஓஓ !	ஓஓ! [ஹாஹா!]"
என்று	என்று கூப்பிட்டு

இண்டை சடை முடி ஈசன் இரக்கொள்ள	நெருங்கிய ஜடாபந்தத்தையுடைய சிவன் பிச்சையெடுக்க,
மண்டை நிறைத்தானே	(அவன் கையிலிருந்த ப்ரஹ்ம) கபாலத்தை (மார்பிலிருந்து உண்டான ரக்தத்தால்) நிறையச் செய்தவனே!

அச்சோ அச்சோ—;

மார்வில் மறுவனே	திருமார்பிலே ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தையுடையவனே!

அச்சோ அச்சோ—.

* * *—மஹாப்ரயாஸங்கள்பட்டும் நிறைக்கமுடியாத ப்ரஹ்மகபாலத்தின் தன்மையைக் காட்டிற்று-முதலிரண்டடி. ஓஓ-'ஓ என்னும் இரக்கக்குறிப்பிடைச்சொல் அளபெடுத்து வந்தது. இனி, கண்ட கடலிலும் மலைகளிலும் உலகேழிலும் (திரிந்தும்) முண்டத்துக்கு ஆற்ரு என்றுமாம். 'உண்டத்துக்கு ஆற்ரு' என்றெடுத்து, (எங்கேதிரிந்தும் மிகவருந்தியும்) கபாலத்திற்குவேண்டிய உணவையிடுதற்கு முடியாமல் ஈசன் 'முகில் வண்ணு ஓஓ' என்று இரக்கொள்ள என்றுமுரைக்கலாம். இரக்கொள்ள=இரமுதனிலைத் தொழிற்பெயர். ... ... (க)

106 துன்னியபேரிருள் சூழ்ந்துலகைமூட*
மன்னியநான்மறை முற்றுமறைந்திட*
பின்னிவ்வுலகினில் பேரிருள்நீங்க* அன்
றன்னமதானனேயச்சோவச்சோ அருமறைதந்தானேயச்சோவச்சோ. (ய)

மன்னிய நால் மறை முற்றும் மறைந்திட	நித்யசித்தமான சதுர்வேதங்களும் முழுவதும் மறைந்துவிட (அதனல்)
துன்னிய பேர் இருள் சூழ்ந்து உலகை மூட	நெருங்கிய பெரிய அஜ்ஞாநாந்தகாரம் பரவி லோகங்களை மறைத்துக்கொள்ள
பின்	பின்பு
இ உலகினில்	இந்த லோகங்களில்
பேர் இருள் நீங்க	(அந்த) மிகுந்த அஜ்ஞாநாந்தகாரமானது நீங்கும்படி

அன்று	அக்காலத்தில்
அன்னம் அது ஆனனே	ஹம்ஸமாய் அவதரித்தவனே!

அச்சோ அச்சோ—;

அரு மறை தந்தானே	(அந்த ரூபத்தோடு) அருமையான வேதங்களை உபகரித்தவனே!

அச்சோ அச்சோ—.

107 நச்சுவார்முன்னிற்கும் நாராயணன்றன்னை*
அச்சோவருகவென்று ஆய்ச்சியுரைத்தன*
மச்சணிமாடப் புதுவைக்கோன்பட்டன்சொல்*
நிச்சலும்பாடுவார் நீள்விசும்பாள்வரே. (கக)

நச்சுவார் முன் நிற்கும் நாராயணன் தன்னை	(தன்னை) விரும்பிப் பக்தி பண்ணுமவர்களுடைய முன்னே வந்து நிற்குந் தன்மையுள்ள நாராயணனுகிய ஸ்ரீ கிருஷ்ணனை
ஆய்ச்சி	இடைக்குலத்தவளான யசோதை

(அணைத்துக் கொள்ளுகையிலுண்டான விருப்பந் தோன்றும்படி)

அச்சோவருக என்று உரைத்தன	'அச்சோ வருவாயாக' என்று சொன்னவற்றை,

மச்சு அணி மாடம் புதுவை கோன் பட்டன்	பல நிலைகளால் அழகிய மாளிகைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார்
சொல் பாடுவார்	சொன்ன இப் பத்துப் பாசுரங்களையும் பாடுமவர்கள்
நிச்சலும் நீள் விசும்பு ஆள்வர்	எப்போதும் பரமாகாசமாகிற பரமபதத்திற்கு நிர்வாஹகராவர்.

* * *—முன்பு யசோதைப் பிராட்டிக்குக் கண்ணெதிரே நின்று கண்ணபிரான் எப்படி ஸேவைதந்தருளினானோ அப்படியே இப்போது தமக்கும் ப்ரத்யக்ஷமாக ஸேவைதந்தருளினதுபற்றி "நச்சுவார் முன்னிற்கும் நாராயணன்" என்றார். ... ... (கக)

அடிவரவு:—பொன் செங்கமலம் பஞ்சவர் நாறிய கழல் போர் மிக்க் என்னிது கண்ட துன்னிய நச்சு வட்டு.

முதற்பத்து—ஒன்பதாந்திருமொழி, வட்டு நடுவே

(கண்ணன் ஓடிவந்து முதுகில் கட்டிக்கொள்வதாக யசோதை கூறுதல்)

108 வட்டுநடுவேவளர்கின்ற* மாணிக்க
மொட்டுநுனையில் முளைக்கின்றமுத்தேபோல்*
சொட்டுச்சொட்டென்னத் துளிக்கத்துளிக்க*என்
குட்டன்வந்தென்னைப்புறம்புல்குவான்கோவிந்தனென்னைப்புறம்புல்குவான் (க)

என் குட்டன் — என் பிள்ளை,
வட்டு நடுவே வளர்கின்ற — (இரண்டு நீலரத்ந) வட்டுகளின் நடுவே வளர்ந்து கொண்டிருப்பதான
மாணிக்கம் மொட்டு — இந்திர நீலமான அரும்பினுடைய
நுனையில் முளைக்கின்ற முத்தே போல் — நுனியிலே உண்டாகின்ற முத்தைப்போல
சொட்டு சொட்டு என்ன — சொட்டுச் சொட்டென்று ஓசையுண்டாகும்படி (அம்மாணிக்க மொட்டு)
துளிக்க துளிக்க — பலதரம் துளியாநிற்க
வந்து என்னை புறம் புல்குவான் — ஓடிவந்து என்னுடைய முதுகைக் கட்டிக்கொள்வான்;
கோவிந்தன் என்னை புறம்புல்குவான்—.

* * *—'வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க மொட்டு' என்றது—கண்ணபிரானது ஆண் குறியை யென்க ; நிறத்தாலும் ஆகாரத்தாலும் உவமை. 'முளைக்கின்ற முத்து' என்றது—அதில் நின்று வெளிவருகிற சிறுநீரை. உபமேயத்தைச் சொல்லாது உபமாநத்தை மாத்திரம் சொல்லி அதனால் உபமேயத்தைப் பெறவைத்தார். சிறுநீர்த் துளிகள் இற்று இற்று மீண்டும் வருதலால் 'சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க' என்றார். என்னை - உருபு மயக்கம். புல்குவான் - அணைத்துக்கொண்டபடியைச் சொல்லுகிறது ; இனி, 'அணைத்துக்கொள்வானாக' என்று விரும்பினதாகவுங் கொள்ளலாம். (க)

109 கிண்கிணிகட்டிக் கிறிகட்டி* கையினிற்
கங்கணமிட்டுக் கழுத்தில்தோடர்கட்டி*
தங்கணத்தாலே சதிராநடந்துவந்து*
என்கண்ணனென்னைப்புறம்புல்குவானெம்பிரானென்னைப்புறம்புல்குவான். (உ)

என் கண்ணன் — என் கண்ணபிரான்—
கிண்கிணி கட்டி — அரைச்சதங்கையைக் கட்டிக்கொண்டும்
கிறி கையினில் கட்டி — சிறுப்பவளவடத்தைக் கையிலே கட்டிக்கொண்டும்
கங்கணம் இட்டு — தோள்வளையை (தோள்களில்) சாத்திக்கொண்டும்
கழுத்தில் தோடர் கட்டி — திருக்கழுத்திலே சங்கிலியை அணிந்துகொண்டும்
தம் கணத்தாலே — (இன்னுமணிந்துகொண்டுள்ள) திருவாபரணங்களின் திரளோடுகூட
சதிர் ஆ நடந்து வந்து — அழகாக நடந்து வந்து
என்னை புறம்புல்குவான்—;
எம்பிரான் என்னை புறம்புல்குவான்,

* * *—கங்கணம் - வடசொல். திருவாபரணங்களைச் சொல்லும் ப்ரகரணமாதலால், சொல்லப்படாதொழிந்த திருவாபரணங்களையுங் கூட்டித் 'தம் கணம்' என்றது. கணம்-கண என்ற வடசொல் திரிபு.தன் கணத்தாலே என்று பாடங்கொண்டு, தன்னுடைய கண்ணால்(என்னைக் கடாக்ஷித்துக்கொண்டு) எனினுமமையும் ; இப்பொருளில் 'கண்' என்பது - மூன்றும் வேற்றுமையுருபை ஏற்கும்போது அத்துச் சாரியை பெற்றுவந்ததென வேண்டும். ... ... (உ)

110 கத்தக்கதித்துக் கிடந்தபெருஞ்செல்வம்*
ஒத்துப்பொருந்திக்கொண்டு உண்ணாதுமண்ணாள்வான்*
கோத்துத்தலைவன் குடிகெடத்தோன்றிய*
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆயர்களேறென்புறம்புல்குவான். (ரு)

கத்தக் கதித்து கிடந்த	மிகவும் கொழுத்து(உனக்கு எனக்கென்று பிணங்கும்படி) இருந்த	கொத்து தலைவன்	(தம்பிமார்களும் பந்துக்களும் ஸேனைகளுமாகிய) திரளுக்குத் தலைவனாகிய துர்யோதநன்
பெரு செல்வம்	மிகுந்த ஐச்வர்யத்தை		
ஒத்து	(தன் பந்துக்களான பாண்டவர்களோடு) ஒத்து	குடி கெட	(தன்) குடும்பத்தோடு பாழாம்படி
பொருந்திக்கொண்டு	மனம்பொருந்தியிருந்து	தோன்றிய	திருவவதரித்த
உண்ணாது	அநுபவியாமல்	அத்தன்	ஸ்வாமி
		வந்து என்னை	புறம்புல்குவான்—;
மண் ஆள்வான்	பூமியை (தான் அத்விதீயனாய்) ஆளவேணுமென்று நினைத்தவனை	ஆயர்கள் ஏறு	இடையர்களுக்குள் சிறந்த கண்ணபிரான்
			என் புறம் புல்குவான்—.

* * *—கத்தக்கதித்து - "பக்கப்பருத்து," "தக்கத்தடித்து" என்பனபோன்ற ஒருவகைக் குறிப்பிடைச்சொல். ஏறு - ஆகுபெயரால், செருக்கு, நடை, காம்பீர்யம் முதலிய குணங்களால் காளைபோன்ற இளவீரனைக்குறிக்கும். ... ... (ரு)

111 நாந்தகமேந்திய நம்பிசரணென்று*
தாழ்ந்ததனஞ்சயற்காகித் தரணியில்*
வேந்தர்களுட்க விசயன்மணித்திண்டேர்*
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (ச)

நாந்தகம் ஏந்தியநம்பி சரண் என்று தாழ்ந்த	'நந்தகம் என்னும் வாளை கையிலணிந்துள்ள பெரியோனே! (நீ எனக்கு) ரக்ஷகன்' என்று சொல்லி (தன்னை) வணங்கிய	விசயன் மணி திண் தேர் ஊர்ந்தவன்	அந்த அர்ஜுநனது அழகிய வலிய தேரை (ஸாரதியாயிருந்து) செலுத்தின இவன்
			என்னை புறம் புல்குவான்—;
தனஞ்சயற்கு ஆகி	அர்ஜுநனுக்குப் பக்ஷபாதியாயிருந்து	உம்பர் கோன்	நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான இவன்
தரணியில் வேந்தர்கள் உட்க	இப்பூமியிலே (எதிரிகளான) ராஜாக்கள் அஞ்சிக் கலங்கும்படி		என்னை புறம் புல்குவான்—,

* * *—நாந்தகம் = 'நந்தகம்' என்ற வடசொல் நீண்டுகிடக்கிறது. நம்பி - உயர்திணை ஆண்பாற் சிறப்புப்பெயர்; "நம்பி ஆடூஉ, விடலை கோவேள் குரிசில் தோன்றல், இன்னன ஆண்பெயராகுமென்ப" என்பது நன்னூல். சரண் 'சரணம்' என்ற வடசொற் சிதைவு. தனஞ்சயன் - அர்ஜுநனுக்கு மறுபெயர். இது தர்மபுத்ரன் ராஜஸூயயாகம் செய்யக் கோலினபோது பலராஜாக்களையும் வென்று மிக்க பொருளைக் கொணர்ந்ததனாலும், வெற்றியையே செல்வமாகவுடையவனென்ற காரணத்தாலும் வந்த பெயராம். உட்க (நெஞ்சு) உளுக்கும்படியாக. உம்பர் - மேலுலகு; அங்குள்ளார்க்கு ஆகுபெயர். (ச)

112 வெண்கலப்பத்திரங் கட்டிவிளையாடி*
கண்பலசெய்த கருந்தழைக்காவின்கீழ்*
பண்பலபாடிப் பல்லாண்டிசைப்ப* பண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான் வாமனனென்னைப்புறம்புல்குவான். (ரு)

பண்டு	முன்னொரு காலத்திலே	பல பண் பாடி	(அநுகூலமானவர்கள்) பலவித ராகங்களைப் பாடிக்கொண்டு
வெண்கலம் பத்திரம் கட்டி விளையாடி	வெண்கலத்தாற்செய்த பத்திரத்தை (அரையிற்) கட்டிக்கொண்டு விளையாடி	பல்லாண்டு இசைப்ப	மங்களாசாஸநம் செய்ய
பல கண்செய்த கருதழை காவின் கீழ்	பல பீலிக்கண்களைக் கொண்டு செய்யப்பட்ட பெரிய குடையாகிற சோலையின் கீழேயிருந்து (மாவலியிடத்தில் மூவடி மண்ணை இரந்துபெற்று)	பல மண் கொண்டான்	பல [ஸகலமான] லோகங்களையுமளந்து தன்னதாக்கிக்கொண்ட இவன்
			புறம் புல்குவான்—;
			வாமனன் என்னை புறம்புல்குவான்—.

* * *—பத்திரம்—வடசொல்; இலை என்பது பொருள்; வெண்கலத்தாலே இலைவடிவமாகச் செய்து குழந்தையினரையிற் கட்டுதல் முற்காலத்தில் ப்ராஹ்மணர்களின் வழக்கம்போலும். அங்ஙனமே, வாமநாவதாரம் செய்த ஸ்ரீ விஷ்ணு தன் திருவரையிலணிந்து கொண்டனனென்க; இனி, முதலடியால் கண்ணபிரானது பால்யதசையில் லீலைவகையைச் சொல்லிற்றுகவுமாம். "கண் பலபெய்து" என்று பாடமாகில், - கருந்தழை - பீலிப்பிச்சத்தினுடைய, பல கண் - பலகண்களையும், பெய்து - தலையில் அணிந்துகொண்டு. காவின் கீழ் விளையாடி - சோலை நிழலிலே விளையாடியென்று உரைக்கவேண்டும். பீலித்தழையைத் தலையிலேகட்டுகை ஜாதிக்கு உரிய செய்கையாம். 'மண்' என்றசொல் ஆகுபெயரால் பூமியைக்காட்டும்; அச்சொல் இங்கு, உலகம் என்ற பொதுப்பொருளைத் தந்தது. ... (ரு)

113 சத்திரமேந்தித் தனியொருமாணியாய்*
உத்தரவேதியில் நின்றவொருவனை*
கத்திரியர்காணக் காணிமுற்றுங்கொண்ட*
பத்திராகாரன்புறம்புல்குவான் பாரளந்தானென்புறம்புல்குவான். (சு)

உத்தரவேதியில் நின்ற ஒருவனை	உத்தரவேதியிலிருந்த (ஔதார்யத்தில்) அத்விதீயனை மஹாபலியினிடத்திலே	காணி முற்றும் கொண்ட	உலகமுழுவதையும் (நீரேற்றளந்து) தன்னதாக்கிக்கொண்ட
சத்திரம் ஏந்தி	குடையை (கையில்) பிடித்துக்கொண்டு	பத்திரம் ஆகாரன்	விலக்ஷணமான வடிவையுடையனை இவன்
தனி ஒரு மாணி ஆய்	ஒப்பற்ற ஒரு ப்ரஹ்மசாரி வாமநனாய் (ப்போய்)		புறம் புல்குவான்—;
கத்திரியர்	(அவனுக்குக் கீழ்ப்பட்ட) க்ஷத்ரியர்கள்	பார் அளந்தான்	பூமியை (திரிவிக்கிரமனாய்) அளந்த இவன்
காண	பார்த்துக் கொண்டிருக்கையில்		என் புறம் புல்குவான்—.

* * *—சத்திரம்—வடசொல் திரிபு. உத்தரவேதி—ஆஹவநீயாக்நிக்கு வடதிசையிலே யாகபசுவைக் கட்டுகின்ற யூபஸ்தம்பத்தை நாட்டிய வேதிகை; இச்சொல் இங்கு, யாகபூமியைக் காட்டுமென்க. கத்திரியர்—வடசொற்றிரிபு. ['கத்திரிவர்' என்பது சிலர்பாடம்.] பத்திராகாரன்—வடசொல்தொடர். (சு)

114 பொத்தவுரலைக்கவிழ்த்து அதன்மேலேறி*
தித்தித்தபாலும் தடாவினில்வெண்ணெயும்*
மெத்தத்திருவயிறார விழுங்கிய*
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆழியானென்னைப்புறம்புல்குவான். (எ)

பொத்த உரலை கவிழ்த்து	(அடியில்) ஓட்டையாய்விட்டதொரு உரலைக் கொண்டு வந்து) தலைகவிழ்த்துப் போட்டு	அதன் மேல் ஏறி	அவ்வுரலின்மேலேறி
		தடாவினில்	மிடாக்களிலேயுள்ள
		தித்தித்த பாலும்	மதுரமான பாலையும்
		வெண்ணெயும்	வெண்ணெயையும்

திருவயிறு ஆர	வயிறு நிரம்ப
மெத்த விழுங்கிய	மிகுதியாக விழுங்கின
அத்தன்	தலைவன்

வந்து என்னை புறம் புல்குவான்—;

ஆழியான்	(இப்படிக் களவுகண்டுஉண்கையில்) ஆழ்ந்து தேறியவன்

என்னை புறம் புல்குவான்—.

* * *—திருவாய்ப்பாடியிலுள்ளார் தந்தம் தயிர் நெய் பால்களைக் கண்ணனுக்கெட்டாதபடி உயர உறிகளின்மேலே சேமித்துவைக்க, அதுகண்டு கண்ணபிரான் ஒரு பொத்தவுரலைத்தேடிக் கண்டு பிடித்து உருட்டிக்கொண்டுவந்து தலைகீழாகக் கவிழ்த்துப்போட்டு அதன்மேலேறி உறியையெட்டி அதிலுள்ளவற்றை விழுங்குவானும். [பொத்தவுரலை] நல்லவுரலானால் அதை நடுவே யாரேனும் சிலர் கார்யார்த்தமாகத் தேடிவந்து தன்னைப்பிடித்துக்கொள்ளக்கூடுமென்று பொத்தவுரலைத் தேடிப் பிடித்தானென்க. பொத்தவுரல்—'பொத்தலுரல்' என்பதன் மரூஉ வென்னலாம்; 'பொத்தல்' என்பதில் ஈற்று மெய்கெட்டதென்றலுமொன்று. ... ... (எ)

115 மூத்தவைகாண முதுமணற்குன்றேறி*
கூத்துவந்தாடிக் குழலாலிசைபாடி*
வாய்த்தமறையோர் வணங்க* இமையவர்
ஏந்தவந்தென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (அ)

மூத்தவை	வயதுசென்ற இடைச்சனங்கள்
காண	காணும்படியாக
முது மணல் குன்று ஏறி	நெடுநாளாய்க் குவிந்து மேடாயிருந்த மணற்குன்றின் மேலேறியிருந்து
வாய்த்த	தன்னுடைய சேஷ்டிதத்தைக்காணும்படி கிட்டின
மறையோர்	ப்ரஹ்மர்ஷிகள்
வணங்க	தன்னைக்கண்டு வணங்கவும்
இமையவர்	தேவர்கள்
ஏத்த	ஸ்தோத்ரஞ்செய்யவும்
குழலால் இசைபாடி	வேய்க்குழலினால் ராகம் பாடிக் கொண்டும்
உவந்து	ஸந்தோஷித்து
கூத்து ஆடி	கூத்தாடியும் நின்று

வந்து என்னை புறம்புல்குவான்—;
எம்பிரான் என்னை புறம்புல்குவான்—.

* * *—கண்ணபிரான் எல்லாருங் காணும்படியாக மிகவுமுயர்ந்ததொரு மணற்குன்றின்மேலேறிநின்று தான் விரும்பின பெண்களின்பேரைச்சொல்லுதலும் தன்மேல் கோபங்கொண்டிருக்கும் பெண்களின் காலைக்கையைப் பிடித்துக்கொண்டு பொறுப்பித்தலும் முதலான ஒலியின் குறிப்புகள் தன்னோடுபழகும் பெண்களுணரும்படி புல்லாங்குழலூதியும், நிலவறைகளிற் கிடக்கும் பெண்களும் அவ்விடத்தை விட்டோடிவந்து காண்கையாலே மிகவும் மனமுகந்து கூத்தாடியும்நிற்க, அவனுடைய சேஷ்டிதரஸத்தை அனுபவித்து ரிஷிகளும் தேவர்களும் வணங்கித்துதிக்க இப்படிக் கூத்தாடின அழகோடே அப்பிரான்வந்து என்னைப்புறம்புல்க வேணுமென்பது—கருத்து. ... (அ)

116 கற்பகக்காவு கருதியகாதலிக்கு*
இப்பொழுதீவனென்று இந்திரன்காவினில்*
நிற்பனசெய்து நிலாத்திகழ்முற்றத்துள்*
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான்.(கூ)

இந்திரன் காவினில் கற்பகம் காவு	இந்த்ரனுடைய உத்யாநவநத்திலிருந்த கற்பகச் சோலையை
கருதிய காதலிக்கு	(தன் வீட்டிற்கொண்டு வைக்க வேணுமென்று) விரும்பிய தனக்கு ப்ரியையான ஸத்யபாமைப்பிராட்டிக்கு
இப்பொழுது ஈவன் என்று	'இப்பொழுதே கொணர்ந்து தருவேன்' என்று சொல்லி
நிலா திகழ் முற்றத்துள்	நிலா விளங்குகின்ற அவள் வீட்டு முற்றத்தில்
நிற்பன செய்து உய்த்தவன்	இருப்பனவாகச் செய்து தழைக்கும்படி செய்தவன்

என்னை புறம்புல்குவான்—;

உம்பர் கோன்	(அன்றுதன்பராக்ரமத்தைக் காட்டிய)தேவாதிதேவன்

என்னை புறம்புல்குவான்.

* * *—கண்ணபிரான் ஸத்யபாமையின் உகப்புக்காக, தேவலோகத்திலிருந்து பாரிஜாத வ்ருக்ஷத்தைக் கொணர்ந்து த்வாரகையில் நாட்டினமை ப்ரஸித்தம். இந்திரன் காவு-நந்தநவநம். மந்தாரம், பாரி

ஜாதம், ஸந்தானம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம் எனத் தேவலோகத்து மரங்கள் ஐந்து; அவ்வைந்தையும் கல்பவ்ருக்ஷமென்று ஸாதாரணமாக வழங்குதலுமுண்டு; இங்கு, பாரிஜாதத்தைக் கற்பகமென்றார். இம்மரங்களில் ஒவ்வொன்றுமே பெருஞ்சோலையாகத் தழைத்திருக்குமாதலால், "கற்பகக் காவு" எனப்பட்டது. ஒரு மரத்தையே காவு என்று கூறியதற்கு ஏற்ப 'நிற்பன செய்து' என்று பன்மையாகக் கூறினர்போலும். ஐந்துமரங்களையுங் கொணர்ந்தா னென்பாருமுளர். ஈவன் = ஈ-பகுதி; அன்-தன்மையொருமைவிகுதி; வ்-எதிர்கால இடைநிலை. ... ... (கூ)

117 ஆய்ச்சியன்றாழிப்பிரான் புறம்புல்கிய*
வேய்த்தடந்தோளிசொல் விட்டுசித்தன்மகிழ்ந்து*
ஈத்ததமிழிவை யீரைந்தும்வல்லவர்*
வாய்த்தநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (௧௦)

வேய் தட தோளி ஆய்ச்சி	மூங்கில்போன்ற பெரிய தோள்களையுடையளான யசோதையானவள்,	மகிழ்ந்து ஈத்த தமிழ் இவை ஈர்ஐந்தும் வல்லவர்	(தாம் அநுபவித்து ஸந்தோஷித்து (உலகத்தார்க்கு) உபகரித்த தமிழ்ப்பாசுரமாகிய இப்பத்து பாசுரங்களையும் ஓதவல்லவர்கள்
ஆழி பிரான் அன்று புறம் புல்கியசொல்	சக்ராயுததரனாகிய ப்ரபுவான கண்ணன் அக்காலத்திலே புறம்புல்குவதைக் கூறிய சொல்லை	வாய்த்த நல் மக்களை பெற்று மகிழ்வர்	(மங்களாசாஸநத்தில் விருப்பம்) பொருந்திய நல்ல புத்திரர்களை அடைந்து ஆநந்திப்பர்கள்.
விட்டுசித்தன்	பெரியாழ்வார்		

* * *—'ஈந்த' என்னவேண்டியது—செய்யுளின்பம் நோக்கி, ஈத்த என்று கிடக்கிறது. நன்மக்கள்—சிஷ்யர்களென்றுமாம். இப்பத்து—ஒன்பது திருமொழிகளிலேயே நூறு பாசுரங்களாய்விட்டபடியால், இவ்வொன்பது திருமொழியிலேயே முடிந்ததென்க. ... ... (ம)

அடிவரவு:—வட்டு கிண்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சூது.

முதற்பத்து உரை முற்றிற்று

இரண்டாம்பத்து—முதல்திருமொழி, மெச்சூது.

(கண்ணன் பூச்சிகாட்டி விளையாடுவதைக் கூறுதல்.)

118 மெச்சூதுசங்கமிடத்தான் நல்வேயூதி*
பொய்ச்சூதில்தோற்ற பொறையுடைமன்னர்க்காய்*
பத்தூர்பெறாதன்று பாரதங்கைசெய்த*
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (௧)

மெச்சு ஊது சங்கம் இடத்தான்	(அனைவரும்) கொண்டாடும்படி ஊதுகின்ற பாஞ்சஜந்யத்தை இடக்கையில் ஏந்தியுள்ளவனும்	பொய் சூதில் தோற்ற பொறை உடை மன்னர்க்கு	க்ருத்ரிமமான சூதிலே (தம்முடைய சொத்துக்களையெல்லாம்) இழந்தவர்களாய் பொறுமைசாலிகளான பாண்டவர்கட்கு
நல் வேய் ஊதி	நல்ல வேய்ங்குழலை ஊதுபவனும்,		

ஆய்	(தான் எல்லாவகைத்) துணையுமாயிருந்து (துர்யோதநாதிகளிடத்துத் தூதுபோய்க் கேட்டுப் பார்த்தும் அவர்களிடத்தினின்றும்)	பாரதம் கைசெய்த அ தூதன்	பாரதயுத்தத்தை அணிவகுத்துச்செய்த அந்த பாண்டவதூதனை கண்ணன்
		அப்பூச்சி காட்டுகின்றான்	அப்படிப்பட்ட [மிகவும் பயங்கரமான] பூச்சிகாட்டுகின்றான்;
பத்து ஊர் பெறாது அன்று	பத்து ஊரையும் அடையமுடியாமல் அக்காலத்திலே	அம்மனே	அம்மா!
			அப்பூச்சி காட்டுகின்றான்—;

* * *—அப்பூச்சி காட்டுகையாவது-கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக்காட்டுவது முதலாகச்செய்யும் பயங்கரமான பாலசேஷ்டைகள். அம்மனே - அச்சத்தினால் சொல்லும் சொல்லு.

இந்தப்பாசுரத்தி னீற்றடியைக் குறித்து ஓர் ஐதிஹ்யம்:—

இப்பாசுரத்தை நம்பெருமாள் ஸந்நிதியில் உடையவர் கோஷ்டியிலே 'உய்ந்தபிள்ளை' என்பாரொரு அரையர் அபிநயக்குமளவில் 'அத்தூதன்' என்னும்போது ஸ்ரீகிருஷ்ணனையும், 'அப்பூச்சி' என்னும்போது கண் இமையை மடக்கிக்கொண்டு வருவதையுங் காட்டி அபிநயிக்க, உடையவர் பின்னே எழுந்தருளியிருந்த எம்பார், தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்ட, அரையரும் தாம் முன் அபிநயித்ததைவிட்டு எம்பார் காட்டியதுபோலவே எம்பெருமான் திருத்தோள்களில் சங்குசக்ரங்கள் தரித்துக்கொண்டிருப்பதை அபிநயிக்க, உடையவர் மிகவுமுகந்து, 'கோவிந்தப்பெருமாள்' [எம்பார்]! இருந்தீரோ? என்றாராம்: இதனால் ஏற்படுவதாவது - தூதனாய்த் தன் ஸௌலப்யத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தார் கொள்ளும்படி யிருப்பவன் அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈச்வரத்வ சின்னங்களைக் காட்டுகிறானென்பது; இது ஈற்றடிக்கு உள்ளுறைபொருள் [ஸ்வாபதேசம்]. (க)

119 மலைபுரைதோள்மன்னவரும் மாரதரும்மற்றும்*
பலர்குலைய நூற்றுவரும்பட்டழிய * பார்த்தன்
சிலைவளையத் திண்டேர்மேல்முன்னின்ற* செங்கண்
அலவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (உ)

மலை புரை தோள் மன்னவர் மா ரதரும்	மலையை ஒத்த தோள்களையுடைய அரசர்களான மஹாரதரும்	திண் தேர் மேல் முன் நின்ற	(அந்த அர்ஜுநனுடைய) வலிய தேரின்மேல் (ஸாரதியாய்) முன்புறத்தில் நின்ற
மற்றும் பலர் உம்	மற்றும் பலவகை அரசர்களும்	செம் கண்	(வாத்ஸல்ய ஸூசகமாகச்) சிவந்த கண்களையுடையனாய்
குலைய	அழியவும்		
நூற்றுவரும் பட்டு அழிய	(துர்யோதனாதிகள்) நூறு பேரும் மரணமடைந்து உருவழிந்துபோகவும்	அலவலை	(அர்ஜுநனுடைய வெற்றியைப்) புகழ்பவனான கண்ணன்
பார்த்தன் சிலை வளைய	அர்ஜுநனுடைய (காண்டீவமென்னும்) வில்வளையவும்		வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

தேர்வீரர்—அதிரதர், மஹாரதர், ஸமரதர், அர்த்தரதர் என நால்வகைப்படுவராதலால், 'மாரதரும் மற்றும்' என்றார். (அஸஹாயராய்த் தாம் ஒரு தேரின்மேலிருந்து தமது ரதகஜதுரகபதாதிகளுக்கு அழிவுவாராமல் காத்துக்கொண்டு பல்லாயிரம் தேர்வீரர்களோடு பொருது வெல்லும் வல்லமையுள்ளவர்—அதிரதர் என்றும், கீழ்ச்சொன்னபடியே தாமிருந்து பதினோராயிரம் தேர்வீரரோடு பொருபவர்—மஹாரதர் என்றும், ஒரு தேர்வீரரோடு தாமு மொருவராய் நின்று எதிர்க்கவல்லவர் - ஸமரதர் என்றும், அங்ஙனமே பொருது, தம் தேர் முதலியவற்றை இழந்துவிடுபவர் - அர்த்தரதர் என்றுஞ் சொல்லப்படுவர்) அலவலை—அர்த்தத்தின் உயர்த்தியையும் கேட்பவனுடைய தாழ்வையும் பாராமல் ரஹஸ்யார்த்தங்களைச் சொல்லுமவன்; வரம்பு கடந்து பேசுபவன். இப்படியெல்லாம் ஸ்ரீக்ருஷ்ணன் செய்தது—த்ரௌபதியின் விரித்த கூந்தலை முடிக்கும்பொருட்டாம். ... ... (உ)

120 காயுநீர்புக்குக் கடம்பேறி* காளியன்
தீயபணத்தில் சிலம்பார்க்கப்பாய்ந்தாடி*

வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற*
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (ங)

காயும் நீர் புக்கு — (காளியனுடைய விஷாக்நியால்) கொதிக்கின்ற மடுவின் ஜலத்திலே புகுந்து (கலக்கி)

(அம்மடுவினுள்ளிருந்த காளியனென்னும் பாம்பைக் கோபத்தோடு படமெடுக்கச் செய்து)

கடம்பு ஏறி — (அம்மடுவின் கரையிலிருந்த) கடம்பமரத்தின் மேலேறி,

காளியன் தீய பணத்தில் — அந்தக் காளியனுடைய கொடிய படத்திலே

சிலம்பு ஆர்க்க — (தன் திருவடியிலணிந்து கொண்டிருந்த) சிலம்பு சப்திக்கும்படி

பாய்ந்து ஆடி — குதித்து கூத்தாடி,
(இச்செய்கையைக் கண்டு என்ன தீங்கு வருமோ ! என்று கலங்கினவர் மகிழ)

வேயின் குழல் ஊதி — மூங்கிலினாலாகிய குழலை ஊதி
(இப்படி)

வித்தகன் ஆய் நின்ற — விஸ்மயநீயனாயிருந்த
ஆயன் — கண்ணபிரான்
வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—தீயபணம்=படம் விஷமிருத்தற்கு உரிய இடமாதலாலும் கோபத்தைத் தெரிவித்தலாலும். ... ... (ங)

121 இருட்டிற்பிறந்துபோய் ஏழைவல்லாயர் *
மருட்டைத்தவிர்ப்பித்து வன்கஞ்சன்மாள *
புரட்டியந்நாளெங்கள் பூம்பட்டுக்கொண்ட *
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (ச)

இருட்டில் பிறந்து போய் — இருள்நிறைந்த நடுநிசியில் (மதுரையிலே) தேவகி புத்ரனாகத் தோன்றி (அங்கு நின்றும் அப்போதே ஆய்ப்பாடிக்குப்) போய்,

ஏழை வல் அயர் — அவிவேகிகளான (தன்னைப் பற்றியிருக்கும்) மனவலிமையையுடைய இடையர்களின் (கண்ணனிடத்திலுள்ள ப்ரேமத்தாலும் கம்ஸனிடத்திலுள்ள கோபத்தாலும் தாமே கம்ஸனைக் கொல்ல வல்லவர்கள் போலே செருக்கிச் சொல்லுகிற)

மருட்டை தவிர்ப்பித்து — மருள்வார்த்தைகளை போக்கினவனாயும்

வல் கஞ்சன் மாள புரட்டி — கொடிய கம்ஸன் மாண்டு போம்படி (அவனை மயிரைப்பிடித்து அடித்துப் பூமியிலிட்டுப் புரட்டினவனாயும்)

அ நாள் எங்கள் பூ பட்டு கொண்ட அரட்டன் — (நாங்கள் யமுனையில் நீராடிய) அக்காலத்திலே எங்களுடைய அழகிய பட்டுப் புடவைகளை வாரிக் கொண்டுபோன தீம்பனாயுமுள்ள கண்ணன்

வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—'பிள்ளைபிறப்பதுஎப்போது!' என்று உருவின கத்தி உருவியபடி கம்ஸன் நிற்கையாலே அவனுடைய கண்ணிற்படாதபடி யிருக்கவேணுமென்று நள்ளிருளிலே தேவகி புத்ரனாய்த்தோன்றி, அப்போதே ஸ்ரீவஸுதேவரை எடுத்துப்போம்படி கட்டளையிட்டுத் தேவகி தன்னைப்பிரியும் பிரிவால் கதறத் தான் திருவாய்ப்பாடியிற் புகுந்து வளர்ந்தருளின வரலாறு அறிக. [ஆயர் மருட்டைத் தவிர்ப்பித்து] கம்ஸன் பூதநாதிகள் மூலமாகக் கண்ணனை நலிய நினைத்திரா நின்றானென்றறிந்த இடையர்கள் தாங்களே கம்ஸனைக் கொல்வார்போலச் சில மருட்டு வார்த்தைகளைச் சொல்ல, 'நீங்களெல்லோரும் வேணுமோ ? நானே செய்வேன்' என்று சொல்லித் தன் பேச்சாலே அவர்கள் அந்த மருட்டு வார்த்தைகளைச் சொல்லாதபடி தவிர்ப்பித்து என்பது பொருள். மருட்டு - மருளையுடையது ; அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்: 'இருள்' 'மருள்'என்ற பெயர்ச்சொற்களின்மேல் 'டு' என்ற விகுதி ஏறப் பெற்றது ; "துறுடுக்குற்றியலுகரவீற்ற, ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பினுகும்" என்பது-நன்னூல். ... ... (ச)

122 சேப்பூண்ட சாடுசிதறி * திருடிநெய்க்
காப்பூண்டு நந்தன்மனைவிகடைதாம்பால் *
சோப்பூண்டுதுள்ளித் துடிக்கத்துடிக்க * அன்று
ஆப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (௫)

சே பூண்ட சாடு — எருதுகள் கட்டுதற்கு உரிய சகடம்
(அஸுராவேசத்தாலே தன்னைக் கொல்ல வர, முலைக்காக அழுகிற பாவனையாலே தன் திருவடியைத் தூக்கி அச்சகடத்தை)
சிதறி — உருக்குலையும்படி உதைத்து
நெய்க்கு திருடி — நெய்க்குஆசைப்பட்டு களவு செய்து
ஆப்பூண்டு — (உடைமைக்கு உரியவர்கையில்) அகப்பட்டுக் கொண்டு
(அவர்கள் யசோதை கையிற் காட்டிக் கொடுக்க,)
நந்தன் மனைவி — நந்தகோபன்தேவியான அவ் யசோதை
கடை தாம்பால் — (தயிரைக்) கடையும் தாம் பாலே (அடிக்க)
துள்ளி துடிக்க துடிக்க சோப்பூண்டு — துள்ளி மிகவுந் துடிக்கும்படி அடியுண்டு
(அதனோடு நில்லாமல்)
அன்று ஆப்பூண்டான் — அக்காலத்தில்(எங்கும் சலிக்கமுடியாதபடி உரலில்) கட்டுண்டவனுமாகிய கண்ணன்
அப்பூச்சி காட்டுகின்றான் * * *—.

* * *— ஆப்பூண்டு நந்தன் மனைவிகடைதாம்பால் சோப்பூண்டு—'என் மகன்மேல் வீண்பழி விளைத்திடேல்மின், களவுகண்டதுண்டாகில் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொணருங்கள்' என்று சொல்லிய தாயான தன் முன்பே ஆய்ச்சிமார் கண்ணனைக் கொண்டியோடே கண்டுபிடித்துக்கொணர, அதுகண்ட யசோதை, நான் பிள்ளைபெற்று வளர்க்கிறது மிகவுமழகிதாயிருந்தது!' என்று சொல்வித் தன்னைத்தானே மோதிக்கொண்டு அவர்கள் முன்னே தன் வயிற்றெரிச்சலெல்லாந் தோன்றும்படி அடிக்க அடியுண்டு என்றபடி. ஆப்பூண்டு, சோப்பூண்டு, ஆப்பூண்டான்—'ஆப்புண்டு' 'சோப்புண்டு' ஆப்புண்டான்' என்பவற்றின் நீட்டல் விகாரம். ... ... (௫)

123 செப்பிளமென்முலைத் தேவகிநங்கைக்கு *
சொப்படத்தோன்றித் தொறுப்பாடியோம்வைத்த *
துப்பமும்பாலும் தயிரும்விழுங்கிய *
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (௬)

செப்பு இள மெல் முலை தேவகி நங்கைக்கு — ஸ்வர்ணகலசங்கள்போன்ற இளமையையும் மென்மையையுமுடைய முலைகளையுடைய தேவகிப் பிராட்டிக்கு (மகனாக)
சொப்படதோன்றி — நன்றாகப் பிறந்து
தொறுப் பாடியோம் வைத்த துப்பமும் பாலும் தயிரும் — ஆய்ப்பாடியிலுள்ளவர்களாகிய நாங்கள் சேமித்து வைத்த நெய்யையும் பாலையும் தயிரையும்
விழுங்கிய அப்பன் — உட்கொண்ட ஸ்வாமி [உபகாரகன்]
வந்து * * *அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—செப்பு - முலைகளுக்கு நிறத்திலும் வடிவிலும் உவமை. சொப்படத் தோன்றி—ஸர்வேச்வரத்வசின்னங்களோடு தோன்றி. தொறு - பசு, பாடி - இடம்; எனவே, பசுக்கூட்டங்கள் நிரம்பிய 'கோகுலம்' என்று ப்ரஸித்திபெற்ற திருவாய்ப்பாடியாயிற்று. ... ... (௬)

124 தத்துக்கொண்டாள்கொலோ தானேபெற்றாள்கொலோ *
சித்தமனையாள் அசோதையிளஞ்சிங்கம் *
கொத்தார்கருங்குழல் கோபாலகோளரி *
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (௭)

	(இந்தப் பிள்ளையை யசோதை)	கொத்து ஆர் கரு குழல்	பூங்கொத்துக்களை யணிந்த கரியகூந்தலையுடையவனும்
தத்து கொண்டாள் கொல் ஓ	தத்த புத்ரனாக வளர்த்துக் கொண்டாளோ!		
	(அல்லது)		
தானே பெற்றாள் கொலோ	ஸ்வயமாகவே மெய்நொந்து பெற்றெடுத்தாளோ!	கோபாலர் கோள் அரி	இடையர்கட்கு (அடங்காத) மிடுக்கைக்கொண்ட சிங்கம்போன்றவனுமாகிய
சித்தம் அனையாள் அசோதை இள சிங்கம்	(கண்ணனுடைய)மனக்கருத்தை ஒத்து நடப்பவளாகிய யசோதையினுடைய சிங்கக்குட்டி போன்றவனும்	அத்தன்	ஸ்வாமியான இவன்
			வந்து***அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—யசோதைப் பிராட்டி ப்ரஸவிக்குங் காலத்திலே அருகிலிருந்தவர்கள் 'தத்தபுத்ர ஸ்வீகாரம் செய்யவில்லை; ஆனால் இவள் பிள்ளை பெறுகிறபோது இவளைப்பேணிப் பார்த்திருந்த நாங்கள் அப்போதாக அயர்ந்து தூங்கிவிட்டபடியால், பிள்ளை பெற்றதையுங் கண்டிலோம்; உணர்ந்த பின்பு இவள் 'நான் பெற்றேன்' என்று சொல்லக்கேட்டோம்' என்று சொல்லும்படியாக ஸ்ரீகிருஷ்ணன் தோன்றினனாதலால் 'தத்துக்கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ' என்றனர்; அன்றியும் இக் கண்ணபிரானுடைய லோக விலக்ஷணமாய் அதிமாநுஷமான குணசேஷ்டிதங்களைக் கண்டவர் இப்பிரானை இவள் பிள்ளையென்று சொல்லமுடியாதபடியும், யசோதைதானும் "இம்மாயம் வல்ல பிள்ளை நம்பி! உன்னை என் மகனே யென்பர் நின்றார்" என்று சொல்லும்படியும் ஸ்ரீக்ருஷ்ணனிருப்பதும் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாகும். பிறர்க்கு அடங்காமையும் செருக்கும்பற்றி, கண்ணனுக்குச் சிங்கக்குட்டி உவமை; தாய்க்கு அடங்காதவன் ஊர்க்கு அடங்கானாதலால், 'அசோதையிளஞ்சிங்கம் கோபாலகோளரி' என்றார். … … … (எ)

125 கொங்கைவன்கூனிசொற்கொண்டு * குவலயத்
துங்கக்கரியும் பரியுமிராச்சியமும் *
எங்கும்பரதற்கருளி வன்கானடை *
அங்கண்ணனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (அ)

கொங்கை வல் கூனி சொல் கொண்டு	(முதுகில்) முலையெழும்பினாற் போன்ற பலிஷ்டமான கூனையுடையளான மந்தரையினுடைய சொல்லை அங்கீகரித்து	பரியும்	(அங்கனொத்த) குதிரைகளையும்
		இராச்சியமும்	ராஜ்யத்தையும்
		பரதற்கு அருளி	பரதாழ்வானுக்கு கொடுத்துவிட்டு
எங்கும் குவலயம் துங்கம் கரியும்	எல்லா விடங்களிலுமுள்ள இப்பூமியில் (இருப்பவற்றுள்) சிறந்தனவான யானைகளையும்	வல் கான் அடை	கொடியகாட்டை அடைந்த
		அம் கண்ணன்	அழகிய கண்ணையுடையனான இவன்
			அப்பூச்சி காட்டுகின்றான் * * *—.

* * *—ஒற்றுமைநயத்தால் ராமக்ருஷ்ணரிருவரையும் ஒருவராகவே கொண்டு ஆழ்வார் இங்ஙனருளிச்செய்கின்றனரென்க. கொங்கை—கூனுக்கு அடைமொழி; வல்—கூனிக்கு அடைமொழி. பெருமாளுடைய வனயாத்ரைக்கு மூலகாரணம் கூனியானமைபற்றிக் 'கூனி சொற்கொண்டு' என்றார். [அங்கண்ணன்] கண்-தயையாகவுமாம்; பட்டாபிஷேகத்துக்காகக் கட்டின காப்போடே காட்டுக்குப்போகச் சொன்னபோதும் முகங்கருகாமல் மலர்ந்து முடிதவிர்ந்து சடை புனைந்து நாட்டைவிட்டுக் காட்டுக்குப்போன பெருமாளுடைய மஹாகுணத்தை வியந்து, அவனது தயையை அழகிதாகக் கொண்டாடுகிறபடி. … … … … (அ)

126 பதகமுதலைவாய்ப் பட்டகளிறு *
கதறிக்கைகூப்பி யென்கண்ணாகண்ணாவென்ன *
உதவப்புள்ளூர்ந்து அங்குறுதுயர்தீர்த்த *
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (கூ)

பதகம் முதலை வாய் பட்ட களிறு	பாதிக்குந் தன்மையையுடைய முதலையின் வாயிலே அகப்பட்ட ஸ்ரீ கஜேந்த்ராழ்வான்	அங்கு உதவ	அப்போதே (அந்தயானைக்கு) உதவும்படி
		புள் ஊர்ந்து	பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு சென்று
கதறி கை கூப்பி என் கண்ணா கண்ணா என்ன	(தன் வருத்தந்தோன்றக்) கூப்பிட்டு கையைக்குவித்துக்கொண்டு 'என்னுடைய கண்ணனே!' என்று பலகாலழைக்க	உறு துயர் தீர்த்த	(அந்தயானையின்)மிக்கவருத்தத்தை போக்கின
		அதகன்	(ஆச்ரித ரக்ஷணத்தில்) மிடுக்கையுடையவன்

வந்து *** அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—பதகம்—"பாதகம்" என்ற வடசொல் விகாரம். உறுதுயர்-ப்ரயாஸப்பட்டுப் பறித்த பூ பயனற்றுப் போகின்றதே என்னுந் துயர்; "உயிர் போகிறதே" என்ற துயரன்று. உறு—மிகுதியைக் குறிப்பதோர் உரிச்சொல். அதகன்—ஹதகன் ; ஆச்ரித விரோதியை ஹதம்பண்ணுமவன் (௯)

127 வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரந்த *
வில்லாளனை விட்டுசித்தன்விரித்த *
சொல்லார்ந்தவப்பூச்சிப் பாடலிவைபத்தும்
வல்லார்போய் * வைகுந்தம்மன்னியிருப்பரே. (ய)

வல் ஆள் இலங்கை மலங்க	பலசாலிகளான வீரர்களையுடைய லங்கையானது பாழாம்படி	சொல் ஆர்ந்த அப் பூச்சி பாடல் இவை பத்தும் வல்லார்	சொல் நிரம்பிய அப்பூச்சி காட்டுதலைப்பற்றிய இப் பத்துப் பாசுரங்களையும் கற்கவல்லவர்
சரம் துரந்த	அம்பைச்செலுத்திய		
வில் ஆளனை	வில்லையேந்தி ஸ்ரீராமனாகி (முன்பு) திருவவதரித்த கண்ணனைப்பற்றி	போய்	(அர்ச்சிராதி மார்க்கமாகப்) போய்
விட்டுசித்தன் விரித்த	பெரியாழ்வார் பரக்கக் கூறிய	வைகுந்தம் மன்னி இருப்பர்	ஸ்ரீவைகுண்டத்திலே நித்ய வாஸம்பண்ணப்பெறுவர்.

* * *—சொல்லார்ந்த பாடலிவைபத்தும்=இத்திருமொழியில் அர்த்தத்தைக்கவனிக்கவேணுமென்கிற கஷ்டமும் வேண்டா ; சொல்லே பரமபோக்யம் என்று கருத்து. ... (௧௦)

அடிவரவு:—மெச்சு மலை காயும் இருட்டு சேப்பூண்ட செப்பு தத்துக் கொங்கை பதகம் வல்லாள் அரவணை. ... ...

இரண்டாம்பத்து—இரண்டாந்திருமொழி, அரவணையாய்

(கண்ணனை முலையுண்ண அழைத்தல்)

128 அரவணையாயாயரேறே அம்மமுண்ணத்துயிலெழாயே *
இரவுமுண்ணாதுறங்கிநீபோய் இன்றுமுச்சிகொண்டதாலோ *
வரவுங்காணேன்வயிறசைந்தாய் வனமுலைகள்சோர்ந்துபாய *
திருவுடையவாய்மடுத்துத் திளைத்துதைத்துப்பருகிடாயே. (௧)

அரவு அணையாய்	சேஷசாயியானவனே!	இன்றும் உச்சி கொண்டது ஆல்	இப்போதும் (பொழுது விடிந்து) உச்சிப்போதாய் விட்டது; ஆதலால்
ஆயர் ஏறே	இடையர்களுக்குத் தலைவனே!		
		அம்மம் உண்ண	முலையுண்பதற்கு
நீ இரவும் உண்ணாது	நீ (நேற்று) இரவும் முலை உண்ணாமல்	துயில் எழாய்	(தூக்கந்தெளிந்து) படுக்கையிலிருந்து எழுந்திருக்கவேணும்;
உறங்கி போய்	உறங்கிப் போய்விட		

வரவும் காணேன்	(நீயே எழுந்திருந்து அம்ம முண்ண வேணுமென்று சொல்லி) வருவதையுங் கண்டிலேன்;	சோர்ந்து பாய	பால் வடிந்து பெருகிக் கொண்டிருக்க
	(உனக்குப் பசியில்லை யென்போமென்றால்)	திரு உடைய வாய் மடுத்து	அழகை உடைய (உன்) வாயைவைத்து
வயிறு அசைந்தாய்	வயிறுந்தளர்ந்து நின்றாய்;		
வன முலைகள்	(எனது) அழகிய முலைகள் (உன்மேல் அன்பினால் நெறித்து,)	திளைத்து உதைத்து பருகிடாய்	செருக்கி கால்களாலே உதைத்துக் கொண்டு முலை யுண்பாய்.

* * *—எம்பெருமான் திருவனந்தாழ்வானாகிற படுக்கையைவிட்டு க்ருஷ்ணனாகத் தோன்றினாலும், "சென்றால் குடையாம்" என்கிறபடியே அவ்வக்காலத்துக்கு ஏற்ற கோலங்கொண்டு அடிமை செய்பவனான அத்திருவனந்தாழ்வான் கண்ணபிரானுக்குத் திருப்பள்ளி மெத்தையாய் இனிது தூங்குவதற்கு உதவுகின்றானாதலால் 'அரவணையாய்' என்றது. 'அம்ம முண்ண' என்றது–கண்ணனுடைய குழந்தைப் பருவத்திற்குத் தக்கபடி யசோதை சொல்லியதாகும். இரண்டாமடியின் ஈற்றிலுள்ள ஆல்—'ஆதலால்' என்பதன் சிதைவு ; இனி, ஆல், ஓ—இரண்டும் இரக்கப் பொருளைக் குறிப்பனவென்றுமாம் வயிறசைந்தாய்—நன்னூலார், "சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்" என்றாராதலின், சினைவினை முதலோடு செறிந்த தென்க ... ... (க)

129 வைத்தநெய்யுங்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெயும் *
இத்தனையும்பெற்றறியேன் எம்பிரான்நீபிறந்தபின்னை *
எத்தனையுஞ்செய்யப்பெற்றாய் ஏதுஞ்செய்யேன்கதம்படாதே *
முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணாயே. (உ)

எம் பிரான்	எமது உபகாரகனே!	எத்தனையும் செய்ய பெற்றாய்	(நீ) வேண்டினபடி யெல்லாம் நீ செய்யலாம் ;
வைத்த நெய்யும் காய்ந்தபாலும் வடி தயிரும் நறு வெண்ணெயும்	உருக்கிவைத்த நெய்யும் (ஏடு மிகுதியாகப் படியும்படி) காய்ந்தபாலும்(உள்ள நீரை) வடித்துக் கட்டியாயிருக்கிற தயிரும் மணம் மிக்க வெண்ணெயும்	ஏதும் செய்யேன்	(அப்படி நீ செய்வதற்காக நான் உன்னை) ஒன்றும் செய்யமாட்டேன்;
		கதம் படாதே	நீ கோபியாதே கொள்;
இத்தனையும்	(ஆகிய) இவையெல்லாவற்றையும்	முத்து அனைய முறுவல் செய்து	முத்தைப்போல் வெண்ணிறமாக மந்தஸ்மிதம்பண்ணி
நீ பிறந்த பின்னை பெற்று அறியேன்	நீ பிறந்த பிறகு கண்டதில்லை;	மூக்கு உறிஞ்சி முலை உணாய்	மூக்கை உறிஞ்சிக்கொண்டு முலை உண்பாயாக.

* * *—இத்தனையும் பெற்றறியேன்—(நெய் பால் முதலியவற்றில்) சிறிதும் சேஷித்திருக்கக் கண்டிலேன் என்றுமாம். கதம் - கோபம். குழந்தைகள் மூக்குறிஞ்சி முலையுண்ணுதல்—இயல்பு. (உ)

130 தந்தம்மக்களழுதுசென்றால் தாய்மாராவார்தரிக்ககில்லார் *
வந்துநின்மேற்பூசல்செய்ய வாழவல்லவாசுதேவா *
உந்தையாருந்திறத்தரல்லர் உன்னைநானொன்றுரப்பமாட்டேன் *
நந்தகோபனணிசிறுவா நான்சுரந்தமுலையுணாயே. (௩)

தம்தம் மக்கள் அழுது சென்றால்	தங்கள்தங்களுடைய பிள்ளைகள் அழுதுகொண்டு (தம் தம் வீட்டுக்குப்)போனால்	உந்தையார் உன் திறத்தர் அல்லர்	உன் தகப்பனார் உன் விஷயத்தைக் கவனிப்பவரல்லர்;
தாய்மார் ஆவார் தரிக்க கில்லார்	(அக்குழந்தைகளின்) தாய்மார்கள் பொறுக்க மாட்டாதவர்களாய்	நான் உன்னை ஒன்று உரப்பமாட்டேன்	(அபலையான) நானும் (தீம்பில் கைவளர்ந்த) உன்னை சிறிதும் அதட்ட வல்லமையற்றிராநின்றேன்;
			(இவையெல்லாங் கிடக்க;)
வந்து நின்மேல்பூசல் செய்ய வாழ வல்ல வாசுதேவா	(தம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு) வந்து உன்மேல் பிணங்க (அதைக் கண்டு) மகிழவல்ல கண்ணபிரானே!	நந்தகோபன் அணி சிறுவா	நந்தகோபருடைய அழகிய சிறுபிள்ளாய் !
		நான் சுரந்த முலை உணாய்	எனது பால் சுரந்திருக்கிற முலையை உண்பாயாக.

* * *—கண்ணபிரான் தன்னோராயிரம் பிள்ளைகளோடு விளையாடப் போனால் எல்லாப்பிள்ளைகளையும்போல விராமல் அப்பிள்ளைகளை அடித்துக் குத்தி விளையாடுவனாதலால் அழுதுகொண்டே வீட்டுக்குச் செல்லும். இப்பிள்ளைகளைக்கண்ட தாய்மார்கள் மனம்பொறாமல் நொந்து அப்பிள்ளைகளைக் கண்ணுங் கண்ணீருமாய் அழைத்துக்கொண்டுவந்து காட்டி இவன்மேலே பழிசொல்லிப் பிணங்கினால் இவன் அதனால் சற்றும் இளைப்புக்கொள்ளாமல் அதையே த்ருப்தியாகக்கொண்டு ஸந்தோஷிப்பனென்பதைக் காட்டுகிறார்—முதலிரண்டடியால். [வாசுதேவா] பசுவின் வயிற்றிலே புலி பிறந்ததீ ! யென்கிறார். உன்+தந்தையார் = உந்தையார் ; மரூஉமொழி. ... ... (ங)

131 கஞ்சன்றன்னாற்புணர்க்கப்பட்ட கள்ளச்சகடுகலக்கழிய *
பஞ்சியன்னமெல்லடியால் பாய்ந்தபோதுநொந்திடுமென்று *
அஞ்சினேன்காணமரர்கோவே ஆயர்கூட்டத்தளவன்றாலோ *
கஞ்சனையுன்வஞ்சனையால் வலைப்படுத்தாய்முலையுணாயே. (ச)

- அமரர் கோவே — தேவர்களுக்குத் தலைவனே! (நீ)
- கஞ்சன் தன்னால் புணர்க்கப்பட்ட — கம்ஸனாலே (உன்னைக்கொல்வதற்காக) ஏற்படுத்தப்பட்ட
- கள்ளம் சகடு கலக்கு அழிய — க்ருத்ரிம சகடமானது கட்டு (க்குலைந்து உருமாறி) அழிந்துபோம்படி
- பஞ்சி அன்ன மெல் அடியால் — பஞ்சைப்போன்ற ஸுகுமாரமான உன் திருவடிகளினால்
- பாய்ந்த போது — உதைத்தபோது
- நொந்திடும் என்று — (உன் திருவடிகளுக்கு) நோவுண்டாகுமே யென்று
- அஞ்சினேன்காண் — பயப்பட்டேன்காண் ; (என்னுடைய அச்சம்)
- ஆயர் கூட்டத்து அளவு அன்று ஆல் — இடையர் திரளினுடைய (அச்சத்தின்) அளவல்லகாண்;
- கஞ்சனை — (உன்னைக் கொல்வதற்காக மிக்க வஞ்சனைகளைச் செய்த) கம்ஸனை
- உன் வஞ்சனையால் வலைப் படுத்தாய் — உன்னுடைய வஞ்சனையினாலே (உன்கையிற்) சிக்கும்படிசெய்துகொன்றவனே!

முலை உணாய்—.

* * *—"பெற்றவளுக்கன்றோ தெரியும் பிள்ளையினருமை" என்றபடி உன்னைப் பெற்றதாயான எனக்குத்தான் உன் அருமை தெரியுமாதலால், மற்றை இடையர் திரளின் அச்சமெல்லாம் ஒன்றுசேர்ந்தாலும் நான் 'உனக்கு ஏதேனும் தீங்குநேரிடுமோ !' என்று கொண்டுள்ள அச்சத்திற்கு ஒப்பாகாது என்றபடி. காண்—முன்னிலையசை; தேற்றப்பொருள் தரும். ஆல்-தோற்றம்; ஓ-இரக்கம். பஞ்சி-பஞ்சு; கடைப்போலி. ... ... (ச)

132 தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்சோர்வுபார்த்து *
மாயந்தன்னால்வலைப்படுக்கில் வாழகில்லேன்வாசுதேவா *
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய் சாற்றிச்சொன்னேன்போகவேண்டா *
ஆயர்பாடிக்கணிவிளக்கே அமர்ந்துவந்தென்முலையுணாயே. (ரு)

- வாசுதேவா — கண்ணபிரானே !
- தீய புந்தி கஞ்சன் உன் மேல் சினம் உடையன் — துஷ்டபுத்தியையுடைய கம்ஸனனவன் உன் பக்கலிலே கோபங்கொண்டவனாயிராநின்றான்;
- சோர்வு பார்த்து — (நீ) தனியாயிருக்கும் ஸமயம் பார்த்து
- மாயம் தன்னால் வலைப்படுக்கில் — வஞ்சனையால் (உன்னை) அகப்படுத்திக்கொண்டால்
- வாழ கில்லேன் — (நான்) பிழைத்திருக்க சக்தையல்லேன்;
- தாயர் வாய் சொல் கருமம் கண்டாய் — தாய்மார்களுடையவாயினாற் சொல்லுவது அவச்யகர்த்தவ்ய கார்யமாகும்;
- சாற்றி சொன்னேன் — வற்புறுத்திச் சொல்லுகிறேன்;
- போகவேண்டா — (நீ ஓரிடத்திற்கும்) போக வேண்டா;
- ஆயர் பாடிக்கு அணி விளக்கே — திருவாய்ப்பாடிக்கு மங்களதீபமானவனே !
- அமர்ந்து வந்து — பொருந்தி வந்து

என் முலை உணாய்—.

* * *—தேவகியின் மக்களறுவரைக் கல்விடைமோதி சிசுஹத்திசெய்த கொடிய கம்ஸன் 'தேவகியின் எட்டாவது கர்ப்பம் உனக்குப் பகை' என்ற ஆகாயவாணியினாலும், பின்பு துர்க்கை சொல்லிப் போனதாலும் 'நம்பகைவன் கைதப்பிப்போய் நமக்கு அணுகவொண்ணாத இடத்திலே வளராநின்றான்; அவனை எப்படியாவது கண்டுபிடித்துக் கொன்றுவிடவேணும்' என்று உன்மேல் மிகவும் கறுக்கொண்டு ஆஸுர ப்ரக்ருதிகளை ஸ்தாவர ஜங்கமங்களான வடிவுகளைக்கொண்டு நீ திரியுமிடங்களில் நிற்கும்படி ஏவியிருக்கிறான்! அவன் அவர்களைக்கொண்டு நீ துணையற்றுத் திரியும்போது பார்த்து உனக்குத் தெரியாமலே தப்பமுடியாதபடி வஞ்சனையால் உன்னைப் பிடித்துக்கொண்டால் பின்னை என்னால் உயிர் தரித்திருக்கமுடியாது; என் பேச்சைப்பேணி இங்கேயே இருக்கக்கடவாய் என்று வற்புறுத்துகின்றாள். [அணிவிளக்கே] உனக்கு ஏதேனும் தீங்குவந்தால் இத்திருவாய்ப்பாடியடங்கலும் இருள் மூடிவிடுங்காணென்கிறாள். சோர்வு—தளர்ச்சி: இலக்கணையால் தனிப்பட்டிருத்தலைக் காட்டும். அமர்ந்து உவந்து என்றும் பிரிக்கலாம். ... ... (ரு)

133 மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல்நுழைந்தவண்டு *
இன்னிசைக்கும்வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாயுன்னைக்கண்டார் *
என்னநோன்புநோற்றாள்கொலோ இவனைப்பெற்றவயிறுடையாள் *
என்னும்வார்த்தையெய்துவித்த இருடீகேசாமுலையுணாயே. (சூ)

மின் அனைய	மின்னலையொத்த
நுண்	ஸூக்ஷ்மமான
இடையார்	இடையையுடைய பெண்களின்
விரி குழல் மேல்	விரிந்த [பரந்த] கூந்தலின் மேல்
நுழைந்த	(தேனை உண்ணப்) புகுந்த
வண்டு	வண்டுகள் (தேனையுண்டு களித்து)
இன் இசைக்கும்	இனிதாக ஆளத்திவைத்துப் பாடாநின்ற
வில்லிபுத்தூர்	ஸ்ரீவில்லிபுத்தூரிலே
இனிது	போக்யமாக
அமர்ந்தாய்	எழுந்தருளியிருப்பவனே!
உன்னை கண்டார்	உன்னைப்பார்த்தவர்
இவனைபெற்றவயிறு உடையாள்	இவனைப் (பிள்ளையாகப்) பெற்ற வயிற்றையுடையவள்
என்ன நோன்பு நோற்றாள் கொலோ	என்ன தபஸ்ஸு பண்ணினாளோ!
என்னும்	என்று கொண்டாடிச்சொல்லுகிற
வார்த்தை	வார்த்தையை
எய்துவித்த	(எனக்கு) உண்டாக்கின
இருடீகேசா	ஹ்ருஷீகேசனே!

முலை உணாய்—.

* * *—[என்ன நோன்பித்யாதி] ரூபகுணசேஷ்டிதாதிகளாலே இப்படி லோகவிலக்ஷணனாயுள்ள இப்பிள்ளையைப் பெற்றாளும் ஒருத்தியே!, அவள்தான் பூர்வஜந்மத்தில் நோற்ற நோன்பு என்னோ! என்று என்னைப் பலரும் கொண்டாடும்படி பிறந்தவனே! என்று—யசோதை, கண்ணன் தன் வசப்படுகைக்காகப் புகழ்ந்து கூறுகிறபடி. ஹ்ருஷீகேசன்—(ரூபகுணாதிகளாலே) ஸர்வேந்த்ரியங்களையும் கவருமவன். ... ... (சூ)

134 பெண்டிர்வாழ்வார்நின்னொப்பாரைப் பெறுதுமென்னுமாசையாலே *
கண்டவர்கள்போக்கொழிந்தார் கண்ணிணையாற்கலக்கநோக்கி *
வண்டுலாம்பூங்குழலினார் உன்வாயமுதமுண்ணவேண்டி *
கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தாநீமுலையுணாயே. (எ)

கண்டவர்கள்	(உன்னைப்) பார்த்தவர்களான
பெண்டிர் வாழ்வார்	(தமது கணவர்க்கு) மனைவியரா யிருக்கின்ற ஸ்த்ரீகள்
நின் ஒப்பாரை பெறுதும் என்னும் ஆசையாலே	உன்னைப்போன்ற குழந்தைகளைப் பெறுவோம் (பெறவேணும்) என்கிற ஆசையினாலே
போக்கு ஒழிந்தார்	(உன்னைவிட்டுப்) போதலைத் தவிர்ந்தார்கள்;
வண்டு உலாம் பூ குழலினார்	வண்டுகள் ஸஞ்சரிக்கிற புஷ்பங்களை யணிந்த கூந்தலையுடையவர்கள்
கண் இணையால் கலக்க நோக்கி	(தமது) இரண்டு கண்களினாலும் (உனது) திருமேனி முழுவதும் பார்த்து
உன் வாய் அமுதம் உண்ண வேண்டி	உன்னுடைய அதராம்ருதத்தை பாநம் பண்ண ஆசை கொண்டவர்களாய்
கொண்டு போவான் வந்து நின்றார்	(உன்னை) எடுத்துக்கொண்டு போவதற்கு வந்து நிற்கிறார்கள்;
கோவிந்தா	கோவிந்தனே!

நீ முலை உணாய்—.

* * *—முதலிரண்டடியால்—பதிவிரதைகளான பெண்களின் மனோரதமும், பின் ஒன்றரையடியால்—யுவதிகளாய் போகமநுபவிக்க விரும்பின பெண்களுடைய மனோரதமும் சொல்லுகிறதென்க. பேண்டிர் = இர்—பலர்பால் விகுதி. பெறுதும்—தன்மைப்பன்மை வினைமுற்று. கலக்க நோக்குதல்—ஒவ்வொரு அங்கத்தினுடையவும் ஸௌந்தர்யத்தை நோக்குதல். ... ... (எ)

135 இருமலைபோலெதிர்ந்தமல்லர் இருவரங்கமெரிசெய்தாய் * உன்
திருமலிந்துதிகழுமார்வு தேக்கவந்தென்னல்குலேறி *
ஒருமுலையைவாய்மடுத்து ஒருமுலையைநெருடிக்கொண்டு *
இருமுலையும்முறைமுறையாய் ஏங்கியேங்கியிருந்துணாயே. (அ)

இரு மலை போல் எதிர்ந்த மல்லர் இருவர் அங்கம் எரி செய்தாய்	இரண்டு மலை போலே (வந்து) எதிர்த்துநின்ற (சாணூர முஷ்டிகரென்னும்) இரண்டு மல்லர்களுடைய உடம்பை (பயத்தாலே) எரியும்படி செய்தவனே !	ஒரு முலையை வாய் மடுத்து	ஒரு முலையை வாயிலே வைத்துக்கொண்டு
		ஒரு முலையை நெருடிக் கொண்டு	மற்றொரு முலையை (கையினாலே) நெருடிக்கொண்டிருந்து
			(மிகுதியாயிருப்பதுபற்றிப் பால் வாயிலடங்காமையினால்,)
வந்து என் அல்குல் ஏறி	(நீ) வந்து என் மடிமீது ஏறிக்கொண்டு	ஏங்கி ஏங்கி	இளைத்திளைத்து (இப்படி)
உன் திரு மலிந்து திகழும் மார்வு	உன்னுடைய அழகுநிரம்பி விளங்குகின்ற மார்பானது	இரு முலையும் முறை முறை ஆய்	இரண்டு முலையையும் மாறி மாறி
தேக்க	(முலைப்பாலால்) நிறையும் படி	இருந்து உணாய்	பொருந்தியிருந்து உண்பாயாக

* * *—திருமலிந்து திகழுமார்வு = திரு-பிராட்டி என்றுமாம். தேக்க—'தேங்க' என்பதன் விகாரம். ஒரு முலையை வாயில் வைத்துக்கொண்டு மற்றொரு முலையின் காம்பைக் கையால் நெருடிக்கொண்டு பால் மிகுதியினால் மூச்சுத்தணைக்க மாறிமாறி முலையுண்ணுதல்-குழந்தைகளினியல்பு; "ஒருகையாலொரு முலைமுகம் நெருடா - வாயிலே முலையிருக்க" என்ற பெருமாள் திருமொழியுங் காண்க. இது - தன்மை நவிற்சி [ஸ்வபாவோக்தி]. ... ... (அ)

136 அங்கமலப்போதகத்தில் அணிகொள்முத்தஞ்சிந்தினாற்போல் *
செங்கமலமுகம்வியர்ப்பத் தீமைசெய்திம்முற்றத்தூடே *
அங்கமெல்லாம்புழுதியாக அளையவேண்டாவம்மவிம்ம *
அங்கமரர்க்கமுதளித்த அமரர்கோவேமுலையுணாயே. (கூ)

அம்ம	தலைவனே !	அம் கமலம் போது அகத்தில்	அழகிய தாமரைப் பூவினுள்ளே
	(அஸுரர்கள் கையிலகப்பட்டு இறவாமலிருக்கும்படி தேவர்கள் அம்ருதத்தைப் பெறுதற்கு உன்னையடைந்து)	அணி கொள் முத்தம் சிந்தினால் போல்	அழகிய முத்துகள் சிந்தியதை ஒத்திருக்கும்படி
அங்கு	அக்காலத்திலே	செம் கமலம் முகம் வியர்ப்ப	செந்தாமரை மலர்போன்ற (உனது) முகமானது வியர்த்துப்போக
விம்ம	(அவர்கள்வயிறு) நிரம்பும் படி	இ முற்றத்தூடே தீமை செய்து	இந்த முற்றத்திலேயே தீம்பைச் செய்துகொண்டு
அமரர்க்கு அமுது அளித்த அமரர் கோவே	(அந்த) தேவர்களுக்கு (க்ஷீராப்தியைக் கடைந்து) அம்ருதத்தை (எடுத்துக்) கொடுத்த தேவாதி ராஜனே !	அங்கம் எல்லாம் புழுதி ஆக அளைய வேண்டா	உடம்பெல்லாம் புழுதிபடியும்படி புழுதியளையாதே ;
		முலை உணாய்	முலையுண்ணவாராய்.

* * *—புழுதியளையாமல் முலையுண்ண வாராய் என்கிறாள். செந்தாமரைபோன்ற திருமுகத்திலே வியர்வைத்துளிகள் அரும்புதற்கு ஒரு அபூதோபமை கூறுகின்றார் முதலடியில் - தாமரைமலரில் முத்துக்கள் சிந்தியிருந்தாலொக்குமென்கிறார். ... ... (கூ)

137 ஓடவோடக்கிண்கிணிகள் ஒலிக்குமோசைப்பாணியாலே *
பாடிப்பாடி வருகின்றாயைப் பற்பநாபனென்றிருந்தேன் *
ஆடியாடியசைந்தசைந்திட்டு அதனுக்கேற்றகூத்தையாடி *
ஓடியோடிப்போய்விடாதே உத்தமாநீமுலையுணாயே. (கo)

ஓட ஓட ஒலிக்கும் கிண்கிணிகள் ஓசைப்பாணியாலே	(குழந்தைப்பருவத்துக்குத் தக்கபடி) பதறி ஓடுவதனால் சப்திக்கின்ற பாதச்சதங்கைகளினுடைய ஓசையாகிற சப்தத்தால்
பாடி பாடி	இடைவிடாது பாடிக்கொண்டு
அதனுக்கு ஏற்ற கூத்தை	அப்பாட்டிற்குத் தகுந்த ஆட்டத்தை
அசைந்து அசைந்திட்டு	வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அசைந்து
ஆடி ஆடி வருகின்றாயை	ஆடிக்கொண்டு வருகின்ற உன்னை
பற்பநாபன் என்று இருந்தேன்	(வேறோராபரணம் வேண்டாதபடி) பத்மத்தை நாபியிலுடையவனென்று எண்ணியிருந்தேன்;
நீ ஆடி ஓடி ஓடிபோய் விடாதே	நீ ஆடிக்கொண்டே (என் கைக்கு எட்டாதபடி) ஓடிப் போய்விடாதே.

முலை உணாய்—.

* * *—கண்ணபிரான் நடந்துவரும்போது திருவடிச் சதங்கைகளின் ஓசைதானே பாட்டாயிருக்குமென்கை. [பற்பநாபனென்றிருந்தேன்] "கொப்பூழிலெழு கமலப்பூவழகர்" என்றபடி வேறொரு ஆபரணமும் வேண்டாமல் திருநாபீகமலமே ஆபரணமாம்படி யிருப்பானொருவனன்றோ இவன்! இவனுக்கு வேறொருபாட்டும் கூத்தும் வேணுமோ? சதங்கையோசையும் நடையழகுமே பாட்டும் ஆட்டமுமாய் அமைந்த ஆச்சரியம் என்னே! என்று வியப்புக்கொண்டிருந்தேன் என்க. இனி,—இவன் அழிந்து கிடந்த வுலகத்தை நாபீகமலத்திலுண்டாக்கினவனன்றோ, ஆகையால் நம்முடைய ஸத்தையையுந் தருகைக்காக வருகிறானென்றிருந்தேன் என்றும் விசேஷார்த்தம் கூறுவர். ... (கo)

138 வாரணிந்தகொங்கையாய்ச்சி மாதவாவுண்ணென்றமாற்றம் *
நீரணிந்தகுவளைவாசம் நிகழநாறும்வில்லிபுத்தூர் *
பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
சீரணிந்தசெங்கண்மால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (கக)

வார் அணிந்த கொங்கை ஆய்ச்சி	கச்சை அணிந்துகொண்டிருக்கிற ஸ்தனங்களையுடைய யசோதை
மாதவா உண் என்ற மாற்றம்	'மாதவனே! உண்பாயாக' (முலையை) என்று (வேண்டிச்)சொன்ன வார்த்தையைக் குறித்தனவான,—
நீர் அணிந்த குவளை வாசம் நிகழ நாறும்	நீர்நிலையை அழகுடையதாகச்செய்கிற செங்கழுநீரின் நல்ல வாசனை ஒரே மாதிரியாக எப்போதும் வீசுகின்ற
வில்லிபுத்தூர்	ஸ்ரீ வில்லிபுத்தூரிலவதரித்தவரும்
பார் அணிந்த தொல் புகழான்	பூமிமுழுவதும் அழகாகப் பரவிய பழமையான கீர்த்தியையுடையவருமான
பட்டர்பிரான்	பெரியாழ்வார் அருளிச்செய்த
பாடல் வல்லார்	பாசுரங்களை ஓதவல்லவர்,
சீர் அணிந்த செம் கண் மால் மேல்	குணங்களாலழகிய சிவந்த திருக்கண்களையுடைய திருமாலிடத்தில்
சென்ற சிந்தைபெறுவர்	பதிந்த மநஸ்ஸை அடைவார்கள்.

* * *—வாரணிந்த கொங்கையாய்ச்சி—ராஜாக்களுக்கு போக்யமான பொருளை வேலைக்காரர் மூடிக்கொண்டுபோவதுபோல, கண்ணனுக்கு விருப்பமான ஸ்தநங்களை யசோதை பிறர் கண்படாதபடி கச்சினால்மறைத்து வைப்பாளென்க. மாற்றம் (ஆகிய) பாடல் எனத்தொடரும். வாசம்—'வாஸநா' என்ற வடசொற்சிதைவு. ... ... (கக)

அடிவரவு:—அரவணை வைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர் இருமலை அங்கமலம் ஓட வாரணி போய்.

இரண்டாம்பத்து—மூன்றுந்திருமொழி, போய்ப்பாடு

(அந்தாதித்தொடையாலமைந்த கேசவாதி பன்னிருநாமப்பதிகம்.)

(கண்ணனைக் காதுகுத்த அழைத்தல்)

139 போய்ப்பாடுடையநின்தந்தையுந்தாழ்த்தான் பொருதிறற்கஞ்சன்கடியன் *
காப்பாருமில்லைகடல்வண்ணாவுன்னைத் தனியேபோயெங்குந்திரிதி *
பேய்ப்பால்முலையுண்டபித்தனே கேசவநம்பியுன்னைக்காதுகுத்த *
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார் அடைக்காய்திருத்திநான்வைத்தேன். (க)

பாடு உடைய நின் தந்தையும் போய் தாழ்த்தான் — பெருமையை உடைய உன் தகப்பனும் (வெளியே) போய் (திரும்பி வருவதற்குத் தாமஸித்தான்;

பொருதிறல் கஞ்சன் கடியன் — போர்செய்யுந்திறமையுள்ள கம்ஸனோ (உன் விஷயத்தில்) மிக்வும் க்ரூரனாயிரா நின்றான் ;

கடல் வண்ணா உன்னை காப்பாரும் இல்லை — கடல்போன்ற [ச்ரமஹரமான] வடிவையுடையவனே! உன்னை பாதுகாப்பவரான வேறொருவரும் (இங்கு இப்போது) இல்லை;

(நீயோவென்றால்,)

தனியே போய் எங்கும் திரிதி — அஸஹாயனாய்ப் போய் கண்டவிடங்களிலும் திரியாநின்றாய் ;

பேய் முலை பால் — பூதனையின் முலைப்பாலை

உண்ட பித்தனே — உட்கொண்ட மதிமயக்கமுள்ளவனே!

கேசவ நம்பி — கேசவனே! பூர்ணனானவனே!

உன்னை காது குத்த — உன் காதுகளைக் குத்துவதற்காக

ஆய் பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார் — இடைச்சியர்களாகிய எல்லாப்பெண்டுகளும் வந்திரா நின்றார்கள்;

நான் அடைக்காய் திருத்தி வைத்தேன் — நானும் (அவர்களுக்கு ஸம்பாவிக்கவேண்டிய) வெற்றிலைபாக்குகளை ஆய்ந்து வைத்திருக்கிறேன்.

* * *—கண்ணபிரானே !' உன்னை ரக்ஷிப்பதில் ஸமர்த்தரான உன் தகப்பனாரும் 'பசுக்களின் பின்னே போய்வருகிறேன்; வருகிறவரையில் நீ பிள்ளையைக் காப்பாற்றிக்கொண்டிரு' என்று சொல்லிச்சென்று இன்னும் வரவில்லை. கம்ஸனோ உன்மேல் கறுக்கொண்டிருப்பதனால் எந்த ஸமயத்தில் யாரை அனுப்புவனோ, என்ன செய்வனோ, ஒன்றுந்தெரியவில்லை; உபாயமறிந்து காப்பாற்றவல்ல வேறொருவரும் இங்கில்லை; நீயோ பயமறியாமல் எங்குந் திரிகின்றாய்; பல பிள்ளைகளுடன் நான் திரிந்து கொண்டிருந்தால் என்னை யாரறிவாரென்று நீ நினைக்கவேண்டா; [கடல் வண்ணா !] உன் வடிவழகே உன்னைக் கோட்சொல்லிக்கொடுக்குமே. மேலும் பிள்ளைகளோடே விளையாடுகிறாயென்று சொல்லவும் முடியாதபடி நீ அவர்களை விட்டும் தனியே பலவிடங்களில் திரிகின்றாய்: இப்படியெல்லாம் ஓடிப்போகாமல் கிட்ட வா; உன்னைக் காதுகுத்த ஆய்ப்பாடிப் பெண்டுகளெல்லோரும் வந்திருக்கிறார்கள்; நான் அவர்கட்குக்கொடுக்க வெற்றிலை பாக்கு எல்லாம் ஸித்தப்படுத்தி வைத்திருக்கிறேன்—என்று சொல்லியழைக்கிறாள் யசோதை. அடை—இலை=வெற்றிலை; காய்—பாக்கு. ... (க)

140 வண்ணப்பவளமருங்கினிற்சாத்தி மலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப *
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத நாராயணாவிங்கேவாராய் *
எண்ணற்கரியபிரானே திரியையெரியாமேகாதுக்கிடுவன் *
கண்ணுக்குநன்றுமழகுமுடைய கனகக்கடிப்புமிவையா. (உ)

நண்ணி தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா — கிட்டிவணங்குகிறவர்களுடைய மநஸ்ஸில் நின்றும் விட்டு நீங்காத நாராயணனே!

(நீ,)

வண்ணம் பவளம் மருங்கினில் சாத்தி — (மிக்க செந்நிறத்தையுடைய பவழ வடத்தை திருவரையிலே சாத்திக்கொண்டு

மலர் பாதம் கிண்கிணி ஆர்ப்ப — தாமரைமலர்போன்ற பாதங்களிலணிந்த சதங்கை ஒலிக்கும்படி

இங்கே வாராய்—;

(உன்மேல் அன்பில்லாதவர்களுக்கு)

எண்ணற்கு அரிய பிரானே — நினைப்பதற்கு அருமையான ஸ்வாமியே!

திரியை எரியாமே காதுக்கு இடுவன் — நூல்திரியை எரிச்சலுண்டாகாதபடி (உன்) காதுகளுக்கு இடுவேன்;
(அப்படித் திரியையிட்டுக் காது பெருக்கினால், பின்பு நீ அணிய வேண்டியவையான)

கண்ணுக்கு நன்றும் அழகுஉடைய கனகக்கடிப்பும் இவை — கண்களுக்கு மிகவும் அழகையுடைய (தர்சநீயமான) பொற்கடிப்பும் இவையாகும்;
ஆ — ஆச்சர்யம்.

* * *—கீழ்ப்பாசுரத்தில் காதுகுத்த அழைத்தாள்; காதில் நூல்திரியை இட அழைக்கிறாள்—இப்பாட்டில். காதுகுத்தி நூல்திரியை இட்டுக் காது பெருக்கியபின்பு காதணிகளையிடுதல், இயல்பு. அழகும்=உம்—இசைநிறை. கடிப்பு—கர்ணபூஷணம். ... ... (உ)

141 வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும் மகரக்குழைகொண்டுவைத்தேன் *
வெய்யவேகாதில்திரியையிடுவன் நீவேண்டியதெல்லாந்தருவன் *
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றிய ஒண்சுடராயர்கொழுந்தே *
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்து மாதவனேயிங்கேவாராய். (ங)

உய்ய இ ஆயர் குலத்தினில் தோன்றிய — (நாங்களெல்லாம்) உஜ்ஜீவிக்கும்படி இந்த இடையர் குலத்திலே வந்து பிறந்த
ஒள் சுடர் ஆயர் கொழுந்தே — மிக்க ஒளியையுடைய இடையர்களின் கொழுந்து போன்றவனே!
வையம் எல்லாம் பெறும் — இந்த வுலகங்களையெல்லாம் (தனக்கு) விலையாகக் கொள்ளக்கூடிய
வார் கடல் வாழும் மகரம் குழை — பெரிய கடலிலே வாழ்கின்ற சுறுமீனின் வடிவமையச் செய்யப்பட்ட மகரக் குழையை
கொண்டுவைத்தேன் — (உன் காது பெருக்கியிடும்படி) கொண்டுவந்திருக்கிறேன்;

(உன்காதுக்குத் தினவு உண்டாகாமலிருக்கும் பொருட்டு)
வெய்யவே — வெம்மையுடனிருக்கும்படி
காதில் திரியை இடுவன் — (உன்) காதிலே திரியை இடுவேன்;
நீ வேண்டியது எல்லாம் தருவன் — நீ விரும்பிய பொருள்களையெல்லாம் கொடுப்பேன்;
மா தவனே — ச்ரிய:பதியே!
இள ஆய்ச்சியர் உள்ளத்து — மடமைப் பருவமுடைய இடைப்பெண்கள் மநஸ்ஸிலே
மையன்மை செய்து — வ்யாமோஹத்தைச் செய்துகொண்டு
இங்கே வாராய்—.

* * *—நீ இப்போது திரியையிட்டுக்கொண்டால் பின்பு பொற்கடிப்பு மாத்திரமல்ல, மிகச்சிறந்த மகரகுண்டலங்களையும் அணியலாம்; காது தினவு தின்னமலிருக்க வெப்பமாகவே திரியையிடுவேன்; உனக்கு வேண்டிய பணியாரங்களையும் பழங்களையும் தருவேன்; நீ வரவேணும் என்று சொல்லி யழைக்கிறாள். வெப்பு தினவுக்குப் பரிஹாரமாதலால் ‘வெய்யவே காதில் திரியையிடுவேன்’ என்றாள். ... ... (ங)

142 வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டு வார்காதுதாழப்பெருக்கி *
குணநன்றுடையரிக்கோபாலபிள்ளைகள் கோவிந்தாநீசொல்லுக்கொள்ளாய் *
இணைநன்றழகியவிக்கடிப்பிட்டால் இனியபலாப்பழந்தந்து *
சுணநன்றணிமுலையுண்ணத்தருவன்நான் சோத்தம்பிரானிங்கேவாராய். (ச)

இ கோபாலர் பிள்ளைகள் — இந்த இடைப்பிள்ளைகள்
வார் காது தாழ பெருக்கி — (தமது) நீண்டகாதை (தோளளவும்) தொங்கும்படி பெருக்கி
வணம் நன்று உடைய வயிரம் கடிப்பு இட்டு — நல்லநிறத்தை மிகுதியாகவுடைய வயிரக்கற்கள் அழுத்திச் செய்த கடிப்பை அணிந்துகொண்டு
(இப்படி தமது தாய்மார் சொல்லியபடி செய்து)

நன்று குணம் உடையர் — ஸத்குணசாலிகளாயிராநின்றார்கள்;
கோவிந்தா நீ சொல்லு கொள்ளாய் — கோவிந்தனே! நீயோவென்றால் தாயாகியஎன்னுடைய சொல்லை கேட்கிறாயில்லை;
(இப்படியிராமல் எனது சொல்லைக் கேட்டு)
இணை நன்று அழகிய இ கடிப்பு இட்டால் — ஒன்றோடொன்றொத்து மிகவு மழகியவனவா யிருக்கிற இக்கடிப்பை அணிந்து கொண்டால்,

நான் இனிய பலாப் பழம் தந்து	நான் தித்திப்பான பலாப் பழங்கள் கொடுத்து	பிரான் சோத்தம்	ஸ்வாமியே! (உனக்கு) ஸ்தோத்ரம்;
சுணம் நன்று அணி முலை உண்ண தருவன்	சுணங்கையுடைய மிக்வுமழகியமுலையையும் (நீ) பருகும்படி கொடுப்பேன்;		இங்கே வாராய்—.

* * *—கண்ணனைப்புகழ்ந்து அழைத்தும் அவன் வாராமையாலே, மற்றையிடைப்பிள்ளைகள் காதுபெருக்கிக் காதணிகளை யணிந்திருப்பதைக் காட்டி அப்பிள்ளைகளைக் கொண்டாடிச் சொல்லி ‘இவர்களைப்போல நீயும் தாய் சொல் கேட்டுக் காது பெருக்கிக்கொள்ள வேண்டாவோ? அப்படிக் காது பெருக்கிக் கடிப்பை யணிந்தால் நானுனக்கு நல்ல பலாப்பழம் தருவதோடு முலையையும் உண்ணத் தருவேன்; அப்பா! உன்னைக் கும்பிடுகிறேன், நீ இங்கே வரவேணும்’ என்று கெஞ்சியழைக்கிருள். வணம்—‘வண்ணம்’ என்பதின் தொகுத்தல். வயிரக்கடிப்பு—வஜ்ரகுண்டலம். ... (ச)

143 சோத்தம்பிரானென்றிரந்தாலுங்கொள்ளாய் சுரிகுழலாரோடுநீபோய் *
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தாற் குணங்கொண்டிடுவனோநம்பி *
பேர்த்தும்பெரியனவப்பந்தருவன் பிரானேதிரியிடவொட்டில் *
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல் விட்டுவேநீயிங்கேவாராய். (ரு)

பிரான் சோத்தம் என்று இரந்தாலும் கொள்ளாய்	‘தலைவனே! உனக்கு ஓரஞ்ஜலி’ என்றுசொல்லி (வரவேணுமென்று) கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும் (நீ என் சொல்லைக்) கேட்டு வருகிறதில்லை;	குணம் கொண்டிடுவனோ	(உனக்குத்) தகுதியானதாக (நான்) கொள்வனோ?;
		பிரானே	உபகாரகனே!
		திரி இட ஒட்டில்	திரியை (உன்காதிலே) இடலாம்படி நீஇசைந்தால்
நம்பி நீ சுரி குழலாரொடு போய்	பூர்ணனே! நீ சுருண்ட கூந்தலையுடைய பெண்களோடு (ஏகாந்த ஸ்தலத்திலே) போய்	பேர்த்தும் பெரியன அப்பம் தருவன்	மறுபடியும் மறுபடியும் பெரிய பெரிய அப்பங்களைக் கொடுப்பேன்;
கோத்து குரவை பிணைந்து இங்கு வந்தால்	கைகோர்த்துக் குரவைக் கூத்தாடி (பின்) இங்கே வந்தால்	வேய் தட தோளார் விரும்பு கரு குழல் விட்டுவே	மூங்கில்போன்ற பெரிய தோள்களையுடைய மகளிர் விரும்புகைக்கு உரிய கருநிறமான கூந்தலையுடைய விஷ்ணுவே!
	(நீ அப்படிச் செய்ததை)		நீ இங்கே வாராய்—.

* * *—கண்ணபிரான், ‘நேற்று நீ என்னை அழைக்கையில் நான் வர, அப்போது வந்ததைக் குணமாகக் கொள்ளாமல் என்னை அடித்தவளன்றோ நீ’ என்ன: யசோதை, ‘நீ பெண்களுடன் தனியிடத்திலே குரவையாடி வந்தால் அதை நான் எப்படி குணமாகக் கொள்ளக்கூடு’ மென்கிருளென்க. பேர்த்தும்—புநஃ; புநஃ; ‘அது சிறிது, இது சிறிது’ என்று சொல்லி, யசோதை கொடுக்கும் அப்பங்களைக் கண்ணன் தள்ளிவிடவும்,பின்னும் அவன் விரும்பும்படி பெரிய பெரிய அப்பங்களைக் கொடுப்பேனென்று கருத்து. குரவைக் கூத்தாவது—ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகத்தோன்றி நின்று கைகோத்தாடல்; இதைத்தான் ராஸக்ரீடை என்பது. (ரு)

144 விண்ணெல்லாங்கேட்கவழுதிட்டாய் உன்வாயில்விரும்பியதனைநான்நோக்கி *
மண்ணெல்லாங்கண்டென்மனத்துள்ளேயஞ்சி மதுசூதனேயென்றறிந்தேன் *
புண்ணேதுமில்லையுன்காதுமறியும் பொறுத்திறைப்போதிருநம்பி *
கண்ணாவென்கார்முகிலேகடல்வண்ணா காவலனேமுலையுணாயே. (சா)

	(மண்ணைத் தின்றதற்காக நான் உன்னை அடிக்கையில், நீ)	நான் விரும்பி உன் வாயில் அதனை நோக்கி	(தாயாகிய) நான் ஆதரங்கொண்டு உன் வாயிலே (நீ மண் உண்ட) அதை பார்க்கும்போது
விண் எல்லாம்கேட்க அழுதிட்டாய்	மேலுலகங்கள் முழுவதும் கேட்கும்படி அழுதாய்;		(அவ்வாயில்)
	(நீ அப்படி அழுகையில்)		

மண் எல்லாம் கண்டு	லோகங்களை யெல்லாம் பார்த்து
என் மனத்துள்ளே அஞ்சி	என் மநஸ்ஸினுள்ளே பயப்பட்டு
மதுசூதனே என்று	'இவன் மதுஸூதனேயாவ' னென்று
அறிந்தேன்	தெரிந்துகொண்டேன்;
	(உன்னுடைய காதிலே)
புண் ஏதும் இல்லை	புண் ஒன்றுமில்லை;
உன் காது மறியும்	(கடிப்பிடும்போது) உன்காது சிறிது மடங்கும்;
	(அதைமாத்திரம்)
இறை போது பொறுத்து இரு	க்ஷணகாலம் பொறுத்துக் கொண்டிரு;
நம்பி கண்ணா கார் முகிலே கடல்வண்ணா காவலனே	பூர்ணனே! கண்ணனே! காளமேகம்போன்றவனே! கடல்போன்ற திருநிறத்தவனே! ரக்ஷண வ்யாபாரத்தில் வல்லவனே!
	என் முலை உணாய்—.

* * *—காதில் கடிப்பிடவேணுமென்று யசோதை அழைத்துக்கொண்டிருக்கவும் கண்ணன் வராதிருந்ததுமல்லாமல் மண்ணையும் தின்றானாக, அதற்காக அவள் கோபங்கொண்டு அவனையடிக்க, அப்போது அவன் தனது வாயைத் திறந்துகொண்டு ஆகாய முழுதும் தொனிபரவும்படி அழ, அதுகண்டு யசோதை 'இவன் எவ்வளவு மண் தின்றிருப்பன்' என்பதை வாயிலுள்ள மண்சுவட்டைக்கொண்டு தெரிந்துகொள்வோமென்று அவன் வாயை விரும்பிப் பார்க்கையில்; அவன் வாயினுள்ளே உலகங்களை யெல்லாம் முன்போலக்கண்டு 'இவனை நமது மகனென்றெண்ணி அடித்தோமே!. இவன் ஸர்வேச்வரனன்றோ' என்று அஞ்சியிருக்க, கண்ணன் தன்னை யசோதை இப்படி வேறாக எண்ணினதைப் பொறாமல் அதனை அவள் மறந்து தன்பிள்ளையென்றே கொண்டு தழுவும்படி ஸமீபித்துநிற்க, அப்போது அவள் காதில் கடிப்பையிடும்படிமுயல, கண்ணன் அதுகண்டு 'அம்மா! என் காது குத்தியதனால் புண்ணாயிருக்கிறது, நோகும்; ஆதலால் அது எனக்கு வேண்டா' என்று மறுக்க, யசோதை 'உன் காதில் புண் ஒன்றுமில்லை, ஆறிவிட்டது; இந்தக் குண்டலத்தை இடும்போது உன் காது சற்று மறியும்; அதை மாத்திரம் பொறுத்துக்கொள்ளவேணும்' என்று சொல்ல, கண்ணன் அதற்கு இசைந்துநிற்க, யசோதை அவனைப் பலபடியாகக் கொண்டாடிக் கடிப்பிடும்போது உண்டாகும் நோவைப் பொறுப்பதற்காக முலையுண்ண வேணுமென்று விரும்புகின்றாள். நோக்கி-நோக்க: எச்சத்திரிபு. அஞ்சி-'இவனை நம்மகனென்றெண்ணியடித்தோமே, இவன்றானிப்போது நாராயணனாயிராநின்றானே' என்று அஞ்சினளென்க. (௬)

145 முலையேதும்வேண்டேனென்றோடி நின்காதிற்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்துமகிழ்ந்துகன்மாரிகாத்துப் பசுநிரைமேய்த்தாய் *
சிலையொன்றிறுத்தாய்திரிவிக்கிரமா திருவாயர்பாடிப்பிரானே *
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதே விட்டிட்டேன் குற்றமேயன்றே. (௭)

முலை ஏதும் வேண்டேன் என்று ஓடி	'முலையையும் (மற்றுமுள்ள பக்ஷணாதிகள்) எதையும் (நான்) விரும்பமாட்டேன்' என்றுசொல்லிஓடிப்போய்
நின் காதில் கடிப்பை பறித்து எறிந்திட்டு	(நான்) உன் காதிலிட்ட காதணியைப் பிடுங்கியெறிந்துவிட்டு
மலையை எடுத்து மகிழ்ந்து கல் மாரி காத்து பசு நிரை மேய்த்தாய்	கோவர்த்தநமலையை (குடையாக) எடுத்துத் தூக்கி திருவுள்ளமுகந்து கல் வர்ஷத்தில் நின்றும் (இடையர் முதலானாரை) ரக்ஷித்து பசுக்களின் திரளை மேய்த்தவனே!
ஒன்று சிலை	ஒப்பற்றதொரு ருத்ர தநுஸ்ஸை
இறுத்தாய்	(பிராட்டியை மணம்புரிய) முறித்தவனே!
திரிவிக்கிரமா	த்ரிவிக்ரமனே!
திரு ஆயர் பாடி பிரானே	திருவாய்ப்பாடிக்கு உபகாரகனே!
தலை நிலா போதே	தலைநிற்காமலிருக்கிற இளங் குழந்தைப் பருவத்திலேயே
உன் காதை பெருக்காது விட்டிட்டேன்	உன் காதை(த் திரியிட்டு)ப் பெருக்காமல் விட்டுவைத்தேன்;
	(அப்படி விட்டுவைத்தது)
குற்றமே அன்றே	என்னுடைய அபராதமன்றோ?

* * *—கண்ணனைப் பலவிதமாகப் புகழ்ந்து யசோதை முலையுண்ணச் சொன்னதும் அவனும் அப்படியே முலையுண்ணத் தொடங்க, அப்போது யசோதை அவன் காதில் கடிப்பை இட்டாளாக, கண்ணன் மிகவும் கோபித்து 'நீ கொடுக்கும் முலையும் வேண்டா, ஒன்றும் வேண்டா' என்று சொல்லி அவளுக்குப் பிடிபடாமல் அப்பால் ஓடிச்சென்று காதிலிட்ட காதணியையும் பிடுங்கி எறிந்துவிட்டனனாக,

யசோதை மறுபடியும் பலவிதமாகப் புகழ்ந்துகொண்டு காதில்கடிப்பை இடப்போகையில் அவன் இசையாமலிருக்க, யசோதையானவள், 'அப்பா! உன்மேல் ஒரு குற்றமுமில்லை; தலை செவ்வனே நில்லாத இளங் குழந்தைப் பருவத்திலேயே உன் காதைப் பெருக்காமல் விட்டிட்டது என்னுடைய குற்றமே காண்' என்று வெறுத்துக் கூறுகின்றாள். ... ... (எ)

அவதாரிகை:—எட்டாம்பாட்டில், முதலிரண்டடி கண்ணன் பாசுரமாகவும் பின்னிரண்டடி யசோதை பாசுரமாகவும் செல்லுகிறது.

146 என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகாண் என்னைநான்மண்ணுண்டேனாக *
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்தும் அனைவர்க்குங்காட்டிற்றிலையே *
வன்புற்றரவின்பகைக்கொடி வாமனநம்பியுன்காதுகள்தூரும் *
துன்புற்றனவெல்லாந்தீர்ப்பாய்பிரானே திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. (அ)

(நான் இப்போது உன் சொல்லைக் கேளாமலிருப்பது)

என் குற்றமே என்று சொல்லவும் வேண்டா காண்	'என்னுடைய குற்றமேயாகும்' என்று நீ சொல்லுதலும் வேண்டியதில்லை காண்:
	(ஏனெனில்;)
நான் மண் உண்டேன் ஆக	நான் மண்ணுண்டதாகச் சொல்லி
என்னை பிடித்தும்	(மண் தின்னாத) என்னை பிடித்துக்கொண்டும்
அன்பு உற்று நோக்கி அடித்தும்	அன்பை ஏறிட்டுக்கொண்டு [அன்புடையவள்போல] (என்வாயைப்) பார்த்து (என்னை) அடித்தும்
அனைவர்க்கும் காட்டிற்றிலையே	எல்லார்க்கும் நீ காட்டினதில்லையோ?
	(என்று கண்ணன் சொல்ல அதற்கு யசோதை)
வல் புற்று அரவின்	வலியபுற்றில் வஸிக்கின்ற பாம்புக்கு
பகை கொடி வாமன நம்பி	விரோதியான கருடனைக் கொடியாகவுடைய வாமநமூர்த்தியே!
	(இப்படி நீ ஒன்றுசொல்ல நானொன்று சொல்வதாகப் போதுபோக்கிக்கொண்டிருந்தால்)
உன் காதுகள் தூரும்	உன்னுடைய (குத்தின) காதுக்ள் தூர்ந்துவிடும்;
	(உன்னை யடுத்தவர்கள்)
உற்றன துன்பு எல்லாம் தீர்ப்பாய் பிரானே	அடைந்தனவான துன்பங்களையெல்லாம் போக்குமவனே! உபகாரகனே!
திரி இட்டு மெய்யே சொல்லு கேன்	(உன்காதில்) திரியையிட்டு (உன்னை யடிக்கமாட்டேனென்று நீ நம்பும்படியான) சபதத்தைச் சொல்லுவேன்
	(என்கிறாள்.)

* * *—கண்ணன், யசோதையைநோக்கி, 'நான் மண் தின்னாதிருக்கையில் மண் தின்றதாகப் பழியையேறிட்டு என்மேல் அன்புடையாள்போல என்னைப் பிடித்துக்கொண்டு என் வாயில் மண்தின்ற சுவடு இருக்கிறதாவென்று பார்த்து அது இல்லாதிருக்கையிலேயே அதை கண்டதாகச் சொல்லியடித்து அவ்வளவோடு நில்லாமல் 'பாருங்கோள் பெண்காள்! இவன் மண் தின்னும்படியை' என்று எல்லார்க்கும் நீ காட்டினையன்றோ' என்ன, யசோதை 'இப்போது நாம் வழக்காடிக்கொண்டிருந்தால் போது போகின்றது, உன் காதுகள் தூர்ந்துவிடும்' என்ன, கண்ணன் 'என்னைப் பிடித்தல் அடித்தல் செய்வதில்லையென்று உறுதியாக ஒரு வார்த்தை சொல்' என்ன, யசோதை 'நான் திரியிடும்படி நீ இசைந்து வா, பின்பு அங்ஙனமே ஸத்யம் பண்ணித்தருகிறேன்' என்கிறாள். ... ... (அ)

147 மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித் தொடுப்புண்டாய்வெண்ணையை
கையைப்பிடித்துக்கரையுரலோடேன்னைக் காணவேகட்டிற்றிலையே* [யென்று*
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில் சிரீதராவுன்காதுதூரும் *
கையில்திரியையிடுகிடாய் இந்நின்றகாரிகையார்சிரியாமே. (கூ)

சொல்லுவார் சொல்லை மெய் என்று கருதி	சொன்னார் சொன்ன பேச்சுக்களையெல்லாம் (நீ) மெய்யென்றெண்ணி
வெண்ணெயை தொடுப்பு உண்டாய் என்று	'வெண்ணெயைக் களவு கண்டு உண்டாய்' என்று பழிசுமத்தி

கையை பிடித்து	(என்) கையைப்பிடித்து
காண	(பலரும்) கண்டு பரிஹஸிக்கும்படி
கரை உரலோடு என்னை கட்டிற்றிலையே	விளிம்பிலே வேலைசெய்திருக்கிற உரலில் (ஒன்றும் திருடாத) என்னை நீ கட்டவில்லையா ?

(என்று கண்ணன் யசோதைமேல் குற்றஞ்சாட்டிச் சிரித்துநிற்க)

(அதற்கு யசோதை சொல்லுகிருள்,):-

சிரீதரா	ஸ்ரீதரனே !
செய்தன சொல்லி சிரித்து அங்கு இருக்கில்	(நான் முன்பு) செய்தவற்றை சொல்லிக்கொண்டு புன்சிரிப்புச் செய்து அங்கே [தூரத்தில்] (பொழுது போக்கிக்கொண்டு) இருந்தால்
உன் காது தூரும்	உன் காதுகள் தூர்ந்துவிடும்;
இ நின்ற காரிகையார் சிரியாமே	(உன் முன்னே) நிற்கிற இந்தப் பெண்கள் சிரியாதபடி
கையில் திரியை இடு கிடாய்	(என்) கையிலுள்ள திரியை இட்டுக்கொள்வாயாக.

* * *—கண்ணன் யசோதையை நோக்கி 'உன் பேச்சை நம்பக்கூடாது; நீ சொல்லுவார் சொல்வதைக்கேட்டு என்னை தண்டிப்பவளன்ரே?' என்ன, யசோதை 'உன்னை நான் அப்படிச் செய்ததுண்டோ?' என்ன, கண்ணன் 'இவன் வெண்ணெய் திருடினனென்று யாரோ சொல்ல, அதை உண்மையென்று நம்பி என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் என்னை எல்லாரும் பார்த்துப் பரிஹஸிக்கும்படி உரலோடு கட்டவில்லையோ?' என்று சிரித்து நிற்க, யசோதை 'நீ இப்படியெல்லாம் நான் செய்தவற்றைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தால் உன் காதுகள் தூர்ந்துவிடுமே; தவிரவும், உன்பக்கல் அன்பினல் உன்னைவிட்டுப் போகமாட்டாமல் நிற்கிற இந்தப்பெண்கள் 'சொணைக்காது, கூழைக்காது' என்று சொல்லி உன்னை ஏசாதபடி உன் காதைப்பெருக்க, இத்திரியையணிந்துகொள்ள வேணும்' என்று மறுபடியும் திரியிடப் பார்க்கிருள். சொல்லுவார் என்றது—கொள்ளத்தகாத பேச்சையுடையவர் என்ற கருத்தைக்காட்டும். தோடுப்பு—(ஒருவரையும் கேளாமல்) தொடுதல்; எனவே, களவாம்: 'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர். கிடாய்—முன்னிலை யசைச்சொல். ... ... (௯)

148 காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றேன் ? காதுகள்வீங்கியெரியில் *
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று விட்டிட்டேன்குற்றமேயன்றே *
சேரியிற்பிள்ளைகளெல்லாருங்காதுபெருக்கித் திரியவுங்காண்டி *
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்ட இருடீகேசாவென்றன்கண்ணே. (௧௦)

காதுகள் வீங்கி எரியில்	(என்னுடைய) காதுகள் வீங்கிப்போய் எரிச்சலெடுத்தால்,
காரிகையார்க்கும் உனக்கும்	(பரிஹஸிக்கிற,) பெண்களுக்கும் (என்காதில் திரியிடநிற்கிற) உனக்கும்
உற்ற (து) இழுக்கு என்	நேரிட்டதான சேதம் ஏதேனுமுண்டோ?

(என்று கண்ணன் சொல்ல, யசோதை சொல்லுகிருள்),—

(நீ இன்னும் இளம்பருவத்திலிருந்தபோது)

தாரியாது ஆகில்	'(திரியை இடுவது) பொருமற்போனல்
தலை நொந்திடும் என்று	(குழந்தைக்குத்) தலைநோய் உண்டாய்விடுமே' யென்று நினைத்து
விட்டிட்டேன்	(முன்னமே காதுகுத்தாமல்) இருந்துவிட்டேன்;

(அன்பினல் அப்படி விட்டிருந்தது)

குற்றமே அன்றே	(என்னுடைய) குற்றமேயாமல்லவா ?
ஏர் விடை செற்று இள கன்று எறிந்திட்ட இருடீகேசா	அழகிய ரிஷபத்தின் வடிவு கொண்டுவந்த அரிஷ்டாஸுரனை அழித்து சிறிய கன்றின்வடிவாய் வந்த வத்ஸாஸுரனை (குணிலாகக்கொண்டு விளாமரத்தின்மேல்) வீசிய ஹ்ருஷீகேசனே !
என்றன் கண்ணே	எனக்குக் கண்போன்றவனே !
சேரியில்	இவ்விடைச்சேரியில்
பிள்ளைகள் எல்லாரும்	எல்லாப்பிள்ளைகளும்
காதுபெருக்கி	காதைப்பெருக்கிக்கொண்டு
திரியவும்	திரியாநிற்பதையும்
காண்டி	நீ காணநின்ருயன்ரே !

* * *—நீயும் இடைச்சேரியிலுள்ள பிள்ளைகளைப்போலக் காதுபெருக்கிக்கொண்டிருக்க வேண்டுமென்பது, குறிப்பெச்சம். தாரியாதாகில்—நீட்டல் விகாரம்; தரியாதாகில்: நீ குழந்தையாயிருக்கும்போதே உன் காதைக்குத்தித் திரியிட்டிருக்கவேணும்; அப்போது, ஐயோ ! சிறிய குழந்தையாயிற்

றே! காது குத்தினால் ஒருகால் குழந்தைக்குத் தலைவலியுண்டாகுமோ என்றஞ்சிக் குத்தாமல் விட்டது என்னுடைய குற்றமன்றோவென்று வெறுத்துச் சொல்லுகிறாளென்க. காணீ—முன்னிலையொருமை வினைமுற்று. ... ... (௧௦)

149 கண்ணைக்குளிரக்கலந்தெங்கும்நோக்கிக் கடிகமழ்பூங்குழலார்கள் *
எண்ணத்துளென்றுமிருந்துதித்திக்கும் பெருமானேயெங்களமுதே *
உண்ணக்கனிகள்தருவன் கடிப்பொன்றும்நோவாமே காதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட பற்பநாபாவிங்கேவாராய். (௧௧)

குளிர — மனங்குளிரும்படி
கண்ணை — (உன்) கண்ணை
(இடைப்பெண்களுடைய கண்களோடு)
கலந்து — சேர்த்து,
எங்கும் நோக்கி — (அவர்களுடைய) வடிவம் முழுவதும் பார்த்து,
கடி கமழ் பூ குழலார்கள் எண்ணத்துள் — வாஸனை வீசுகின்ற புஷ்பங்களணிந்த கூந்தலையுடைய அப்பெண்களினுடைய மனஸ்ஸினுள்ளே
என்றும் இருந்து தித்திக்கும் பெருமானே — எப்போதுமிருந்துகொண்டு ரஸிக்கின்ற பெருமையையுடையவனே!
எங்கள் அமுதே — எங்களுக்கு அம்ருதம் போன்றவனே!
உண்ண கனிகள் தருவன் — (நீ) தின்பதற்கு (நாவல் முதலிய) பழங்களைக் கொடுப்பேன்;
கடிப்பு ஒன்றும் நோவாமே காதுக்கு இடுவன் — காதணியை சிறிதும் நோவாதபடி (உன்னுடைய) காதிலே இடுவேன்;
சகடம் — (அஸுராவிஷ்டமான) சகடத்தை
பண்ணை கிழிய உதைத்திட்ட — கட்டுக்குலையும்படி உதைத்தருளின
பற்பநாபா — பத்மநாபனே!
இங்கே வாராய்—.

* * *—'கண்ணைக்குளிரக்கலந்து' என்கிறவித்தால்—சக்ஷுஃப்ரீதி [தாராமைத்ரீ] எனப்படுங் கண்கலவியைச் சொல்லுகிறதென்க. கண்ணை என்பதில், ஐகாரத்தை அசையாகக்கொண்டு, கடிகமழ் பூங்குழலார்கள் கண்குளிர்ச்சியடைய உன்னுடம்பு முழுதும் பொருந்தப் பார்த்து (உன்னோடு கலக்கும்படிகளை யெண்ண, அவர்களுடைய அந்த) எண்ணத்தின்படியே எப்போதும் அவர்களுக்கு போக்யனாயிருக்கும் பெருமானே! என்று உரைத்தலும் ஏற்கும். பண்ணைக்கிழிய=பண்—செவ்வை; அது குலையும்படி. ஸந்திபந்தங்கள் சிதறும்படி. ... ... (௧௧)

150 வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்து வலியவேகாதிற்கடிப்பை
நோவத்தரிக்கிலுனக்கிங்கிழுக்குற்றென் காதுகள்நொந்திடுங்கில்லேன் *
நாவற்பழங்கொண்டுவைத்தேன் இவைகாணாய்நம்பீ * முன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்ட தாமோதராவிங்கேவாராய். (௧௨)

(கண்ணன் யசோதையைப்பார்த்து)
வா என்று சொல்லி என் கையைபிடித்து — '(நான் காதில் திரியிட இங்கே) வருவாயாக' என்று சொல்லி என் கையைப் பிடித்துக்கொண்டு
காதில் நோவ கடிப்பை இங்கு வலியவே தரிக்கில் — காதிலே நோம்படி காதணியை இப்போது பலாத்காரமாக இட்டால்
உனக்கு இழுக்கு உற்ற(து) என் — உனக்கு சேதமுண்டானதென்ன?
காதுகள் நொந்திடும் — (என்) காதுகள் நோவெடுக்கும்;
கில்லேன் — (அதைப்பொறுக்கவல்ல) வல்லமையுடையேனல்லேன்:

(என்று மறுத்துச்சொல்ல;-
யசோதை சொல்லுகிறாள்:—)
நம்பீ — பூர்ணனே!
நாவல் பழம்கொண்டு வைத்தேன் — (உனக்கு இஷ்டமான) நாவற்பழங்களை கொண்டு வைத்திருக்கிறேன்;
இவை காணாய் — இவற்றைப் பார்ப்பாயாக;
முன் — முன்பு
வஞ்சம் மகள் சாவ பால் உண்டு — வஞ்சனையுள்ள பூதனையானவள் மாளும்படி (அவளது) முலைப்பாலை பானம்பண்ணி,
சகடு இற பாய்ந்திட்ட — சகடாஸுரன் முறியும்படி (கால்களைத்) தூக்கி யுதைத்த
தாமோதரா! இங்கே வாராய்—.

* * *—முன்னடிகள் கண்ணபிரானுடைய வார்த்தை, பின்னடிகள் யசோதையின் வார்த்தை. தரிக்கில்—தரிப்பிக்கில்; பிறவினையில் வந்த தன்வினை. "இவை ஆணுய்" என்பதும் பாடம். மகளை = ஐ—அசை. ... ... (கஉ)

151 வார்காதுதாழப்பெருக்கியமைத்து மகரக்குழையிடவேண்டி *
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொல் சிந்தையுள்நின்றுதிகழ *
பாரார்தொல்புகழான் புதுவைமன்னன் பன்னிருநாமத்தாற்சொன்ன *
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லார் அச்சுதனுக்கடியாரே. (கங)

அசோதை	யசோதையானவள்
வார் காது தாழ பெருக்கி அமைத்து	(ஸ்வபாவமாகவே) நீண்டிருக்கிற காதுகளை தொங்கும்படி வளர்த்து ஓரளவிலே நிற்கும்படி செய்து
மகரம் குழை இட வேண்டி	மகரகுண்டலங்களை இட விரும்பி
திருமாலை சீரால் சொன்ன சொல்	ச்ரியப்பதியான கண்ணனை சிறப்புக்குறையாதபடி அழைத்த சொற்கள்
சிந்தையுள் நின்று திகழ	(தம்முடைய) மனஸ்ஸிலே நிலையாகப் பொருந்தி விளங்க,
	(அச்சொற்களை),
பார் ஆர் தொல் புகழான் புதுவை மன்னன்	பூமியில் நிரம்பிய பழமையான யசஸ்ஸையுடையவரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகருமான பெரியாழ்வார்
பன்னிரு நாமத்தால் சொன்ன	த்வாதசநாமங்களோடுஞ் சேர்த்துச் சொல்லியமைத்த
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார்	(ஓத ஓத) த்ருப்திபிறவாத அந்தாதித் தொடையினாலாகிய பன்னிரண்டு பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள்
அச்சுதனுக்கு அடியார்	எம்பெருமானுக்கு அடிமை செய்யப்பெறுவர்.

* * *—திருநாமங்கள் பன்னிரண்டாதலால், பாசுரங்களும் பன்னிரண்டாயின: பயனுரைத்த பாட்டு ஒன்று. ... ... (கங)

அடிவரவு:—போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலை என் மெய் காரிகை கண்ணை வா வார் வெண்ணெயளைந்த.

இரண்டாம்பத்து—நான்காந்திருமொழி, வெண்ணெயளைந்த.

(கண்ணனை நீராடவருமாறு அழைத்தல்.)

152 வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியுங்கொண்டு *
திண்ணெனவிவ்விராவுன்னைத் தேய்த்துக்கிடக்கநானொட்டேன்
எண்ணெய்ப்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதுமிருந்தேன் *
நண்ணலரியபிரானே நாரணநீராடவாராய். (க)

வெண்ணெய் அளைந்த குணுங்கும்	வெண்ணெயளைந்ததனாலான மொச்சைநாற்றத்தையும்
விளையாடு புழுதியும் கொண்டு	விளையாடுவதினால் படிந்த புழுதியையும் (உடம்பிற்) கொண்டிருந்து, (அதனால்,)
இ இரா தேய்த்து கிடக்க	இன்றைய இரவில் (உடம்பைப் படுக்கையிலே) தேய்த்துக்கொண்டு படுத்திருக்கும்படி (விட)
உன்னை திண்ணென நான் ஒட்டேன்	உன்னை நிச்சயமாக நான் ஸம்மதிக்கமாட்டேன்;
எண்ணெய் புளி பழம் கொண்டு	(தேய்த்துக்கொள்வதற்கு வேண்டிய) எண்ணெயையும் புளிப்பழத்தையும் ஸித்தமாக வைத்துக்கொண்டு
இங்கு	இங்கே
எத்தனை போதும் இருந்தேன்	எவ்வளவு காலமாக [வெகு காலமாக] (உன் வரவை யெதிர்பார்த்து) இராநின்றேன்;
நண்ணல் அரிய பிரானே நாரண நீராட வாராய்	(ஒருவராலும் ஸ்வயத்நத்தால்) கிட்டக்கூடாத ஸ்வாமியே! நாராயணனே! நீராடுவதற்கு வரவேணும்.

* * *—கண்ணபிரான் *தாரார்தடந்தோள்களுள்ளளவுங் கைநீட்டி வெண்ணெயளைந்ததனல் உடம்பெல்லாம் அவ்வெண்ணெய்பட்டு மொச்சை நாற்றம் வீசும்; அதனேடு விளையாடப்போனல் அதன் மேல் புழுதியும்படியும்; இவ்விரண்டும் உடம்பிலிருந்தால் தினவுதின்னும்; அதற்காகக் கண்ணன் உடம்பைப் படுக்கையிலே தேய்ப்பனும்; இப்படியெல்லாம் வருந்துவதைப் பொறுக்கமாட்டாமல் நீராடவழைக்கின்றனளென்க. விளையாடுபுழுதி = விளையாடின புழுதியெனவிரிக்க 'உண்ட இளைப்பு' என்றவிடத்துப் போல, விளையாடியதனல்தோன்றிய புழுதியென்க. புளிப்பழம்—எண்ணெயைப் போக்குவதாய்ப் புளிப்புச்சுவையுடையதாயிருக்கின்ற ஒருவகைப் பழத்தைக் குறிக்குமென்பர்; சீக்காயைக்காட்டுமென்பாருமுளர். ... ... (க)

153 கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன் *
நின்றமராமரஞ்சாய்த்தாய் ! நீபிறந்ததிருவோணம் *
இன்றுநீநீராடவேண்டும் எம்பிரானேடாதேவாராய். (உ)

நின்ற மராமரம் சாய்த்தாய் — நிலையாய்நின்ற ஸப்தஸால வ்ருக்ஷங்களை (ஊடுருவ அம்பெய்து) சாய்த்தவனே!
கன்றுகள் ஓட செவியில் கட்டெறும்பு பிடித்து இட்டால் — பசுவின் கன்றுகள் வெருண்டோடும்படி (அக்கன்றுகளின்) காதில் கட்டெறும்பைப் பிடித்துப் போகட்டால்
(அதனல் அக்கன்றுகள் வெருண்டு)
தென்றி கெடும் ஆகில் — சிதறிப்போய் (கண்டுபிடிக்க முடியாதபடி) ஓடிப்போய் விட்டால்,
(பின்பு நீ,)
வெண்ணெய் திரட்டி விழுங்கும்ஆ காண்பன் — வெண்ணெயை திரட்டி விழுங்கும்படியை பார்ப்பேன்,
[வெண்ணெயே உனக்கு உண்ணக் கிடைக்காதென்றபடி;]
இன்று நீ பிறந்த திரு ஓணம் — இந்த நாள் நீ அவதரித்த ச்ரவணநக்ஷத்ரமாகும்; (ஆகையால்)
நீ நீர் ஆடவேண்டும்—;
எம்பிரான் ! ஓடாதேவாராய்—.

* * *—கன்று உண்டானல் பசுகறக்கலாம், பசுவைக்கறத்தால் பாலுண்டாகும், பாலுண்டானல் வெண்ணெயுண்டாகும்: ஆகவே, வெண்ணெய் வேணுமென்றுல், கன்றுகள் அவச்யம் வேணும்; அக்கன்றுகள் வெருண்டோடுவதைக் காண்கைக்காக நீ அவற்றின் காதுகளில் கட்டெறும்பைப் பிடித்துப் புகவிட்டால் அவை காணமுடியாதபடி ஓடிப்போய்விடுமே! பின்பு உனக்கு இஷ்டமான வெண்ணெய் கிடைக்கும்படி யெங்ஙனே? என்பது முதலிரண்டடிகளின் கருத்து. 'வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்' என்ற தொடர் வெண்ணெய் விழுங்கக் கிடைக்காது என்ற கருத்தைக்காட்டும்; இது ஒருவகை யெதிர்மறை யிலக்கணை. பிறகுறிப்பு. ஆ—'ஆறு' என்பதன் விகாரம். (உ)

154 பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதென்னெஞ்சம் *
ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன் *
காய்ச்சினநீரோடுநெல்லி கடாரத்திற்பூரித்துவைத்தேன் *
வாய்த்தபுகழ்மணிவண்ண மஞ்சனமாடநீவாராய். (ந)

பேய்ச்சி முலை உண்ண கண்டு — பூதனையினுடைய முலையை (அவளுடைய உயிரோடும்) (நீ) உண்டுவிட (அதைப்) பார்த்தும்
(நான் அஞ்சி ஓடவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல்)
பின்னையும் என் நெஞ்சம் நில்லாது — பின்பும் என் மனங்கேளாமல்
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி அழைக்கவும் — இடைச்சிகளெல்லாரும் ஒன்றுகூடி கூப்பாடு போட்டுக் கதறவும்
நான் முலை தந்தேன் — (உன்மேல் அன்புகொண்ட) நான் முலை (உண்ணக்) கொடுத்தேன்;
நெல்லியொடு காய்ச்சின நீர் — நெல்லியையிட்டு காய்ச்சின வெந்நீரை
கடாரத்தில் பூரித்து வைத்தேன் — சருவத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன்
வாய்த்த புகழ் மணி வண்ண — பொருந்திய யசஸ்ஸையும் நீலமணிபோன்ற நிறத்தையுமுடைய கண்ணனே!
மஞ்சனம் ஆட — நீராட
நீ வாராய்—.

* * *—'உனக்கு முலைகொடுத்த பேய்ச்சி பட்டபாட்டை நானறிந்துவைத்தும், நாமும் அப்பாடு படவேண்டி வரப்போகிறதே யென்று அஞ்சி ஓடவேண்டியிருக்க அதுசெய்யாமல், மற்றும் அச்ச முறுத்துகிற இடைச்சிகளின் பேச்சையும் கேளாமல் உனக்கு நான் முலைதந்தது அன்பினாலன்றோ? அதற்கிணங்க நீ நான் சொல்விற்றை கேட்கவேண்டாவோ' என்கிருள். நெல்லி—நெல்லியிலை. காய்ச் சின நீரோடு நெல்லி—நெல்லியோடு காய்ச்சின நீர் என உருபுபிரித்துக் கூட்டப்பட்டது. (ங)

155 கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து *
வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே *
மஞ்சளுஞ்செங்கழுநீரின் வாசிகையும்நாறுசாந்தும் *
அஞ்சனமுங்கொண்டுவைத்தேன் அழகனேநீராடவாராய். (ச)

கஞ்சன் புணர்ப் பினில் வந்த	கம்ஸனுடைய கபடமான ஆலோசனையினாலே (நலிவ தாக) வந்த	மஞ்சளும்	(உன்மேனி நிறம்பெறும்படி சாத்துவதற்கு உரிய) மஞ்சளையும்
கடிய சகடம் உதைத்து	(அஸுராவேசத்தாலே) க்ரூரமான சகடத்தை (திருவடிகளால்) உதைத்து முறித்துவிட்டு,	செங்கழு நீரின் வாசிகையும்	(நீராடியபிறகு சாத்திக் கொள்ளவேண்டிய) செங் கழுநீர் மாலையையும்
வஞ்சகம் பேய் மகள் துஞ்ச	வஞ்சனையுள்ள பூதனையான வள் முடியும்படி	நாறு சாந்தும்	பரிமளிதமான சந்தநத்தை யும்
முலை வாய் வைத்த பிரானே	(அவளுடைய) முலையிலே வாயைவைத்த உபகார கனே!	அஞ்சனமும்	(கண்களிவிடும்) மையையும்
			கொண்டு வைத்தேன்—;
			அழகனே! நீராட வாராய்—.

* * *—உன்திருமேனிக்கு வேண்டுமவற்றையெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறேன், நீராட வா என்றழைக்கிருள். உனது அழகு கெடாதபடி நீ நீராடவேணுமென்பதற்காக அழகனே! என்கிருள்.(ச)

156 அப்பங்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலிற்கலந்து *
சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி *
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர் *
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரானிங்கேவாராய். (ரு)

நம்பி	(பால சாபலத்தால்) பூர்ண னே!	அப்பம் கலந்த சிற்றுண்டி	அப்பத்தையும் (அப்படியே) சேர்ந்த சிற்றுண்டியையும்
செப்பு இள மெல் முலையார்கள்	பொற்கலசம்போன்ற இள மையான மெல்லிய முலை யையுடைய மாதர்கள்	சொப்பட	நன்ருக
			நான் சுட்டு வைத்தேன்—;
			(நீ அவற்றை)
சிறு புறம் பேசி சிரிப்பர்	(உன்மேலே) அற்பமான குற்றங்களை மறைவிற் சொல்லி பரிஹஸிப்பார்கள்	தின்னல் உறுதி ஏல்	தின்னவிரும்பினையாகில்
(அன்றியும்,)		சொப்பட	நன்ருக
			நீர் ஆட வேண்டும்—;
பாலில் அக்காரம் கலந்து	பாலிலே வெல்லக்கட்டியை சேர்த்துப் (பிசைந்து)	பிரான் சோத்தம்	ஸ்வாமியே! உனக்கு ஓரஞ் ஜலி;
			இங்கே வாராய்.—

* * *—'இப்பயல் அழுக்குடம்பனையிரா நின்ருன்' என்று இடைச்சிகள் ஏசுவதற்கு இடமறும் படி நீராடவருவாயாகில் வேண்டிய பக்ஷணங்கள் தருவேனென்கிருள். (''சிறுபுறம்'' என்றவிடத்தில்) சிறு—'சிறுமை' என்ற பண்பினடி. புறம் பேசுதல்—மறைவில் குற்றத்தைச் சொல்லுதல்: (ரு)

157 எண்ணெய்க்குடத்தையுருட்டி யிளம்பிள்ளைகிள்ளியெழுப்பி *
கண்ணைப்புரட்டிவிழித்துக் கழைகண்டுசெய்யும்பிரானே *
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே *
வண்ணமழகியநம்பி மஞ்சனமாடநீவாராய். (சா)

எண்ணெய்க் குடத்தை உருட்டி	எண்ணெய் நிறைந்த குடத்தை உருட்டிவிட்டு	கனிகள்	(நல்ல) பழங்களை
இள பிள்ளை கிள்ளி எழுப்பி	(உறங்குகிற) சிறு குழந்தைகளை கையால் வெடுக்கெனக்கிள்ளி (தூக்கம் விட்டு) எழுந்திருக்கச் செய்து	உண்ண	(நீ) உண்ணும்படி
		தருவன்	(உனக்குக்) கொடுப்பேன்;
		ஒலி	கோஷியாநின்ற
		கடல்	கடலினுடைய
கண்ணை புரட்டி விழித்து	கண் இமையை தலைகீழாக மாற்றி (அப்பூச்சி காட்டி) விழித்து	ஓதம்	அலைகளையுடைய
		நீர் போலே	ஜலம்போலே
கழைகண்டு செய்யும் பிரானே	பொறுக்கமுடியாததீம்புகளை செய்துவருகிற ஸ்வதந்த்ரனே !	வண்ணம் அழகிய	திருமேனியின் நிறம் அழகாயிருக்கப்பெற்ற
		நம்பி	உத்தமபுருஷனே !
			மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—அகத்திலுள்ளா ரெல்லாரும் அங்யபரராம்படியாக முதலிலே எண்ணெய்க்குடத்தையுருட்டி, அவர்கள் சிந்திப்போன எண்ணெயை வழிப்பதுந்துடைப்பதுமாயிருக்கையில் அக்காரியத்தை விட்டு ஓடிவரும்படி தொட்டிலிற்படுத்துத்தூங்கும் குழந்தையைத் தேள்கொட்டினாற்போலே வீரிட்டுக்கதறியழும்படி வெடுக்கெனக்கிள்ளி, ஸமீபத்திலேவந்த சிறுவர்களுக்குஅப்பூச்சி காட்டிப் பயப்படுத்தி இப்படியெல்லாம் தீம்பு செய்பவனே ! என்றபடி. கண்—இமைக்கு ஆகுபெயர். கண்ணைப்புரட்டி விழித்து-வெளியிற்காணப்படுங் கருவிழி உட்புறமாகும்படி கண்ணை மாறிவிழித்து என்று உரைப்பாருமுளர். 'கழகண்டு, என்றும் பிரதிபேதம். ... ... (சு)

158 கறந்தநற்பாலுந்தயிரும் கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய் *
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேனெம்பிரானே *
சிறந்தநற்றாயலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே *
மறந்தும்உரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (எ)

எம்பிரானே—!		சிறந்த நல்தாய் அலர் தூற்றும் என்பதனால்	'(எல்லாரினுங் குழந்தைக்குச்) சிறக்கின்ற பெற்ற தாயும் பழிசொல்லுகின்றாளே !' என்று சொல்லுவார்களே என்ற அச்சத்தினால்
கறந்த நல் பாலும் தயிரும்	(அந்தந்த காலங்களில்) கறந்த நல்ல பாலையும் தயிரையும்		
கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய்	(தயிரைக்) கடைந்து உறியில் வைத்திருக்கிற வெண்ணெயையும்,	பிறர் முன்னே	அயலா ரெதிரில்
		மறந்தும்	ப்ரமாதிகமாகவும்
பிறந்ததுவே முதல் ஆக	(நீ) பிறந்தவன்று தொடங்கி	உரை ஆட மாட்டேன்	(உனக்குக் குறைவைத் தருஞ்) சொல்லைச் சொல்ல மாட்டேன்;
பெற்று அறியேன்	கண்டறியேன்;		மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—'மகன் குற்றம் செய்தாலும் மறைக்கும்படி மிகுந்த அன்புடையளான தாயும் இப்படி இவன்மேல் பழி தூற்றினால், இவன் எவ்வளவு துஷ்ட சேஷ்டிதனாயிருப்பனோ' என்று உன்மேல் பிறர் குறைவாகச் சொல்லப்போகிறார்களே யென்ற எண்ணத்தினா லென்பது மூன்றாமடியின் கருத்து. (எ)

159 கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து *
பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய்போலும் *
நின்திறத்தேனல்லேன்நம்பி நீபிறந்ததிருநன்னாள் *
நன்றுநீநீராடவேண்டும் நாரணாவோடாதேவாராய். (அ)

கன்றினை வால் ஓலை கட்டி — கன்றினுடைய வாலிலே ஓலையைக்கட்டி
(கன்றை) — (அஸுரத் தன்மையினால் உன்னைக் கொல்லவந்த ஒரு) கன்றை
(எறிகுணிலாகக்கொண்டு, அஸுராவேச முள்ள விளாமரத்தின்)
கனிகள் உதிர எறிந்து — பழங்கள் (கீழே) உதிர்ந்து விழும்படி வீசி
பின் ஓடி தொடர்ந்து — பின்பு ஓடிப்போய்
ஓர் பாம்பை பிடித்துக்கொண்டு — (காளியனென்ற) ஒரு ஸர்ப்பத்தை பிடித்துக்கொண்டு
ஆட்டினாய் போலும் — ஆட்டினவனேதான் (நீ);
நம்பி — ஒன்றிலும் குறைவில்லாதவனே ! (நான்)
நின் திறத்தேன் அல்லேன் — உன் விஷயமொன்றையுமறியாதவளாயிராநின்றேன்;
(அது கிடக்கட்டும்;)
நீ பிறந்த நல் திருநாள் — நீ அவதரித்த திருநக்ஷத்திரமாகும் (இந்நாள்);
(ஆகையால்)
நீ நன்று நீர் ஆடவேண்டும்—;
நாரணா ஓடாதே வாராய்—.

* * *—கண்ணபிரான் கன்று துள்ளியோடுவதைக் காண்கைக்காக அதன் வாலிலே ஓலைகளை முடைந்து விடுவதனால், 'கன்றினை வாலோலை கட்டி' என்றார். கன்றினை-உருபுமயக்கம். [நின் இத்யாதி.] 'அத்தைச்செய்தான் இத்தைச் செய்தான்' என்றிப்படி யெல்லாம் சொல்லுவார் சொல்லக் கேட்டதல்லது, உன்னுடைய தன்மையை நினைத்தறிதற்கும் எனக்கு முடியாதென்றபடி. ... (அ)

160 பூணித்தொழுவினிற்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி *
காணப்பெரிதுமுகப்பன் ஆகிலுங்கண்டார்பழிப்பர் *
நாணெத்தனையுமிலாதாய் நப்பின்னைகாணிற்சிரிக்கும் *
மாணிக்கமேயென்மணியே மஞ்சனமாடநீவாராய். (கூ)

பூணி தொழுவினில் புக்கு புழுதி அளைந்த பொன் மேனி — பசுக்கள் கட்டிய கொட்டகையிலே நுழைந்து புழுதி மண்ணிலளைந்(து அதனால் மாசுபடிந்) த (உனது) அழகிய உடம்பை
காண பெரிதும் உகப்பன் — பார்ப்பதற்கு மிகவும் (நான்) விரும்புவேன்;
ஆகிலும் கண்டார் பழிப்பர் — ஆனாலும் (உன்னைப்) பார்ப்பவர்கள் '(இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கின்றது' என்று என்னை) ஏசுவார்கள்;
(அன்றியும்,)
எத்தனையும் நாண் இலாதாய் — சிறிதும் லஜ்ஜையென்பதில்லாதவனே !
நப்பின்னை காணில் சிரிக்கும் — நப்பின்னையானவள் நீ இப்படியிருப்பதைக் கண்டால் சிரிப்பாள்;
என் மாணிக்கமே! (என்) மணியே !
மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—நீ ஜாதிக்குத்தக்கபடி மாட்டுத்தொழுவிற்புகுந்து புழுதியளைந்து அழுக்குடம்புடனேயிருந்தாலும், உனது மேனி பொன்னுக்குப் புழுதியேறினாற்போலக் குழந்தைப்பருவத்தினால் விளங்குதலால் அதைக்காண்பது எனக்கு மிகவும் விருப்பமே; என்றாலும் 'இவள் பிள்ளைவளர்ப்பது அழகாயிருக்கிறது !' என்று கண்டவர்களெல்லாரும் என்னைச்சிரிப்பார்களே; தவிரவும், நப்பின்னையும் உன்னைப் பரிஹாஸம் பண்ணுவளே; ஆகையால் இப்போது இருப்பதுபோல நீ வெட்கமற்று உடனே நீராட வரவேணுமென்கிறாள். ... ... (கூ)

161 கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானையுகந்து *
வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை *
பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. (ய)

கார் மலி மேனி நிறத்து கண்ணபிரானை உகந்து — காளமேகத்திற் காட்டிலும் சிறந்த திருமேனி நிறத்தையுடைய கண்ணபிரானை விரும்பி
வார் மலி கொங்கை அசோதை — கச்சுக்கு அடங்காமல் விம்முகின்ற ஸ்தனங்களையுடைய யசோதைப்பிராட்டி
மஞ்சனம் ஆட்டிய ஆற்றை — நீராட்டின ப்ரகாரத்தை,—

பார் மலி தொல் புதுவை கோன் பட்டர்பிரான் சொன்ன	பூமியிலே சிறந்த பழமையான ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் அருளிச்செய்த
சீர் மலி செந்தமிழ் பாடல் வல்லார்	அழகு நிறைந்த செந்தமிழாலாகிய (இப்) பாசுரங்களை ஓத வல்லவர்கள்
யாதும் தீ வினை இலர்	சிறிதும் பாவமில்லாதவராவர்.

அடிவரவு:—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

இரண்டாம்பத்து—ஐந்தாந்திருமொழி, பின்னைமணாளனை

(கண்ணனுக்குக் குழல்வாருதல்.)

---

162 பின்னைமணாளனைப் பேரிற்கிடந்தானை *
முன்னையமரர் முதல்தனிவித்தினை *
என்னையுமெங்கள் குடிமுழுதாட்கொண்ட *
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய் மாதவன்றன்குழல்வாராயக் [காக்காய். (க)

அக்காக்காய்	காக்கையே !
பின்னை மணாளனை	நப்பின்னைப் பிராட்டிக்கு நாயகனும்
பேரில் கிடந்தானை	திருப்பேர் நகரிலே பள்ளி கொண்டிருப்பவனும்
முன்னை அமரர் முதல்	(பகவதநுபவத்தில்) முதல்வரான நித்யஸூரிகளுக்கு தலைவனும்
	(அந்த நித்யஸூரிகளின் ஸத்தைக்கும் தாரகாதிகளுக்கும்)
தனிவித்தினை	ஒப்பற்ற காரணமாயிருப்பவனும்
என்னையும் எங்கள் குடிமுழுது ஆட்கொண்டமன்னனை	என்னையும் எங்களுடைய குடியிலுள்ளாரெல்லாரையும் அடிமைகொண்ட தலைவனுமாகியகண்ணனுக்கு
வந்து குழல் வாராய்	(நீ) வந்து கூந்தல் வாருவாயாக;
அக்காக்காய்	காக்கையே !
மாதவன் தன்	ச்ரியபதியான இவனுக்கு குழல் வாராய்—.

* * *—காக்கை வந்து கத்தும்போது குழந்தைகள் பராக்காயிருக்குமாதலால், அப்போது தலைவாருதல் ஸுகமாய் முடியுமென்பதுபற்றி, அக்காரியத்தைக் காக்கையின் மேலேற்றிக் 'குழல்வாராய் அக்காக்காய்' என்றாளென்க: 'அக்காக்காய் !' என்று காக்கையை விளித்துக் குழந்தைகளுக்குக் குழல் வாரி முடித்தல், உலகவழக்கத்திலிருப்பது காண்க. பேர்—திருப்பேர் நகர்; சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் ஒன்று. ... ... (க)

163 பேயின்முலையுண்ட பிள்ளையிவன்முன்னம் *
மாயச்சகடும் மருதுமிறுத்தவன் *
காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல் *
தூய்தாகவந்துகுழல்வாராயக்காக்காய் தூமணிவண்ணன்குழல்வாராயக் [காக்காய். (உ)

அக்காக்காய் !—;	
இவன் முன்னம் பேயின் முலை உண்ட பிள்ளை	இப்பிள்ளை முன்பு பூதனையின் முலையை (அவளுயிரோடுங்) குடித்த பிள்ளை காண்;
	(அன்றியும்,)
மாயம் சகடும்மருதும் இறுத்தவன்	வஞ்சனையுள்ள சகடத்தையும் யமளார்ஜுநங்களையும் முறித்தவன்;
காயாமலர் வண்ணன்	காயாம்பூப்போன்ற திருநிறத்தை யுடையவன்;
கண்ணன்	'க்ருஷ்ணன்' என்னும் பேரையுடையவன்:
	(இவனுடைய)
கரு குழல்	கருநிறமான கூந்தலை
வந்து தூய்து ஆக குழல் வாராய்	(நீ) வந்து நன்றாக வாருவாயாக;
தூ மணி வண்ணன்	பழிப்பற்றநீலமணிபோன்ற நிறத்தையுடைய இவனுக்கு குழல்வாராய்—.

* * *—தூய்தாக—தலையிற் சிக்குபடாமல் மழமழவென்றிருக்கும்படி. "குழல்வாராய்" என்ற தொடர்—ஒருசொல்நீர்மைத்தாய் வாருதல் என்ற தொழிலை மாத்திரம் உணர்த்தும்; ஆதலால், 'கருங் குழல் குழல்வாராய்" என்றது. [புநருக்தி தோஷமில்லையென்க.] ... ... (௨)

164 திண்ணக்கலத்துத் திரையுறிமேல்வைத்த *
வெண்ணெய்விழுங்கி விரையவுறங்கிடும் *
அண்ணலமரர் பெருமானையாயர்தம் * [காக்காய். (௩)
கண்ணனைவந்துகுழல்வாராயக்காக்காய் கார்முகில்வண்ணன்குழல்வாராயக்

அக்காக்காய் !—;
திரை உறிமேல் வைத்த { பின்னுதலையுடைய (பெரிய) உறிமேல் வைத்த
திண்ணம் கலத்து வெண்ணெய்விழுங்கி { த்ருடமான பாத்ரத்திலுள்ள வெண்ணெயை உட்கொண்டு
விரைய உறங்கிடும் அண்ணல் { விரைவாக (ஓடிவந்து) பொய்யுறக்கமுறங்குகின்ற ஸ்வாமியும்
அமரர் பெருமானை { நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனும்
ஆயர்தம் கண்ணனை { இடையர்களுக்குக் கண் போன்றவனுமான இவனை
வந்து குழல் வாராய்—;
அக்காக்காய்!—;
கார்முகில் வண்ணன் { காளமேகம் போன்ற நிறத்தையுடையனான இவனுடைய
குழல் வாராய்—.

* * *—"விரையனுறங்கிடும்" என்பது பாடம். ... ... (௩)

165 பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு *
கள்ளவசுரன் வருவானைத்தான்கண்டு *
புள்ளிதுவென்று பொதுக்கோவாய்கீண்டிட்ட * [காக்காய். (௪)
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய் பேய்முலையுண்டான்குழல்வாராயக்

அக்காக்காய் !—;
பள்ளத்தில் மேயும் பறவைஉருகொண்டு { நீர்த்தாழ்வுகளிலே இரையெடுத்துத்திரிகின்ற (கொக்கு என்னும்) பக்ஷியின் ரூபத்தை ஏறிட்டுக்கொண்டு
வருவான் கள்ளம் அசுரனை தான்கண்டு { வருபவனாகிய வஞ்சனை பொருந்திய அசுரனை [பகாஸுரனை] தான் பார்த்து
(அவனை)
இது புள் என்று { இது பக்ஷியேயென்று (ஸாமாந்யமாக நினைத்து)
பொதுக்கோ வாய் கீண்டிட்ட { விரைவாக(அவ்வஸுரனது) வாயை கிழித்துப்போகட்ட
பிள்ளையை வந்து குழல்வாராய்—;
அக்காக்காய்! பேய்முலை உண்டான் குழல் வாராய்—.

* * *—பொதுக்கோ=பொதுக்கென. ("பிதுக்கென்று புறப்பட்டான்" என்று வழங்கிவருதல் காண்க.) ... ... (௪)

166 கற்றினம்மேய்த்துக் கனிக்கொருகன்றினை *
பற்றியெறிந்த பரமன்திருமுடி *
உற்றனபேசி நீயோடித்திரியாதே * [காக்காய். (௫)
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய் ஆழியான்றன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
நீ உற்றன பேசி ஓடி திரியாதே { நீ (உன்ஜாதிக்குத்) தகுந்தவற்றை சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து திரியாமல்,—
கன்று இனம் மேய்த்து ஒரு கன் { கன்றுகளின் கூட்டத்தை மேய்த்துவந்து (அஸுராவிஷ்டமான)கன்றொன்றை பிடித்து (அஸுராவிஷ்ட
றினை பற்றி கனிக்கு எறிந்த பரமன் திருமுடி { (மான) விளாம்பழத்தை உதிர்த்தற்காக (குணிலாக) வீசின பரமபுருஷனுடைய அழகிய தலைமுடியை
அற்றைக்கும் வந்து குழல் வாராய் — அவ்வந்நாளும் வந்து வாருவாயாக;
ஆழியான் தன் { சக்ராயுதபாணியான இவனுடைய
குழல் வாராய்—.

167 கிழக்கிற்குடிமன்னர் கேடிலாதாரை *
அழிப்பான்நினைந்திட்டு அவ்வாழியதனால் *
விழிக்குமளவிலே வேரறுத்தானை *
குழற்கணியாகக்குழல்வாராயக்காக்காய் கோவிந்தன்றன்குழல்வாராயக் [காக்காய். (சு)

அக்காக்காய்!—;

கேடு இலாதார் கிழக்கில் குடி மன்னரை	(வரபலமும் புஜபலமுமிருப்பதால் நமக்கு) அழிவில்லையென்று நினைத்திருந்தவரான கிழக்குத்திக்கிலுள்ள பட்டணத்திற்குடியிருந்த ராஜாக்களை
அழிப்பான் நினைந்திட்டு	அழிக்கும்படி எண்ணி
அ ஆழி அதனல்	அந்தச்சக்ராயுதத்தால்
விழிக்கும் அளவிலே	கண்மூடித்திறக்கின்றகாலத்திற்குள்
வேர் அறுத்தானை	ஸமூலமாக அழித்தவனுடைய
குழற்கு அணி ஆக	கூந்தலுக்கு அழகு உண்டாம்படி
	குழல் வாராய்—;
கோவிந்தன் தண் குழல் வாராய்	(இந்த) கோவிந்தனுடைய குளிர்ந்த [சிறந்த] குழலை வாருவாயாக.

* * *—கிழக்கிற் குடிமன்னர்—ப்ராக்ஜ்யோதிஷபுரவாஸிகளான நரகாஸுரன் முதலானர். அவ்வாழி—அ—உலகறிசுட்டு: ப்ரஸித்தியைக் காட்டும். இனி, கேடு இலாதாரை—(விஷ்ணுபக்தராதலால்) அழிவில்லாதவரான இந்த்ராதிகளை, அழிப்பான் நினைந்திட்ட கிழக்கிற் குடிமன்னர் விழிக்குமளவிலே (அவரை) வேரறுத்தான் என்றும் உரைப்பர். அழிப்பான்—எதிர்கால வினையெச்சம். (சு)

168 பிண்டத்திரளையும் பேய்க்கிட்டநீர்ச்சோறும் *
உண்டற்குவேண்டி நீயோடித்திரியாதே *
அண்டத்தமரர் பெருமானழகமர் *
வண்டொத்திருண்டகுழல்வாராயக்காக்காய் மாயவன்றன்குழல்வாராயக் [காக்காய். (எ)

அக்காக்காய்!—;

பிண்டம் திரளையும்	(பித்ருக்களை உத்தேசித்து இடும்) பிண்டத்தின் உருண்டையையும்
பேய்க்கு இட்ட நீர் சோறும்	பிசாசங்களுக்குப் போகட்ட நீரையுடைய சோற்றையும்
உண்டற்கு வேண்டி	உண்ணுதற்கு விரும்பி
நீ ஓடி திரியாதே	நீ பறந்தோடித் திரியவேவேண்டா;
அண்டத்து அமரர் பெருமான்	மேலுலகத்திலுள்ள தேவர்களுக்கு தலைவனாகிய இக்கண்ணபிரானுடைய
அழகு அமர்	அழகு பொருந்திய
வண்டு ஒத்து இருண்ட	வண்டைப்போல் கருநிறமான
	குழல் வாராய்:—
மாயவன் தன்	ஆச்சர்யச் செயல்களையுடைய இவனுடைய
	குழல் வாராய்—.

* * *—தந்தைதாய் முதலானர் இறந்த திதியில் செய்யும் ச்ராத்தத்தில் பித்ராதி தேவதைகளை உத்தேசித்துப் பிண்டவுருண்டையைக் காகத்தையழைத்து இடுவதும், பிசாசம் முதலியவற்றைக் குறித்து ஜலத்தோடு கூடிய சோற்றைப் பலிகொடுத்தலும் வழக்கமென்க. இப்படி கண்ட சோற்றுக்கும் அலைந்து திரியாமல் இவனுடைய குழலை வாரவரவேணுமென்றதாயிற்று. ... ... (எ)

169 உந்தியெழுந்த உருவமலர்தன்னில் *
சந்தச்சதுமுகன்றன்னைப் படைத்தவன் *
கொந்தக்குழலைக் குறந்துபுளியட்டி *
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய் தாமோதரன்றன்குழல்வாராயக் [காக்காய். (அ)

அக்காக்காய்!—;

உந்தி எழுந்த உருவம் மலர் தன்னில்	(தனது) திருநாபியிலே உண்டான ஸ்வரூபத்தையுடைய தாமரைப்பூவிலே
சந்தம் சதுமுகன் தன்னை படைத்தவன்	சந்தஸ்ஸை நிரூபகமாகவுடைய நான்முகனை ஸ்ருஷ்டித்த இவனுடைய

புளி அட்டி கொந்தம் குழலை — புளிப்பழத்தை யிட்டுத் தேய்த்ததனால் நெறிப்பை யுடைய கூந்தலை

தந்தத்தின் சீப்பால் குறந்து குழல் வாராய் — தந்தத்தினுற் செய்த சீப்பாலே சிக்கு விடுத்து வாருவாயாக

அக்காக்காய்! தாமோதரன் தன் குழல் வாராய்!—.

* * *—கீழ் "வெண்ணெயளைந்த குணுங்கும்" என்ற திருமொழியில் கூறியபடி யசோதைப் பிராட்டி ஸ்ரீக்ருஷ்ணனை எண்ணெய்தேய்த்துப் புளிப்பழமிட்டு நீராட்டியதனால், அப்படி நீராடின ஸ்ரீக்ருஷ்ணனுடைய கூந்தல் நெறித்திருக்கும்; ஆதலால், யசோதையானவள் 'காக்கையே! நெறிப்புப் போம்படி எண்ணெய்தடவித் தந்தச்சீப்பினால் தலைவார வரவேணும்' என்கிறாள். 'புழுகட்டி' என்றும் பாடம்; புழுகு—புனுகு எண்ணெய்: அதைத் தடவிக் குழல்வாராய் என முடிபு காண்க. (அ)

170 மன்னன்றன்தேவிமார் கண்டுமகிழ்வெய்த *
முன்னிவ்வுலகினை முற்றுமளந்தவன் *
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்து *
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய் பேராயிரத்தான்குழல்வாராயக் [காக்காய். (கூ)

அக்காக்காய்!—;

முன் மன்னன் தன் தேவிமார் கண்டு மகிழ்வு எய்த — வாமநாவதாரகாலத்தில் அஸுரராஜனை மஹாபலியினுடைய மனைவியர்கள் (தன்னுடைய) வடிவைக்கண்டு மகிழ்ச்சியடையும்படி

(மஹாபலியினிடத்திற்போய் 'கொள்வன் நான்மாவலி!' என்று மூவடிமண் இரந்து பெற்றுப் பின்பு த்ரிவிக்ரமனாய்)

இ உலகினை முற்றும் அளந்தவன் — இந்த வுலகங்கள் முழுவதையும் அளந்துகொண்ட இவனுடைய

பொன் முடியினை — அழகிய தலையை

பூ அணை மேல் வைத்து — புஷ்பத்தினாலாகிய படுக்கையில் வைத்து

பின்னே இருந்து — (இவனது) பின்புறத்திலே இருந்துகொண்டு

குழல் வாராய்!—; அக்காக்காய்!—,

பேர் ஆயிரத்தான் — ஸஹஸ்ர நாமங்களையுடைய இவனுக்கு

குழல் வாராய்—.

* * *—எல்லா இந்திரியங்களையும் ஆகர்ஷிக்கவல்ல வாமனவடிவையும், பிரமசாரி ஆச்ரமத்துக்கு ஏற்றவாறு கொண்ட கோலத்தையும் மழலைச்சொல் சொல்லு மழகையுங்கண்டு மஹாபலியின் மனைவியரும் மகிழ்ந்தனராம். பொன்னின்=இன்—சாரியை. பூ அணை—புஷ்பம்போல் ம்ருதுவான படுக்கை யென்றுமாம். ... ... (கூ)

171 கண்டார்பழியாமே அக்காக்காய் * கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றவாய்ச்சிசொல் *
விண்டோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல் *
கொண்டாடிப்பாடக் குறுகாவினைதாமே. (ய)

அக்காக்காய் — 'காக்கையே!

கண்டார் பழியாமே — பார்த்தவர்கள் பழியாதபடி

கார் வண்ணன் வண்டு ஆர் குழல் வார வா — காளமேகம்போன்ற நிறமுடைய கண்ணனுடைய வண்டை ஒத்த கரிய கூந்தலை வாரும்படி வருவாயாக'

என்ற ஆய்ச்சிசொல் — என்று சொன்ன யசோதைப்பிராட்டியின் சொல்லை (க்குறித்த),—

விண் தோய் மதிள் வில்லிபுத்தூர் கோன் பட்டன் சொல் — ஆகாசத்தை அளாவுகின்ற மதிளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வாருடைய அருளிச்செயல்களை

கொண்டாடி பாட வினைதாம் குறுகா — ச்லாகித்து பாடப்பெற்றால் ஸுக்ருத துஷ்க்ருதங்களிரண்டும் சேராவாம்.

அடிவரவு:—பின்னை பேய் திண்ணம் பள்ளத்தில் கற்று கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி.

இரண்டாம்பத்து—ஆறாந்திருமொழி, வேலிக்கோல்வெட்டி

(கண்ணன் கன்றுமேய்க்கப்போக விரும்பி யசோதையைக் கோல்கேட்க, அவள் காக்கையை நோக்கிக் கோல்கொண்டுவாவென்றல்.)

---

172 வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றி *
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு *
பீலித்தழையைப் பிணைத்துப்பிறகிட்டு * [கொண்டுவா. (க)
காலிப்பின்போவாற்கோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்

(அக்காக்காய்)	காக்கையே!
வேலி கோல் வெட்டி விளையாடுவில் ஏற்றி	வேலிக் கால்களிலுள்ள கோலை (வாளால்) வெட்டி (அதை) லீலோபகரணமான வில்லாகச் செய்து (அதிலே) நாணேற்றியும்,
கொழுந்து தாலியை தட கழுத்தில் பூண்டு	சிறந்த ஆமைத்தாலியை (தனது) பெரிய கழுத்திலே அணிந்து கொண்டும்
பீலி தழையை பிணைத்து பிறகு இட்டு	மயில் தோகைகளை ஒன்று சேர்த்து பின்புறத்திலே கட்டிக்கொண்டும்
காலி பின் போவாற்கு ஓர் கோல்	பசுக்கூட்டங்களின்பின்னே போகின்ற இவனுக்கு ஒரு கோலை

கொண்டு வா—;
கடல் நிறம் வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா—.

* * *—இடைச்சாதிக்குத் தக்கபடி ஆமைத்தாலி யென்னும் ஒரு வகை ஆபரணத்தைக் கழுத்திலணிந்தும், மயில் தோகைகளைச் சேர்த்துக் கட்டிப் பின்புறத்திலணிந்தும் வேலிக்கால்களிலே வெட்டின சிறு கோல்களை வில்லாகச் செய்து நாணேறிட்டு வளைத்து விளையாடிக்கொண்டே கன்றுகளை மேய்த்துக்கொண்டே செல்லுகின்ற என் மகனுக்குக் கோல் கொண்டுவா என்கை. வேலிக்கோல்—வேலிக் கால்களிலே வளர்ந்த சிறுகோல்களென்னுதல்; வளைவையுடைய கோலென்னுதல். தாலி கொழுந்து—பனையின் (வெண்ணிறமான) குருத்தென்று முரைக்கலாம்; இதை ஓர் அணியாகச் சமைத்துக் கழுத்திலணிதல் முற்காலத்தியல்பென்க: "விளையாடு வில்லேந்தி" என்ற பாடத்தில், 'வேலிக்கால்களிலே கோலைவெட்டி, (அதை) விளையாடுவில்லாக (க்கையில்) ஏந்திக்கொண்டு' என்று பொருள் கொள்ளலாம். ... ... (க)

173 கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும் *
எங்குந்திரிந்து விளையாடுமென்மகன் *
சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத்தக்க * நல் [கொண்டுவா. (உ)
அங்கமுடையதோர்கோல்கொண்டுவா அரக்குவழித்ததோர்கோல்

கொங்கு குடந்தையும் கோட்டி ஊரும் பேரும்	வாஸனை பொருந்திய திருக்குடந்தையிலும் திருக்கோட்டியூரிலும் திருப்பேர் நகரிலும்
எங்கும் திரிந்து விளையாடும் என் மகன்	மற்றுமுள்ள திருப்பதிகளிலுமெல்லாம் ஸஞ்சரித்து விளையாடுகின்ற என் பிள்ளையினுடைய
சங்கம் பிடிக்கும் தட கைக்கு தக்க	பாஞ்சஜந்யம் தரிக்கிற பெரிய திருக்கைக்கு தகுந்ததான
நல் அங்கம் உடையது	நல்லவடிவை யுடையதாகிய

ஓர் கோல் கொண்டு வா—;

அரக்கு வழித்தது	(நல்ல நிறமுண்டாம்படி) அரக்குப் பூசியதாகிய

ஓர் கோல் கொண்டு வா—

* * *—கொங்கு+குடந்தை=கொங்குக் குடந்தை என வரவேண்டுவது செய்யுளின்பம் நோக்கிக் "கொங்குங் குடந்தையும்" என வந்ததென்க. அரக்கு—செந்நிறமெனினுமாம். ... (உ)

174 கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக்கொன்றான் *
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான் *
நெறித்தகுழல்களை நீங்கமுன்னோடி * [கொண்டுவா. (ங)
சிறுக்கன்றுமேய்ப்பாற்கோர்கோல்கொண்டுவா தேவபிரானுக்கோர்கோல்

கறுத்திட்டு எதிர் நின்ற கஞ்சனை கொன்றான் { கோபித்து தன்னை எதிரிட்டு நின்ற கம்ஸனை கொன்ற வனும்,
எதிர் வந்த புள்ளின் வாய் பொறுத்திட்டு கீண்டான் { (தன்னைக் கொல்வதாக) எதிர்த்துவந்த பகாஸுரனுடைய வாயை (முதலிற்) பொறுத்துக்கொண்டிருந்து (பின்பு) கிழித்தவனும்,
நெறித்த குழல்கள் { நெறித்திராநின்றுள்ள கூந்தல்கள்
நீங்க { ஓடுகிறவேகத்தாலேஇரண்டு பக்கமும் அலையும்படியாக
முன் ஓடி { கன்றுகளுக்கு முன்னே போய்
சிறு கன்று மேய்ப்பாற்கு { இளங்கன்றுகளை மேய்ப்பவனுமாகிய இவனுக்கு
ஓர் கோல் கொண்டு வா—;
தேவபிரானுக்கு ஓர் கோல்
கொண்டுவா—.

* * *—பொறுத்திட்டுக்கீண்டான்=பகாஸுரன், தன்னை விழுங்கி உமிழுமளவும் கண்ணன் அவனை ஒன்றுஞ்செய்யாதிருந்து பின்பே அவன் வாயைக் கிழித்ததனால் பொறுமை விளங்குமென்க. (ங)

175 ஒன்றேயுரைப்பான் ஒருசொல்லேசொல்லுவான் *
துன்றுமுடியான் துரியோதனன்பக்கல் *
சென்றங்குப்பாரதங் கையெறிந்தானுக்கு * [கொண்டுவா. (ச)
கன்றுகள்மேய்ப்பதோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்

ஒன்றே உரைப்பான் { ('பாண்டவர்களுடன் சேர்ந்து வாழோம் என்ற) ஒரே விஷயத்தை சொல்லுபவனும்
(மத்யஸ்தர் எவ்வளவு சொன்னலும் 'ஊசிகுத்து நிலமும் பாண்டவர்களுக்குக் கொடேன்' என்ற)
ஒரு சொல்லே சொல்லுவான் { ஒரு சொல்லையே சொல்லுபவனும்
துன்று முடியான் துரியோதனன் பக்கல் சென்று { (நவரத்நங்களும்) நெருங்கப் பதித்த கிரீடத்தை அணிந்தவனுமான துரியோதனனிடத்தில் தூதுபோய்
அங்கு பாரதம் கையெறிந்தானுக்கு { அவ்விடத்தில் பாரதயுத்தத்தை உறுதிப்படுத்திக் கொண்டு வந்த இவனுக்கு
கன்றுகள் மேய்ப்பது ஓர் கோல் கொண்டு வா—.
கடல்நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா—.

* * *—முதலடியிற் குறித்த அடைமொழிகளிரண்டையும் எம்பெருமானுக்காக்கி 'கையெறிந்தானுக்கு' என்பதனோடு கூட்டி உரைத்தலு மொக்கும். கையெறிதல்—கையடித்தல். இது, பிரமாணம் செய்யும்வகையிலொன்று; இங்கு உறுதிப்படுத்துதல் என்ற பொருளைத் தந்தது. இனி, துரியோதநன் பக்கல் சென்று—துர்யோதகனிடம் தூதுபோய், (அவன் ஒன்றுங்கொடுக்க இசையாததனல்), அங்கு—பாரதயுத்தத்தில், கை யெறிந்தானுக்கு—ஸேனையை வகுத்துக்கொண்டு யுத்தம் செய்தவனுக்கு என்றும் பொருள் கொள்ளலாம் ... ... (ச)

176 சீரொன்றுதூதாய்த் துரியோதனன்பக்கல் *
ஊரொன்றுவேண்டிப் பெறாதவுரோடத்தால் *
பாரொன்றிப்பாரதங் கைசெய்துபார்த்தற்கு * [கொண்டுவா. (ரு)
தேரொன்றையூர்ந்தாற்கோர்கோல்கொணடுவா தேவபிரானுக்கோர்கோல்

துரியோதநன் பக்கல் துரியோதநனிடத்தில் (பாண்டவர்களுக்காக)
சீர் ஒன்று தூது ஆய் { சிறப்புப் பொருந்திய தூதனைப் போய்
ஊர் ஒன்று வேண்டி { (பாண்டவர்களுக்கு) ஒரு ஊராவது கொடு, என்று யாசித்துக்கேட்டும்
பெறாத உரோடத்தால் { அந்த ஒரு ஊரையும் பெறாமையினாலுண்டான சீற்றத்தாலே
பார் ஒன்றி பாரதம் கைசெய்து { பூமியில் பொருந்தியிருந்து பாரத யுத்தத்தில் அணிவகுத்து
பார்த்தற்கு தேர் ஒன்றை ஊர்ந்தாற்கு { அர்ஜுநனுக்கு ஒப்பற்ற தேரை (ப்பாகனயிருந்து) நடத்தினவனுக்கு
ஓர் கோல் கொண்டு வா—;
தேவபிரானுக்கு ஓர் கோல்
கொண்டுவா—.

177 ஆலத்திலையான் அரவினணைமேலான் *
நீலக்கடலுள் நெடுங்காலங்கண்வளர்ந்தான் *
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள்செய்த * [கொண்டுவா. (சூ)
கோலப்பிரானுக்கோர்கோல்கொண்டுவா குடந்தைக்கிடந்தாற்கோர்கோல்

(ப்ரளய காலத்தில் உலகமெல்லா முண்டு)
ஆலத்து இலை யான் { ஆலிலையில் பள்ளிகொண்டிருப்பவனும்
அரவின் அணை மேலான் { (எப்போதும்) திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொள்பவனும்
நீலம் கடலுள் கருநிறமான சமுத்திரத்தில்
நெடுங்காலம் கண் வளர்ந்தான் { வெகுகாலமாக யோக நித்ரை செய்பவனும்

பாலம் பிராயத்தே { குழந்தைப்பருவமே தொடங்கி
பார்த்தற்கு அருள் செய்த } அர்ஜுநனுக்கு க்ருபை செய்த
கோலம் பிரானுக்கு { அழகிய வடிவத்தையுடைய தலைவனுமான இவனுக்கு
ஓர் கோல் கொண்டுவா;—
குடந்தை கிடந்தாற்கு ஓர் * * வா—!

* * *—ஆல் + இலையான் = (அத்துச்சாரியை பெற்று) ஆலத்திலையான். க்ஷீராப்தி எம்பெருமான் திருமேனியின் நிழலீட்டாலே கறுத்துத் தோன்றுமாதலால் 'நீலக்கடல்' எனப்பட்டது: அன்றி, "உவர்க்குங்கருங்கடல் நீருள்ளான்" என்றபடி லவணஸமுத்ரத்தில் பள்ளிகொண்டிருப்பதாகக் கூறுவதுமுண்டாதலால் அதுவுங் கொள்ளத்தக்கதே. ... ... (சூ)

178 பொற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில் *
உற்றவடிவில் ஒருகண்ணும்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்துன்னை * [கோல்கொண்டுவா. (எ)
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா மணிவண்ணநம்பிக்கோர்

(அக்காக்காய் !—)
பொன் திகழ் சித்திர கூடம் பொருப்பினில் { அழகியதாய் விளங்குகின்ற சித்ரகூட மலைச்சாரலில்
(பிராட்டிமடியிலே தலைவைத்துக்கொண்டு ஸ்ரீராமனாகிய தான் கண்வளர்ந்தருளும்போது)
வடிவில் உற்ற ஒரு கண்ணும் கொண்ட { (பிராட்டியின்) திருமேனியில் பதிந்த (உனது இரண்டு கண்களில்) ஒரு கண்ணை மாத்திரம் பறித்துக் கொண்ட

அ கற்றை குழலன் { அந்தத் தொகுதியான கூந்தலையுடையவன்
கடியன் க்ரூரன்;
(ஆதலால், அவன் தனக்கு இஷ்டமானதை உடனே செய்யாமலிருத்தற்காக)
உன்னை மற்றை கண் கொள்ளாமே { உன்னை (ச்சிறி) (உனது) மற்றொரு கண்ணையும் பறித்துக் கொள்ளாதபடி
விரைந்து ஓடிப்போய்
கோல் கொண்டுவா—;
மணிவண்ணன் நம்பிக்கு ஓர் * *வா—.

* * *—காக்கையே! முன்னமே ஸ்ரீராமனாயிருந்த இச்சிறுவன் (உன்சாதியிலொருவன்) செய்யத்தகாததைச் செய்ததற்காகக் கண்ணொன்றைப் பறித்திருக்கிறான்; நீ இப்போது சொல்லியது செய்யாமலிருந்தாலோ உனது மற்றொரு கண்ணையும் பறித்துவிடுவான்; ஆகவே நீ விரைந்து இவனுக்குக் கோல் கொண்டு வரவேணு மென்றவாறு. காகாஸுரனது ஒற்றைக்கண்ணைப் பறித்தபோது காக்கைகளெல்லாவற்றிற்கும் ஒற்றைக் கண்ணும்படி அப்பெருமான் ஸங்கல்பித்ததனால் காகாஸுரனுக்கும் ஸாதாரணகாக்கைக்கும் அபேதமாக இப்படிச் சொல்லுகிறாள். கொடியன்—பிழைக்கேற்ற தண்டனை செய்பவன். ... ... (எ)

179 மின்னிடைச்சீதைபொருட்டா இலங்கையர் *
மன்னன்மணிமுடி பத்துமுடன்வீழ *
தன்னிகரொன்றில்லாச் சிலைகால்வளைத்திட்ட * [கொண்டுவா.(அ)
மின்னுமுடியற்கோர்கோல்கொண்டுவா வேலையடைத்தாற்கோர்கோல்

மின் இடை சீதை பொருட்டா	மின்னல்போன்ற [ஸூக்ஷ்மமான] இடையையுடைய ஸீதையை மீட்டுக்கொணர்வதற்காக	தன் நிகர் ஒன்று இல்லா சிலே கால் வளேத்து இட்ட	தனக்கு ஸமானமான தொன்றுமில்லாத[உயர்ந்த] வில்லே கால்வளேயும்படி பண்ணி ப்ரயோகித்த
இலங்கையர் மன்னன் மணி முடி பத்தும் உடன் வீழ	லங்கையிலுள்ளார்க்குத்தலேவனை ராவணனுடைய ரத்நகிரீடமணிந்த தலேகள் பத்தும் ஒருசேர அற்று விழும்படி	மின்னும் முடியற்கு	விளங்கா நின்ற கிரீடத்தை அணிந்தவனுக்கு
			ஓர் கோல் கொண்டுவா—;
		வேலே அடைத்தாற்கு	ஸமுத்திரத்தில் ஸேது கட்டினவனுக்கு
			ஓர் கோல் கொண்டுவா—.

180 தென்னிலங்கைமன்னன் சிரந்தோள்துணிசெய்து *
மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு *
என்னிலங்குநாமத்தளவும் அரசென்ற * [கொண்டுவா. (கூ)
மின்னிலங்காரற்கோர்கோல்கொண்டுவா வேங்கடவாணற்கோர்கோல்

தென் இலங்கை மன்னன் சிரம் தோள் துணிசெய்து	அழகிய லங்கைக்கு அரசனுகிய ராவணனுடைய தலேகளேயும் தோள்களேயும் (அம்பினல்) துணித்துப்போகட்டு,	மின் இலங்கு ஆரற்கு	மின்னல்போல் விளங்குகின்ற ஹாரத்தையுடையவனுக்கு
மின் இலங்கு பூண்	ஒளிவீசுகின்ற ஆபரணங்களே அணிந்த		ஓர் கோல் கொண்டுவா—;
விபீடணன் நம்பிக்கு	விபீஷணுழ்வானுக்கு	வேங்கடம் வாணற்கு	திருமலேயில் வாழ்ந்தருளுமவனுக்கு
என் இலங்கு நாமத்து அளவும் அரசு என்ற	'என்பெயர் ப்ரகாசிக்குமளவும் ராஜ்யம் (நடக்கக்கடவது)' என்று அருள் செய்த		ஓர் கோல் கொண்டுவா—.

* * *—''மின்னலங்காரற்கு'' என்பது மொருபாடம்; மின்—விளங்காநின்ற, அலங்காரத்தையுடையவனுக்கென்று பொருள்: வாணன்—வாழ்நன்; மரூஉ. ... ... (கூ)

181 அக்காக்காய்நம்பிக்குக் கோல்கொண்டுவாவென்று *
மிக்காளுரைத்தசொல் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
ஒக்கவுரைத்த தமிழ்பத்தும்வல்லவர் *
மக்களேப்பெற்று மகிழ்வரிவ்வையத்தே. (ய)

அக்காக்காய்	'காக்கையே!	ஒக்க உரைத்த தமிழ் பத்தும் வல்லவர்	அவ்யசோதையைர் போலவே சொன்ன தமிழிலாகிய இப்பத்துப்பாசுரங்களேயும்ஓதவல்லவர்கள்
நம்பிக்கு கோல் கொண்டுவா என்று	உத்தமனை இவனுக்கு கோலேக்கொண்டுவந்து தா' என்று		
மிக்காள் உரைத்த சொல்	சிறந்தவளான யசோதை சொன்ன சொற்களே	மக்களே பெற்று இவையத்தே மகிழ்வர்	ஜ்ஞாநபுத்ரர்களே [சிஷ்யர்களே] அடைந்து இப்பூமியிலே மகிழ்ந்திருக்கப்பெறுவர்.
வில்லிபுத்தூர் பட்டன்	ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த பெரியாழ்வார்		

* * *—மிக்காள்=தேவகியும் யசோதையுமாகிய இருவரும் பூர்வ ஜந்மத்தில் தவஞ்செய்தவப்களாயிருந்தாலும், தேவகி கண்ணனேப் பெற்று விட்டமாத்திரமேயாய், பூர்ணுநுபவம் யசோதையதாகையாலே இவள் மிக்காளானுள். ... ... (கய)

அடிவரவு:—வேலி கொங்கு கறுத்து ஒன்றே சீர் ஆல் பொற்றிகழ் மின் தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை.

இரண்டாம்பத்து—ஏழாந்திருமொழி, ஆநிரைமேய்க்க.

கண்ணனைப் பூச்சூட அழைத்தல்.

182 ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாந்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பானையிற்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாஞ்சிரிப்ப *
தேனிலினியபிரானே செண்பகப்பூச்சூட்டவாராய். (க)

தேனில் இனிய பிரானே { தேனைக்காட்டிலும் போக்யனாயிருக்கிற ப்ரபுவே!
பற்றாதார் எல்லாம் சிரிப்ப { பகைவரெல்லாரும் பரிஹஸிக்கும்படி
பானையில் பாலை பருகி { (கறந்த) பானையிலேயுள்ள பச்சைப்பாலைக் குடித்து (பின்பு)
உன் கரிய திருமேனி வாட { உன்னுடைய ச்யாமமான அழகிய திருமேனி வாடும்படி
கானகம் எல்லாம் திரிந்து { காட்டிடம் முழுதும் திரிந்துகொண்டு
ஆ நிரை மேய்க்க நீ போதி { பசுக்களின் திரளை மேய்ப்பதற்கு நீ போகிறாய்;
அரு மருந்து ஆவது அறியாய் { (நீ உன்னை) பெறுதற்கரிய தேவாம்ருதம்போன்றவனாதலை அறிகிறாயில்லை;
(இனி நீ கன்றுமேய்ப்பதை விட்டிட்டு)
செண்பகம் பூ சூட்ட வாராய் { செண்பகப்பூவை (நான்) சூட்டும்படி வருவாயாக.

* * *—"இந்த கிருஷ்ணன் எங்கள் வீட்டில் கைப்பானையிலிருந்த பாலைக் குடித்துப்போனான்" என்று உகவாதார் சொல்லும்படி கறந்தபானையிலிருந்த பச்சைப்பாலைப் பருகுமவனை பித்தனாயிருந்தாலும் தேனைவிட இனியவனாயிருப்பவனே! உன்னுடைய திருமேனியின் அருமையைத் தெரிந்துகொள்ளாமல் காட்டிலே போய்த் திரிவது தவிர்ந்து செண்பகப்பூவை நான் சூட்டும்படி வரவேணுமென்றவாறு. அருமருந்தாவதறியாய்—இவ்வுலகத்திலுள்ளார்க்குப் பிறவி நோயறுக்கும் மருந்துமாய், பரமபதத்திலுள்ளார்க்குப் போகமகிழ்ச்சிக்கு மருந்துமாய் நீயிருப்பதை அறிகிறிலைகாண். பற்றாதார் சிரிப்ப-பற்றுமவர்கள் [அன்பர்கள்] இவன் செயலுக்கு உகப்பர். ... ... (க)

183 கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்குங்கண்கள் *
உருவுடையாயுலகேழும் உண்டாகவந்துபிறந்தாய் *
திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய் *
மருவிமணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (உ)

கண்கள் உன்னை கண்டால் { கண்களானவை உன்னைப் பார்த்தால்
கரு உடை மேகங்கள் கண்டால் ஒக்கும் உரு உடையாய் } கர்ப்பத்தையுடைய [நீர்கொண்ட] மேகங்களை பார்த்தால் (அதை) ஒத்துக் குளிர்கின்ற வடிவையுடையவனே!
உலகு ஏழும் உண்டாக வந்து பிறந்தாய் { ஏழுலகங்களும் ஸத்தை பெறும்படி திருவவதரித்தவனே!
திரு உடையாள் மணவாளா { (உன்னை) ஸம்பத்தாகவுடைய பிராட்டிக்கு நாயகனே!
திரு அரங்கத்தே கிடந்தாய் { கோயிலிலே பள்ளிகொண்டிருப்பவனே!
மணம் மருவி மகிழ்கின்ற மல்லிகைப்பூ { வாஸனை நீங்காமலிருந்து பரிமளிக்கிற மல்லிகைப் பூவை
சூட்டவாராய்—.

* * *—'ஒக்கும்' என்பதை முற்றாகக்கொண்டு 'கருவுடை மேகங்களைக் கண்டால் உன்னைக் காண்பதை ஒத்திருக்கும்: (அதுக்குமேலே) கண்கள் உருவுடையாய்—கண்ணழகையுமுடையவனே!' என்றும் உரைக்கலாம். ... ... (உ)

184 மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி *
நிச்சலுந்தீமைகள்செய்வாய் நீள்திருவேங்கடத்தெந்தாய் *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (ங)

மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம் இடம்புக்கு	நடுநிலையிலும் மேல் நிலையிலும் ஏறிப்போய் பெண்களிருக்கிற இடத்திலே புகுந்து
கச்சொடு பட்டை கிழித்து	(அவர்களுடைய முலைகளின் மேலிருந்த) கச்சுக்களையும் பட்டாடைகளையும் கிழித்திட்டு
காம்பு துகில் அவை கீறி	(மற்றும் அப்பெண்கள் உடுத்துள்ள) கரைகட்டின சேலையையும் கிழித்துப் போட்டு

(இப்படியே)

நிச்சலும் தீமைகள் செய்வாய்	ப்ரதிநித்யம் துஷ்டசேஷ்டைகளை செய்பவனே!
நீள் திருவேங்கடத்து எந்தாய்	உயர்ந்த திருமலையிலெழுந்தருளியிருக்கிறஸ்வாமியே!
பச்சை தமனகத்தோடு பாதிரிப்பூ	பசுநிறமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரிப்பூவையும்

சூட்டவாராய்—.

185 தெருவின்கணின்றிளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
மருவுந்தமனகமுஞ் சீர்மாலைமணங்கமழ்கின்ற *
புருவங்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பி உகந்திவைசூட்டநீவாராய். (௪)

புருவம் கரு குழல் நெற்றி பொலிந்த	புருவங்களையும் கருநிறமான கூந்தலையும் (இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள) நெற்றியையும் கொண்டு விளங்குகின்ற
முகில் கன்றுபோலே உருவம் அழகிய நம்பி	மேகக் கன்றுபோலே வடிவமழகிய சிறந்தோனே! (நீ)
தெருவின்கண்நின்று	தெருவிலே நின்றுகொண்டு
இள ஆய்ச்சிமார்களை	இடைச்சிறுமிகளை
தீமை செய்யாதே	தீம்புசெய்யாமலிரு;
மருவும் தமனகமும் சீர் மாலை மணம் கமழ்கின்ற	மருவையும் தமநகத்தையும் (சேர்த்துக்கட்டின) அழகிய மாலைகள் வாஸனை வீசுகின்றன;
இவை உகந்து	இவற்றை விரும்பி

சூட்ட நீ வாராய்—.

* * *—எம்பெருமானுக்கு ஏற்ற உவமைப்பொருள் கிடையாமையால் 'புருவங் கருங்குழல் நெற்றி பொலிந்தமுகில்கன்று' என இல்பொருளுவமை கூறப்பட்டது. கமழ்கின்ற—'அன்' சாரியை பெறாத முற்று. ... ... (௪)

186 புள்ளினைவாய்பிளந்திட்டாய் பொருகரியின்கொம்பொசித்தாய் *
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய் *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (௫)

புள்ளினை வாய்பிளந்திட்டாய்	பகாஸுரனை வாய்கிழித்துப் பொகட்டவனே!,
பொரு கரியின் கொம்பு ஒசித்தாய்	யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை பறித்தவனே!
கள்ளம் அரக்கியை மூக்கொடுகாவலனை தலை கொண்டாய்	வஞ்சனையையுடைய ராக்ஷஸியாகிய சூர்ப்பணகையின் மூக்கையும் (அவளுக்குப்) பாதுகாவலாயிருந்த ராவணனுடைய தலையையும் அறுத்தவனே!
நீ	(இப்படிப்பட்ட) நீ
வெண்ணெய் அள்ளி விழுங்க	வெண்ணெயை வாரி விழுங்க
அஞ்சாது அடியேன் அடித்தேன்	சிறிதும் பயப்படாமல் '(எப்போது குழந்தைபிறந்து வெண்ணெய் விழுங்கப் போகிறது?' என்றிருந்த) நான் அடித்தேன்;

(அப்பிழையைப்பொறுத்து)

தெள்ளிய நீரில் எழுந்த செங்கழுநீர்	தெளிவான நீரிலே உண்டான செங்கழுநீரை

சூட்டவாராய்—.

* * *—புஷ்பம் மேலே பட்டாலும் வாடும்படியான உன்னுடைய ஸௌகுமார்யத்தைக் கண்டு அஞ்ச வேண்டியதாயிருக்க, அப்படி அஞ்சாமல் நான் அடித்ததைப் பொறுத்துப் பூச்சூட வரவேணுமென்கிறாள். அடியேன்—ஸ்ரீக்ருஷ்ணனுடைய வீரத்தில் ஈடுபட்டுச்சொல்லுகிறசொல். மரபுவழுவமைதி, அடித்தபின்பு அநுதாபங்கொண்டு 'அடியேன்' என்றாளெனினுமாம். ... ... (௫)

187 எருதுகளோடுபொருதி ஏதுமுலோபாய்காண்நம்பி *
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் *
தெருவின்கண் தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய். (சு)

நம்பி — சிறந்தோனே!
(நப்பின்னையை மணம் புணர்வதற்காக)
எருதுகளோடு பொருதி — ஏழுரிஷபங்களுடன் போர் செய்யா நின்றாய்;
ஏதும் உலோபாய் காண் — எதிலும் [ஒன்றிலும்] விருப்பமில்லாதவனாயிரா நின்றாய்;
கருதிய தீமைகள் செய்து — (கம்ஸன் உன்மேல் செய்ய) நினைத்த தீம்புகளை (நீ அவன்மேற்) செய்து
கஞ்சனை கால்கொடு பாய்ந்தாய் — (அந்தக்) கம்ஸனை காலினால் [காலைக்கொண்டு] பாய்ந்தவனே!
(அக்ரூரர் மூலமாயழைக்கப்பட்டுக் கம்ஸனரண்மனைக்குப் போம்போது)
தெருவின் கண் தீமைகள் செய்து — தெருவிலே தீமைகளைச் செய்து கொண்டுபோய்
சிக்கென மல்லர்களோடு பொருது வருகின்ற பொன்னே — வலிமையாக (சாணூரமுஷ்டிகரென்னும்) மல்லர்களுடனே போர்செய்துவந்த பொன்போலருமையானவனே!
புன்னைப்பூ சூட்டவாராய்—.

* * *—பொருதி = முன்னிலையொருமை நிகழ்கால வினைமுற்று: "(எருதுகளோடே பொருதது) காலாந்தரமாயிருக்கச்செய்தேயும் தற்காலம்போலே ப்ரகாசிக்கையாலே 'பொருதி' என்று வர்த்தமானமாகச் சொல்லுகிறது" என்ற பெரியஜீயர் உரை நோக்கத்தக்கது. உலோபாய் = 'லோப:' என்ற வடமொழியின் திரிபாகிய 'உலோபம்' என்பதனடியாகவந்த எதிர்மறைமுற்று; உடம்பைப்பேணுதல் உயிரைப்பேணுதல் ஒன்றும் செய்யாதிரா நின்றாய் என்று கருத்து. போம்வழியில் வண்ணானைக்கொன்று வஸ்த்ரங்களைப் பறித்துக்கொண்டமை, கம்ஸனுடைய வில்லை முறித்தமை, குவலயாபீடத்தைக் கொன்றமை முதலியன - இங்கு, தெருவின்கண்செய்த தீமைகளாகும். கண் - ஏழனுருபு. ... (சு)

188 குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா *
இடந்திட்டிரணியனெஞ்சை யிருபிளவாகமுன்கீண்டாய் *
குடந்தைக்கிடந்தவென்கோவே குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (எ)

குடங்கள் எடுத்து ஏறவிட்டு கூத்து ஆட வல்ல எம் கோவே — பல குடங்களை தூக்கி உயர வெறிந்து (இப்படி) குடக்கூத்தை யாடுவதற்கு ஸாமர்த்தியமுடைய எம்முடைய தலைவனே
மடம் கொள் மதி முகத்தாரை மால் செய்ய வல்ல என் மைந்தா — மடப்பமென்ற குணத்தையுடைய சந்த்ரன்போன்ற முகத்தையுடைய பெண்களை மயக்கவல்ல எனது புத்திரனே!
முன் இரணியன் நெஞ்சை இடந்திட்டு — நரஸிம்ஹாவதாரத்திலே ஹிரண்யாஸுரனுடைய மார்பை (திருவுகிர்களை) ஊன்ற வைத்து
இரு பிளவு ஆக கீண்டாய் — இரண்டு பிளவாகப் போம்படி பிளந்தவனே!
குடந்தை கிடந்த எம் கோவே — திருக்குடந்தையில் பள்ளி கொள்ளுகிற எமது தலைவனே!
குருக்கத்திப்பூ சூட்டவாராய்—.

* * *—குடக்கூத்து—தலையிலே அடுக்குக் குடமிருக்க இருதோள்களிலும் இருகுடங்களிருக்க இருகையிலுங் குடங்களையேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து ... (எ)

189 சீமாலிகனவனோடு தோழமைக்கொள்ளவும்வல்லாய் *
சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய் *
ஆமாறறியும்பிரானே அணியரங்கத்தேகிடந்தாய் *
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (அ)

சீ மாலிகன் அவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்	மாலிகன் என்ற பெயரையுடையவனோடு ஸ்நேஹம் செய்து கொள்ளுதற்கும் வல்லவனாய்,
அவனை நீ சாம் ஆறு எண்ணி	அந்த மாலிகனை நீ செத்துப் போம் வழியையும் ஆலோசித்து
சக்கரத்தால் தலை கொண்டாய்	சக்ராயுதத்தினால் தலையையுமறுத்தாய்;
ஆம் ஆறு அறியும் பிரானே	நடத்த வேண்டியவைகளை அறியவல்ல ப்ரபுவே!
அணி அரங்கத்தே கிடந்தாய்	அழகிய கோயிலிலே பள்ளி கொண்டிருப்பவனே!
என்னை ஏமாற்றம் தவிர்த்தாய்	எனக்கு துன்பத்தைப்போக்கினவனே!

இருவாட்சிப்பூ சூட்டவாராய்—.

* * *—மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்திற் பலவகையாயுதங்களையும் பயின்று ஒருவர்க்கு மஞ்சாமல் அஹங்காரியாய் ஸாதுஜநங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் அவனைக் கொன்றிடக்கருதி அவனுக்கு சக்ராயுத ப்ரயோக முறைமையைப் பயில்விக்கிற வியாஜமாக, சக்கரத்தினால் அவன் தலையறும்படி செய்த இதிஹாஸமுணர்க.

'மாலிகன்' என்பதே அவன்பெயர்: மேன்மைப் பொருளைத்தரும் 'ஸ்ரீ' என்ற சொல் 'சீ' எனத் திரிந்துவந்து சீமாலிகன் எனக் கிடக்கிறது: க்ருஷ்ண ஸ்நேஹத்தால்வந்த மேன்மையுண்டே அவனுக்கு. அவனைக்கொல்வது ஆவச்யகமானபோது 'தோழனைக் கொன்றான்' என்னும் பழி தனக்கு வாராமல் 'தன்னாலே தான் முடிந்தான்' என்று உலகத்தார் சொல்லும்படி கண்ணபிரான் மாலிகனை உபாயமாகக் கொன்றனனென்பார் 'சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்' என்றார். (அ

190 அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய் *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் தூமலராள்மணவாளா *
உண்டிட்டுலகினையேழும் ஓராலிலையிற்றுயில்கொண்டாய் *
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (௯)

அத்தாணியுள் அமரர்கள்	அருகான இடத்திலே (ஸேவிக்கும்படி) தேவர்கள் சூழ்ந்திருக்க
அங்கு அண்டத்து இருந்தாய்	அவர்கள் நடுவில் பரமபதத்தில் வீற்றிருப்பவனே!
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்	அடியார்களுடைய ஹ்ருதயத்தில் வஸிப்பவனே!
தூ மலராள் மணவாளா	பரிசுத்தமான தாமரை மலரைப் பிறப்பிடமாகவுடைய பிராட்டிக்குகொழுநனே!
	(பிரளயகாலத்தில்)
உலகினை ஏழும் உண்டிட்டு ஓர் ஆல் இலையில் துயில் கொண்டாய்	ஏழு உலகங்களையும் உண்டுவிட்டு ஓராலிலையில் யோக நித்திரையைக் கொண்டவனே!
நான் உன்னை கண்டு உகக்க	நான் (நீ பூச்சூடியதைப்) பார்த்து மகிழும்படி
கருமுகைப்பூ	இருவாட்சிப்பூவை

சூட்ட வாராய்—.

191 செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி *
எண்பகர்பூவுங்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (௰)

செண்பகம்	'செண்பகப்பூவும்
மல்லிகையோடு	மல்லிகைப்பூவும்
செங்கழுநீர்	செங்கழுநீர்ப்பூவும்
இருவாட்சி	இருவாட்சிப்பூவும் (ஆகிய)
எண் பகர்	(இன்னதின்னதென்று எண்ணிச்சொல்லப்படுகிற
பூவும்	மலர்களையெல்லாம்
கொணர்ந்தேன்	கொண்டுவந்தேன்;
இன்று	இப்போது
இவை சூட்ட	இப்பூக்களைச் சூட்டும்படி
வா	வருவாயாக'
என்று	என்று—

பகர் மண் கொண்டானை	பகர்ந்த மண்ணைக்கொண்டவனை	கோன்	நிர்வாஹகரான
ஆய்ச்சி	யசோதை	பட்டர்பிரான்	பெரியாழ்வார்
மகிழ்ந்து	மகிழ்ச்சிகொண்டு	சொன்ன	அருளிச்செய்த
உரை செய்த	சொல்லியவற்றை	இ மாலை	இந்தச்சொல்மாலையும்
பண் பகர் வில்லி புத்தூர்	ராகமாகவே சொல்லுகின்ற ஸ்ரீவில்லிபுத்தூருக்கு	பத்தே	ஒருபத்தே !

* * *—இந்தத் திருமொழிக்குப் பலஞ்சொல்லாதொழிந்தது, இப்பத்துப் பாசுரங்களும் ஸ்வயமே ரஸ்யமாய் போக்யமாயிருக்கு மென்பதற்கு. பத்தே—ஏகாரம் - இப்படியும் பாடலிருக்கப் பெறுவதே ! என்று இத்திருமொழியின் போக்யதையைக் கொண்டாடியதைக் காட்டும். எண்பகர் - கூட்டிக் கொள்ளலாமென்று சாஸ்த்ரங்களிலெண்ணப்பட்ட என்றுமாம். பகர்மண்—வாமநனைச்சென்ற திருமால் 'எனக்கு மூவடி மண் தா' என்று சொல்லப்பெற்ற பூமியை என்றுவது, 'மூவடிமண் அளந்து கொள்' என்று மஹாபலி உடன்பட்டுச் சொன்ன பூமியை என்றுவதுகொள்க. ஆரேனும் ஒன்றைச் சொல்லினும் ராகத்திலே சேரும்படி சொல்லுகின்ற ஸ்ரீ வில்லிபுத்தூரென்பது 'பண்பகர் வில்லிபுத்தூர்' என்பதன் கருத்து. (ய)

அடிவரவு:—ஆநிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் செண்பகம் இந்திரன்.

இரண்டாம்பத்து—எட்டாந்திருமொழி, இந்திரனோடு பிரமன்.

(திருவந்திக்காப்பிடக் கண்ணனையழைத்தல்)

192 இந்திரனோடுபிரமன் ஈசனிமையவரெல்லாம் *
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார் *
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய் *
அந்தியம்போதிதுவாகும் அழகனேகாப்பிடவாராய். (க)

சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்	சந்த்ரனைவன் வீடுகளின் மேல்நிலையிலே சேரப்பெற்ற ஸமர்த்தர்கள் வஸிக்கின்ற திருவெள்ளறையிலே நின்றவனே !	உவர் ஆய் வந்து மறைத்து நின்றார்	(மிக்க ஸமீபமாகவும் மிக்க தூரமாகவுமல்லாமல்) நடுவிடத்திலிருப்பவராகவந்து மறைந்து நிற்கிறார்கள்;
அழகனே	அழகு உடையவனே!	இது அம் அந்தி போது ஆகும்	இக்காலம் அழகிய ஸாயம் ஸந்த்யாகாலமாகும்;
இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம்	இந்திரனும் ப்ரஹ்மாவும் ருத்ரனும் மற்றுமுள்ள தேவர்களும் (ஆகிய) யாவரும்		(ஆகையால்)
மா மந்திரம் மலர் கொண்டு	சிறந்த மந்த்ர புஷ்பங்களைக் கொண்டு	காப்பு இட வாராய்	(நான் உனக்கு ரக்ஷையாக) திருவந்திக்காப்பிடும்படி வருவாயாக.

* * *—பகவத் ஸ்தோத்ரமாகிய வேதமந்திரங்களைச் சொல்லிக்கொண்டு பகவானுக்கு ஸமர்ப்பிப்பதற்காகக் கையிலேந்தியுள்ள மலர் மந்திரமலர் எனப்பட்டது. காப்பு - ரக்ஷை. ஆழ்வார் தாம் அர்ச்சாவதார ப்ரவணராதலால் கண்ணபிரானுடைய திருவந்திக்காப்புக்குத் திருவெள்ளறைப் பதியை விஷயமாக்கினர். ... ... (க)

193 கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம் *
நின்றொழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய் *
மன்றில்நில்லேலந்திப்போது மதிட்டிருவெள்ளறைநின்றாய் *
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய் (உ)

மதிள் திருவெள்ளறை நின்றாய் — மதிளரணையுடைய திருவெள்ளறையிலே நின்றருளினவனே!
ஒன்றும் நேசம் இலாதாய் — (என்மேல்) அல்பமும் அன்பில்லாதவனே!
உன்னை கூவி நின்றொழிந்தேன் — உன்னைக் கூவிக்கொண்டு நின்றுவிட்டேன்;
(அதனால்)
பசு எல்லாம் கன்றுகள் இல்லம் புகுந்து கதறுகின்ற — பசுக்களெல்லாம் கன்றுகளிருக்குமிடத்திலேசேர்ந்து கத்துகின்றன;
(நீ)
அந்தி போது மன்றில் நில்லேல் — அந்திவேளையில் நாற்சந்தியில் நில்லாதே;
என் தன் சொல்லு நன்று கண்டாய் — என்னுடைய வார்த்தை (உனக்கு) நல்லதாகும் கிடாய்:
நான் உன்னை காப்பு இட வாராய்—.

* * *—பசுக்களைக் கறக்கவேண்டிய நான் உன்னைக் காப்பிட அழைத்துக்கொண்டிருப்பதனால், மேய வெளியே போயிருந்த பசுக்களெல்லாம் கன்றுகளுள்ளவிடத்தில் வந்து சேர்ந்தபின்பும் கறப்பாரில்லாமல் முலைக்கடுப்பெடுத்துக் கத்துகின்றன என்பது முதலடியின் கருத்து. 'கதறுகின்ற' என்பதை இடை நிலைத்தீபகமாக்கி, கன்றுகள் முலையுண்ணப்பெறாமையால் கத்துகின்றன; பசுக்கள் புறம்பே நின்றுகொண்டு கன்றுகள் முலையூட்டுதல் கறத்தல் செய்யாமையாலே முலைக்கடுப்பாற் கதறுகின்றன என்றுமாம். ... ... (உ)

194 செப்போதுமென்முலையார்கள் சிறுசோறுமில்லுஞ்சிதைத்திட்டு *
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலையாள்வாய் *
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய் *
இப்போதுநானொன்றுஞ்செய்யேன் எம்பிரான்காப்பிடவாராய் (ரு)

ஆள்வாய் — என்னை ஆளப்பிறந்தவனே!
முப்போதும் வானவார் எத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய் — மூன்றுகாலத்திலும் தேவர்கள் ஸ்தோத்திரஞ்செய்கின்ற (உன் மங்களத்தையே எண்ணுகிறவர்களுடைய திருவெள்ளறையிலே நிற்பவனே! (நீ),
செப்பு ஓது மெல் முலையார்கள் — பொற்கலசங்களை (உவமையாகச்) சொல்லத்தகுந்த மெல்லிய முலையையுடைய ஸ்திரீகள்
(விளையாட்டாகச்செய்த)
சிறு சோறும் — மணற்சோற்றையும்
(சிறு)இல்லும் — மணல் வீட்டையும்
சிதைத்திட்டு — அழித்துவிட்டு (நிற்க)
அப்போது — அக்காலத்தில்
நான் உரப்ப — நான் கோபித்துச் சொல்ல
(பிடித்தடிப்பளோ? என்றஞ்சி என் முன் நில்லாமல்)
போய் — அப்பாற்போய்
அடிசிலும் உண்டிலை — சோற்றையும் உண்ணமறுந்திட்டாய்;
இப்போது — இந்த ஸமயத்திலே
நான் ஒன்றும் செய்யேன் — நான் உன்னை (மருட்டுதல் முதலியன) ஒன்றும் செய்யமாட்டேன்;
எம்பிரான் காப்பிட வாராய்—.

195 கண்ணில்மணற்கொடுதூவிக் காலினாற்பாய்ந்தனையென்றென்று *
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார் *
கண்ணனேவெள்ளறைநின்றாய் கண்டாரோடேதீமைசெய்வாய் *
வண்ணமேவேலையதொப்பாய் வள்ளலேகாப்பிடவாராய். (சு)

கண்ணனே — ஸ்ரீ க்ருஷ்ணனே!
வெள்ளறை நின்றாய்!—;
கண்டாரோடே தீமை செய்வாய் — கண்டவரோடெல்லாம் தீம்பு செய்பவனே!
வண்ணம் வேலை அது ஒப்பாய் — திருமேனி நிறம் கடலின் நிறத்தை ஒத்திருக்கப்பெற்றவனே!
வள்ளலே — உதாரனே!
எண் அரு பிள்ளைகள் இவர் — எண்ணுவதற்கு அருமையான (மிகப்பல) இப்பிள்ளைகள்
வந்திட்டு — வந்திருந்து
மணல் கொடு கண்ணில் தூவி — மணலைக்கொண்டுவந்து கண்ணில் தூவிவிட்டு

(அதனோடு நில்லாமல்)		முறைப்படுகின்றார்	முறையிடாநின்றார்கள் ;
காலினால் பாய்ந்தனை	காலினாலும் உதைத்தாய்;	(ஆதலால் அங்கே போவதைவிட்டு)	
என்று என்று	என்று பலதரஞ்சொல்லி	காப்பு இட வாராய்—.	
(நீ செய்யுந் தீம்பைக் குறித்து)			

* * *—'நாங்கள் கண்ணை விழித்து விளையாட வொண்ணாதபடி இந்த கிருஷ்ணன் எங்கள் கண்ணிலே மண்ணைத்தூவியும், நீ ஏன் எங்கள் கண்ணிலே மண்ணைத் தூவினாயென்று நாங்கள் கேட்கக் காலினாலுதைத்தும் போனான்' என்றிப்படி இவ்வூரிலுள்ள பிள்ளைகள் வந்து என்னிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிறார்கள்; ஆதலால் நீ அங்குப்போகாமல் நான் காப்பிடும்படி வரவேணுமென்கிறாள். வேலையது = அது —முதல் வேற்றுமைச் சொல்லுருபு. (சு)

196 பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகள் தீமைகள்செய்வார் *
எல்லாமுன்மேலன்றிப்போகாது எம்பிரான்நீயிங்கேவாராய் *
நல்லார்கள்வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரேயுன்மேனி *
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (ரு)

	(பஞ்சலக்ஷம் குடியுள்ள)		எம்பிரான்! நீ இங்கே வாராய்—;
இ ஊரில் தீமைகள் செய்வார் பிள்ளைகள் 'பல் ஆயிரவர்	இவ்வூரிலே தீம்புகளைச் செய்பவர்களாகிய சிறுவர்கள் அனேக ஆயிரக் கணக்கானவராவர்;	நல்லார்கள்	நல்லவர்கள் வாழ்கிற வெள்ளறை(யில்) நின்றாய்!—;
		ஞானம் சுடரே	ஞானவொளியை யுடையவனே !
எல்லாம்	அவர்கள்செய்யும் தீம்புகளெல்லாம்	உன் மேனி	உன் திருமேனியை
உன் மேல் அன்றி	உன்மேலல்லாமல்	சொல் ஆர நின்று ஏத்தி வாழ்த்தி	சொல் நிறையும்படி நின்று ஸ்தோத்ரஞ்செய்து மங்களாசாஸநஞ்செய்து
	(வேறொருவர் மேலும்)		
போகாது	ஏறாது ;	சொப்பட	நன்றாக
	(இப்படியிருப்பதால் அங்கே போகாமல்)		காப்பு இட வாராய்—.

* * *—பஞ்சலக்ஷங் குடியுள்ள இவ்வூரிலோ தீம்பு செய்யும் பிள்ளைகள் பலருண்டு; அப்படியிருக்கவும், அவர்கள் தாம்தாம் செய்யுந்தீம்பை உன்மேலேயேற்றிவிடுகிறார்கள். ஆதலால் உன்மேலே குற்றத்தைச் சுமத்துகின்ற அவர்களை விட்டிட்டு, உன்னை அன்புடன் வாழ்த்திக் காப்பிடும்படி உன்மேல் பரிவுள்ளவர்களிருக்கின்ற இவ்விடத்திற்கு வரவேணுமென்பதாம்.

எம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசமாய் ஜ்ஞாநமயமாயிருப்பதால் 'ஞானச் சுடரே' என்கிறார். ... ... (ரு)

197 கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை
வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதோர்வார்த்தையுமுண்டு *
மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய் *
அஞ்சுவன்நீயங்குநிற்க அழகனேகாப்பிடவாராய். (சா)

மஞ்சு தவழ் மணி மாடம் மதிள்	மேகங்கள் ஊர்ந்து செல்கின்ற ரத்நமயமான வீடுகளையும் மதிளையுமுடைய	வஞ்சிப்பதற்கு	(உன்னை) வஞ்சனையாகக் கொல்வதற்கு
		விடுத்தான்	அனுப்பினான்'
திரு வெள்ளறை(யில்) நின்றாய்!—;		என்பது ஓர் வார்த்தையும் உண்டு	என்பதான ஒரு சொல்லும் கேட்டிருப்பதுண்டு,
கஞ்சன் நின்மேல் கறுக்கொண்டு	'கம்ஸனானவன் உன்மேலே, கோபங்கொண்டு		(ஆதலால்)
கரு நிறம் செம் மயிர் பேயை	கரு நிறத்தையும் செம்பட்ட மயிரையுமுடைய பூதனையை	நீ அங்கு நிற்க அஞ்சுவன்	நீ அவ்விடத்திலே நிற்பதற்கு நான் அஞ்சா நின்றேன் ;
			அழகனே ! காப்பு இட வாராய்—.

198 கள்ளச்சகடுமருதுங் கலக்கழியவுதைசெய்த *
பிள்ளையரசேநீபேயைப்பிடித்து முலையுண்டபின்னை *
உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய் *
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனேகாப்பிடவாராய். (எ)

கள்ளம் சகடும் மருதும் கலக்கு அழிய	வஞ்சனையையுடைய சகடாஸுரனையும் யமளார்ஜுநங்களையும் (வடிவம்) கட்டுக்குலைந்தழியும்படி	நீ பேயை முலை பிடித்து உண்ட பின்னை	நீ பூதனையினுடைய முலையைப்பிடித்து (வாய் வைத்து) உண்டபின்பு
		உள்ள ஆறு ஒன்றும் அறியேன்	உள்ளபடி ஒன்றுமறிகிறேனில்லை;
உதை செய்த பிள்ளை அரசே	(திருவடிகளால்) உதைத்துத் தள்ளிய பிள்ளைத் தன்மையைக்கொண்ட பெருமையனே	ஒளி உடை வெள்ளறை நின்றாய்!—;	
		இது பள்ளிகொள் போது ஆகும்	இப்போது படுத்து உறங்குகிற வேளையாகும்;
		பரமனே! காப்பு இட வாராய்—.	

* * *—பார்த்தால் சிறுவன்போலிருக்கின்றாய், நீ செய்யும் செய்கையோ அதிமாநுஷம், ஆகையால் உனது உண்மையான ஸ்வரூபம் என்னாலறியப்போகிறதில்லை யென்கிறாள். ... (எ)

199 இன்பமதனையுயர்த்தாய் இமையவர்க்கென்றுமரியாய் *
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே *
செம்பொன்மதிள்வெள்ளறையாய் செல்வத்தினால்வளர்பிள்ளாய் *
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய் (அ)

(உன் குணசேஷ்டிதங்களால்)		செம் பொன் மதிள் வெள்ளறையாய்!—;	
இன்பம் அதனை உயர்த்தாய்	பரமாநந்தத்தை (எனக்கு) மேன் மேலுண்டாக்கினவனே!	செல்வத்தினால் வளர் பிள்ளாய்	செல்வச் செருக்கோடு வளர்கின்ற குழந்தாய்!
இமையவர்க்கு என்றும் அரியாய்	தேவர்களுக்கு எந்நாளும் அருமையானவனே!	அங்கு	நீ இருக்கிறவிடத்தில்
கும்பம் களிறு அட்ட கோவே	மஸ்தகத்தையுடைய குவலயாபீடத்தை கொன்ற ஸ்வாமியே!	கம்பம் கபாலி காண்	(கண்டார்க்கு) நடுக்கத்தை விளைக்கவல்ல துர்க்கையாகும்;
கொடு கஞ்சன் நெஞ்சினில் கூற்றே	கொடுமை தங்கிய கம்ஸனுடையமநஸ்ஸிலே யமன் போல் பயங்கரனாய்த் தோன்றுமவனே!	(ஆகையால் அங்கு நில்லாமல்) கடிது ஓடி	மிகவும் விரைந்தோடி
		காப்பு இட வாராய்—.	

* * *—அங்கு துர்க்கை யென்னும் க்ஷுத்ர தேவதையிருப்பதனால் அவ்விடத்தைவிட்டு நான் காப்பிடும்படி விரைந்து வரவேணு மென்பதாம். கபாலி—ருத்ரனென்றுமாம். இனி, உடம்பு நிறையச் சாம்பல் பூசி எலும்புகளை மாலையாகக்கட்டியணிந்து கையிற் கபாலங்கொண்டு பிச்சையெடுப்பவர் இரவிற் பிச்சை யெடுத்துத்திரிவது முற்காலத் தியற்கையாதலால் அப்படிவந்தவர்களை 'கபாலி' என்றதாகவுமாம்;' அப்படியிருப்பவர்களைக்கண்டு குழந்தைகள் அஞ்சுமென்று அழைத்தல் இயல்பு. (அ)

200 இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார் *
தருக்கேல்நம்பிசந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் *
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய் *
உருக்காட்டுமந்திவிளக்கு இன்றொளிகொள்ளவேற்றுகேன்வாராய். (க)

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு	(புருஷஸூக்தம் முதலியன) ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு தீர்த்தத்தை சங்கத்திலே கொணர்ந்து	எழில் மறையோர்	விலக்ஷணரானப்ராஹ்மணர் (உனக்கு ரக்ஷையிடுவதற்கு)
		வந்து நின்றார்	வந்து நிற்கிறார்கள்;
		நம்பி	தீம்பு நிறைந்தவனே!

சந்தி நின்று தருக்கேல்	நாற்சந்தியிலே நின்று செருக்கித்திரியாதே;
சில நாள்	சிலகாலம்
தாய் சொல்லு கொள்ளாய்	தாய் வார்த்தையை கேட்பாயாக :
தேசு உடை	தேஜஸ்ஸை உடைய
வெள்ளறை நின்றாய்!—;	
இன்று நான் திரு காப்பு உன்னை சாத்த	இப்போது நான் அழகிய ரக்ஷையை உனக்கு இடுதற்காக
உரு காட்டும் அந்தி விளக்கு	உன் திருமேனிவடிவத்தைக் காட்டுகின்ற அந்திவிளக்கை
ஒளி கொள்ள ஏற்றுகேன்	ஒளியையுடையதாக ஏற்றுவேன்;
	(இதைக்காண)
வாராய்	கடுக வருவாயாக.

* * *—'உனக்கு ரக்ஷையிடும்படி விலக்ஷணரான பிராமணர் சங்குகளில் நீரெடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்' என்று யசோதை சொல்லவும், கண்ணன் விளையாடப்போகவே, மீண்டும் 'நீ பிராமணர்கள் ரக்ஷையிடும்படி வராவிட்டாலும் நாற்சந்தியிலே செருக்குடன் விளையாடித்திரிதல் கூடாது. அது க்ஷுத்ர தேவதைகள் வஸிக்கிற இடமாகும். தாய் சொல்வதை இன்னுஞ் சிலகாலமாவது கேள்; உனக்கு ரக்ஷையிட விளக்கேற்றுகிறேன்; நீ அவ்விடத்தைவிட்டு வரவேணும்' என்கிறாள். இக்காலத்திலும், விளக்கேற்றிக் குழந்தைகளுக்குச் சுழற்றும் வழக்கமுளது. ... (௯)

201 **போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை ***
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக்காப்பிட்டமாற்றம் *
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை *
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (௰)

மாதர்க்கு உயர்ந்த அசோதை	ஸ்திரீகளுள் சிறந்த யசோதைப்பிராட்டி
மகன் தன்னை காப்பு இட்ட மாற்றம்	தன்புத்ரனை கண்ணனை ரக்ஷையிட அழைத்தவார்த்தையை
போது அமர் செல்வம் கொழுந்து புணர் திருவெள்ளறையானை	தாமரைப்பூவைப் (பிறப்பிடமாகப்) பொருந்திய செல்வத்திற்கு உரியவளாய் மற்றைத்தேவியரிற் சிறந்தவளான பிராட்டி ஸம்ச்லேஷிக்கப்பெற்ற திருவெள்ளறையில் நின்றருளியவனைப்பற்றி—,
	(எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்கையையே)
வேதம் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை	வேததாத்பர்யமாக அறியவல்ல பெரியாழ்வார் அருளிச்செய்த பாமாலையினுடைய
பாதம் பயன் கொள்ள வல்ல பத்தர் உள்ளார்	ஓரடிகற்றதனாலாகிய பயனை அடையவல்ல பக்தராக உள்ளவாறு
வினை போம்	வினைகளெல்லாம் கழிந்துவிடும்.

* * *—ஒருபாசுரத்தின் ஓரடிக்கு இத்துணை மஹிமை கூறியமுகத்தால் இத்திருமொழியின் பயன் அளவிட்டுச் சொல்லமுடியாதென்பதைக் கைமுதிக ந்யாயத்தால் பெறவைத்தார். [பாதப்பயனித்யாதி.] ஒவ்வொருபாட்டின் கடைசிப்பாதத்தில் கூறியுள்ள காப்பிடலாகிய புருஷார்த்தத்தைக் கைக்கொள்ளக்கடவ பக்தர்களுடைய பாபங்கள் தீருமென்று முரைக்கலாம். ... (௧௦)

அடிவரவு:—இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பம் இருக்கு போதமர் வெண்ணெய்.

இரண்டாம்பத்து—ஒன்பதாந்திருமொழி, வெண்ணெய்விழுங்கி

(கண்ணனது தீம்புகளை ஆய்ச்சிகள் முறையிடுதலும் கண்ணனை யசோதை சிக்ஷித்தலும்.)

202 **வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தை வெற்பிடையிட்டுஅதனோசைகேட்கும் ***
கண்ணபிரான்கற்றகல்விதன்னைக் காக்ககில்லோமுன்மகனைக்காவாய் *

புண்ணிற்புளிப்பெய்தாலொக்குந்தீமை புரைபுரையாலிவைசெய்யவல்ல *
அண்ணற்கண்ணனோர்மகனைப்பெற்ற அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (க)

வெண்ணெய் விழுங்கி	வெண்ணெயை (நிச்சேஷமாக) விழுங்கிவிட்டு	புண்ணில் புளி பெய்தால் ஒக்கும் தீமை இவை	புண்ணின் மேலே புளியைச் சொரிந்ததைப் போன்ற [தீவ்ரமான] இப்படிப்பட்ட தீம்புகளை
வெறுங் கலத்தை வெற்பிடை இட்டு	(பின்பு) ஒன்றுமில்லாத பாத்ரத்தை கல்லிலே போகட்டு		
அதன் ஓசை கேட்கும்	அப்படி எறிந்ததனாலுண்டான ஓசையை கேட்டுக்களிக்கின்ற	புரை புரை செய்ய வல்ல	வீடுதோறும் செய்வதில் ஸமர்த்தனாகி
கண்ணபிரான் கற்ற கல்வி தன்னை	ஸ்ரீக்ருஷ்ணப்ரபு படித்துள்ள (தஸ்கர) வித்தையை	அண்ணல் கண்ணன் ஓர் மகனை பெற்ற அசோதை நங்காய்	ஸ்வாமித்வ ஸூசகமான கண்களையுடையனான ஒரு புத்திரனைப்பெற்ற யசோதைப்பிராட்டி !
காக்க கில்லோம்	(எங்களால்) காக்கமுடியாது; (ஆகையால்)		
உன் மகனை	உன் பிள்ளையை		
காவாய்	(தீம்புசெய்யாமல்) தடுப்பாயாக ;	உன் மகனை கூவாய்	உன்பிள்ளையை அழைத்துக் கொள்வாயாக.

* * *—இவ்வாறு ஒரு இடைச்சி யசோதையிடம்வந்து முறையிடுகிறாள். உன்மகன் எங்களுடைய வீட்டில் வந்து, நாங்கள் சேர்த்துவைத்த வெண்ணெயையெல்லாம் விழுங்கி அவ்வெண்ணெய் இருந்த கலத்தைக் கற்பாறைகளிலே இட்டு உடைத்து 'ஓசை நன்றாயிருக்கிறது' என்று சொல்லுகிறான். இவன் செய்யும் தீம்புகளோ எங்களாற் பொறுக்கப்போகிறதில்லை; புண்ணிலே புளிரஸத்தைப் பொழிந்தால் எப்படி பொறுக்கமுடியாதோ அப்படி பொறுக்கமுடியாத தீமைகளை ஒவ்வொரு வீட்டிலும் செய்கிறான். இவனது திருட்டுத்தொழிலைத் தடுக்கலாமென்றாலும் எங்களாலாகவில்லை. ஆகையால், யசோதையே! நீ உன் பிள்ளையைக் கூவியழைத்துத் தீம்பு செய்யவொட்டாதபடி வீட்டிலே உன் பக்கத்திலேயே வைத்துக்கொள் என்கிறாள். புரை - வீடு; ஆல் - ஆசை. "அண்ணற்கு அண்ணன்" என்று பிரித்து, அண்ணனாகிய பலராமனுக்கு, அண்ணியனாகாதவன்—குணத்தினாலொவ்வாதவனென்று முரைக்கலாம்; "தன்னம்பிநம்பியு மிங்கு வளர்ந்தது அவனிவை செய்தறியான்" என்ற பெரியதிருமொழிப் பாசுரம் காண்க; அண்ணன்—எதிர்மறைவினையாலணையும்பெயர். அண்ணல்—ஆண்பாற் சிறப்புப் பெயர். ... ... (க)

203 வருகவருகவருகவிங்கே வாமனநம்பிவருகவிங்கே *
கரியகுழற்செய்யவாய்முகத்துக் காகுத்தநம்பிவருகவிங்கே *
அரியனிவனெனக்கின்றுநங்காய் அஞ்சனவண்ணாவசலகத்தார் *
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கேபோதராயே. (உ)

இங்கே வருக வருக வருக	இவ்விடத்திலே சடக்கென வருவாயாக;	(என்றுசொல்லி மீண்டும் கண்ணனை நோக்கி)	
வாமன நம்பி! இங்கே வருக—;		அஞ்சனம் வண்ணா	மைபோன்ற வடிவுபடைத்தவனே !
கரிய குழல் செய்ய வாய் முகத்து காகுத்த நம்பி	கருநிறமான கூந்தலையும் செந்நிறமான வாயையும் (ஒப்பற்ற) முகத்தையுமுடைய இராமமூர்த்தி !	அசல் அகத்தார் பரிபவம் பேசதரிக்க கில்லேன்	அசல் வீட்டுக்காரர்கள் (உன்மேல்) அவமானகரமான சொற்களைச்சொன்னால் பொறுக்கவல்லேனல்லேன்;
இங்கே வருக—; (என்று கண்ணனையழைத்து, தன்பிள்ளைமேல் குற்றம்சொன்னவளை நோக்கி யசோதை)			
நங்காய்	குணபூர்ணையானவளே !	பாவியேனுக்கு	(இப்படி பரிபவங்களைக் கேட்கும்படியான) பாபத்தைப்பண்ணின எனக்கு
இவன் எனக்கு இன்று அரியன்	இந்தப்பிள்ளை எனக்கு இப்போது அருமையானவனாயிற்றே ;	(இவ்வருத்தந்தீர) இங்கே போதராய்	இங்கே வாராய் [என்று யசோதை கண்ணனையழைக்கிறாள்.]

204 திருவுடைப்பிள்ளைதான்தீயவாறு தேக்கமொன்றுமிலன்தேசுடையன் *
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெய் உறிஞ்சியுடைத்திட்டுப்போந்துநின்றான் *
அருகிருந்தார்தம்மையநியாயஞ்செய்வதுதான் வழக்கோவசோதாய் *
வருகவென்றுன்மகன்றன்னைக்கூவாய் வாழவொட்டான்மதுசூதனனே. (ரு)

திரு உடை பிள்ளை தான் தீய ஆறு ஒன்றும் தேக்கம் இலன்	உன் செல்வப்பிள்ளையாகிய கண்ணன் தீம்பு செய்யும் வழியில் சிறிதும் தாமஸிப்பதில்லை.
தேசு உடையன்	(அதைத்தனக்கு) புகழாகக் கொண்டிராநின்றான் ;
(இவன் செய்ததென்ன வென்றால்;—)	
உருக வைத்த வெண்ணெய்	உருகுவதற்காக (அடுப்பில் நான்) வைத்திருந்த வெண்ணெயை
குடத்தொடு	தாழியோடே [நிச்சேஷமாக]
உறிஞ்சி	உறிஞ்சிவிட்டு
உடைத்திட்டு	தாழியையுமுடைத்துப் போகட்டு
(பிறகு தான் உடையாதவன்போல்)	
போந்து நின்றான்	அவ்வருகேவந்து நில்லாநின்றான்.
அசோதாய்	யசோதையே !
அருகு இருந்தார் தம்மை	உன் வீட்டருகே இருந்தவர்களை
அநியாயம் செய்வது	இஷ்டப்படி அக்ரமஞ்செய்வது
வழக்கோதான்	ந்யாயமாகுமோ ?
	(நீ)
உன் மகன் தன்னை	உன் பிள்ளையை
வருக என்று	'வா' என்று சொல்லி
கூவாய்	அழைக்கவேணும்;
(நீ அழைத்துக்கொள்ளாவிட்டாலோ)	
மதுசூதனன்	இக்கண்ணபிரான்
வாழ ஒட்டான்	(எங்களைக்) குடிவாழ்ந்திருக்கவொட்டான்.

தேசு என்பது புகழ் என்னும் பொருளில் இங்குவந்தது. 'தேஜஸ்' என்னும் வடசொற்சிதைவு, (ரு)

205 கொண்டல்வண்ணாவிங்கேபோதராயே கோயிற்பிள்ளாயிங்கேபோதராயே *
தெண்டிரைசூழ்திருப்பேர்க்கிடந்த திருநாரணாவிங்கேபோதராயே *
உண்டுவந்தேனம்மமென்றுசொல்லி ஓடியகம்புகவாய்ச்சிதானும் *
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான்கற்றகல்விதானே. (சு)

கொண்டல் வண்ணா	காளமேகம்போன்ற வடிவையுடையவனே !
இங்கே போதராய்	இங்கே வாராய் ;
கோவில் பிள்ளாய்	திருவரங்கத்தில் வஸிக்குமவனான பிள்ளையே !
இங்கே போதராய்—;	
தெள் திரை சூழ் திருப்பேர் கிடந்த	தெளிவான அலையையுடைய ஜலத்தால் சூழப்பட்டதிருப்பேர் நகரிலேபள்ளிகொண்டிராநின்ற
திரு நாரணா	ஸ்ரீமந்நாராயணனே !
இங்கே போதராய்	இங்கே வாராய் :
(இப்படி அம்ம முண்கைக்காகப் புகழ்ந்தழைத்த யசோதையினருகிற் கண்ணபிரான் வந்து)	
அம்மம் உண்டு வந்தேன் என்று சொல்லி ஓடி அகம் புக	'உணவை (நான்) உண்டு வந்தேன்' என்று சொல்லி ஓடிவந்து அகத்தினுள்ளே புகுர,
ஆய்ச்சி தானும்	தாயான யசோதையும்
கண்டு	(கண்ணன் வந்த வரவையும் இவன் முகமலர்த்தியையும்) கண்டு (மகிழ்ந்து)
எதிரே சென்று	எதிர்கொண்டு போய்
எடுத்துக் கொள்ள	(அவனைத் தன் இடுப்பில்) எடுத்துக் கொள்ளும்படி
கண்ணபிரான்	(அந்த) ஸ்ரீகிருஷ்ணன்
கற்ற	(தானாகவே)கற்றுக்கொண்ட
கல்வி தானே	கல்வியின் பெருமையிருந்தவாறு என்னே!
[என்று ஆழ்வார் இனியராகிறார்.]	

* * *—கீழ்ப்பாட்டில் "வருகவென்றுன் மகன்றன்னைக் கூவாய்" என்று சில ஆய்ச்சிகள் முறையிட்டவாறே யசோதைப்பிராட்டி கண்ணபிரானைப் பல படியாகப் புகழ்ந்து 'கண்ணா! முலையுண்ணவா' என்றழைக்க, அவன் தன் மகிழ்ச்சி தோற்ற "யான் அம்மமுண்டு வந்தேன்காண் !" என்று சொல்லி ஓடிவந்து அகத்தினுள்ளேபுகுர, அவ்யசோதை அவன்வந்த அழகையும் முகமலர்த்தியையுங் கண்டு மகிழ்ந்து அக் கண்ணபிரானை எதிர்கொண்டு சென்று அவனைத் தன் இடுப்பிலேற்றி அணைத்துக்

கொண்டவாற்றை ஆழ்வார் அநுஸந்தித்து 'இவ்வகையான பரிமாற்றத்தைப் பெறும்படி கண்ணன் கற்ற கல்வியுமொன்றே!' என்று வியக்கின்றனர். அன்றிக்கே, முன்னிரண்டடியும் பின்னிரண்டடியும் நன்கு பொருந்துமாறு தாயான யசோதைதானே வியக்கின்ருளென்று உரைத்தலும் உரித்தென்க; அப்போது "ஆய்ச்சிதானுங் கண்டெதிரே சென்றெடுத்துக்கொள்ள" என்றது தன் செயலைப் பிறர் சொல்லுமாபோலே தானே சொன்னபடி யெனக்கொள்க. கண்ணன் முன்பு செய்த தீமைகளைத் தாயாகிய தான் மறந்துவிட்டு அவனை யெதிர்சென் றெடுத்துக்கொள்ளும்படி அவன் பண்ணின விசித்திரத்தில் ஈடுபட்டு 'இப்பருவத்திலே இவன் இவ்வளவு விரகனுவதே!' என்று தன்னில்தான் புகழ்ந்து மகிழ்ந்து பொலின்கிருளென்க. ... ... (௪)

206 பாலைக்கறந்தடுப்பேறவைத்துப் பல்வளையாளென்மகளிருப்ப*
மேலையகத்தேநெருப்புவேண்டிச்சென்று இறைப்பொழுதங்கேபேசிநின்றேன்*
சாளக்கிராமமுடையபெரியநம்பி சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்ருன்*
ஆலைக்கரும்பின்மொழியனைய அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (௫)

ஆலை கரும்பு அனைய இன் மொழி அசோதை நங்காய்	ஆலையிலிட்டு ஆடும்படி முதிர்ந்த கரும்பைப் போன்று மதுரமான மொழியையுடைய யசோதைப்பிராட்டீ!
பல் வளையாள் என் மகள்	பலவகை வளைகளை அணிந்துள்ள என் மகளானவள்
பாலை கறந்து	பாலை (ப்பாத்திரங்களில்) கறந்தெடுத்து
	(அப்பாத்திரங்களை)
அடுப்பு ஏற வைத்து	அடுப்பின்மேலேற்றிவைத்து
இருப்ப	(அவற்றுக்குக் காவலாக) இருக்க (நான்)
நெருப்பு வேண்டி	(அவற்றைக் காய்ச்சுவதற்காக) நெருப்பெடுத்துவர விரும்பி
மேலை அகத்தே சென்று	மேலண்டை வீட்டிற்குப் போய்
அங்கே இறைப் பொழுது பேசி நின்றேன்	அவ்விடத்தில் க்ஷணகாலம் (அவர்களோடு) பேசிக் கொண்டிருந்து விட்டேன்; (அவ்வளவிலே)
சாளக்கிராமம் உடைய நம்பி	ஸ்ரீஸாளக்ராமத்தை (இருப்பிடமாக்) உடையனாய் ஒன்ருலுங் குறைவற்றவனை (உன் மகன்)
	(என்மகளிருந்த விடத்திற் சென்று(
சாய்த்து பருகிட்டு போந்து நின்ருன்	(அந்த க்ஷீரபாத்திரத்தைச்) சாய்த்து(அதிலிருந்த பாலை முழுதும்) குடித்து விட்டு (இப்புறத்தே)வந்து[(ஒன்றுமறியாதவன்போல)நில்லாநின்ருன்;
	(இனி இவன் எங்களகங்களில் இவ்வாருன தீமைகளைச் செய்யத் துணியாதபடி நீ சிக்ஷிப்பதற்காக
உன் மகனை கூவாய்	உன் பிள்ளையான இவனை அழைத்துக்கொள்ள வேணும்,

207 போதர்கண்டாயிங்கேபோதர்கண்டாய் போதரேனென்னுதேபோதர்கண்டாய்
ஏதேனுஞ்சொல்லியசலகத்தார் ஏதேனும்பேசநான்கேட்கமாட்டேன்*
கோதுகலமுடைக்குட்டனேயோ குன்றெடுத்தாய்குடமாடுகூத்தா*
வேதப்பொருளேஎன்வேங்கடவா வித்தகனேயிங்கேபோதராயே. (௬)

கோதுகலம் உடை ஓ குட்டனே	(எல்லாருடைய) கொண்டாட்டத்தையும் (தன்மேல்) உடைய வாராய்பிள்ளாய்!
குன்று எடுத்தாய்	(கோவர்த்தநமென்னும்) மலையை (குடையாக) எடுத்தவனே!
குடம் ஆடு கூத்தா	குடக் கூத்தாடினவனே!
வேதம் பொருளே	வேதங்களுக்கு பொருளாயிருப்பவனே!
என் வேங்கடவா	'என்னுடையவன்' என்று அபிமாநிக்கும்படி திருமலையில் நிற்பவனே!
வித்தகனே	வியக்கத் தக்கவனே! (நீ)
	(அசலகங்களிற்போக நினையாமல்)
இங்கே போதர் கண்டாய் போதர் கண்டாய்	என்னருகில் விரைந்து ஓடிவா;

(என்று யசோதை அழைக்க, அவன்
('வரமாட்டேன்' என்ன;)
போதரேன் என்னாதே போதர் கண்டாய் — 'வரமாட்டேன்' என்று சொல்லாமல் (இசைந்து) வருவாயாக ;
(என்று யசோதை வேண்டியழைக்க, கண்ணன் 'நீ இங்ஙனே வருந்தி யழைப்பது ஏதுக்காக?' என்ன;)
அசல் அகத்தார் ஏதேனும் சொல்லி — அசல் வீட்டுக்காரர்கள் இன்னது என்று எடுத்துக்கூற ஒண்ணாதபடியுள்ள சில கடுஞ்சொற்களை (உன்னை நோக்கித் தம்மிலேதாம்) சொல்லிக்கொண்டு
(அவ்வளவோடும் நில்லாமல்)
ஏதேனும் — (என் காதால் கேட்கவும் வாயாற்சொல்லவு மொண்ணாத) சில பழிப்புக்களை
பேச — (என் பக்கலிலே வந்து) சொல்ல
(அவற்றை)
நான் கேட்க மாட்டேன் — (உன்மீது பரிவுள்ள) நான் கேட்டுப் பொறுக்கமாட்டேன் ;
(ஆதலால்,)
இங்கே போதராய் — (அவர்களின் வாய்க்கு இரையாகாமல்) இங்கே வருவாயாக (என்றழைக்கிறாள்.)

208 செந்நெலரிசிசிறுபருப்புச் செய்தவக்காரம்நறுநெய்பாலால்*
பன்னிரண்டுதிருவோணமட்டேன் பண்டுமிப்பிள்ளைபரிசறிவன்*
இன்னமுகப்பனானென்றுசொல்லி யெல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான்*
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (எ)

அசோதை நங்காய்!—;
செந் நெல் அரிசி — செந்நெலரிசியும்
சிறு பருப்பு — சிறு பயற்றம்பருப்பும்
செய்த அக்காரம் — (சமையற் குற்றமொன்றும் நேராதபடி காய்ச்சித் திரட்டிநன்றாகச்) செய்த கருப்புக்கட்டியும்
நறு நெய் — மணம் மிக்க நெய்யும்
பாலால் — பாலும் ஆகிற இவற்றாலே
பன்னிரண்டு திரு ஓணம் — பன்னிரண்டு திருவோணத் திருநாளளவும்
(நோன்புக்கு உறுப்பாகப் பாயஸ பக்ஷணங்களை)
அட்டேன் — சமைத்தேன்;
பண்டும் இ பிள்ளை பரிசு அறிவன் — முன்பும் இப்பிள்ளையினுடைய ஸ்வபாவத்தை (நான்) அறிவேன்;
(இப்போதும் அப்படியே)
எல்லாம் — (திருவோண விரதத்திற்காகச் சமைத்தவற்றை) யெல்லாம்
விழுங்கிட்டு — (ஒன்றும் மிகாதபடி)விழுங்கி விட்டு
(அவ்வளவிலும் திருப்தி பெறாமல்)
நான் இன்னம் உகப்பன் என்று சொல்லி — 'நான் இன்னமும் உண்ண வேண்டி யிராநின்றேன்' என்று சொல்லிக்கொண்டு
போந்து நின்றான் — (அவ்விடத்தை விட்டுக்) கடக்கவந்து (அந்யபரரைப் போல) நில்லாநின்றான் ;
(இனி இவ்வாறு தீமை செய்யாதபடி)
உன் மகன் தன்னை — உன் பிள்ளையான இக் கண்ணனை
கூவிக் கொள்ளாய் — (உன்னருகில்) அழைத்துக் கொள்வாயாக ;
(பிள்ளைகளைத் தீம்புசெய்ய வொட்டாதபடி பேணி வளர்க்கவேண்டி யிருக்க, அப்படி வளர்க்காமல்)
இவையும் சிலவே — இப்படி வளர்ப்பதும் சில பிள்ளை வளர்க்கையோ!

209 கேசவனேயிங்கேபோதராயே கில்லேனென்னாதிங்கேபோதராயே*
நேசமிலாதாரகத்திருந்து நீவிளையாடாதேபோதராயே*
தூசனஞ்சொல்லுந்தொழுத்தைமாருந் தொண்டரும்நின்றவிடத்தினின்று*
தாய்சொல்லுக்கொள்வதுதன்மங்கண்டாய் தாமோதரா விங்கேபோதராயே. (அ)

கேசவனே — அழகியகுழலையுடையவனே!
இங்கே போதராய் — இங்கே வருவாயாக ;
கில்லேன் என்னாது — 'மாட்டேன்' என்று மறுத்துச் சொல்லாமல்
இங்கே போதராய்—;
(என்று யசோதை யழைக்க, இங்கே சிறிது விளையாடி வருகிறேன் என்று கண்ணன் சொல்ல,)

நீ	நீ
நேசம் இலாதார்	(உன்மீது) அன்பில்லாதவர்களுடைய
அகத்து இருந்து விளையாடாதே	அகங்களிலே யிருந்து விளையாட்டொழிவதுமன்றி,
தூசனம் சொல்லும்	(உன்மேல்) பழிப்புக்களைச் சொல்லுகிற
தொழுத்தை மாரும்	(இடைச்சிகளுக்கு) அடிச்சிகளானவர்களும்
தொண்டரும்	(இடையர்க்கு) அடியரானவர்களும்
நின்ற	நிற்கின்ற
இடத்தில் நின்று	இடங்களையுமொழித்துவிட்டு
போதராய்	(இங்கே) வாராய்;

(என்று யசோதை சொல்லியும் அவன் வரக்காணாமையாலே,)

தாய் சொல்லு கொள்வது	தாய் வாய்ச்சொல்லை மேற்கொண்டு நடப்பது
தன்மம் கண்டாய்	(பிள்ளைகளுக்கு) தர்மங்காண்;

(ஆதலால்)

தாமோதரா! இங்கே போதராய்.

[என்றழைக்கின்றாள்.]

* * *—கண்ணபிரானே! நீ விளையாடுவதற்கு இங்கே விசாலமான இடமுண்டே; இழிசனங்களான வேலைக்காரிகளும் வேலைக்காரருங்கூட உன்மேல் குற்றங்குறைகள் கூறும்படி பொறாமைக்காரர்களுள்ள விடங்களில் இருந்துகொண்டு விளையாடாமல், அசைந்திடும் குழலழகும் நீயுமாய் வரும் நிலையைக் கண்டு நான் மகிழும்படி இங்கு வாராய் என்றழைக்கிறாள் யசோதைப்பிராட்டி. (அ)

210 கன்னலிலட்டுவத்தோடுசீடை காரெள்ளினுண்டைகலத்திலிட்டு* [தான்*
என்னகமென்றுநான்வைத்துப்போந்தேன் இவன்புக்கவற்றைப்பெறுத்திப்போந்
பின்னுமகம்புக்குறியைநோக்கிப் பிறங்கொளிவெண்ணெயுஞ்சோதிக்கின்றான்*
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (கூ)

அசோதை நங்காய்!—;

கன்னல்	கருப்புக் கட்டிப்பாகுடன் சேர்ந்த
இலட்டுவத்தோடு	'லட்டு' என்னும் பக்ஷயத்தோடு
சீடை	சீடையையும்
கார் எள்ளின் உண்டை	காரெள் இட்டு வாரின எள்ளுண்டையையும்
கலத்தில் இட்டு	(அவ்வவற்றுக்கு உரிய) பாத்திரங்களிலே நிறைத்து
என் அகம் என்று	'என் அகம் (ஆகையால் இங்குப் புகுவாரில்லை') என்று நினைத்து

(விசேஷமாகக் காவலிடாமல்,)

நான் போந்தேன்	(உறிகளிலே வைத்துவிட்டு) நான் (வெளியே) வந்தேன்;

(அவ்வளவில்)

இவன் புக்கு அவற்றை பெறுத்தி போந்தான்	இப்பிள்ளையானவன் (அவ்விடத்திலே வந்து) புகுந்து அப்பணியாரங்களை (நான்) பெறும்படிபண்ணி (ஒன்றுமறியாதவன்போல் இவ்வருகே) வந்துவிட்டான்;

(அவ்வளவிலும் பர்யாப்தி பிறவாமையால்)

பின்னும் அகம் புக்கு உறியை நோக்கி	மறுபடியும் (என்) வீட்டினுள்புகுந்து உறியைப் பார்த்து

(அதில்)

பிறங்கு ஒளி வெண்ணெயும் சோதிக்கின்றான்	மிகவும் செவ்வியை உடைத்தான வெண்ணெய் உண்டோ என்று ஆராயா நின்றான்;

(இச்சேஷ்டைகள் எனக்குப் பொறுக்கப் போகாமையால்,)

உன் மகன் தன்னை கூவிக் கொள்ளாய்	உன் பிள்ளையாகிய கண்ணனை (உன்னருகில் வரும்படி) அழைத்துக் கொள்;
இவையும் சிலவே	(இப்படி இவனைத் தீம்பிலே கைவளர விட்டிருக்கிற) இவையும் ஒரு பிள்ளை வளர்க்கையோ?

* * *—'பெறுத்திப்போந்தான்' என்பது வ்யதிரேகோக்தி; பிறகுறிப்பு: அவற்றில் நானுஞ் சிலபெறும்படி சேஷப்படுத்தாமல் முழுவதையும் தானே வாரியுண்டானென்று கருத்து. பெறுத்திப்போந்தான்—பெற்றுப்போனான் என்றுமாம், ... (கூ)

211 சொல்லிலரசிப்படுதிநங்காய் சூழலுடையனுன்பிள்ளைதானே*
இல்லம்புகுந்தென்மகளைக்கூவிக் கையில்வளையைக்கழற்றிக்கொண்டு*

இயங்கும் மல்லை	வந்து ஸஞ்சரிக்கும் பெருமையையுடையதுமான	வணங்கும் மனத்தாரவரை	வணங்குதற்குரிய சிந்தை படைத்த பாகவதர்களை
கடல்மல்லை தலசயனம்	திருக்கடன்மல்லையை		

என்தன் மட நெஞ்சே! வணங்கு—.

* * * எம்பெருமானுடைய ஸௌசீல்ய குணத்தை அநுபவிக்கிறார் முன்னடிகளில். தாமஸ தெய்வமான ருத்ரனுக்கும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங்கொடுத்து ஆதரிக்குமவனும் எம்பெருமான்.

"ஏருளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறுளுந்தனியுடம்பன்" என்றும், "அக்கும்புலியினதளு முடையாரவரொருவர், பக்கம் நிற்க நின்ற பண்பர்" என்றும் ஆழ்வார்கள் அடிக்கடி அருளிச்செய்வர்கள்.

"பிணங்களிடுகாடு" "பிணங்களடுகாடு" என்பன பாடபேதங்கள். ச்மசான பூமியில் நடமாடுகிறவன் ருத்ரன். (பிஞ்ஞகன் என்று ருத்ரனுக்குப் பெயர்.) அவனோடு இணங்குதலாவது—அவனுக்கும் தனது திருமேனியிலே இடங்கொடுத்துப் பொருந்தவிட்டுக்கொள்ளுதல். "திருச்சக்கரத்தெம்பெருமானார்" என்றது—திருவாழியாழ்வான் முதலிய நித்யஸூரிகட்குத் தன் திருமேனியிலே இடம் கொடுத்தருளியிருப்பதுபோலவே அஹங்காரியான ருத்ரனுக்கும் இடம்கொடுப்பவன் என்ற கருத்தை வெளிப்படுத்தும்.

1105. கடிகமழுநெடுமறுகிற் கடன்மல்லைத்தலசயனத்து*
அடிகளடியேநினையும் அடியவர்கள்தம்மடியான்*
வடிகொள்நெடுவேல்வலவன் கலிகன்றியொலிவல்லார்*
முடிகொள்நெடுமன்னவர்தம் முதல்வர்முதலாவாரே. (ல)

கடி கமழும் நெடு மறுகின்	பரிமளம் வீசுகின்ற நீண்ட வீதிகளையுடைய	வடிகொள் நெடு வேல் வலவன்	கூர்மை பொருந்திய பெரிய வேலைக்கொண்டு பொருவதில் வல்லவருமான
கடல்மல்லை தல சயனத்து	திருக்கடல்மல்லையிலெழுந்தருளியிருக்கிற	கலிகன்றி	திருமங்கையாழ்வாருடைய
அடிகள்	எம்பெருமானுடைய	ஒலி	இவ்வருளிச்செயலை
அடியே நினையும்	திருவடிகளையே தியானிக்கின்ற	வல்லார்	ஓதவல்லவர்கள்,
அடியவர்கள் தம்	பாகவதர்கட்கு	முடி கொள் நெடு மன்னவர் தம் முதல்வர் முதல் ஆவார்	கிரீடமணிந்த ராஜாதி ராஜர்களுக்கும் தலைவராகப்பெறுவர்கள்.
அடியான்	தாஸபூதரும்,		

* * * பாகவத சேஷத்வமே பரம புருஷார்த்தமென்று பரமபோக்யமாக அருளிச்செய்து வந்த ஆழ்வார் பலன் சொல்லுமிடத்து அஹங்காரத்திற்கு மூலகாரணமும் பாகவதசேஷத்வத்திற்குப் பிரதிபந்தகமுமான இஹலோக ஐச்வரியத்தைப் பலனாகச்சொல்வதேன் ? என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்டார்; அதற்கு அவர் ரஸோக்தியாக ஒரு உத்தரம் அருளிச்செய்தாராம்; அதாவது—" திருமங்கையாழ்வார் திருவவதரித்தபின்பு த்யாஜ்யமான ஐச்வர்யமும் பரம புருஷார்த்தமாய் விட்டதுகாணும்; பணமுள்ளவிடங்களிற்சென்று கொள்ளையடித்து பகவத் பாகவதகைங்கரியங்கள் பண்ணுகிறவராகையாலே ஹேயமான ஐச்வரியமும் இவ்வாழ்வார் திருவுள்ளத்தால் உத்தேச்யமாய் விட்டதிறே" என்றாராம்; ஆரார் எந்த எந்த பலனை விரும்பினாலும் அந்த அந்த பலன் இவ்வருளிச்செயல் மூலமாகக் கிடைக்குமென்பது உண்மைப்பொருள்.

அன்றியே, ஈற்றடிக்கு வேறொருவகையாகவும் நிர்வாஹமுண்டு;—முடிகொள் நெடுமன்னவர்—இவ்வுலகத்தில் அரசர்களாக இருக்கும் க்ஷத்ரியர்கள்; அவர்களுக்கும் முதல்வர்—அவர்களிற் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேம்பாடுடைய ப்ரஹ்மா முதலிய தேவர்கள்; அவர்களுக்கும் முதல்வர்—அவர்கட்கும் நிர்வாஹகரான நித்யஸூரிகள். ஆக, இத்திருமொழி கற்றவர்கள் நித்ய ஸூரிகளோடு ஒத்து நித்ய கைங்கரியம் பண்ணப்பெறுவர்களென்று பரமபுருஷார்த்தத்தையே இதற்குப் பலனாகச் சொல்லிற்றாக வுரையிடலாம்; பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளமு மிங்ஙனேயாம். (ல)

அடிவரவு—நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி செழுநீர் பிணங்கள் கடி திவளும்.

இரண்டாம்பத்து—ஏழாந்திருமொழி—திவளும்வெண்மதிபோல்

(திருவிடவெந்தைப்பதிகம்)

தாய் பாசுரமாகச் செல்லுகிற இத்திருமொழியில் ஆழ்வார்க்கு நாயகியவஸ்தை ஒருபுறத்திலும் தாயின் அவஸ்தை மற்றொருபுறத்திலும் நடக்கிறபடியாலே எம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வார்க்கு விரைவு உண்டானமையும், "நாம் பதறக்கூடாது' என்கிற அத்யவஸாயமும் மற்றொரு புறத்திலுண்டானமையும் விளங்கும். தன்ஸ்வரூபத்தை நோக்குமளவில் அத்யவஸாயம் உண்டாகும்; அவனுடைய வைலக்ஷண்யத்தை நோக்குமளவில் பதற்றம் உண்டாகும். இத்திருமொழியில்—"ஆசைவிடாளால்" "போதுமோ நீர்மலைக்கென்னும்" இத்யாதி வாசகங்களாலே மகளது பதற்றம் வெளியாம்; "உன் மனத்தா லென்னிவனந்திருந்தாய்" என்ற வினைக்களால் அத்யவஸாயமும் வெளியாம்.

திருவிடவெந்தை யெம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வார்க்குண்டான அளவற்ற அபிநிவேசம் இத்திருமொழியாகப் பரிணமித்துவிட்டதுபோலும்.

1106. திவளும்வெண்மதிபோல்திருமுகத்தரிவை செழுங்கடலமுதினிற்பிறந்த
வவளும்*நின்னாகத்திருப்பதுமறிந்தும் ஆகிலுமாசைவிடாளால்*
குவளையங்கண்ணிகொல்லியம்பாவை சொல்லுநின்தாள்நயந்திருந்த
விவளை*உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்இடவெந்தையெந்தைபிரானே!

இடவெந்தை எந்தைபிரானே	திருவிடவெந்தையி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே !,	ஆசை விடாள்	(உன்னிடத்தில்) ஆசையை விடுகின்றிலள் ;
திவளும் வெண் மதி போல் திரு முகத்து	ஒளிவிடாநின்ற வெளுத்த சந்திரனைப்போன்றுஅழகிய முகத்தை யுடையளாய்	குவளை அம் கண்ணி	கருநெய்தல்போன்று அழகிய கண்ணையுடையளும்
அரிவை	நித்ய யௌவனமுடையளாய்	கொல்லி அம் பாவை	கொல்லி மலையிலுள்ள அழகிய பதுமை போன்றவளும்
செழு கடல் அமுதினில் பிறந்த	செழுமைதங்கிய கடலில் அமுதத்தோடு கூடப் பிறந்தவளான	நின் தாள் நயந்திருந்த	உனது திருவடிகளையே ஆசைப்பட்டுக்கொண்டிருப்பவளுமான
அவளும்	அந்தப் பெரியபிராட்டியாரும்	இவளை	இப்பெண் விஷயத்திலே
நின் ஆகத்து	உனது திருமார்பிலே	உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்	என்ன செய்வதாக நீ நினைத்திருக்கிறாய் !
இருப்பதும்	எழுந்தருளியிருப்பதை		
அறிந்தும் ஆகிலும்	(இப்பரகாலநாயகி) அறிந்திருக்கச்செய்தேயும்	சொல்லு	அதை வெளியிட்டருள்.

* * * திருமங்கையாழ்வாராகிய **பரகாலநாயகியைப்** பெற்றெடுத்த திருத்தாயார் திருவிடந்தைப் பெருமானிடத்திலே தன் மகள் காதல்கொண்டு இருக்கிறபடியையும், காதலின்படியே அநுபவம் கைகூடாமையாலே பலவகை விகாரங்களை அடைந்திருக்கிறபடியையும் ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு வகையாகப்பேசி 'இப்படிப்பட்ட இப்பெண்பிள்ளை விஷயத்திலே நீ செய்ய நினைத்திருப்பது என்னோ பிரானே !' என்று கேட்பதாகச் செல்லுகிறது. உண்மையில், ஆழ்வாரைக்காட்டிலும் வேறுபட்ட 'தாய்' என்பவளொருத்தி இல்லாமையாலே ஆழ்வார் தாமே தம்முடைய காதலின் கிளர்த்தியை அந்யாபதேசத்தாலே பேசி 'இப்படிப்பட்ட ப்ராவண்யமுடைய என்விஷயத்திலே உபேக்ஷைசெய்திடத் திருவுள்ளமோ! அன்றி அங்கீகரித்துக்கொள்ளவே திருவுள்ளமோ ! இரண்டிலொன்றைச் சோதிவாய்திறந்து அருளிச்செய்யவேணும்' என்று கேட்கிறாராயிருக்கிறது.

திருமகளை நீ ஒரு நொடிப்பொழுதும் விடாது திருமார்பிலேயே அந்தரங்கமாகக் கொண்டிருக்கின்றாய்; இதனால் திருமகளிடத்து உனக்குள்ள அன்பு அளவற்றதென்பது நன்கு விளங்கும்; இங்ஙனே அந்யாஸக்தனானவுன்னை என் பெண்பிள்ளை ஆசைப்படுவது தகுதியன்றுதான்; ஆயினும் கொண்ட ஆசையைக் குறைத்துக் கொள்ளுகின்றாளில்லை; தன்னுடைய வைலக்ஷண்யத்தை நோக்கி 'திருமகளிடத்திற் காட்டிலும் நம்மிடத்தில்தான் எம்பெருமான் அதிகமாகக் காதல் கொள்ளுவான்' என்றெண்ணி இவள் உன்னையே விரும்பாநின்றாள். யார் எது விரும்பினாலும் உனது திருவுள்ளம் உவந்தாலன்றிப் பலன் கைபுகமாட்டாதாகையால் இப்பெண்பிள்ளை திறத்திலே நீ செய்ய நினைத்திருப்பது யாதோ? அறிகின்றிலேன்; அறியச் சொல்லவேணுமென்று பரகால நாயகியின் திருத்தாயார் சொன்னாளாயிற்று.

அரிவை என்னுஞ் சொல்—இருபத்தைந்து வயதுப் பெண்ணையும் தெய்வப் பெண்ணையும் சொல்லும்; பெண்கட்குப் பொதுப் பெயராக வழங்குதலுமுண்டு.

உன்மனத்தால் என்னிவனந்திருந்தாய் !=இக் கேள்வியினால் ஸகல சாஸ்த்ரஸாரப் பொருளை வெளியிடுகிறாராழ்வார் என்று குறிக்கொண்மின்; சேதநனுடைய க்ரியாகலாபமொன்றும் பேற்றுக்கு ஸாதநமன்று, பரமபுருஷனுடைய திருவுள்ளத்தி லிரக்கமே பலனைப் பெறுவிக்கவல்லது என்க.

கொல்லியம்பாவை='வல்வில் ஓரி' என்னும் சிற்றரசனுக்கு உரியதாய்க் கொல்லியெனும் பெயர் கொண்டதான மலையின்கணுள்ள ஒரு பெண்பாற் பிரதிமை. இது தேவசிற்பியால் அமைக்கப்

பட்ட அழகிற் சிறந்த பதுமையாம். அம்மலையிலுள்ள தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அசுரரும் அரக்கரும் இப்பதுமையின் சிரிப்பைக்கண்டு மயங்கி உயிர் துறப்பர்களாம். அசுரருமரக்கரும் அங்கு அணுகும்போது அவர்களது வாடை பட்டவுடன் இது தானே நகைசெய்யுமாறு பொறியுள் வைக்கப்பட்டதென்பர். இது நகைத்துக் கொல்லுமென்பது, "திரிபுரத்தைச், செற்றவனும் கொல்லிச்செழும் பாவையும் நகைக்கக், கற்றதெல்லா மிந்தநகை கண்டேயோ !" என்ற சித்திரமடற் பாடலினால் விளங்குகின்றது. இப்பாவை, கண்டாருள்ளமும் விழியும் கவர்ந்து பெருங்காம வேட்கை யுறுவித்து இறுதியில் கொல்லுமென்றுங் கூறுவர். இது தெய்வ நிர்மாணமென்ப. ஒரு காலத்தில் திருமகள் தன்முன் போர்க்கெழுந்த அவுணர் மோஹித்து விழும்படி இக்கொல்லியம்பாவை யுருக்கொண்டு ஆடினள் என்று சிலப்பதிகாரம் கூறும். ["செருவெங் கோலமவுணர் நீங்கத், திருவின் செய்யோளாடிய பாவையும்" (கடலாடு காதை 60, 61.) என்றது காண்க.] இக் கொல்லிப்பாவை கொல்லி மலையிலுள்ள தென்பதும் தெய்வத்தால் செய்து வைக்கப்பட்ட தென்பதும் அழகில் மிக்கதென்பதும், காற்றினாலும் மழையினாலும் மற்றெவ்வகை ஊறுபாடுகளாலும் தன் அழகிய நல்வடிவம் கெடாதென்பதும் நற்றிணை முதலிய நூல்களிற் காணத்தகும். 185, 192, 201-ஆம் பாடல்கள் காண்க. இப்பாவையின் அழகைத் தலைவியின் நலத்திற்கு உவமை கூறுதல் அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களிலும் விசேஷமாகவுண்டு. (அகநானூறில் 62, 209-ஆம் பாடல்களும், புறநானூறில் 251-ஆம் பாடலும் காண்க.) சீவக சிந்தாமணி 197, 667-ஆம் பாடல்களிலும், குறுந்தொகை 89, 100-ஆம் பாடல்களிலும் இக் கொல்லிப்பாவையின் ப்ரஸ்தாவம் காணத்தக்கது. ஆகவே, தமிழ்க்கவிகள் கொல்லிப்பாவையை ஒப்புயர்வற்ற அழகிற் சிறந்த மாதர்க்கு உவமை கூறுதல் மரபு என்றுணர்க. இப்பாசுரத்தில் "கொல்லியம்பாவை போன்றவள்" என்று சொல்லாமல் "கொல்லியம்பாவை" என்றே சொல்லி வைத்தது முற்றுவமை. "தாவிவையங் கொண்ட தடந்தாமரைகட்கே" (திருவாய்மொழி 6, 9, 9.) என்றதுபோல. (க)

1107. துளம்படுமுறுவல்தோழியர்க்கருளாள் துணைமுலைசாந்துகொண்டணியாள்*
குளம்படுகுவளைக்கண்ணிணையெழுதாள் கோலநன்மலர்குழற்கணியாள்*
வளம்படுமுந்நீர்வையமுன்னளந்த மாலென்னும்மாலினமொழியாள்*
இளம்படியிவளுக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே !

இடவெந்தை எந்தை பிரானே !—;

மால் இனம் மொழியாள்	தன்னுடைய வியாமோஹத்துக்குத் தகுதியான பேச்சை யுடையவளான இப் பெண்பிள்ளையானவள்,
துளம் படு முறுவல்	மாதுளம் விரைபோன்ற பற்களினின்றும் உண்டாகின்ற புன்சிரிப்பை
தோழியர்க்கு	தன் தோழிமார்களை நோக்கி
அருளாள்	அருள்கின்றாளில்லை ;
துணை முலை	சேர்த்தியழகுடைய முலைகளை
சாந்து கொண்டு	சந்தனத்தாலே
அணியாள்	அலங்கரிக்கின்றாளில்லை ;
குளம் படு குவளை கண் இணை	தடாகத்திலுள்ள [செவ்வி மாறாத] குவளை மலர் போன்ற கண்களில்
எழுதாள்	மையிட்டுக்கொள்கிறாளில்லை ;
குழற்கு	கூந்தலில்
கோலம் நல் மலர் அணியாள்	அழகிய சிறந்த புஷ்பங்களைச் சூட்டிக் கொள்ளுகிறாளில்லை ;
வளம் படு முந்நீர் வையம் முன் அளந்த மால் என்னும்	(ரத்னம் முதலிய) நற்சரக்குகளுக்கிடமான கடலால் சூழப்பட்ட பூமியை முன்னொருகால் அளந்த ஸர்வேச்வரன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள் ;
இளம் படி இவளுக்கு என் நினைந்திருந்தாய்	(விரஹம் பொறாத) ஸுகுமாரஸ்வபாவையான இவள் விஷயத்திலே என்ன செய்வதாகத் திருவுள்ளம் !

* * *—இப்பாட்டால் ஆழ்வார் தாம் சொல்லிக்கொள்வதாவது :—பிரானே ! இவ்வுலகில் என்னோடுகூட ஸஜாதீயர்களாயுள்ள மனிசரிடத்தில் எனக்கு நேசமுண்டாவதில்லை ; அவர்களோடு உல்லாஸமாகப் பேசுவதற்கு விருப்பமுண்டாவதேயில்லை : தேஹத்தையே பேணித்திரிகின்ற பிராகிருதர்களோடு ஒப்புடையேனல்லேன் ; ஊர்வம்புகளைப் பிதற்றிப் போதுபோக்குவாரைப் போலன்றியே எப்போதும் உனது திவ்யசேஷ்டிதங்களையே வாய்வெருவிக் கொண்டிருக்கின்றேன் ; என்னுடைய பேச்சுகளை நீ ஆராய்ந்தால் நான் உன்பக்கல் கொண்டுள்ள வியாமோஹம் நன்கு புலப்படும் ; என்வடிவைக்கண்டாயாகில் நான் உனது பிரிவை ஒருநொடிப்பொழுதும் ஆற்றகில்லேனென்பது விளங்கும் ; இப்படிப்பட்ட என்னை நீ அபேக்ஷிக்கிறாயோ, உபேக்ஷிக்கிறாயோ ? சொல்லாய் பெருமானே ! என்றாராயிற்று. (உ)

1108. சாந்தமும்பூணும்சந்தனக்குழம்பும் தடமுலைக்கணியிலும்தழலாம்*
போந்தவெண்திங்கள்கதிர்சுடமெலியும் பொருகடல்புலம்பிலும்புலம்பும்*
மாந்தளிர்மேனிவண்ணமும்பொன்னம் வளைகளுமிறைநில்லா*என்தன்
ஏந்திழையிவளுக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே! (ந)

இடவெந்தை யெந்தை பிரானே !—;

சாந்தமும்	கலவைச் சந்தனத்தையும்
பூணும்	முத்துவடத்தையும்
சந்தனம் குழம்பும்	குழம்பான சந்தனத்தையும்
தட முலைக்கு அணியிலும்	(இவள் தனது) பெரிய முலைகளில் அணிந்து கொண்டாலும்
தழல் ஆம்	(அவையெல்லாம்) நெருப்பாகவேயிரா நின்றன ;
போந்த	வெளிவந்து தோன்றின
வெள் திங்கள்	வெளுத்த சந்திரனுடைய
கதிர்	கிரணங்களானவை
சுட	(நெருப்புப்போல்) தஹிக்க
மெலியும்	(அதனாலே) நோவுபடாநின்றாள்;
பொரு கடல்	அலையெறிகின்ற கடலானது
புலம்பில்	கோஷம் செய்யத் தொடங்கினால்
புலம்பும்	(இவளும்) கூக்குரலிடாநின்றாள் ;
மாந்தளிர்	மாந்தளிர்போன்ற
மேனி வண்ணமும்	(இவளது) உடம்பின் நிறமும்
பொன் ஆம்	பசலைநிறமாக மாறிவிட்டது ;
வளைகளும்	கையில் வளைகளும்
இறை	சற்றேனும்
நில்லா	தங்குகின்றில ;
என்தன் ஏந்து இழை இவளுக்கு	எனது பெண்பிள்ளையாகிய இவள் விஷயத்திலே
என் நினைந் திருந் தாய்	என்ன செய்வதாகத் திருவுள்ளம் ?

* * * விரஹகாலத்தில் மாதர்களின் மேனியில் தோன்றும் பசலைநிறத்தைப் பொன்னிற மென்பர் கவிகள். பாசிபடர்ந்தாற்போன்ற நிறம். **“வளைகளும் இறை நில்லா”** என்பதனால் கைகள் துரும்பாக இளைத்தபடி சொல்லிற்றாம்.

ஏந்திழையிவளுக்கு = இழைஎன்று ஆபரணத்துக்குப் பெயர் ; ஏந்துதல்—தரித்தல் ; தரிக்கப்பட்ட ஆபரணத்தையுடைய இவள் விஷயத்திலே என்றதாயிற்று. இம்மகளை நான் ஆபரணங்களோடே நித்தியமாகக் காணவிரும்பி யிருக்கின்றேன் ; உன்னுடைய ஸம்ச்லேஷம் வாய்த்தாலல்லது இந்த விருப்பம் நிறைவேறாதாகையால் இவளோடே ஸம்ச்லேஷித்து என்னை உகப்பிக்கவேணுமென்பது உள்ளுறை. பகவத்குணங்களை அநுஸந்தித்துக் கண்ணும் கண்ணீருமாயிருத்தலும் மயிர்க்கூச்செறிந்திருத்தலுமே பக்தர்கட்கு ஆபரணமாகையால் ஏந்திழை யென்று அவற்றையுடையரானமை சொல்லுகிறதென்க. (ரு)

1109\. ஊழியிற்பெரிதால்நாழிகையென்னும் ஒண்சுடர்துயின்றதாலென்னும்*
ஆழியும்புலம்புமன்றிலுமுறங்கா தென்றலும்தீயினிற்கொடிதாம்* [னும்*
தோழியோ!வென்னும்துணைமுலையரக்கும் சொல்லுமினென்செய்கேனென்
ஏழையென்பொன்னுக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தை
[பிரானே! (சு)

இடவெந்தை எந்தை பிரானே—;
(இப்பெண்பிள்ளையானவள்).

நாழிகை ஊழியின் பெரிது என்னும்	‘ஒரு நாழிகைப் பொழுதானது ஒரு கல்பத்தைக் காட்டிலும் நெடிது ; என்கிறாள் ;
ஒண் சுடர் துயின்றது என்னும்	‘ஸூர்யன் செத்துப் போய்விட்டான்’ என்கிறாள் ;
தோழி	‘அடீ ஸகியே !’ (என்று தோழியை அழைத்து அவளிடம் என்ன சொல்லுகிறாளென்னில் ;)
ஆழியும் புலம்பும்	‘ஸமுத்ரமோ கோஷம் செய்யாநின்றது ;
அன்றிலும் உறங்கா	அன்றிற்பறவையோ உறங்குகிறதில்லை ;
தென்றலும் தீயினில் கொடிது ஆம்	தென்திசைக்காற்றோ நெருப்பைவிட தீக்ஷ்ணமாயிருக்கின்றது
ஓ	ஐயோ! (என்ன பண்ணுவேன்)
என்னும்	என்று சொல்லாநின்றாள் ;
துணை முலை அரக்கும்	‘இரண்டு முலைகளையும் வேரோடே பிடுங்கி யெறிபவள் போலேயிராநின்றாள்
என் செய்கேன் சொல்லுமின் என்னும்	(இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு) என்ன பரிஹாரம் பண்ணுவேன், சொல்லுங்கள்’ என்று (அடிக்கடி) சொல்லா நின்றாள் ;
ஏழை	மிகவும் சாபல்ய முடையளான
என் பொன்னுக்கு	எனது பெண்மகள விஷயத்திலே

என் நினைந்திருந்தாய் !—.

* * * எம்பிரானே! உன்னைவிட்டுப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதும் போக்க முடியவில்லை; இவ்விருள்தருமா ஞாலத்திலே என்னை வைத்திட்டு ஞானவொளி மழுங்கச் செய்திருக்கிறாய் ; ஞானமென்னும் நிறைவிளக்கு அணைந்துபோயிருக்கிறது; ஸம்ஸாரஸாகரம் கொந்தளிக்கின்றது; இவ்வுலகத்துப் பொருள்களெல்லாம் எனக்குப் பாதகமாயிராநின்றன ; உன்னிடத்தில் நான் பக்தி வைத்ததனாலன்றோ இப்பாடுபட நேர்கின்றது. அந்த பக்தியை அகற்றிவிட்டால் உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்தவர்களைப் போலே நானும் சுகமே வாழ்வேனன்றோ ; ஆகையாலே பக்தியைத் தவிர்த்துக் கொள்ளலாமாவென்றும் எனக்குத் தோன்றுகின்றது ; பாவியேன் திறத்தில் என்ன திருவுள்ளமோ ! சொல்லவேணும்—என்று ஆழ்வார் தாம் விண்ணப்பஞ் செய்தாராயிற்று

என்பொன்னுக்கு = ‘பொன்’ என்ற சொல்லால் மகளைக் குறித்தது அன்பின் மிகுதியாலாம். (சு)

1110. ஓதிலுமுன்பேரன்றிமற்றோதாள் உருகுநின் திருவுருநினைந்து*
காதன்மைபெரிதுகையறவுடையள் கயல்நெடுங்கண்டுயில்மறந்தாள்*
பேதையேன்பேதைபிள்ளைமைபெரிது தெள்ளியள்வள்ளிநுண்மருங்குல்*
ஏதலர்முன்னாவென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே. (ரு)

இடவெந்தை யெந்தை பிரானே !—;

ஓதிலும்	(இம்மகள்) வாய்விட்டு எதைச் சொன்னாலும்
உன் பேர் அன்றி	உனது திருநாமம் தவிர
மற்று	வேறொன்றையும்
ஓதாள்	சொல்லுகின்றிலள் ;
நின் திருஉரு நினைந்து உருகும்	உனது திருமேனியைச் சிந்தித்து உருகினபடியே யிராநின்றாள் ;
காதன்மை பெரிது	(உன் விஷயத்தில் இவளுக்கு) ஆசை பெருகுகின்றது ;
கையறவு உடையள்	ஒன்றும் செய்யமாட்டாதே யிராநின்றாள் ;
கயல் நெடு கண் துயில் மறந்தாள்	கயல்மீன் போன்று நீண்ட கண்களிலே உறக்கத்தை மறந்துவிட்டாள் ;

பேதையேன் பேதை	அறிவு கெட்டவளான என்னுடைய இப் பெண்பிள்ளை
பிள்ளைமை பெரிது	மிகவும் இளம்பிராயமா யிருக்கச் செய்தேயும்
தெள்ளியள்	(உனது ஸ்வரூபகுணங்களிலே) தெளிவுள்ளவளா யிரா நின்றாள் ;
வள்ளி நுண் மருங்குல்	கொடி போன்று நுட்பமான இடையையுடைய இம் மகளைப்பற்றி
ஏதலர் முன்னா	சத்துருக்கள் முன்பாக
என் நினைந் திருந்தாய்	என்ன செய்வதாகத் திருவுள்ளம் ?

(அவமானப்படுத்துவாயோ, பஹுமானப் படுத்துவாயோ ?)

* * * ஏதலர்முன்னா=ஏதலரென்று சத்துருக்களுக்குப் பெயர் ; ஆழ்வார்க்கு சத்துருக்கள் இங்கு ஆரென்னில்; 'எம்பெருமானே உபாயம்' என்கிற தம்முடைய அத்யவஸாயத்திற்கு எதிர்த்தடையாக 'கருமம் ஞானம் முதலிய உபாயாந்தரங்களே அவனைப் பெறுதற்கு ஸாதநம்' என்று கொண்டிருக்கிற உபாயாந்தரநிஷ்டர்களை இங்கு ஏதலரென்கிறது 'நம்முடைய முயற்சியால் நாம் பேறு பெறவேண்டி யிருக்க அவனே உபாயமென்று மார்விலே கைவைத் துறங்குவதும் ஒரு சாஸ்த்ரார்த்தமாகுமோ ?' என்றிருக்கும் ஸித்தோபாய விரோதிகளின் முன்னே என்னுடைய உறுதியைச் சிறப்பித்து எனக்கு உதவப் போகிறாயோ, அன்றி அவர்களுடைய கொள்கையை ஆதரித்து என்னை உதறிவிடப் போகிறாயோ என்று ஆழ்வார் வினவுகின்றாராயிற்று. (ரு)

1111. தன்குடிக்கேதும்தக்கவாநினையாள் தடங்கடல்நுடங்கெயிலிலங்கை*
வன்குடிமடங்கவாளமர்தொலைத்த வார்த்தைகேட்டின்புறுமயங்கும்*
மின்கொடிமருங்குல்சுருங்கமேல்நெருங்கி மென்முலைபொன்பயந்திருந்த*
என்கொடியிவளுக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே.

இடவெந்தை எந்தை பிரானே !—;
(இப்பெண்பிள்ளையானவள்)

தன் குடிக்கு தக்க ஆ	தனது குலமரியாதைக்குத் தகுந்தபடியை
ஏதும் நினையாள்	சிறிதும் ஆராய்கின்றிலள் ;
தட கடல்	பெரிய கடலோடும்
நுடங்கு எயில்	வளைந்த மதிளோடும் கூடின
இலங்கை	இலங்கையிலிருந்த
வல் குடி	வலிய ராக்ஷஸகுலமானது
மடங்க	அழியும்படி
வாள் அமர் தொலைத்த வார்த்தை கேட்டு	கொடிய போர்க்களத்திலே ஒழித்த செய்தியைக் கேட்டு
இன்புறும்	(ஒரு பிராட்டிக்காக இவ்வளவு காரியம் செய்வதே! என்று) ஈடுபடாநின்றாள் ;

மயங்கும்	(அப்பிராட்டிக்குப்போல நமக்கும் ஒரு காரியம் செய்வதில்லையே ! என்று வருந்தி) மூர்ச்சிக்கின்றாள் ;
மின் கொடி மருங்குல் சுருங்க	மின்னலும் வஞ்சிக்கொடியும் போன்ற இடையானது நுடங்கும்படி
மென் முலை	மெல்லிய முலைகளானவை
மேல் நெருங்கி	மார்பின்மேலே (ஒன்றோடொன்று) நெருக்கமுற்று
பொன் பயந்திருந்த	பசலை நிறமுடைத்தாம்படி யிருக்கின்ற
என் கொடி இவளுக்கு	எனது இப்பெண்பிள்ளை திறத்திலே
என் நினைந் திருந்தாய்	என்ன செய்வதாகத் திருவுள்ளம் ?

* * *—இப்பெண்பிள்ளை ப்ரபந்நகுல மரியாதைக்குத் தகுந்தபடி வர்த்திக்கப் பார்க்கிறாளில்லை ; சேஷபூதர் சேஷியினிடத்திலே பாரத்தை வைத்தபின்பு "களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றாற்போலே அவன் செய்தபடி செய்துகொள்க வென்று ஆறியிருப்பதே ப்ரபந்நகுல மரியாதையாகும் ; இவள் அப்படி ஆறியிராமல் பதறுகின்றாளாகையாலே **தன்குடிக்கேதும் தக்கவா நினையாள்.** (கூ)

1112. உளங்கனிந்திருக்குமுன்னையேபிதற்றும் உனக்கன்றியெனக்கன்போன்றிலளால்
வளங்கனிபொழில்சூழ்மாலிருஞ்சோலை மாயனேயென்றுவாய்வெருவும்*
களங்கனிமுறுவல்காரிகைபெரிது கவலையோடவலம்சேர்ந்திருந்த*
இளங்கனிவளுக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே! (எ)

இடவெந்தை எந்தை பிரானே !—;

(இப்பெண் பிள்ளை எப்போதும் உன்னையே சிந்தித்திருக்கையாலே)

உளம் கனிந் திருக்கும்	நெஞ்சு கனிந்திருக்கின்றாள் ;
உன்னையே பிதற்றும்	உன்னைப்பற்றியே வாய் பிதற்றாநின்றாள் ;
உனக்கு அன்றி	உன்விஷயத்தில் தவிர
எனக்கு	என்விஷயத்தில்
அன்பு ஒன்று இலள	அன்பு சிறிதும் உடைய ளல்லள் ;
வளம் கனி பொழில் சூழ் மாலிருஞ் சோலை மாயனேஎன்று வாய் வெருவும்	செழிப்பான பழங்களையுடைய சோலைகளாலே சூழப்பட்ட திருமாலிருஞ் சோலையி லெழுந்தருளி யிருக்கிற ஆச் சரியனே ! என்று வாய் வெருவுகின்றாள் ;
களங்கனி முறு வல் காரிகை	களாப்பழம்போல் இனிதான முறுவலையும் அழகையும் உடையளாய்
பெரிது கவலை யோடு அவலம் சேர்ந்திருந்த	மிக்க மனக்கவலையும் இளைப் பும் உடையளாயிருக்கிற
இள க(ன்)னி இவளுக்கு	இளங் கன்னியாகிய இம்மகள் திறத்திலே

என் நினைந்திருந்தாய் !-;

* * *—[களங்கனிமுறுவல்.] களங்கனி வாய்க்கு இனிப்பாயிருப்பதுபோல் முறுவல் காட்சிக்கு இனிதாயிருப்பதால் முறுவலுக்குக் களங்கனியை உவமைகூறினரென்க. ஆகவே இது பயனுவமை யாம் : (பயனைப் பற்றிவரும் உவமை—பயனுவமை.) “மாரிவண்கை, கற்பகவள்ளல்” என்ற விடங் களிற்போல. பண்பும் தொழிலும் பயனு மென்றிவற்றுள், ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து, ஒப்புமைதோன்றச் செப்புவது உவமை” (31.) என்றார் தண்டியலங்காரத்தும் : இங்கே, களங் கனியாலுண்டாகிறபயனும் முறுவலாலுண்டாகிற பயனும் ஒத்திருத்தலால் [—இரண்டும் இனிப்பாயிருத்த லால்] இவ்வுவமை ஒக்குமென்க.

[இளங்கனியிவளுக்கு.] ‘கன்னி’ என்பது கனி யென்று தொகுத்தல் விகாரம் பெற்றிருக் கின்றது : ‘கந்யா’ என்னும் வடசொல் கன்னியென விகாரப்படும். (எ)

1113. அலங்கெழுதடக்கையாயன்வாயாம்பற்கு அழியுமாலென்னுள்ளமென்னும்*
புலங்கெழுபொருநீர்ப்புட்குழிபாடும் போதுமோநீர்மலைக்கென்னும்*
குலங்கெழுகொல்லிகோமளவல்லி கொடியிடைநெடுமழைக்கண்ணி*
இலங்கெழில்தோளிக்கென்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே!

இடவெந்தை எந்தை பிரானே !—;

அலம் கெழு தட கை ஆயன் வாய் ஆம்பற்கு என் உள்ளம் அழியும் என்னும்	‘கலப்பை விளங்குகின்ற பெரிய திருக்கையை யுடை யனை கோபால க்ருஷண னுடைய திருப்பவளத்தில் வைத்து ஊதுகிற இலைக்குழ லோசைக்கு என்னெஞ்சு அழிகின்றது’ என்கிறாள் ;
புலம் கெழு	மநோஹரமான
பொரு நீர்	அலையெறிகின்ற நீர்ப் பெருக்கையுடைய
புட்குழி பாடும்	திருப்புட்குழி விஷயமாக பாட்டுகள் பாடாநின்றாள் ;
நீர்மலைக்கு போதுமோ என்னும்	திருநீர்மலைக்குப் போவோ மென்கிறாள் ;
குலம் கெழு கொல்லி கோமள வல்லி	மிகச்சிறந்த கொல்லி மலையி லுள்ள பாவை போன்ற வளும்
கொடி இடை	வஞ்சிக்கொடிபோன்ற இடையையுடையவளும்
நெடு மழை கண்ணி	பெருமழைபோலே நீர்த் தாரைகள் பெருகப்பெற்ற கண்களையுடையவளும்
இலங்கு எழில் தோளிக்கு	விளங்குகின்ற அழகிய தோள்களையுடையவளு மான இப்பெண்பிள்ளை திறத்திலே

என் நினைந்திருந்தாய் !—.

* * *—ஆம்பல் என்ற சொல் பலபொருள்களுடையது ; இங்கு இசைக்குழலென்னும் பொரு ளது. குழலூதுபவன் கண்ணபிரானாயிருக்க, அலங்கெழுதடக்கையாயன் என்று ஹலாயுதனை பலரா மனைச் சொல்லிற்றென்னென்னில் ; 1. “மீளேடாமை கேழலரிகுறளாய் முன்னு மிராமனாய்த்தானாய்ப், பின்னுமிராமனாய்த்தாமோதரனாய்க் கற்கியுமானான்” என்ற ஒற்றுமை நயம்தோற்றச் சொன்னபடி 2. “அலம்புரிதடக்கையாயனே !” என்றார் கீழும் ; 3. “அலமுமாழிப் படையுமுடையான்” என்பர் மேலும்.

1. பெரிய திருமொழி 8—8—10. 2. பெரிய திருமொழி 1—6—2. 3. பெரிய திருமொழி 9—3—8

குல்ங்கெழுகோல்லிக் கோமளவல்லி='கொல்லி' என்பதற்கே இலக்கணையால் கொல்லிமலையி லுள்ள பாவைபோன்றவள் என்று பொருள் கொள்ளலாம்; அன்றி, கோல்லி—சொல்லிமலையிலுள்ள, கோமளவல்லி—அழகிய கொடிபோன்ற பாவையையொத்தவள் என்றும் உரைக்கலாம், [கொல்லிப் பாவையைப்பற்றின விவரணம் இத்திருப்பதிகத்தின் முதற்பாட்டினுரையிற் காணத் தக்கது.]

நெடுமழைக்கண்ணி=பரமபக்தர்களின் நிலைமையைச் சொல்லுமிடத்து, "ஆஹ்லாதசீத நேத்ராம்பு:" [குளிர்ந்த ஆநந்தபாஷ்பம் ததும்பப்பெற்றவன்] என்று சொல்லியிருக்கிறபடியே எப் போதும் ஆழ்வார் பகவத்குணங்களை நினைந்து கண்ணுங்கண்ணீருமா யிருக்குமிருப்பைச் சொல்லுகிறது. பிள்ளை திருவுள்ளம். (அ)

1114. பொன்குலாம்பயலைபூத்தனமென்தோள் பொருகயற்கண்டுயில்மறந்தாள்*
அன்பினாலுன்மேலாதரம்பெரிது இவ்வணங்கினுக்குற்றநோயறியேன்*
மின்குலாமருங்குல்சுருங்கமேல்நெருங்கி வீங்கியவனமுலையாளுக்கு*
என்கொலாம்?குறிப்பிலென்னினைந்திருந்தாய் இடவேந்தையெந்தைபிரானே!

இடவெந்தை யெந்தை பிரானே!—; (இப்பெண்பிள்ளையினுடைய)	
மெல் தோள்	மென்மைதங்கிய தோள்களானவை
பொன் குலாம் பயலை பூத்தன	பொன்னிறமென்று சொல் லத்தக்க பசலை நிறத்தைக் கொண்டன;
பொரு கயல் கண் துயில் மறந் தாள்	ஒன்றோடொன்று போர் செய்கிற இரண்டு மீன்கள் போன்ற கண்களிலே உறக் கத்தை மறந்துவிட்டாள்;
உன் மேல்	உன்விஷயத்திலே
அன்பினால்	ஆசையினாலே
ஆதரம் பெரிது	ஆதரவு பெருகிச் செல்லு கின்றது;
இவ் அணங் கினுக்கு உற்ற நோய் அறி யேன்	இப்பெண்ணுக்கு உண்டான வியாதியை அறிகின்றே னில்லை;
மின் குலாம் மருங் குல் சுருங்க	மின்னல்போன்று கொண்டா டத்தக்க இடையானது துவளும்படியாக
மேல் நெருங்கி	மார்பின்மேலே ஒன்றோ டொன்று நெருக்கமுற்று
வீங்கிய	வளர்ந்துவாராநின்ற
வனம் முலை யாளுக்கு	அழகிய முலைகளையுடைய ளான இம்மகளுக்கு
என் ஆம் கொல்	என்ன ஆகுமோ!
குறிப்பில் என் நினைந்திருந்தாய்	(இவளைப்பற்றித்) திருவுள்ளத் தில் என்ன நினைத்திருக் கிறாய்?.

* * * பசலைநிறத்தைப்பற்றி குறுந்தொகையில் ஒரு செய்யுளுண்டு. அதாவது—"ஊருண்கேணி யுண் டுறைத் தொக்க பாசியன்றேபசலை, காதலர்தொடுவுழித் தொடுவுழிநீங்கி விடுவுழிவிடுவுழிப் பரத்தலானே." (399.) என்பதாம். ஊரிலுள்ள ஜனங்களாலே நீருண்ணப்பெறுகிற கேணியினுள்ளே படர்ந்து கிடக்கும் பாசி போன்றது பசலைநிறம்; தண்ணீரில் நாம் கை வைத்தோமாகில் கைபட்ட விடங்களில் பாசி நீங்கும்; கையை எடுத்துவிட்டோமாகில் அவ்விடமெல்லாம் பாசி மூடிக்கொள்ளும்; அதுபோல, கணவனுடைய கைபடுமிடங்களில் பசலைநிறம் நீங்கும்; அணைத்த கை நெகிழ்த்தவாறே அப்பசலைநிறம் படரும்; ஆதலால் பாசிபோன்றது பசலைநிறம் என்றபடி. (தொடுவுழித் தொடுவுழி—தொட்டவிடங்கள்தோறும். விடுவுழி விடுவுழி—விட்ட விடங்கள் தோறும். பரத்தலான்—வியாபிக்கிறபடியினாலே.)

[இவ்வணங்கினுக்குற்ற நோயறியேன்.] எம்பெருமானே! இவளுக்கு இப்படிப்பட்ட மஹா வியாதியுண்டானது உன்னுடைய கடாக்ஷத்தில் ஆசைப்பட்டா? புன்முறுவலில் ஆசைப்பட்டா? திரு மேனியோடணைய ஆசைப்பட்டா? என்று நிச்சயிக்கமாட்டுகிறிலேன் என்றவாறு.

மூன்றாமடியின் உள்ளுறை பொருளாவது:—"என்றனளவன்றால் யானுடைய வன்பு" என்னுமாபோலே ஆச்ரயத்தினளவல்லாத பக்திப்பெருங் காதலையுடையேன் என்றவாறு. [குறிப்பில் என்னினைந்திருந்தாய் இடவேந்தை யெந்தைபிரானே!] 'தாய் உதவுவள், தமப்பன் உதவுவன், உறவினர் உதவுவர்; நமக்கென்ன? என்று நினைத்திருக்கிறாயோ? இப்படியாகில் நீ பரமபதத்தைவிட்டு இந்நிலத் தில் வந்து திருவிடவெந்தையிலே ஸந்நிதிபண்ணியிருப்பது பிரயோஜநமற்றதாகுமிறே என்றவாறு. (கூ)

1115. அன்னமுமீனுமாமையுமரியுமாய எம்மாயனேயருளாய்*
என்னுமின்தொண்டர்க்கின்னருள்புரியும் இடவெந்தையெந்தைபிரானை*
மன்னுமாமாடமங்கையர்தலைவன் மானவேல்கலியன்வாயொலிகள்*
பன்னியபனுவல்பாடுவார் நாளும்பழவினைபற்றறுப்பாரே. (௰)

அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய எம் மாயனே	"ஹம்ஸரூபியாகவும் மத்ஸ்ய ரூபியாகவும் கூர்மரூபி யாகவும் நரஸிம்ஹரூபி யாகவும் திருவவதரித்த எம்பெருமானே!
அருளாய் என்னும்	கிருபை பண்ணவேணும்" என்று பிரார்த்திக்கின்ற
இன் தொண்டர்க்கு	பரமபக்தர்களுக்கு
இன் அருள் புரியும்	பரம க்ருபையைச் செய்தருள்கின்ற

இடவெந்தை எந்தை பிரானை	திருவிடவெந்தைப் பெருமான் விஷயமாக,	கலியன்	ஆழ்வார்
		வாய் ஒலிகள் பன்னிய	விஸ்தரித்து அருளிச்செய்த
மன்னு மா மாடம் மங்கையர் தலைவன்	சாச்வதமான பெரிய மாடங்களையுடைய திருமங்கையிலுள்ளார்க்குத் தலைவரும்	பனுவல்	இப்பாசுரங்களை
		பாடுவார்	பாடுமவர்கள்
		நாளும்	எந்நாளும்
மானம் வேல்	சிறந்த வேலாயுதத்தையுடையவருமான	பழ வினை பற்று அறுப்பார்	கல்மஷ ஸம்பந்தமற்றிருப்பர்கள்.

*** கீழ் ஒன்பது பாட்டும் வேற்றுவாயாலே பேசி, இதில் கலியன்வாயொலிகள் என்கையாலே தம்முடைய பக்திப் பெருங்காதலைத் தாமே அந்யாபதேசத்தாலே பேசிக்கொண்டாரென்பது விளங்கும்.

"உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்?" என்று பாசுரந்தோறும் எம்பெருமானை வினவிக்கொண்டே வந்தவர் அதற்கு ஒரு மறுமொழியும் பெறாமல் எங்ஙனே பதிகத்தை முடித்துவிட்டார்? என்று சிலர் கேட்கலாம்; மறுமொழி பெற்றே முடித்தாரென்றுணர்க. "என்னினைந்திருந்தாய்?" என்று கேட்ட ஆழ்வாரை நோக்கி "நீர் கவலையற்றிரும்; உம்மை நாம் கைவிடுவோமோ? உம்மிடத்தில் பரிபூர்ண க்ருபை செய்வதாகவே திருவுள்ளம்பற்றி யிருக்கிறோம்; இல்லையாகில் அங்குநின்றும் இங்குவந்து திருவிடவெந்தையிலே நிற்போமோ? அஞ்சாதே கொள்ளும், உமக்கு அருள்புரிந்தோம்' என்று எம்பெருமான் சோதிவாய் திறந்து அருளிச்செய்ததுகொண்டு தேறுதலடைந்து இத்திருமொழியைத் தலைக்கட்டினரென்பது "அருளாயென்னு மின்தொண்டர்க்கின்னருள்புரியுமிடவெந்தை யெந்தைபிரானை" என்றவிதனால் நன்கு விளங்காநின்றதிறே. (கo)

அடிவரவு:—திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஒதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்.

இரண்டாம்பத்து—எட்டாந்திருமொழி—திரிபுரமூன்றெரித்தானும்

(திருவட்டபுயகரப்பதிகம்)

அவதாரிகை:—கீழ்த்திருமொழியில், ஆழ்வார் தாமான தன்மையை யிழந்து பட்ட பாடுகளைத் திருவுள்ளம்பற்றின எம்பெருமான் 'இவ்வாழ்வாரை இப்படியோ நாம் துடிக்கவிட்டோம்!; தா் துடிப்பைத் தாமே முறையிட்டுக் கொள்ளும்படியாகவும் நாம் பிற்பட்டோமே!' என்று முடிமேல் மோதிக்கொண்டு, அடியார்களுக்குத் தாம் உதவின குணங்களையும் பரம விலக்ஷணமான வடிவழகையும் பிரகாசப்படுத்திக்கொண்டு திருவட்டபுயகரமென்னும் கச்சித்திருப்பதியிலே ஆழ்வார்க்குப் பரம போக்யமாக ஸேவை ஸாதித்தான்; ஆழ்வாரும் (கீழ்த்திருமொழியின் அநுபந்தமாகவே) பரகாலநாயகியான நிலைமையிலேயே நின்று அப்பெருமானை ஸேவித்தார்; என்றைக்கும் எங்குங் கண்டறியாத திருக்கோலமா யிருந்தது; "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்றாற்போலே அப்பெருமானை இன்னாரென்று அறியமாட்டிற்றிலர்; அறிந்து கொள்ளாமலிருக்க மனமில்லை; ஸ்வபுத்தியாலே அறிந்துகொள்ளவும் முடியவில்லை; என்னசெய்வது? 'நீர் ஆர்?' என்று கேட்கலாமென்று பார்த்தாலோ, வாய் எழும்பவில்லை. முகத்தை நேரே பார்த்து வார்த்தை சொல்ல முடியாதபடி சோதிவெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது; அதனால், முகம்நோக்கி 'நீர் ஆர்?' என்று கேட்கமாட்டிற்றிலர்; 'இவர் நம்முடைய பர்த்தாவாகவேயிருக்கக்கூடும்' என்று நெஞ்சிலே ஒரு தோற்றமும் தோன்றினமையால் வெட்கத்தாலும் 'நீர் ஆர்?' என்று கேட்கமாட்டிற்றிலர்; கேட்டுத் தெரிந்துகொள்ள விருப்பமோ அதிகரித்துவிட்டது; அவர்தம்மையே நேரே முகம்பார்த்துக்கேளாமல் வேறொருவரை நோக்கி 'இப்பெரியவர் ஆர்கொல்?' என்று கேட்க, அதற்கு எம்பெருமான்றானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூற, படுக்கைத்தலையிலே இப்படி சில வார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதைப் பரகாலநாயகியின் தாய்மார் தோழிமார் முதலானார் செவியுற்று 'நங்காய்! ஏதேனும் ப்ரமித்தாயோ? இவை என்ன வார்த்தைகள்?' என்று கேட்க; 'ப்ரமித்தேனல்லேன்; ஒரு மஹாபுருஷரை ஸேவிக்கப்பெற்றேன், 'இவரார்கொல்?' என்று கேட்டேன்; திருவட்டபுயகரத்துநாயனார் 'நான்தான் அட்டபுயகரத்தேன்' என்று உத்தரமருளிச் செய்கிறார்காண்மின்—என்று பரகாலநாயகி தன் தாய்மார்க்கும் தோழிமார்க்கும் நடந்த வரலாறு சொல்லுவதாயிருக்கிறது இத்திருமொழி.

ஆழ்வார் எம்பெருமானை அநுபவிக்கும் விதங்களில் இதுவும் ஒரு ஆச்சரியமான விதமாகுமென்றுணர்க. கீழ்த்திருமொழி—தாய்பாசுரம்; இத்திருமொழி—தலைவி பாசுரம்.

1116. திரிபுரமூன்றெரித்தானும் மற்றைமலர்மிசைமேலயனும்வியப்ப*
முரிதிரைமாகடல்போல்முழங்கி மூவுலகும்முறையால்வணங்க*
எரியனகேசரவாளெயிற்றோடு இரணியனாகமிரண்டுகூறா*
அரியுருவாமிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (க)

திரி புரம் மூன்று எரித்தானும்	எங்குந் திரிந்துகொண்டு உலகங்கட்குத் துன்பம் விளைத்துக்கொண்டிருந்த மூன்று பட்டணங்களைக் கொளுத்தியொழித்தவனான சிவபிரானும்
மலர் மிசை மேல் அயனும்	தாமரை மலரிற் பிறந்து மேன்மை பொருந்திய பிரமனும்
வியப்ப	ஆச்சரியப்படவும்,
மூ உலகும்	மூன்று லோகங்களிலுமுள்ளவர்கள்
முரி திரை மா கடல் போல் முழங்கி	அலையெறிகின்ற பெரிய கடல் போலே (ஸ்தோத்ர) கோஷங்களைச் செய்துகொண்டு
முறையால் வணங்க	முறைதவறாது வணங்கவும்,
இரணியன் ஆகம் இரண்டு கூறு ஆ	இரணியாசுரனுடைய உடல் இரண்டு பிளவாம்படியாக
எரி அன கேசரம்	நெருப்புப்போன்ற உளை மயிர்களோடும்
வாள் எயிற்றோடு	வாள்போன்ற கோரப்பற்களோடும்கூடி
அரி உரு ஆம் இவர்	நரசிங்கவுருக்கொண்ட பெருமானைப் போன்றுள்ள இப்பெரியவர்
ஆர் கொல் என்ன	யார்? என்று நான் சொல்ல, (அதற்கு அவர்)
அட்டபுய கரத்தேன் என்றார்	'அட்டபுயகரக்ஷேத்ரத்திலுள்ளவன் நான்' என்று மறுமொழி கூறினார்.

* * *—ஒரு பெரியவர்வந்து ஸேவைஸாதித்தார், அப்போதைய நிலைமை இப்படிப்பட்டிருந்ததென்கிறாள் பரகாலநாயகி: சிவனும் பிரமனும் கண்டு ஆச்சரியப்படும்படியாகவும், மூவுலகத்திலுள்ளவர்களும் அலையெறிகின்ற கடல்போல் ஸ்தோத்ர கோஷங்களைச் செய்துகொண்டு வணங்கவும், நெருப்புப் போன்ற உளைமயிர்களோடும் வாள்போன்ற கோரப்பற்களோடுங்கூடி, இரணியன் இருபிளவாம்படியாக நரசிங்கவுருக்கொண்டு தோற்றின இம்மஹாநுபாவர் ஆர்? என்று நான் கேட்டேன்; அதற்கு அவர் "நான் அட்ட புயகரத்தேன்—அட்டபுயகரத்தில் வஸிப்பவன்காண்; 'அன்றொருகால் ப்ரஹ்லாதனுக்காக வந்து உதவினமாத்திரமன்று; உனக்கு உதவுகைக்காக இங்கே வந்து ஸமயம் பார்த்து நிற்கிறவனன்றோ நான்'—என்றார்—என்கிறாள்.

எதிரேவந்து தோற்றினவருடைய ஸ்வரூப ஸ்வபாவங்கள் ஆழ்வார்க்குத் தெரியாதிருந்தால் 'இவரார்கொல்?' என்று கேட்கலாம்; "திரிபுர" மென்று தொடங்கி "அரியுருவாமிவர்" என்னுமளவும் மூன்றரையடிகளால் அவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைத் தாம் நன்கறிந்தமையைச் சொல்லி வைத்து 'இவரார்கொல்?' என்று கேட்பது பொருந்துமோ? எனின்; இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்கிறார்—" அடையாளம் சொல்லா நிற்கச்செய்தே நிச்சயிக்க வொண்ணாதபடியிறே விஷயஸ்பாவம்!" என்று. "இன்னாரென்றறியேன் அன்னேயாழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்னுமாபோலேயாம். "அடையாளம் சொல்லாநிற்கச் செய்தே அறியேனென்னப் பண்ணுகிறது அவன்வைலக்ஷண்யம்" என்று அவ்விடத்திலும் வியாக்கியான ஸ்ரீஸூக்தியுள்ளது. அஸாதாரணலக்ஷணங்களைத் தெரிந்துகொண்டபின் இன்னாரென்றறியாமை யென்பதொன்றுண்டோ வென்று பலர்க்கும் நெஞ்சில் கலக்கமாகவே யிருக்கும்; ஆழ்வாருடைய நிலைமை வாய்த்தாலன்றித் தெளிவு பிறவாது; என்செய்வோம்!. 'எதிரே வந்து தோன்றுகின்ற இவருடைய லக்ஷணங்களைப் பார்த்தால் இவர் எம்பெருமானாயிருக்கக்கூடும்' என்று நினைக்கலாகிறது; ஆனால், 'தௌர்ப்பாக்யசாலிகளான நமக்கு அவர் இவ்வளவு ஸுலபமாக ஸேவைஸாதிக்க ப்ராப்தி இருக்கமாட்டாதே' என்று நம்முடைய தண்மையைக்கூடவே நினைத்துக்கொண்டால் 'வேறுயாரேனு மொருவரோ இவர்' என்று ஸந்தேஹிக்க இடமுண்டாகிறது—என்பதாகக்கொள்க. பிராட்டி அசோகவனிகையில் வருந்திக் கிடந்தபோது சிறியதிருவடி வந்து எதிரே கைகூப்பி நின்று மெய்யே வார்த்தை சொல்லச் செய்தேயும் 'இஃது இந்நிலத்தில் ஸம்பாவிதமாகக் கூடியதன்றே' என்று சிந்தித்த பிராட்டி "கிம் நு ஸ்யாத் சித்தமோஹோயம் பவேத் வாதகதிஸ்த்வியம், உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா." என்று 'இது மதிமயக்கத்தால் வந்ததோ! காற்றுப்போக்கின் தோற்றரவோ? பித்தவிகாரத் தோற்றமோ? கானல் காட்சியோ?' என்று பலவகையாகச் சங்கிக்கவில்லையா?. நிற்க.

"அரியுருவாகிய நீர் ஆர்?" என்று அப்பெரியவரையே முகம்நோக்கிக் கேட்கமுடியாமல் தலைகுனிந்து வேறொருவரை நோக்கிக் கேட்பதுபோல் இவரார்கொல்? என்று நான் கேட்டேன், அதற்கு அவர்தாமே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூறினர் என்கிறாள் பரகாலநாயகி.

அட்டபுயகரத்தேன் = அட்டபுயகரத்திலுள்ளவன் நான் என்று பொருள். 'அஷ்டபுஜன்' என்பது எம்பெருமானுடைய திருநாமம்; எட்டுத்திருக்கைகளை யுடையவன் என்று பொருள். க்ருஹம் என்ற வடசொல் கரமெனத்திரியும்; ஆகவே, அஷ்டபுஜனுடைய க்ருஹம்—அட்டபுயகரம்; (திவ்யதேசத்தைச் சொன்னபடி.) அவ்விடத்திலுள்ளவன் நான் என்றதாயிற்று. 'நான் அட்டபுயன்' என்றே எம்பெருமான் மறுமொழி கூறியிருக்கலாமே; தலையைச்சுற்றி மூக்கைப் பிடிப்பதுபோல இங்ஙனே ஏதுக்குச் சொன்னான்? என்று கேள்விபிறக்கும்; கேண்மின்; நான் அட்டபுயன்' என்று சொல்லிக்கொண்டால் தன்னை எம்பெருமானாகத் தானே வெளியிட்டதாக விளங்கிவிடும்; அப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லிக்கொள்ள எம்பெருமானுக்குத் திருவுள்ளமில்லை; வேற்றுமனிதனாகப் பொய்சொல்லிக்கொள்ளவும் விருப்பமில்லை; ஆகவே, வெகு சாதுர்யமாகச் சொல்லிக்கொள்ளுகிறான் அட்டபுயகரத்தேன் என்று.

'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திற்கு நான் அதிபதி' என்றதாகவுமாம், 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திலே கிடப்பா னொருவன் நான்' என்று ஸாமாந்யமாகச் சொல்லிக்கொண்ட தாகவுமாம்.

துஷ்யந்தமஹாராஜன் வேட்டையாடிக்கொண்டே சகுந்தலையின் இருப்பிடத்தை அடைந்த போது இவனின்னானென்று தெரிந்துகொள்ள விரும்பி 'நீயார்?' என்று கேட்டார்க்கு அரசன் விடை கூறும்போது, 1 "ஹவதி ய: வௌரவெண ராஜ்ஞா யமாயிகாரெ நியுக்த: ஸோஹம்" புரு வம்சத்து அரசனாலே தருமகாரியங்களைச் செய்யுமாறு நியமிக்கப்பட்டவன் நான் என்று சாதுரிய மாக விடைகூறினது இங்கு நினைக்கத்தக்கது. புரு வம்சத்து அரசனாகிய தன் தந்தையினால் நியமிக்கப் பட்ட அரசன் தான் என்றும், புருவம்சத்து ராஜாவுக்கு வேலைக்காரன் தான் என்றும் இருவகையாகப் பொருள்படுமாறு உரைத்தது காண்க.

"அட்டபுயவகரம்" என்பது அட்டபுயகரம் என மருவிற்றென்றலும் பொருந்தும்; அகர மாவது அக்ரஹாரம். (க)

1117. வெந்திறல்வீரரில்வீரரொப்பார் வேதமுரைத்திமையோர்வணங்கும்*
செந்தமிழ்பாடுவார்தாம்வணங்கும் தேவரிவர்கொல்தெரிக்கமாட்டேன்*
வந்துகுறளுருவாய்நிமிர்ந்து மாவலிவேள்வியில்மண்ணளந்த*
அந்தணர்போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (உ)

இமையோர்	தேவர்கள்	தெரிக்க மாட்டேன்	அறிகின்றிலேன்;
வேதம் உரைத்து	வேத வாக்கியங்களைச் சொல்லி	மாவலி வேள்வியில்	மஹாபலியின் யாகபூமியிலே
வணங்கும்	வணங்க நின்ற	குறள் உரு ஆய் வந்து	வாமநவுருக் கொண்டுவந்து (மாவலி நீர் வார்த்து தத்தம் பண்ணினவாறே)
வெம் திறல் வீரரில் வீரர் ஒப்பார் இவர்	மிக்க வலிவுகொண்ட வீரர் களிலுங் காட்டில் மஹாவீர ரான இராமபிரானைப் போன்றுள்ள இப்பெரியவர்	நிமிர்ந்து	திரிவிக்கிரமனாக வளர்ந்து
		மண் அளந்த	பூமியை அளந்துகொண்ட
செம் தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவர் கொல்	அழகிய தமிழ்ப் பாசுரங்களைப் பாடின முதலாழ்வார்கள் வணங்கப்பெற்ற திருவேங் கடமுடையானோ?	அந்தணர் போன்ற இவர் ஆர் கொல் என்ன	பிரமசாரியைப் போலுமிரா நின்ற இப்பெரியவர் ஆர்? என்ன,
			அட்புயகரத்தேன் என்றார்—.

* * *—"வேதமுரைத்திமையோர் வணங்கும்" என்ற விசேஷணத்தைச் செந்தமிழ் பாடு வார்க்கு இயைக்கலாமென்பர் சிலர். (உ)

1118. செம்பொனிலங்குவலங்கைவாளி திண்சிலைதண்டொடுசங்கமொள்வாள்*
உம்பரிருசுடராழியோடு கேடகமொண்மலர்பற்றியெற்றே!*
வெம்புசினத்தடல்வேழம்வீழ வெண்மருப்பொன்றுபறித்து*இருண்ட
வம்புதம்போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (ங)

வலம் கை	வலத்திருக்கையிலே	பற்றி	தரித்துக்கொண்டு,
இலங்கு	விளங்குகின்ற	வெம்பு சினத்து அடல் வேழம் வீழ	மிக்க கோபத்தையும் மிடுக் கையுமுடைய குவலயாபீட மென்னும் யானை முடியும் படியாக
செம் பொன்	பசும்பொன்னாற் செய்யப்பட்ட		
வாளி	அம்புகளையும்		
திண் சிலை	திண்ணிதான சார்ங்க வில்லையும்	வெண் மருப்பு ஒன்று	(அவ் யானையினுடைய) வெளுத்த ஒரு கொம்பை
தண்டொடு	கௌமோதகி யென்னும் கதையையும்	பறித்து	பிடுங்கிக் கையிலே கொண்டு
சங்கம்	ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும்	இருண்ட அம்புதம் போன்ற இவர் ஆர் கொல் என்ன	காளமேகத்தை ஒத்திருக்கின்ற இவர் யார்? என்று நான் கேட்க
ஒள் வாள்	அழகிய நந்தகவாளையும்,		
உம்பர்	(ஆயுதங்களெல்லா வற்றினும்) மேற்பட்டு		
இரு சுடர்	மிக்க தேஜஸ்ஸையுடைய		
ஆழியோடு	திருவாழியாழ்வானையும்		
கேடகம்	கேடயத்தையும்		அட்டபுயகரத்தேன் என்றார்—.
ஒண் மலர்	அழகிய புஷ்பத்தையும்		எற்றே!—இது என்ன ஆச்சரியம்!

1 சாகுந்தள நாடகம்—முதல் அங்கம்.

* * *—அஷ்டபுஜனுகையாலே எட்டுத் திருக்கைகளிலும் எட்டு வஸ்துக்களையும் தரித்துக் கொண்டு வந்தமை சொல்லுகிறது முன்னடிகளில். 1. வாளி, 2. சிலை, 3. தண்டு, 4. சங்கம், 5. வாள், 6. ஆழி, 7. கேடகம், 8. மலர் என்பன. கேடகம் எனினும் கேடயம் எனினும் கடகம் எனினும் ஒக்கும். மலர் என்பது ஆயுதமன்ருகிலும் அழகுக்குடலாக ஏந்தினதாம். மன்மதன் மலர்களை ஆயுதமாகவுடையனுதலால் மலர்க்கு ஆயுதகோடியிலும் அந்வயமுண்டென்னலாம். எற்றே !—இஃது எத்தன்மைத்து ! என வியந்து கூறுவது.

அன்று கம்ஸனுடைய அரண்மனை வாசலிற் புகும்போது தன்மேற் சீறிவந்த குவலயாபீடமென்னும் மதயானையின் கொம்பை முறித்த விலக்ஷணமான வடிவழகு தோன்ற நின்ருப்போலே வந்து நிற்கிருரே, இவர் ஆர்கொல் ? என்ன, அட்டபுயகரத்தேன் என்ருர்.

இரண்டு திருக்கைகளிலும் தரித்துள்ள வஸ்துக்களையெல்லாம் சொல்லி வைத்து, முதலடியில் "வலங்கை" என்று வலத்திருக்கையை மாத்திரம் கூறி யிருந்தாலும் சங்கு முதலியவற்றுக்கு இடமாக இடத்திருக்கையும் கூறிற்ருகவே கொள்க. அன்றி, வலத்திருக்கை யொன்றிலேயே எல்லாவற்றையும் விலக்ஷணமாக ஏந்திக்கொண்டு ஆழ்வார்க்கு ஸேவை ஸாதித்தமையைச் சொல்லிற்ருகவுங் கொள்ளிற் குறையில்லை.

அம்புதம்—வடசொல்; நீரைக்கொடுப்பது என்று மேகத்திற்குக் காரணப் பெயர், (௩)

1119. மஞ்சுயர்மாமணிக்குன்றமேந்தி மாமழைகாத்தொருமாயவானை
யஞ்ச*அதன்மருப்பன்றுவாங்கும் ஆயர்கொல்மாயமறியமாட்டேன்*
வெஞ்சுடராழியும்சங்குமேந்தி வேதமுனேதுவர்நீதிவானத்து*
அஞ்சுடர்போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்ருரே. (௪)

மஞ்சு உயர்	மேக மண்டலம் வரையில் உயர்ந்ததும்
மா மணி குன்றம்	சிறந்த ரத்னங்களை யுடையதுமான கோவர்த்தனகிரியை
ஏந்தி	(குடையாக) எடுத்துப் பிடித்து
மா மழை காத்து	பெருமழையைத் தடுத்தவராயும்,
அன்று	கம்ஸனரண்மனையினுட் புகும்போது
ஒரு மாயம் ஆனை அஞ்ச	ஒப்பற்றதும் மாயச் செயல்களை யுடையதுமான (கம்ஸனுடைய) யானையானது நடுங்கும்படியாக
அதன் மருப்பு	அவ் யானையின் கொம்பை
வாங்கும்	பறித்தெறிந்தவராயுமுள்ள
ஆயர் கொல்	கோபால கிருஷ்ணரோ ? இவர்

மாயம் அறிய மாட்டேன்	(இன்னுரென்று நிச்சயிக்க முடியாத இந்த) ஆச்சரியத்தை அறிகிறேனில்லை ;
வெம் சுடர் ஆழியும்	தீக்ஷ்ணமான சோதியையுடைய சக்கரத்தையும்
சங்கும்	சங்கையும்
ஏந்தி	தரித்துக்கொண்டு
முன்	கண்ணெதிரே
வேதம் ஓதுவர்	வேதங்களை ஓதிக்கொண்டிருப்பவராய்
நீதி வானத்து அம் சுடர் போன்ற இவர்	முறை தவருத பரமபதத்திலேயுள்ள பரஞ்சோதி போன்றவரான இவர்

ஆர் கொல் என்ன—;
அட்டபுயகரத்தேன் என்ருர்—.

1120. கலைகளும்வேதமும்நீதிநூலும் கற்பமும்சொற்பொருள்தானும்*மற்றை
நிலைகளும்வானவர்க்கும்பிறர்க்கும் நீர்மையினலருள்செய்து*நீண்ட
மலைகளும்மாமணியும் மலர்மேல்மங்கையும்சங்கமும்தங்குகின்ற*
அலைகடல்போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்ருரே. (௫)

கலைகளும்	(வேதத்தின் உபநிஷத் பாகமான) வேதாந்தங்களையும்
வேதமும்	(கர்மகாண்டமான) வேதங்களையும்
நீதி நூலும்	இதிஹாஸங்களையும்
கற்பமும்	கல்பஸூத்ரங்களையும்
சொல்	வியாகரண சாஸ்த்ரத்தையும்
பொருள் தானும்	மீமாம்ஸா சாஸ்த்ரத்தையும்
நிலைகளும்	அவரவர்க்கு உரிய ஸ்தானங்களையும்
வானவர்க்கும்	தேவர்களுக்கும்
பிறர்க்கும்	மற்றுமுள்ள மனிசர்க்கும்

நீர்மையினல்	கிருபையினல்
அருள் செய்து	அளித்தவரும்
நீண்ட மலைகளும் மா மணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற அலை கடல் போன்ற	பெரியமலைகளும் சிறந்த கௌஸ்துபமணியும் பிராட்டியும் சங்கும் எப்போதும் நிலைத்திருக்கப்பெற்ற அலையெறிகின்ற கடல் போன்றவருமான

இவர் ஆர்கொல் என்ன—;
அட்டபுயகரத்தேன் என்ருர்—

* * *—"கலைகள்" என்கிற சொல் பொதுவாக சாஸ்திரங்களையெல்லாம் சொல்லுமாயினும், இவ்விடத்தில் பிரகரணபலத்தால் வேதாந்தபாகத்தைச் சொல்லுகிறது. வேதம் என்ற சொல்—கர்ம

காண்டமும் ப்ரஹ்மகாண்டமுமாகிய உபயபாகத்திற்கும் பொதுவான சொல்லாயினும் இங்கே கர்மகாண்டத்தளவிலே நிற்கிறது, கலைகள் என்பதற்கு ப்ரஹ்மகாண்டத்தைப் பொருளாகக் கொண்டதனால்.

நீதிநூல்—இதிஹாஸங்களெல்லாம் நீதியையுணர்த்தும் நூல்களாம். கற்பம்—வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுஷ்டிக்கவேண்டிய முறைமைகளையுணர்த்தும் நூல் கல்பஸூத்ரமெனப்படும். சொல்—'இது சுத்தமான சொல், இது அசுத்தமான சொல்' என்று அறிவதற்கு உறுப்பான வியாகரண சாஸ்த்ரம். பொருள்—வேதங்களின் உண்மைப்பொருளை நன்கு விசாரித்து உணர்த்தும் நூலாகிய மீமாம்ஸை. ஆகிய இப்படிப்பட்ட சாஸ்த்ரங்களையெல்லாம் தானான தன்மையினாலும் முனிவர்களை அநுப்ரவேசித்த தன்மையினாலும் வெளியிட்டவன் எம்பெருமானேயாவன்.

மற்றநிலைகளும்=மேற்சொன்ன சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை முறைதவறாது அநுஷ்டிப்பவர்களுக்கு (அவரவர்களுடைய விருப்பத்திற்குத்தக்கபடி) ஒவ்வொரு ஸ்தானம் வருவதாகச் சொல்லப்பட்டுள்ளவற்றையும் எம்பெருமானே ஏற்படுத்தி வைத்தானென்கிறது.

[நீண்டமலைகளும் இத்யாதி.] எம்பெருமான் கடல்போன்றிருப்பவனென்று பலரும் சொல்லுவதுண்டு; ஆனால் நிறம் ஒத்திருப்பதைப்பற்றி அப்படி சொல்லுவர்கள்; இங்குச்சொல்லுவதாவது—கடலிலுள்ள வஸ்துக்களெல்லாம் எம்பெருமானிடத்திலும் உள்ளமையால் கடலோடு உவமை சொல்லப்படுகிறது. முன்னொருகாலத்தில் மலைகளெல்லாம் சிறகுடனே பறந்து நாடுநகரங்கட்குத் துன்பம் விளைத்துக்கொண்டிருக்கையில் இந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் அவற்றின் சிறகுகளைத் துணித்துக்கொண்டுவர, அப்போது மைநாகம் முதலிய பல மலைகள் கடலினுட்சென்று ஒளிந்துகொண்டு இன்றைக்கும் அவ்விடத்திலேயே தங்கிக்கிடக்கின்றனவென்று நூல்கள் கூறும். எம்பெருமானுடைய திருத்தோள்கள் மலைபோன்றிருத்தலால் கடலும் மலைகளையுடையது, எம்பெருமானும் மலைகளையுடையவன்; கடல் ரத்நாகரமாகையாலே மாமணிகளையுடையது; எம்பெருமானும் "குருமாமணிப்பூண்" எனப்பட்ட ஸ்ரீகௌஸ்துபத்தையுடையவன்; கடலைக்கடைந்தபோது அதில் நின்றும் பிராட்டி அவதரித்தனளென்று புராணவரலாறு உள்ளதனால், மலர்மங்கை தங்கப்பெற்றது கடல்; எம்பெருமானும்* அகலகில்லேனிறையு மென்றலர்மேல் மங்கையுறைமார்பன். சங்குக்கு உறைவிடம் கடல்; எம்பெருமானும் இடங்கைச் சங்கமுடையான்; ஆக இப்படிகளாலே கடலைப்போன்றுள்ளவன் எம்பெருமான் என்றதாயிற்று. (ரு)

1121. எங்ஙனும்நாமிவர்வண்ணமெண்ணில் ஏதுமறிகிலமேந்திழையார்*
சங்கும்மனமும்நிறைவுமெல்லாம் தம்மனவாகப்புகுந்து*தாமும்
பொங்குகருங்கடல்பூவைகாயா போதவிழ்நீலம்புனைந்தமேகம்*
அங்ஙனம்போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (சு)

நாம்	நாம்
இவர் வண்ணம்	இவருடைய படிகளை
எங்ஙன் எண்ணிலும்	எவ்விதமாக அறியப் பார்த்தாலும்
ஏதும் அறிகிலம்	ஒன்றும் அறிய மாட்டுகின்றிலோம்;
ஏந்து இழையார்	ஆபரணம் பூண்டிருப்பவர்களான மாதர்களுடைய
சங்கும்	வளைகளும்
மனமும்	நெஞ்சும்
நிறைவும் எல்லாம்	அடக்கமுமாகிய எல்லாமும்
தம்மன ஆக	தம்முடையதாம்படி
புகுந்து	இவ்விடம் வந்து சேர்ந்து,
பொங்கு கரு கடல்	அலையெறிகின்ற கரிய ஸமுத்ரமென்ன
பூவை	பூவைப்பூவென்ன
காயா	காயாம்பூவென்ன
போது அவிழ் நீலம்	காலத்திலே அலர்ந்த கருநெய்தற்பூவென்ன
புனைந்த மேகம்	அழகிய மேகமென்ன
அங்ஙனம் போன்ற இவர் தாம்	இவற்றைப் போலேயிருக்கிற இவர்

ஆர்கொல் என்ன—;
அட்டபுயகரத்தேன் என்றார்—.

* * *—மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிடாதே உள்ளிழிந்து எவ்வளவுதூரம் ஆராய்ந்து பார்த்தாலும் இப்பெரியவருடைய படிகளொன்றும் தெரிகின்றதில்லை; இவர் இங்குவந்தது ஸ்த்ரீகளுடைய ஸர்வஸ்வத்தையும் கொள்ளை கொள்ளுதற்காகவேயாம்; இவருடைய வடிவோ பூவையும் காயாவும் நீலமும் மேகமும் போன்றுள்ளது; இப்படிப்பட்ட இவர் ஆர்? என்றேன்; நான்தான் அட்டபுயகரத்தேன் என்றார்—என்கிறாள்.

எங்ஙனும் என்றவிடத்துள்ள உம்மையைப்பிரித்து எண்ணில் என்பதோடு கூட்டியுரைக்கப்பட்டது. அறிகிலம்=அறியகில்லோம் என்றவாறு. ஏந்திழையார்சங்கும் மனமும்நிறைவுமெல்லாம் தம்மனவாகப் புகுந்து='ஏந்திழையார்' என்று பொதுவாக மாதர்களைச் சொல்லுகிறது; அவர்களுடைய சங்கும் மனமும் நிறைவும் தம்மனவாகப் புகுகையாவது—இவரைக்கண்டவுடனே விரும்பினபடி கலவி செய்யப் பெறாமையாலே உடல் இளைத்துக் கைவளைகள் கழன்றொழியும்படியும், நெஞ்சு இவரிடத்திலேயே பதிந்திருக்கும்படியும் அடக்கத்தை விட்டுப் பதறி மேல்விழும்படியும் செய்து கொள்ளுகை. தம்மன—தம்முடையவை.

"புனைந்தமேகம்" என்றவிடத்து, புனைந்த என்பதற்கு—கீழ்ச்சொன்ன கடல் முதலியவற்றோடு ஒருகோர்வையாகச் சேர்க்கப்பட்ட என்றும் பொருள் கொள்ளலாம். (சு)

1122. முழுசிவண்டாடியதண்டுழாயின் மொய்ம்மலர்க்கண்ணியும்*மேனியஞ்சாந்
திழுசியகோலமிருந்தவாறும் எங்ஙனம்சொல்லுகேனேவிநல்லார்*
எழுதியதாமரையன்னகண்ணும் ஏந்தெழிலாகமும்தோளும்வாயும்*
அழகியதாமிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (எ)

வண்டு முழுசி ஆடிய	வண்டுகள் (தேனிலே) முழுகிக் கூத்தாடா நிற்கப்பெற்ற
தண் துழாயின்	குளிர்ந்த திருத்துழாயினால்
மொய் மலர் கண்ணி இருந்த ஆறும்	செறியத் தொடுக்கப்பட்ட பூமாலை சாத்தியிருக்கும் படியையும்
மேனி அம் சாந்து இழுசிய கோலம் இருந்த ஆறும்	திருமேனியிலே அழகிய சந்தனம் பூசப்பெற்ற அலங்காரமிருக்கும்படியையும்
எங்ஙனம் சொல்லுகேன்	என்னவென்று சொல்லுவேன்;
ஓவி நல்லார் எழுதிய	சித்ரமெழுதுவதில் வல்லவர்கள் எழுதினவை யென்னலாம் படியுள்ள
தாமரை அன்ன கண்ணும்	தாமரை யிதழ்போன்ற திருக்கண்களும்
ஏந்து எழில் ஆகமும்	மிக்க அழகையுடைய திருமார்வும்
தோளும்	திருத்தோள்களும்
வாயும்	திருப்பவளமும்
அழகியது ஆம் இவர்	அழகியவாக அமையப்பெற்ற இவர்

ஆர்கொல் என்ன—;
அட்டபுயகரத்தேன் என்றார்—.

* * *—தேனொழுகுகின்ற திருத்துழாய்மாலையைச் சாத்திக்கொண்டிருந்த அழகும் சந்தனக் காப்பு சாத்திக்கொண்டிருந்த அழகும் என்ன சொல்லுவேன்!; அன்றியும், திருக்கண்களும் திருமார்பும் திருத்தோள்களும் திருப்பவளமும் சித்திரமெழுதவல்லவர்களால் எழுதப்பட்டவைபோன்று எவ்வகைக் குறையும் கூறவொண்ணாதபடி அழகு விஞ்சியிருந்தன; இப்படிப்பட்ட மஹாநுபாவர் யார்? என்றேன்; நான்தான் அட்டபுயகரத்தேன் என்றார்—என்கிறாள்.

[மேனி அஞ்சாந்து இழுசிய கோலம்.] முன்பு க்ருஷ்ணாவதாரத்தில் கூனியிடம் இரந்துபெற்ற அழகிய சந்தனத்தைப் பூசிக்கொண்டு பொலிந்த அழகை ஏட்டிலே கேட்டிருந்தோம்; இன்று நேரே காணப்பெற்றோம் என்கிறாள் போலும்.

ஓவிநல்லார் = சித்திரமெழுதுபவர்கட்கு 'ஓவியர்' என்று பெயர்; நல் ஓவியர் என்க. "ஓவி னல்லார்" எனப்பாடங்கொண்டு, 'ஓவில் நல்லார்' என்று பிரித்து, ஓவில்—சித்திரமெழுதுவதில், நல்லார்—சிறந்தவர்கள் என்றுபொருள் கொள்வாருமுளர். "ஓவிநல்லாரெழுதிய" என்ற அடைமொழியைத் தாமரையிலே அந்வயித்து, சித்திரக்காரரால் எழுதப்பட்ட தாமரை யாதொன்றுண்டு, அதுபோன்ற திருக்கண்கள் என்றுரைப்பாருமுண்டு. (எ)

1123. மேவியெப்பாலும்விண்ணோர்வணங்க வேதமுரைப்பர்முந்நீர்மடந்தை
தேவி*அப்பாலதிர்சங்கமிப்பால்சக்கரம் மற்றிவர்வண்ணமெண்ணில்*
காவியொப்பார்கடலேயுமொப்பார் கண்ணும்வடிவும்நெடியராய்*என்
ஆவியொப்பாரிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (அ)

விண்ணோர்	நித்யஸூரிகள்
எப்பாலும் மேவி	சுற்றிலும் சூழ்ந்துகொண்டு
வணங்க	வணங்கப்பெற்று
வேதம் உரைப்பர்	(இப்பெரியவர்) வேதங்களை உருச்சொல்லுகின்றார்;
முந்நீர் மடந்தை	கடலிற்பிறந்த கமலையானவள்;
தேவி	பட்டமஹிஷியாயிரா நின்றாள்
அதிர் சங்கம்	முழங்குகின்ற சங்கானது
அப்பால்	இடத்திருக்கையிலுள்ளது;
சக்கரம்	திருவாழியானது
இப்பால்	வலத்திருக்கையிலுள்ளது;
மற்று	இதற்குமேல்
இவர் வண்ணம் எண்ணில்	இவருடைய நிறத்தை ஆராய்ந்து சொல்லப் புகுந்தால்
காவி ஒப்பார்	கருநெய்தல் பூவின் நிறத்தை ஒத்திருக்கின்றார்;
கடலும் ஒப்பார்	ஸமுத்ரத்தையும் ஒத்திருக்கின்றார்;
கண்ணும் வடிவும் நெடியர் ஆய்	திருக்கண்களிலும் வடிவழகிலும் அளவிறந்தவராய்
என் ஆவி ஒப்பார் இவர்	என் உயிரை ஒத்திருக்கின்ற இவர்

ஆர்கொல் என்ன—;
அட்டபுயகரத்தேன் என்றார்—.

* * * என்முன்னே வந்து தோற்றின பெரியவர் தனியராய் வந்திலர்; நித்யஸூரிகள் சுற்றிலும் சூழ்ந்து வணங்காநிற்க வந்தார்; வாயில் நல்வேதமோதும் வேதியரென்று விளங்கும்படி வேதங்களை ஓதிக்கொண்டு வந்தார்; அருகில் திருமகள் தேவியாகத் திகழ்ந்தனள்; இருபுறத்திலும் திருவாழி திருச்சங்குகள் பொலிந்தன: கருநெய்தற்பூவோ! கடல்தானோ! என்னும்படியான வடிவு தோன்றிற்று; அவ்வடிவழகுக்கும் கண்ணழகுக்கும் எல்லை காணமுடியவேயில்லை: நம்முடைய பிராணன்தான் இங்ஙனே உருவெடுத்து வெளித்தோன்றுகின்றதோ என்று நினைக்கலாம்படி பரமப்ரீதிக்கு இலக்காயிருந்தார். இப்படி நித்யஸூரிகளும் பிராட்டிமாரும் திவ்யாயுதங்களும் திவ்யமங்கள விக்ரஹமும் ஸ்பஷ்டமாக

விளங்கச்செய்தேயும் இவரை இன்னாரென் றறுதியிடமாட்டாத நான் இவரார் கொல்! என்றேன்; 'நான் தான் அட்டபுயகரத்தேன்' என்றார் – என்கிறாள்.

மடந்தை—பத்தொன்பது வயதுள்ள பெண்: பொதுவாகப் பெண்பாலுக்கும் பெயராக வழங்கும்: (அ)

1124. தஞ்சமிவர்க்கென்வளையும்நில்லா நெஞ்சமும்தம்மதேசிந்தித்தேற்கு *
வஞ்சிமருங்குல்நெருங்கநோக்கி வாய்திறந்தொன்றுபணித்ததுண்டு *
நஞ்சமுடைத்திவர்நோக்கும்நோக்கம் நானிவர்தம்மையறியமாட்டேன் *
அஞ்சுவன்மற்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே. (கூ)

தஞ்சம்	நிச்சயமாக
என் வளையும்	எனது கைவளைகளும்
இவர்க்கு நில்லா	இவரை நோக்கி (என் கையில்) நிற்கின்றன வில்லை;
சிந்தித்தேற்கு	நான் ஆராயுமளவில்
நெஞ்சமும்	எனது மனமும்
தம்மதே	இவருடையதேயாம்;
வஞ்சி மருங்குல்	வஞ்சிக்கொடிபோன்ற(எனது) இடையானது
நெருங்க	துவளும்படியாக
நோக்கி	கடாக்ஷித்து
வாய் திறந்து	தனது திருப்பவளத்தைத் திறந்து
ஒன்று பணித்தது உண்டு	ஒருவார்த்தை சொன்னது முண்டு;
இவர் நோக்கும் நோக்கம்	இவர் பார்க்கிற பார்வையானது
நஞ்சம் உடைத்து	விஷங்கலந்ததுபோலே கொடிதாயிருக்கின்றது;
நான் இவர் தம்மை அறிய மாட்டேன்	நான் இவருடைய படியை அறிகின்றிலேன்;
இவர் ஆர் கொல் என்ன	இவரார் என்று கேட்கவும்
அஞ்சுவன்	பயப்படுகின்றேன்; (ஆயினும் தாமே) அட்டபுயகரத்தேன் என்றார்—

* * * என்னுடைய கைவளைகளும் என்னுடைய நெஞ்சமும் என் பக்கலில் சிறிதும் தங்குகின்றன வில்லை; அவரிடத்திலேயே சென்று சேர்ந்துவிட்டன; (அதாவது—உடம்பு மெலிந்து மூர்ச்சையுமடைந்தேன் என்றவாறு.) இப்படி என்னிடத்திலுள்ளவற்றை யெல்லாம் கொள்ளைகொண்ட பின்பும் 'இவளிடத்தில் இன்னமும் ஏதாவது தங்கியிருப்பதுண்டாகில் அதையும் கொள்வோம்' என்றெண்ணி என் இடையை உற்றுநோக்கி ஏதோவொரு வார்த்தையும் வாய்விட்டுச் சொன்னார்; அவர் பார்க்கிற பார்வையோ கண்ணாலே கொளுத்துவதுபோல் கொடிதாயிராநின்றது; இவர் நம்மை ரக்ஷிக்க வந்தவரா! அல்லது பக்ஷிக்க வந்தவரா என்று எனக்கு விளங்கவில்லை; இவரார் கொல்! என்று கேட்கவும் எனக்கு அச்சமுண்டாகிவிட்டது; என்னுடைய அச்சத்தைத் தெரிந்துகொண்டு அவர் தாமே 'என்னை வேற்றுருவாக நினைத்து அஞ்சவேண்டா; நீ அஞ்சவேண்டாதபடி அட்டபுயகரத்திலே எளியனாய் வந்து நிற்கிறவனன்றோ நான்' என்றார்—என்கிறாள்,

"என்வளையும் இவர்க்கு நில்லா" என்றது-இவர்க்காக, என்னிடத்தில் நில்லா என்றபடி. "இங்கே குடியிருப்பாய் அவர்க்காக வர்த்திக்கின்றனவா யிருந்தன" என்பது வியாக்கியான வருளிச்செயல். தத்2யம் [தத்யம்] என்ற வடசொல் தஞ்சமெனத் திரிந்தது; உண்மையாக என்கை. (கூ)

1125 மன்னவன்தொண்டையர்கோன்வணங்கும் நீண்முடிமாலைவயிரமேகன் *
தன்வலிதன்புகழ்சூழ்ந்தகச்சி அட்டபுயகரத்தாதிதன்னை *
கன்னிநன்மாமதிள்மங்கைவேந்தன் காமருசீர்க்கலிகன்றி * குன்றா
வின்னிசையால்சொன்னசெஞ்சொல்மாலைஏத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே. (ώ)

தொண்டையர் கோன்	தொண்டைமண்டலத்திலுள்ளவர்கட்குத் தலைவனான
மன்னவன்	அரசனாலே
வணங்கும்	வணங்கப்பட்ட
நீள்முடி மாலை	நீண்ட திருவபிஷேகத்தையுடைய ஸர்வேச்வரனையும்,
வயிரமேகன் தன் வலி புகழ் சூழ்ந்த கச்சி	வயிரமேகனென்னும் பிரபுவின் பராக்கிரமமும் கீர்த்தியும் மலிந்த காஞ்சீபுரியிலே
அட்டபுயகரத்து	திருவட்டபுயகரத்திருப்பதியிலே எழுந்தருளியிருப்பவனையுமுள்ள
ஆதிதன்னை	முதல்வனான எம்பெருமானைக்குறித்து
கன்னி நல் மா மதிள் மங்கை வேந்தன்	அழிவற்ற நல்ல பெரிய மதிள்களையுடைய திருமங்கைக்குத் தலைவரும்
காமரு சீர்	விரும்பத்தக்க குணங்களையுடையவருமான
கலிகன்றி	கலியன்
குன்றா இன் இசையால் சொன்ன	குறைவில்லாத இனிய இசையுடனே அருளிச்செய்த
செம் சொல் மாலை	அழகிய இச்சொல் மாலையைக்கொண்டு
ஏத்த வல்லார்க்கு	(எம்பெருமானைத்) துதிக்க வல்லவர்களுக்கு
இடம் வைகுந்தம்	இருப்பிடம் வைகுண்டமாகும்.

*** முற்காலத்தில் பலபல அரசர்கள் பல திவ்யதேசங்களை அபிமானித்து ஸந்நிதி ஜீர்ணோத்தாரணம் முதலிய சிறப்புகளைச் செய்துவந்தார்கள்; இத்திருவட்டபுயகரத்தை வயிரமேக னென்னும் ஒரு தொண்டைநாட்டரசன் அபிமானித்திருந்தமையால் அதனை யருளிச்செய்கிறார் முன்னடிகளில். (௧0)

அடிவரவு:—திரிவெந்திறல் செம்பொன் மஞ்சு கலை எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் சொல்லு.

இரண்டாம்பத்து—ஒன்பதாந்திருமொழி — சொல்லுவன்சொற்பொருள்

(திருப்பரமேச்சுரவிண்ணகரப்பதிகம்)

தொண்டைமான் சக்ரவர்த்தி திருவட்டபுயகரத்தில் சிறப்புகள் செய்ததுபோல் பல்லவராஜன் இப்பரமேச்சுர விண்ணகரத்தில் பல திருப்பணிகள் செய்ததாக ப்ரஸித்தியுண்டாகையால் பாசுரந்தோறும் அப்பல்லவராஜனுடைய பெயரையும் புனைந்து பேசுகிறார். இத்திருமொழியில் ஒவ்வொரு பாட்டிலும் முன்னடிகளெல்லாம் பகவத்குண கீர்த்தனமாகவும் பின்னடிகள் பல்லவராஜனுடைய புகழ்ச்சியைப் பேசுவனவாகவும் உள்ளன. 1. “என்னாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்” என்றும், 2. “இழியக்கருதி ஓர் மானிடம் பாடலென்னாவதே” என்றும் நரஸ்துதியை இகழ்ந்து வெறுக்கு மாழ்வார்கள் மனிசரில் ஒருவரான அரசர்களை இப்படி புகழ்ந்து பேசுதல் தகுதியோவென்று சிலர் சங்கிப்பர்; உலகிலுள்ள க்ஷுத்ரகவிகளைப்போலே தங்கள் வயிறு வளர்க்கவேண்டி ஸ்துதி செய்கிறார்களல்லர் ஆழ்வார்கள்; இவ்வுலகில் எத்தனையோ அரசர்கள் தோன்றி பகவத் விமுகராயும் ஸ்வப்ரயோஜநபரராயும் காலங்கழியாநிற்க, இங்ஙனே சில அரசர்கள் பகவத் விஷயத்திலே அபிமாநம்பூண்டு கிஞ்சித்கரிக்கப்பெற்றார்களே! என்னும் உவப்பினால் அவர்களைப் புகழ்ந்து பேசுகிறவிது எம்பெருமானுடைய ஸ்தோத்ரத்திலே அந்தர்ப்பவிக்குமாதலால் குறையொன்றுமில்லையென்க.

1126.

சொல்லுவன்சொற்பொருள்தானவையாய்ச் சுவையூறொலிநாற்றமும்தோற்றமு
மாய்*நல்லரன்நாரணன்நான்முகனுக்கு இடந்தான்தடஞ்சூழ்ந்தழகாயகச்சி*
பல்லவன்வில்லவனென்றுலகில் பலராய்ப்பலவேந்தர்வணங்குகழற்
பல்லவன்*மல்லையர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (க)

சொல்லுவன் சொல் பொருள் அவை தான் ஆய்	ஸாமாந்ய சப்தங்களும் நித்ய சப்தமான வேதமும் இவற்றின் பொருளுமாகிய இவை, தானேயாய்	உலகில்	இவ்வுலகத்திலே
சுவை ஊறு ஒலி நாற்றமும் தோற்றமும் ஆய்	ரஸம் ஸ்பர்சம் சப்தம் கந்தம் ரூபம் ஆகிய பஞ்ச விஷயங்களும் தானேயாய்	பல்லவன் வில்லவன் என்று பலர் ஆய் பல வேந்தர்	பல்லவனென்றும் வில்லவனென்றும் பல பெயர்களாலே சொல்லக்கூடிய பல அரசர்களாலே
நல்அரன் நாரணன் நான்முகனுக்கு	சிவனுக்கு அந்தர்யாமியாயிருந்துகொண்டும் தானான தன்மையாலும் பிரமனுக்கு அந்தர்யாமியாயிருந்து கொண்டும்லோககாரியங்களை நடத்துமவனான எம்பெருமானுக்கு	வணங்கு கழல்	வணங்கப்பட்ட பாதத்தை யுடையவனும்
		மல்லையர்கோன்	மல்லாபுரியென்கிற திருக்கடல்மல்லையிலுள்ளார்க்குத் தலைவனுமான
		பல்லவன்	பல்லவராஜன்
இடம்	இருப்பிடம் (எதுவென்றால்);	பணிந்த	கைங்கரியம் செய்யப்பெற்ற
தடம் சூழ்ந்து அழகாய கச்சி	தடாகங்கள் சூழப்பெற்று அழகு பொலிந்த காஞ்சீபுரியிலே,—	பரமேச்சுர விண்ணகரம் அது	பரமேச்வர விண்ணகரமென்கிற திவ்ய தேசமாம்.

* * *—உலகத்திலுள்ள ஸகல ஸாமாந்ய சப்தங்களாலும் விசேஷ சப்தமாகிய வேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுபவனும், ஞானேந்திரியங்கள் ஐந்தாலும் அநுபவிக்கக்கூடியவனும், படைத்தல் காத்தல் அழித்தலென்னும் முத்தொழில்களையும் மூன்றுருக்கொண்டு நிர்வஹிக்குமவனுமான எம்பெருமான் கச்சித்திருப்பதியிலே பல்லவராஜனுடைய கைங்கரியங்களுக்குக் கொள்கலமான பரமேச்சுர விண்ணகரத்திலே எழுந்தருளியுள்ளான்—என்றாராயிற்று.

சொல்லு என்றவிடத்து, உகரம்-சாரியை; சொல் என்றபடி: சொல்லாவது உலகத்தில் வழங்கப்படும் சப்தராசிகள், கல் மண் முதலிய சொற்களெல்லாம் அவ்வப்பொருள்களுள் அந்தராத்மாவாய்

1. திருவாய்மொழி 3, 9, 1, 2. திருவாய்மொழி 3, 9, 3,

உறைப்பவனை எம்பெருமானளவும் சொல்லிநிற்குமென்பது வேதாந்திகளின் கொள்கை. இது, வடமொழியில் அபர்யவஸாநவ்ருத்தி எனப்படும். இனி, வன்சொல்லாவது—என்றுமழியாமல் வலிதாயிருக்கக்கூடிய சப்தம்; அதுதான் வேதம்.

[சுவையூறொலி நாற்றமும் தோற்றமுமாய்] ரஸம், ஸ்பர்சம், சப்தம், கந்தம், ரூபம் என்பன பஞ்சவிஷயங்களெனப்படும். உலக விஷயங்களைச் சிறிதுமறியாத யோகிகட்கு இவையெல்லாம் எம்பெருமான் தானேயாயிருப்பன்.

இரண்டாமடியில் "நல்லரன் நான்முகன் நாரணனுக்கு" என்றும் ஒரு பாடமுண்டு; அரனுக்கும் நான்முகனுக்கும் அந்தர்யாமியான நாராயணனுக்கு என்று பொருளாம்.

[பல்லவன்வில்லவனித்யாதி] முற்காலத்தில் பல்லவனென்றும் வில்லவனென்றும் பல அரசர்களிருந்தனர்; அவர்கள் வணங்கப்பெற்ற பாதத்தையுடையவன் என்று பல்லவராஜனுடைய பெருமேன்மையைப் பேசினராயிற்று. இவ்வரசன் மல்லாபுரி யென்னும் திருக்கடல்மல்லையைப் படைவீடாகக்கொண்டு அரசாட்சி புரிந்து வந்தமைபற்றி மல்லையர்கோன் எனப்பட்டான். **பணிந்த** என்றது—இவ்வரசனுடைய பல கைங்கரியங்களுக்குப் பாத்திரமான என்றபடி.

கழற்பல்லவன் என்றதற்கு—பல்லவம் போன்ற பாதத்தையுடையவன் என்றும் பொருள் கொள்வர் சிலர். பல்லவமாவது—தளிர்; வட சொல். (க)

1127. கார்மன்னுநீள்விசும்பும் கடலும்சுடரும்நிலனும்மலையும்*தன்னுந்தித்
தார்மன்னுதாமரைக்கண்ணனிடம் தடமாமதிள்சூழ்ந்தழகாயகச்சி*
தேர்மன்னுதென்னவனைமுனையில் செருவில்திறல்வாட்டியதிண்சிலையோன்*
பார்மன்னுபல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (உ)

கார் மன்னு நீள் விசும்பும்	மேகங்கள் பொருந்திய பெரிய ஆகாசமென்ன
கடலும்	ஸமுத்திரங்களென்ன
சுடரும்	சந்திரன் ஸூரியன் முதலிய சுடர்ப் பொருள்களென்ன
நிலனும்	பூமியென்ன
மலையும்	குலபர்வதங்களென்ன
	(ஆகிய இவையெல்லாம்)
தன் உந்தி தார் மன்னு	தனது திருநாபிக் கமலத்தில் நின்றும் உண்டாகப்பெற்ற
தாமரை கண்ணன்	புண்டரீகாக்ஷனுக்கு
இடம்	இருப்பிடமாவது—;

தடம் மா மதிள் சூழ்ந்து அழகாய கச்சி	தடாகங்களாலும் பெரிய மதிள்களாலும் சூழப்பட்டு அழகான காஞ்சீபுரியிலே,—
முனையில்	போர்க்களத்திலே
தேர் மன்னு தென்னவனை	மஹாரதனை பாண்டிய ராஜனுடைய
செரு வில் திறல் வாட்டிய	சண்டை செய்யும் வில்லின் வலியைப் பங்கப்படுத்தின்
திண் சிலையோன்	வலிய வில்லையுடையனாய்
பார் மன்னு	இப்பூமியில் நெடுங்காலம் வாழ்ந்திருந்த
பல்லவர்கோன்	பல்லவராஜன்
பணிந்த	கைங்கர்யம் செய்யப்பெற்ற
	பரமேச்சுர விண்ணகரம் அதுவே—.

* * *—விசும்பு, கடல், சுடர், நிலம், மலை முதலான பொருள்கள் உந்திக்கமலத்திலே மன்னியிருக்கையாவது இவற்றுக்கெல்லாம் பிறப்பிடமா யிருக்கை. இத்தால்—உலகங்களைப் படைப்பவனை நான்முகக் கடவுளைப் பிறப்பித்த உந்திக் கமலத்தை யுடையவன் என்பதாகக்கொள்க. உந்தித்தார்= தார் என்று புஷ்பத்துக்கும் பெயர். (உ)

1128. உரந்தருமெல்லணைப்பள்ளிகொண்டான் ஒருகால்முனம்மாவுருவாய்க்கடலுள்*
வரந்தருமாமணிவண்ணனிடம் மணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *
நிரந்தவர்மண்ணையில்புண்ணுகர்வேல் நெடுவாயிலுகச்செருவில்முனநாள் *
பரந்தவன்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ங)

முனம் ஒருகால்	முன்பொருகால்
மா உரு ஆய்	விலக்ஷணமான வடிவுடையனாய்
கடலுள்	திருப்பாற்கடலிலே
உரம் தரு மெல் அணை	வலிமிக்க மிருதுவான சேஷ சயனத்திலே
பள்ளி கொண்டான்	திருக்கண்வளர்ந்தவனும்
வரம் தரும்	வரதனென்று திருநாமமுடையவனும்
மா மணி வண்ணன்	நீலமணிபோன்ற நிறத்தனுமான பெருமானுக்கு
இடம்	இடமாவது,—

மணி மாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி	ரத்நமயமான மாடங்களாலே சூழப்பட்டு அழகு பொலிந்த கச்சிப்பதியிலே,—
முனநாள்	முற்காலத்தில்,
மண்ணையில் நிரந்தவர்	மண்ணையென்னும் நகரத்திலுள்ள சத்ரு ராஜாக்களானவர்கள்
புண் நுகர் வேல் நெடு வாயில் உக	மாம்ஸங்களைக் கவர்கின்ற வேலாயுதத்தின் கொடிய வாயிலே பட்டு முடியும் படியாக

செருவில்	போர்க்களத்திலே
பரந்தவன்	வியாபித்தவனை
பல்லவர்கோன் பணிந்த	பல்லவராஜன் பணிவிடை செய்யப்பெற்ற

பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—

* * * திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வான்மீது சயனித்தருள்பவனும் திருவத்திமாமலையில் பேரருளாளப் பெருமாளாய் வரதராஜன் என்று திருநாமம்பூண்டு ஸேவை ஸாதிப்பவனுமான எம்பெருமானே பரமேச்சுரவிண்ணகரத்தில் ஸ்ரீ வைகுண்ட நாதனைக் காட்சி தந்தருள்கிறானென்கிறார்.

மண்ணையிலிருந்த சத்துருக்கள் இவ்வரசனது வேற்படையின் வாயிலே மாண்டொழிந்தனராம். உக=உகுதலாவது பொடியாய்ப் போதல். (௩)

1131. அண்டமுமெண்டிசையும்நிலனும் அலைநீரொடுவானெரிகால்முதலா
வுண்டவன் * எந்தைபிரானதிடம் ஒளிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி *
விண்டவரிண்டைக்குழாமுடனே விரைந்தாரிரியச்செருவில்முனிந்து *
பண்டொருகால்வளைத்தான்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (௪)

அண்டமும்	அண்டங்களையும்
எண் திசையும்	எட்டுத்திசைகளையும்
நிலனும்	பூமியையும்
அலை நீரொடு	கடல்களையும்
வான்	ஆகாசத்தையும்
எரி	அக்நியையும்
கால்	காற்றையும்
முதலா	இவை முதலான மற்றும் பல பொருள்களையும்
உண்டவன்	(பிரளயம் கொள்ளாதபடி) திருவயிற்றிலே வைத்து நோக்கின
எந்தைபிரானது	எம்பெருமானுக்கு
இடம்	இடமாவது,—

ஒளி மாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி—;

பண்டு ஒருகால்	முன்னொரு காலத்தில்
செருவில்	போர்க்களத்திலே
விரைந்தார்	சண்டை செய்ய விரைந்து வந்தவர்களான
விண்டவர்	பகைவர்கள்
இண்டை குழாமுடனே	நெருங்கின (தங்களது) கூட்டங்களோடே
இரிய	சிதறியோடும்படி
முனிந்து	சீறி
வளைத்தான்	வில்லைவளைத்தவனை பல்லவராஜன்
பணிந்த	கைங்கரியம் செய்யப்பெற்ற

பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—

* * *—"செருவில் வளைத்தான்" என்று கூட்டி அந்வயித்து, செரு—போர் செய்கின்ற வில் - வில்லை, வளைத்தான் என்றுரைப்பாருமுண்டு. வளைத்தான் என்பதற்கு, சூழ்ந்துகொண்டானென்றும் பொருளுண்டாகையால், சிதறியோடவேண்டும்படி பகைவரை ஆக்ரமித்துக் கொண்டானென்றும் உரைக்கலாம். (௪)

1132. தூம்புடைத்திண்கைவன்தாள்களிற்றின் துயர்தீர்த்தரவம்வெருவ*முனநாள்
பூம்புனல்பொய்கைபுக்கானவனுக்கு இடந்தான்தடஞ்சூழ்ந்தழகாயகச்சி*
தேம்பொழில்குன்றெயில்தென்னவனைத் திசைப்பச்செருமேல்வியந்தன்றுசென்ற*
பாம்புடைப்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (௫)

முன நாள்	முன்னொரு காலத்தில்
தூம்பு உடை திண் கை வன் தாள் களிற்றின்	துளையையுடைய துதிக்கையையும் வலியுள்ள காலையுமுடைய கஜேந்திராழ்வானது
துயர்	துன்பத்தை
தீர்த்து	போக்கினவனும்,
பூம் புனல் பொய்கை	அழகிய நீரையுடைய பொய்கையிலே
அரவம்	காளிய நாகம்
வெருவ	அஞ்சும்படியாக
புக்கான் அவனுக்கு	பாய்ந்தவனுமிருக்கிற எம்பெருமானுக்கு
இடம்	இருப்பிடமாவது,—

தடம் சூழ்ந்து அழகாய கச்சி,—

தேம் பொழில் குன்று எயில் தென்னவனை	தேன் நிறைந்த சோலைகளையும் மலைபோன்ற மதிள்களையுமுடைய பாண்டிய நாட்டின் அரசன்
திசைப்ப	அறிவு கலங்கும்படி
அன்று	முன்பு
செரு மேல்	போர்க்களத்திலே
வியந்து சென்ற	விருப்பத்துடனே போய்ச் சேர்ந்தவனும்
பாம்பு உடை	நாகத்தைக் கொடியாக வுடையவனுமான
பல்லவர் கோன்	பல்லவராஜன்
பணிந்த	கிஞ்சித்கரிக்கப்பெற்ற

பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—.

* * *—'தென்னவனை" என்றவிடத்து-ஐகாரம் அசை. பாம்புடை=ஒவ்வொரு அரசனுக்கு ஒவ்வொன்று த்வஜமாயிருக்கும்; பல்லவராஜன் நாகலோகத்தளவுஞ் சென்று வென்று வந்தவனென்பதற்கு அறிகுறியாக நாகத்தைக் கொடியாகவுடையனயிருப்பனும். (குருவம்சத்து அரசர்களில் துரியோதனன் அரவுநீள்கோடியோன் எனப்படுவன்.) (௫)

1133. திண்படைக்கோளரியினுருவாய்த் திறலோனகலம்செருவில்முனநாள்*
புண்படப்போழ்ந்தபிரானதிடம் பொருமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி* [த்த*
வெண்குடைநீழல்செங்கோல்நடப்ப விடவெல்கொடிவேற்படைமுன்னுயர்
பண்புடைப்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (கூ)

முனநாள்	முன்னொரு காலத்திலே
திண் படை	கூர்மையான (நகங்களாகிற) ஆயுதங்களையுடைய
கோள் அரியின் உரு ஆய்	வலிமிக்க நரஸிம்ஹ மூர்த்தியாய்த்தோன்றி
செருவில்	போர்க்களத்தில்
திறலோன் அகலம்	மஹாபலசாலியான இரணியனது மார்வை
புண் பட போழ்ந்த	புண்படும்படி கிழித்தெறிந்த
பிரானது	எம்பெருமானுக்கு
இடம்	இருப்பிடமாவது,—
பொரு மாடங்கள் சூழ்ந்து	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற மாடங்கள் நிறைந்திருப்பதனால்
அழகாய	அழகுபொலிந்திருக்கிற
கச்சி	கச்சிப்பதியிலே,—
வெண் குடை நீழல்	வெண் கொற்றக் குடையின் நிழலில் (வீற்றிருந்து கொண்டு)
செங்கோல் நடப்ப	தனது கட்டளை விலைச்செல்லும்படி (அரசாண்டவனும்)
விடம் வெல்கொடி	பாம்பாகிற வெற்றிக்கொடியையும்
வேல் படை	வேல் என்னு மாயுதத்தையும்
முன் உயர்த்த	சேனைகளின்முன்னே உயர எடுத்தவனும்
பண்பு உடை	நீதி தவறாதவனுமான

பல்லவர் கோன்—; பணிந்த—;
பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—.

பல்லவராஜனுடைய பெருமேன்மையைப் பேசுகிற மூன்றாமடியின் பிற்பகுதியில் “ விட வெல் கொடி ” என்றும், “ விடை வெல்கொடி ” என்றும், “விறல் வெல்கொடி” என்றும் மூன்று வகையான பாடங்கள் உள்ளனவாக வியாக்கியானம் காண்கிறது. முந்தின பாடத்தில், விடம் என்றது விஷமுடைத்தான நாகத்தைச் சொன்னபடியாய் நாகக்கொடியோன் என்றதாகிறது. இரண்டாவது பாடமே பெரும்பான்மையாக வழங்குகின்றது; விடை என்று இளம் பாம்புக்கும் பெயருண்டென்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார். எருது என்னும் பொருளையே கொண்டாலும் குறையில்லை; பல்லவனுக்கு ஆதிகாலமாக விருஷபக்கொடி இருந்ததென்றும், பின்பு நாகலோகத்தளவுஞ் சென்று வென்றுவந்தது காரணமாக நாகக்கொடி உண்டாயிற்றென்றும் வரலாறு உள்ளதாகச் சொல்லக் கேள்வியுண்டு.

திண்படை=நரஸிம்ஹமூர்த்திக்கு நகங்கள் தவிர வேறு ஆயுதமொன்று மில்லாமையினால் அந்த நகங்களையே இங்குத் திண்படை யென்கிறார். (கூ)

1134. இலகியநீண்முடிமாவலிதன்பெருவேள்வியில் மாணுருவாய்முனநாள்*
சலமொடுமாநிலங்கொண்டவனுக்கு இடந்தான்தடஞ்சூழ்ந்தழகாயகச்சி*
உலகுடைமன்னவன்தென்னவனைக் கன்னிமாமதிள்சூழ்கருவூர்வெருவ*
பலபடைசாயவென்றான்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (எ)

முன நாள்	முன்னொருகால்,
இலகிய நீள் முடி	விளங்காநின்ற நீண்ட கிரீடத்தையுடைய
மாவலி தன்	மஹாபலியினது
பெரு வேள்வியில்	பெரிய யாகத்திலே
மாண் உரு ஆய்	வாமந ரூபியாய் (சென்று)
சலமொடு	கபடமான வகையாலே
மா நிலம் கொண்டவனுக்கு	உலகத்தையெல்லாம் ஆக்ரமித்துக்கொண்ட பெருமானுக்கு
இடம்	இருப்பிடமாவது—;

தடம் சூழ்ந்து அழகாய கச்சி—;

கன்னி மா மதிள் சூழ் கருவூர் வெருவ	அழிவில்லாத பெரிய மதிள்களாலே சூழப்பட்ட கருவூர் என்னும் நகரம் நிலைகலங்கவும்
பல படை சாய	சதுரங்க ஸேனை முடியும்படியாகவும்,
உலகு உடை மன்னவன் தென்னவனை வென்றான்	உலகங்களை அடிமையாகவுடைய அரசனாயிருந்த பாண்டியனை வென்ற பல்லவன்

பணிந்த—; பரமேச்சுரவிண்ணகரம் அதுவே.—

சலமோடு=‘ ஜலம் ’ என்ற வடசொல் சலமெனத் திரிந்ததென்று கொண்டால், மாவலியானவன் தத்தம் பண்ணுதற்காக விட்ட நீர்த்தாரையுடனே என்று பொருளாம்; ‘ ஹஞு ’ என்ற வடசொல் சலமெனத் திரிந்ததென்று கொண்டால் க்ருத்ரிமவகையினால் என்றதாகிறது. சிறிய வடிவைக் காட்டிப் பெரிய வடிவாலே அளந்துகொண்ட க்ருத்ரிமம்.

பாண்டியராஜனுடைய நகரங்களுள் ஒன்றான கருவூரையும் பல்லவராஜன் வென்று கைக்கொண்டபடியைப் பின்னடிகளில் பேசினாயிற்று. (எ)

1135. குடைத்திறல்மன்னவனாயொருகால் குரங்கைப்படையா*மலையால்கடலை
யடைத்தவனெந்தைபிரானதிடம் அணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி*
விடைத்திறல்வில்லவன்நென்மெலியில் வெருவச்செருவேல்வலங்கைப்
பிடித்த*படைத்திறல்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே.

ஒரு கால்	முன்னொரு காலத்தில்,
குடை திறல் மன்னவன் ஆய்	வெண் கொற்றக்குடையையும் பெரு மிடுக்கையுமுடைய சக்ரவர்த்தி திருமகனாய் (அவதரித்து)
குரங்கை	வாநரவீரர்களை
படையா	ஸேனையாகக்கொண்டு
மலையால்	மலைகளினால்
கடலை	தெற்கு ஸமுத்ரத்தை
அடைத்தவன்	அணைகட்டி யடைத்தவனான
எந்தை பிரானது	எம்பெருமானுக்கு
இடம்	இருப்பிடமாவது,—

அணி மாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி—;

நென் மெலியில்	நென்மெலி யென்னும் நகரத்தில்
விடை திறல்	காளையின் வலிவுபோன்ற வலிவையுடையனான
வில்லவன்	வில்லவனென்கிற அரசன்
வெருவ	அஞ்சி நடுங்கும்படி
செரு வேல்	யுத்தத்திற்குக் கருவியான வேற்படையை
வலம் கை பிடித்த	வலக்கையிலே பிடித்தவனும்
படை திறல்	ஆயுதங்களை ஆளத்தக்க மிடுக்கை யுடையனுமான

பல்லவர் கோன்—; பணிந்த—;
பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—.

1136. பிறையுடைவாணுதல்பின்னைதிறத்து முன்னேயொருகால்செருவிலுருமின்*
மறையுடைமால்விடையேழடர்த்தாற்கு இடந்தான்தடஞ்சூழ்ந்தழகாயகச்சி*
கறையுடைவாள்மறமன்னர்கெடக் கடல்போல்முழங்குங்குரல்கடுவாய்*
பறையுடைப்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (௬)

முன்னே ஒருகால்	முன்னொருகால்
பிறை வாள் உடை நுதல் பின்னை திறத்து	சந்திர கலைபோன்று ஒளியை யுடைத்தான நெற்றியை யுடையளான நப்பின்னைக் காக
உருமின்	இடிபோன்ற கர்ஜனையை யுடையவைகளாய்
மறை உடை	எதிர்த்து வருகையை யுடையவைகளான
மால் விடை ஏழ்	பெரிய ஏழு ரிஷபங்களை
செருவில்	போர்க்களத்தில்
அடர்த்தாற்கு	வலியடக்கின பெருமானுக்கு
இடம்	இருப்பிடமாவது—,

தடம் சூழ்ந்து அழகாய கச்சி—;

கறை உடை வாள்	ரத்தக்கறை மாறாத வாளை யுடையவர்களும்
மறம்	த்வேஷமுடையவர்களுமான
மன்னர்	எதிரரசர்கள்
கெட	முடிந்துபோம்படியாக
கடல்போல் முழங்கும் குரல்	கடல்போலே கோஷம் செய்கிற குரலையுடைய
கடுவாய்ப் பறை உடை	கடுவாய்ப் பறையை உடையவனான

பல்லவர் கோன்—; பணிந்த—;
பரமேச்சுரவிண்ணகரம் அதுவே—.

உருமு='உரும்' என்றாலும் 'உருமு' என்றாலும் இடிக்குப் பெயர்; இலக்கணையால் இடி போன்ற குரலைச் சொல்லுகின்றதிங்கெனக் கொள்க.

கடுவாய்ப்பறையுடை=பல்லவராஜனிடமிருந்த பறைக்கு—'கடுவாய்ப்பறை' என்று பெயர் வழங்கி வந்ததாகச் சில செப்பேடுகளிற் காண்கிறது. (௬)

1137. பார்மன்னுதொல்புகழ்ப்பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகர்மேல்*
கார்மன்னுநீள்வயல்மங்கையர்தம்தலைவன் கலிகன்றிகுன்றாதுரைத்த*
சீர்மன்னுசெந்தமிழ்மாலைவல்லார் திருமாமகள்தன்னருளால்*உலகில்
தேர்மன்னராயொலிமாகடல்சூழ் செழுநீருலகாண்டுதிகழ்வர்களே. (௭)

பார் மன்னு தொல் புகழ்	இப்பூமியிலே நிலைத்து நின்ற பெரும்புகழையுடைய
பல்லவர் கோன்	பல்லவராஜன்
பணிந்த	கைங்கரியங்கள் செய்யப் பெற்ற
பரமேச்சுரவிண்ணகர்மேல்	பரமேச்சுரவிண்ணகர மென்னும் திருப்பதி விஷயமாக
கார் மன்னு நீள் வயல் மங்கையர் தம் தலைவன்	சினைகொண்ட பெரிய கழனிகளையுடைய திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவரான
கலிகன்றி	கலியன்
குன்றாது	இலக்கணக் குறையொன்று மின்றி
உரைத்த	அருளிச்செய்த

சீர் மன்னு செம் தமிழ் மாலை	அழகு பொருந்திய செந்தமிழினலாகிய இப் பாமாலைகள்
வல்லார்	ஓதவல்லவர்கள்
திரு மா மகள் தன் அருளால்	பெரிய பிராட்டியாருடைய கிருபையினால்
உலகில்	இவ்வுலகத்திலே
தேர் மன்னர் ஆய்	தேரை நடத்தவல்ல அரசர்களாகி
ஒலி மா கடல் சூழ்	ஆரவாரிக்கின்ற பெரிய கடலாலே சூழப்பட்ட
செழு நீர் உலகு	செழிப்பான நீர்மையை யுடைய உலகையெல்லாம்
ஆண்டு	ஆண்டுகொண்டு
திகழ்வர்கள்	விளங்குவார்கள்.

அடிவரவு:—சொல்லு கார் உரம் அண்டமும் தூம்பு திண் இலகிய குடை பிறை பார் மஞ்சாடு.

இரண்டாம் பத்து—பத்தாந்திருமொழி—மஞ்சாடுவரையேழும்

(திருக்கோவலூர்ப்பதிகம்)

அவதாரிகை:—இவ்விரண்டாம்பத்தின் முதல் திருமொழியோடே வடநாட்டுத் திருப்பதிகளின் அநுபவத்தைத் தலைக்கட்டி, அதற்குமேல் தொண்டை நாட்டுத் திருப்பதிகளின் அநுபவத்திலே இழிந்த ஆழ்வார், திருவெவ்வுளூர் திருவல்லிக்கேணி திருநீர்மலை திருக்கடன்மல்லை திருநின்றவூர் திருவிடவெந்தை திருப்புட்குழி திருவட்டபுயகரம் திருப்பரமேச்சுரவிண்ணகரம் ஆகிய திருப்பதிகளைக் கீழ்த்திருமொழியளவாக அநுபவித்து, இனி நடுநாட்டுத் திருப்பதிகளான திருக்கோவலூரையும் திருவயிந்திரபுரத்தையும் அநுபவிக்க விரும்பி இத்திருமொழியால் திருக்கோவலூரில் ஆழங்காற்படுகிறார்.

கோபாலன் எனப்படுகிற ஆயனார் எழுந்தருளியிருக்கும் திவ்யதலமாதல்பற்றி இதற்கு 'திருக்கோவலூர்' என்று திருநாமமாயிற்று. 'கோபால' என்ற வடசொல் 'கோவல்' எனத் திரிந்தது. கோபாலபுரமென்க. "பாவருந்தமிழாற் பேர்பெறு பனுவற்பாவலர் பாதிநாளிரவின், மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுதநன்னாடு" என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதி பாடின தலம் இது. *

1138. மஞ்சாடுவரையேழும்கடல்களேழும் வானகமும்மண்ணகமும்மற்றுமெல்லாம் *
எஞ்சாமல்வயிற்றடக்கியாலின்மேலோர் இளந்தளிரில்கண்வளர்ந்தவீசன்தன்னை *
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும்பெண்ணைத்தென்பால் தூயநான்மறையாளர்சோமுச்செய்ய *
செஞ்சாலிவிளைவயலுள்திகழ்ந்துதோன்றும் திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே (க)

மஞ்சு ஆடு வரை ஏழும்	மேகங்கள் உலாவப்பெற்ற குலபர்வதங்கள் ஏழும்
கடல்கள் ஏழும்	ஸமுத்ரங்கள் ஏழும்
வானகமும்	ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்களும்
மண்ணகமும்	மண்ணுலகமும்
மற்றும் எல்லாம்	மற்றுமுள்ள எல்லாப் பொருள்களும்
எஞ்சாமல்	அழிந்து போகாதபடி
வயிறு அடக்கி	(இவற்றையெல்லாம்) திருவயிற்றிலே எடுத்து வைத்து
ஓர் ஆலின் இளதளிரின்மேல் கண் வளர்ந்த	ஒப்பற்ற ஆலமரத்தினுடைய பால்மாறாத இளந்தளிரிலே துயில் கொண்ட
ஈசன் தன்னை	ஸ்வாமியை—,
வளம் நீர்	மணிகள் முத்துக்கள் முதலியவற்றைக் கொழிக்கின்ற நீரானது
துஞ்சா	ஒருகாலும் மாறாமல்
சுரக்கும்	பெருகி வரப்பெற்ற
பெண்ணை	பெண்ணையாற்றினுடைய
தென்பால்	தென்கரையிலே,
தூய	ஒருபலனையும் விரும்பாமையாகிற மனத்தூய்மையை யுடையவர்களாய்
நால் மறை ஆளர்	நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தவர்களான வைதிகோத்தமர்கள்
சோமு செய்ய	ஸோமயாகங்களைப் பண்ண (அத்தாலே)
செம் சாலி	செந்நெற்பயிர்களானவை
விளை வயலுள்	விளைநிலமான வயல்களிலே
திகழ்ந்து தோன்றும்	செழித்து விளங்கப்பெற்ற
திருக்கோவலூர் அதனுள்	திருக்கோவலூரென்னும் திருப்பதியிலே
நான் கண்டேன்	நான் ஸேவிக்கப்பெற்றேன்

* * * ஸோமம் என்ற வடசொல் சோமு எனத் திரிந்தது. ஸோமலதையின் ரஸத்தைப் பருகுதலை அங்கமாகவுடையதும் மூன்று வருஷங்களால் ஸாதிக்கத்தக்கதுமாம் ஸோமயாகம். சாலி—வடசொல்,

1139.

கோந்தலர்ந்தநறுந்துழாய்சாந்தந்தூபம் தீபங்கோண்டமரர்தோழப்பணங்கோள்பாம்பில் *
சந்தணிமேன்முலேமலராள்தரணிமங்கை தாமிருவரடிவருடுந்தன்மையானே *
வந்தனேசெய்திசையேழாறங்கம் ஐந்துவளர்வேள்விநான்மறைகள்மூன்றுதீயும் *
சிந்தனேசெய்திருபோழுதுமோன்றுஞ் சேல்வத்திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (உ)

அமரர்	பிரமன் முதலான தேவர்கள்
கொந்து அலர்ந்த நறுதுழாய்	கொத்துக்கொத்தாக அலர்கின்ற மணம்மிக்க திருத்துழாய் மலர்களேயும்
சாந்தம்	சந்தனத்தையும்
தூபம்	தூபத்தையும்
தீபம்	தீபத்தையும்
கொண்டு	கையிலேந்திக்கொண்டு
தொழ	ஆச்ரயிக்க
பணம் கொள் பாம்பில்	(ஆனந்தத்தினல்) படமெடுத்திருக்கிற திருவனந்தாழ்வான் மேலே,
சந்து அணி மெல் முலே மலராள்	சந்தனத்தாலே அலங்கரிக்கப்பட்ட மெல்லிய முலேகளேயுடைய பெரிய பிராட்டியும்
தரணி மங்கை	பூமிப்பிராட்டியும் ஆகிற
இருவர் தாம்	இரண்டு தேவிமார்களும்
அடி வருடும் தன்மையானே	திருவடிகளேப் பிடிக்கும்படியாகவுள்ள எம்பெருமானே,
ஏழ் இசை	ஸப்தஸ்வரங்களேயும்
ஆறு அங்கம்	ஆறு அங்கங்களேயும்
ஐந்து வளர் வேள்வி	பஞ்ச மஹா யஜ்ஞங்களேயும்
மூன்று தீயும்	மூன்று அக்நிகளேயுங்கொண்டு
வந்தனே செய்து	எம்பெருமானே யடிபணிந்து
நால் மறைகள்	நான்கு வேதங்களே
இருபொழுதும்	இரவும் பகலும்
சிந்தனே செய்து	அநுஸந்தித்துக்கொண்டு
ஒன்றும்	(வைதிகர்கள்) பொருந்தி வாழ்வதற்கிடமான
செல்வம்	அழகு பொலிந்த

திருக்கோவலூரதனுள்—;
நான் கண்டேன்—.

1140.

கோழுந்தலரும்மலர்ச்சோலேக்குழாங்கோள்போய்கைக் கோள்முதலேவாளேயிற்றுக்கோண் [டற்கேள்கி *
அழுந்தியமாகளிற்றினுக்கன்றாழியேந்தி அந்தரமேவரத்தோன்றியருள்சேய்தானே *
எழுந்தமலர்க்கருநீலமிருந்தில்காட்ட இரும்புன்னேமுத்தரும்பிச்சேம்போன்காட்ட *
சேழுந்தடநீர்க்கமலம்தீவிகைபோலகாட்டும் திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (ரு)

அன்று	முன்பொருகால்,
கொழுந்து	தளிர்களேயும்
அலரும் மலர்	விகஸிக்கின்ற புஷ்பங்களேயுமுடைய
சோலே குழாம் கொள் பொய்கை	சோலேகளின் கூட்டங்கள் சூழ்ந்த தடாகத்திலே
கோள் முதலே	வலிவுள்ள முதலே
வாள் எயிறு	(தனது) வாள்போன்ற பற்களினல்
கொண்டற்கு	காலேக் கவ்வினதற்கு
எள்கி	மெலிந்து
அழுந்திய	வருந்தின
மா களிற்றினுக்கு	கஜேந்திராழ்வானுக்காக
ஆழி ஏந்தி	திருவாழியை எடுத்துக்கொண்டு
அந்தரம் மேவர தோன்றி	ஆகாசம் இடமடையும்படி வந்து தோன்றி
அருள் செய்தானே	(அவ்வானேக்குக்) கிருபை பண்ணின பெருமானே.—
எழுந்த	(நீரில்நின்றும்) மேற்கிளம்பின
கரு நீலம் மலர்	கருநெய்தற் பூவானது
இருந்தில் காட்ட	கரிபோல் விளங்கவும்
இரு புன்னே	பெரிய புன்னே மரங்களானவை
அரும்பி	அரும்புகளுண்டாகப் பெற்றதனல்
முத்து	முத்துக்களேயும் (மலர்களுண்டாகப் பெற்றதனல்)
செம் பொன்	பசும்பொன்னேயும்
காட்ட	தோற்றுவிக்கவும்,
செழுநீர் தடம் கமலம்	செழித்த நீரையுடைய தடாகங்களில் தாமரைகள்
தீவிகை போல் காட்டும்	விளக்குப்போலே விளங்கவும் பெற்ற

திருக்கோவலூரதனுள், நான் கண்டேன்—.

* * *—இரண்டாமடியில், ‘அந்தரமேவர” என்பதை, ‘அந்தரம் மேவர’ என்று பிரிக்க. மே—வினேப்பகுதி; ‘வர’ என்பது துணேவினே: மேவ என்றபடி. மேவுதலாவது-இடமடையும்படி நிரம்பியிருத்தல். கஜேந்திராழ்வானுக்கு அருள்செய்ய எம்பெருமான் எழுந்தருளினபோது ஆகாசம் இடமடையும்படி யெழுந்தருளினுனென்றது-அவனெழுந்தருளின பெருமையைச் சொன்னபடி.

பின்னடிகளால் திருக்கோவலூரின் வயல்வாய்ப்பையும் பொழில்வாய்ப்பையும் வருணிக்குமாழ்வார், அவ்வூரை ஒரு பொற்களரியாக உருவகப்படுத்தி வருணிக்கிருர்: (பொற்களரியாவது—தட்டானுடைய காரியச்சாலே) அஃது எப்படியிருக்குமென்ருல், அங்கே கரிகள் கொட்டப்பட்டு நிரம்பியிருக்கும்; பொன்களும் முத்துக்களும் நிறைந்திருக்கும்; நெருப்பு ஜ்வலித்துக்கொண்டிருக்கும். இங்கே, கருநீல

மலர்கள் கரியாகவும், புன்னைமொக்குகள் முத்தாகவும், புன்னைப்பூக்கள் பொன்னாகவும், தாமரைப்பூக்கள் நெருப்பாகவும் திகழ்வனவாம். (௩)

1141.

தாங்கரும்போர்மாலிபடப்பறவையூர்ந்து தராதலத்தோர்குறைமுடித்ததன்மையானை*
ஆங்கரும்பிக்கண்ணீர்சோர்ந்தன்புகூரும் அடியவர்கட்காரமுதமானான் தன்னை*
கோங்கரும்புசுரபுன்னைகுரவார்சோலைக் குழாவரிவண்டிசைபாடும்பாடல்கேட்டு*
தீங்கரும்புகண்வளருங்கழனிசூழ்ந்த திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (ச)

தாங்க அரு போர்	ஒருவராலும் தாங்க முடியாத [கொடிய] யுத்தம் நடத்த வல்ல	ஆர் அமுதம் ஆனான் தன்னை	அருமையான அமுதம் போன்றிருந்தவனுமான பெருமானை,—
மாலி	மாலியென்னுமரக்கன்	கோங்கு அரும்பு	கோங்கின் பூக்களும்
பட	முடியும்படி	சுரபுன்னை	ஸுரபுன்னைகளும்
பறவை	கருடனை	குரவு	குரவுகளும்
ஊர்ந்து	(போர்க்களத்தில்) நடத்தி (மாலியைக் கொன்றொழித்து)	ஆர்	செறிந்திருக்கிற
		சோலை	சோலைகளிலே
தராதலத்தோர் குறை முடித்த	பூமியிலுள்ள ஸத்துக்களுடைய குறைகளைத் தீர்த்த	குழாம் வரி வண்டு	கூட்டங் கூட்டமாகக்கூடிய அழகிய வண்டுகள்
தன்மையானை	பெருமையுடையவனும்,	இசை பாடும் பாடல் கேட்டு	(மதுபான மயக்கத்தாலே) இசை பாடுகிற பாடல்களைக் கேட்டு
கண் நீர் அரும்பி சோர்ந்து	கண்ணீர் அரும்பரும்பாகப் பெருகி [ஆநந்த பாஷ்பங் கொண்டு]	(அத்தாலே நீர் பாய்ந்தாற் போலேயாம்)	
		தீம் கரும்பு	இனிய கரும்புகளானவை
அன்பு கூரும்	பக்தி பண்ணுகிற	கண் வளரும்	ஒரு கண் ஏறி வளரப்பெற்ற
அடியவர்கட்கு	பக்தர்களுக்கு [முதலாழ்வார்கட்கு]	கழனி	கழனிகளினால்
		சூழ்ந்த	சூழப்பட்ட
ஆங்கு	அப்போதே	திருக்கோவலூரதனுள், நான் கண்டேன்—,	

* * *—கண்ணீர்சோர்ந்துஅன்புகூருமடியவர்களாவர்—பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற முதலாழ்வார்கள். (ச)

1142.

கறைவளர்வேல்கரன்முதலாக்கவந்தன்வாலி கணையோன்றினால்மடியவிலங்கைதன்னுள்*
பிறையெயிற்றுவாளரக்கர்சேனையெல்லாம் பெருந்தகையோடுடன்துணித்தபெம்மான்தன்னை*
மறைவளரப்புகழ்வளரமாடந்தோறும் மண்டபமோண்டோளியணைத்தும்வாரமோத*
சிறையணைந்தபொழிலணைந்ததென்றல்வீசும் திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (ரு)

கறை வளர்	(ரத்தமாம்ஸங்களின்) கறை ஏறிக்கிடக்கிற	பெம்மான் தன்னை	பெருமானை,—
வேல்	வேற்படையையுடைய	மாடம் தோறும்	ஒவ்வொரு வீடுகளிலும்
கரன் முதலா	கரன் முதலாக	மறை வளர	வேதகோஷம் ஓங்கவும்
கவந்தன் வாலி	கபந்தனும் வாலியும்	புகழ் வளர	(அதனால்) கீர்த்திவளரவும்
கணை ஒன்றினால் மடிய	ஓர் அம்பாலே முடியும்படி (செய்தவனும்)	ஒண் தொளி	அழகிய வீதிகளிலேயுள்ள
இலங்கை தன்னுள்	லங்காபுரியிலே	மண்டபம் அணைத்தும்	மண்டபங்களிலெல்லாம்
பிறை எயிறு வாள் அரக்கர் சேனை எல்லாம்	பிறைபோன்ற கோரப்பற்களையும் வாள்களையுமுடைய அரக்கர்களின் சேனைகளையெல்லாம்	வாரம் ஓத	'வாரமோதுகை' என்கிற அத்யயநத்தை நடத்தவும் பெற்றதாய்
பெரு தகையோடு உடன்	அவர்களது தலைவனை இராவணனோடு கூடவே	சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும்	நீரரண் நெருங்கின சோலைகளோடு உறைந்துவருகின்ற தென்றல் வீசப்பெற்றதான
துணித்த	தொலைத்தொழித்த	திருக்கோவலூரதனுள்—; நான் கண்டேன்—.	

* * *—ஒண் தொளியணைத்தும் = வடமொழியில் 'ப்ரதோளி' என்றொரு சொல் உண்டு; வீதி என்று பொருள். ''ரத்யா ப்ரதோளீ விசிகா—ரத்யா ப்ரதோளிர் விசிகா.'' என்பது அமரகோசம். அச்சொல்லில் ப்ர என்னு முபஸர்க்கம் நீங்கி, 'தோளி' என்பது தொளி யென்று குறுக்கல் விகாரம் பெற்றிருக்கிறது இங்கு. [வாரமோத.] வேதமோதுமவர்களின் அத்யயந முறைமைகள் பல

வகைப்பட்டிருக்கும்; அவ்வகைகளுள், வாரஞ் சொல்லுவதென்பது ஒன்று: அதாவது—அநுவாகத்தின் அடியையோ பஞ்சாதியின் அடியையோ ஒருவர் எடுத்துக் கொடுக்கப் பதபாடம் சொல் என்றால் மயங்காமல் ஏற்றக்குறைவின்றி இருநூற்றைம்பது பதங்கள் சொல்லி நிறுத்துதலாம்.

சிறை என்னுஞ் சொல்லுக்குப் பலபொருள்களுண்டு; ஜலப்ராந்த மென்னும் பொருளை இங்குக்கொள்க. (ரு)

1143.

உறியார்ந்தநறுவெண்ணெயொளியால்சென்று அங்குண்டானைக்கண்டாய்ச்சியுரலோடார்க்க *
தறியார்ந்தகருங்களிறேபோலநின்று தடங்கண்கள்பனிமல்குந்தன்மையானை *
வெறியார்ந்தமலர்மகள்நாமங்கையோடு வியன்கலையெண்டோளினுள்விளங்கு * செல்வச்
செறியார்ந்தமணிமாடந்திகழ்ந்துதோன்றும் திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (சு)

ஒளியால் சென்று	(தன்னுடைய புன்முறுவலின்) காந்தியாலே இருட்டான இடங்களிலே நடந்து சென்று	வெறி ஆர்ந்த மலர் மகள்	பரிமளம் நிறைந்த தாமரைப் பூவில்பிறந்த பிராட்டியோடும்
அங்கு	அவ்விடங்களிலே	நாமங்கையோடு	ஸரஸ்வதியோடும்
உறி ஆர்ந்த	உறிகளிலே நிரம்பிய	வியன் கலை எண் தோளினுள்	அழகிய மானை வாஹனமாகவுடையளாய் எட்டுத் தோள்களை யுடையளான துர்க்கையோடும்
நறுவெண்ணெய்	மணம்மிக்க வெண்ணெயை	விளங்கு செல்வம்	விளங்குகையாகிற செல்வத்தையுடையதும்
உண்டானை ஆய்ச்சி கண்டு	வாரியுண்ணும்போது யசோதையானவள் கண்டு	செறி ஆர்ந்த	நெருக்கம்பொருந்திய
உரலோடு ஆர்க்க	உரலோடே பிணைத்துக்கட்ட (அதனாலே)	மணி மாடம்	ரத்னமயமான மாடங்கள்
தறி ஆர்ந்த கரு களிறு போல நின்று	கட்டுத்தறியிலே சேர்த்துக் கட்டப்பட்ட கரிய யானை போலக் கட்டுண்டிருந்து	திகழ்ந்து தோன்றும்	மிகவும் விளங்கப்பெற்றதுமான
தட கண்கள் பனி மல்கும் தன்மையானை	பெரிய திருக்கண்கள் நீர் நிரம்பப்பெற்ற தன்மையையுடைய பெருமானை,	திருக்கோவலூரதனுள்—; நான் கண்டேன்—.	

* * * முதலடியில், "ஒளியாச் சென்று" என்றும் "ஒளியால் சென்று" என்றும் பாடபேதமுண்டு. முந்தின பாடத்தில், ஒளியா—'செய்யா' என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்: ஒளிந்துகொண்டு என்றபடி. "ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி யொண்கயிற்றால், விளியாவார்க்க ஆப்புண்டு விம்மியழுதான்" என்று மேலே ஆரும்பத்திலு மருளிச்செய்வர். "ஒளியால்" என்ற பிந்தின பாடத்தில், 1. "நாளிளந்திங்களைக் கோள்விடுத்து, வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட" என்கிற பாசுரத்தின்படியே பொருள் கொள்ள வேணும்: அதாவது—உறிகளிலே சேமித்து வைத்த வெண்ணெயைக் களவுகாணப் போனபோது, தன் திருநிறத்தின் இருட்சியாலும் அவ்விடத்தின் இருட்சியாலும் ஒன்றுந் தெரியாமையாலே தடவாநிற்கச் செய்தே கையிலே வெண்ணெய்த் தாழிகள் அகப்பட்ட மகிழ்ச்சியினால் சிரிப்பு உண்டாகும்; பூர்ண சந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக்களின் ஒளி புறப்படவே, அந்த ஒளியையே கைவிளக்காகக் கொண்டு அமுது செய்வனென்க, ஆகவே, இப்பாட்டில் ஒளியால் என்றது—திருமுத்துக்களின் ஒளியினாலே என்றவாறு. இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை அச்சிடுவித்தவர்கள் அநந்விதமாக அச்சிடுவித்துள்ளார்; அதாவது—"[ஒளியால் சென்றங்குண்டாவன.] களவாலேயன்றியே 'நாளிளந்திங்கள்' இத்யாதிப்படியே." என்று அச்சிடுவிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கியம் எங்ஙனேயிருக்கவேணுமென்றால், "களவாலே; அன்றியே, நாளிளந்திங்களித்யாதிப்படியே." என்று இரண்டு வாக்கியமாக இருக்கவேண்டும். ஒளியா என்ற பாடத்தைத் திருவுள்ளம்பற்றி 'களவாலே' என்று பொருளுரைத்தார். ஒளியால் என்ற பாடத்தைத் திருவுள்ளம்பற்றி "அன்றியே" என்று பக்ஷாந்தரமாக வேறொரு பொருளை ஸூசிப்பித்தார் என்றுணர்க.

தறி—யானை கட்டும்கம்பம். உரலைத் தறியாகவும், கண்ணபிரானைக் கருங்களிறாகவும் கொள்க.

[வெறியார்ந்த மலர்மகளித்யாதி] ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஸரஸ்வதியும் துர்க்கையும் திருக்கோவலூரில் விளங்குகின்றனராம். 2. "விந்தைமேய கற்புடைய மடக்கன்னி காவல்பூண்ட கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமலவேலி, பொற்புடைய மலையரையன் பணியநின்ற பூங்கோவலூர்" என்கிறபடியே திருக்கோவலூரில் துர்க்கையானவள் க்ஷேத்ரபாலநம் செய்துகொண்டிருக்கின்றமைபற்றி வியன்கலையெண்தோளினுள் விளங்கு எனப்பட்டது. துர்க்காதேவி மான் வாஹனமுடையவளென்பது "வெய்ய கலைப்பாகி" (1—3—9) என்ற பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தாலும் விளங்குமென்க.

இனி, மலர்மகளாகிய பெரியபிராட்டியாரும் நாமங்கையாகிய ஸரஸ்வதியும் விளங்குகையாவது — திருக்கோவலூரிலுள்ளாரடங்கலும் லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற செல்வர்களாகவும் ஸரஸ்வதீகடாக்ஷம் பெற்ற வித்வான்களாகவும் இருக்கை. ஸரஸ்வதி நாக்கில் திகழும் தெய்வப்பெண்ணாதலால் நாமங்கை என்று பெயர் பெறுவள். (சு)

---

1. திருவாய்மொழி 3—6—3, 2. திருநெடுந்தாண்டகம்—7.

1144.

இருங்கைம்மாகரிமுனிந்துபரியைக்கீறி இனவிடைகளேழடர்த்துமருதஞ்சாய்த்து*
வருஞ்சகடமிறவுதைத்துமல்லையட்டு வஞ்சம்செய்கஞ்சனுக்குநஞ்சானானை*கருங்
கமுகுபசும்பாளைவெண்முத்தீன்று காயெல்லாம்மரதகமாய்ப்பவளங்காட்ட*செருந்தி
மிகமொட்டலர்த்தும்தேன்கொள்சோலைத்திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே.

இரு கை மா கரி முனிந்து	நீண்ட துதிக்கையையுடைய ஜந்துவாகிய (குவலயாபீட மென்னும்) யானையைச் சீறி முடித்து
பரியை கீறி	குதிரை வடிவெடுத்துவந்த கேசியென்னு மசுரனைப் பிளந்தொழித்து
இனம் ஏழ் விடைகள் அடர்த்து	ஒன்றோடொன்று ஒத்த ஏழு ரிஷபங்களையும் (நப்பின்னைக்காக) வலியடக்கி
மருதம் சாய்த்து	இரட்டை மருதமரத்தை முறித்து
வரும் சகடம் இற உதைத்து	(தன்னைக்கொல்ல) மேல் விழுந்த சகடம் முறியும்படி அதனை யுதைத்து
மல்லை அட்டு	மல்லர்களை த்வம்ஸம்பண்ணி (கடைசியாக)
வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சு ஆனானை	கபடச் செயல்களைச் செய்து வந்த கம்ஸனுக்கு விஷமாகி அவனையும் முடித்த பெருமானை,—
கரு கமுகு	கறுத்த பாக்கு மரங்களினுடைய
பசு பாளை	பசுமை தங்கிய பாளையானது
வெண் முத்து ஈன்று	வெளுத்த முத்துக்களை வெளிப்படுத்தவும்
காய் எல்லாம்	(அதன்) காய்களெல்லாம்
மரதகம் ஆய்	மரதகம்போல் விளங்கவும்
(அவற்றின் கனிகள்)	
பவளம் காட்ட	பவழங்களைக் காட்டவும்
செருந்தி	சுரபுன்னைகள்
மொட்டு	மொக்குகளை
மிக அலர்த்தும்	மிக அலரச் செய்யவும் பெற்ற
தேன் கொள் சோலை	தேன் நிறைந்த சோலைகளையுடைய

திருக்கோவலூரதனுள், நான் கண்டேன்—.

1145.

பாரேறுபெரும்பாரம்தீரப் பண்டுபாரதத்துத்தூதியங்கி*பார்த்தன்செல்வத்தேரேறு
சாரதியாயெதிர்ந்தார்சேனை செருக்களத்துத்திறலழியச்செற்றான்தன்னை*போரே
றொன்றுடையானுமளகைக்கோனும் புரந்தரனும்நான்முகனும்பொருந்துமூர்போல்*
சீரேறுமறையாளர்நிறைந்த செல்வத்திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (அ)

பார் ஏறு பெரு பாரம் தீர	பூமியின் மேலேறிக்கிடந்த பாரங்கள் தொலைவதற்காக
பண்டு	முற்காலத்தில்
பாரதத்து	பாரத யுத்தம் ஸமீபித்தபோது
தூது இயங்கி	தூதுசென்றவனும்,
பார்த்தன்	அர்ஜுநனுடைய
செல்வம் தேர் ஏறு சாரதி ஆய்	அழகிய தேரையேறி நடத்தின பாகனாகி
எதிர்ந்தார் சேனை	எதிரிகளின் சேனையை
செரு களத்து	போர்க்களத்திலே
திறல் அழிய	வலிமாளும்படி செய்து
செற்றான் தன்னை	ஒழித்தவனுமான பெருமானை—,
போர் ஏறு ஒன்று உடையானும்	(செருக்காலே) கரைபொருகிற ஒரு எருதை வாஹநமாக வுடைய சிவனும்
அளகை கோனும்	குபேரனும்
புரந்தரனும்	தேவேந்திரனும்
நான்முகனும்	பிரமனும்
பொருந்தும்	நித்யவாஸம் செய்யப்பெற்ற
ஊர் போல்	வானுலகத்துஸ்தானங்களைப் போன்று
சீர் ஏறு மறையாளர் நிறைந்த செல்வம்	சிறந்த வைதிகர்கள் நிறைந்திருக்கையாகிய செல்வம் பொருந்திய

திருக்கோவலூரதனுள், நான் கண்டேன்—.

1146.

தூவடிவிற்பார்மகள்பூமங்கையோடு சுடராழிசங்கிருபால்பொலிந்துதோன்ற*
காவடிவிற்கற்பகமேபோலநின்று கலந்தவர்கட்கருள்புரியுங்கருத்தினானை*
சேவடிகைதிருவாய்கண்சிவந்தவாடை செம்பொன்செய்திருவுருவமானான்தன்னை*
தீவடிவிற்சிவனயனேபோல்வார்மன்னு திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே.

தூ வடிவின்	அழகிய வடிவையுடைய
பார் மகள் பூ மங்கையோடு	பூமிப்பிராட்டியோடும் பெரிய பிராட்டியோடும் கூடி
இருபால்	இரண்டு திருக்கைகளிலும்
சுடர் ஆழி சங்கு பொலிந்து தோன்ற	திருவாழி திருச்சங்குகள் பளபளவென்று விளங்க

காவடிவின் கற்பகம் போல நின்று	சோலைசெய்திருக்கின்ற கற்பகம்போல நின்று	செம் பொன் செய் திரு உருவம் ஆனான் தன்னை	செம்பொன் போன்ற திருமேனியையுடையவனுமான பெருமானை
கலந்தவர்கட்கு அருள் புரியும் கருத்தினானை	பக்தர்களுக்குக் கிருபைபண்ணுந் திருவுள்ளமுடையவனும்,	தீ வடிவின் சிவன் அயன் போல்வார் மன்னு	நெருப்புப்போன்ற வடிவையுடையனான சிவனும் பிரமனும் போல அரிய பெரிய காரியங்கள் செய்யவல்ல மஹான்கள் பொருந்தியிருக்கிற
சே அடி கை திருவாய் கண் சிவந்த ஆடை	சிவந்த திருவடிகள் திருக்கைகள் திருப்பவளம் திருக்கண் திருப்பீதாம்பரம் இவற்றோடு கூடி		திருக்கோவலூரதனுள், நான் கண்டேன்—.

* * *—காவடிவிற்கற்பகம் = கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பெரிய சோலைபோலே பரந்து விளங்குகிற கல்பவ்ருக்ஷத்தை எம்பெருமானுக்கு உவமை கூறலாமேயன்றி வெறும் கல்பவ்ருக்ஷத்தை உவமை கூறலாகாதென்க. கா—சோலை. கல்பகம்—வேண்டுவார் வேண்டினவற்றையெல்லாம் அளிப்பது என்று காரணப்பெயர்.

தீவடிவிற்சிவன் = "ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ" என்பர் திருநெடுந் தாண்டகத்திலும். (௯)

1147.

வாரணங்கொளிடர்கடிந்தமாலை, நீலமரதகத்தைமழைமுகிலேபோல்வான்தன்னை*
சீரணங்குமறையாளர்நிறைந்த செல்வத்திருக்கோவலூரதனுள்கண்டேனென்று*
வாரணங்குமுலைமடவார்மங்கைவேந்தன் வாட்கலியனொலியைந்துமைந்தும்வல்லார்*
காரணங்களாலுலகம்கலந்தங்கேத்தக் கரந்தெங்கும்பரந்தானைக்காண்பர்தாமே.(௰)

வாரணம் கொள் இடர் கடிந்த மாலை	கஜேந்திராழ்வானடைந்த துக்கத்தைப் போக்கின பெருமானும்	வேந்தன்	தலைவரும்
நீலம் மரதகம் மழை முகில் போல்வான் தன்னை	கருநெய்தற்பூ, மரகதப் பச்சை, குளிர்ந்த மேகம் ஆகிய இவற்றை யொத்தவனுமான கோபாலனை,	வாள்	வாட்படையை நிரூபகமாகவுடையருமான
சீர்	ஆத்ம குணங்களாலே	கலியன்	திருமங்கையாழ்வார்
அணங்கு	(அனைவரும்) ஆசைப்படக் கூடிய	ஒலி	அருளிச்செய்த
மறையாளர்	வைதிகர்கள்	ஐந்தும் ஐந்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
நிறைந்த செல்வம்	நிறைந்திருக்கையாகிற அழகு பொருந்திய	வல்லார் தாம்	ஓதவல்லவர்கள், (என்ன பலனைப் பெறுவர்களெனில் ;)
திரு கோவலூர் அதனுள்	திருக்கோவலூரென்னுந் திருப்பதியிலே	உலகம்	உலகத்திலுள்ள பலவகையதிகாரிகள்
கண்டேன் என்று	ஸேவிக்கப்பெற்றேனென்று,	காரணங்களால்	தங்கள் தங்களுக்கு இஷ்டமான பலன்களைப் பெற வேண்டிய காரணத்தினால்
வார் அணங்கு முலை மடவார் மங்கை	கச்சினால் அழகுபெற்ற முலைகளையுடைய மாதர் நிறைந்த திருமங்கை நாட்டுக்கு	கலந்து	திரண்டு வந்து
		ஏத்த	துதிக்க
		கரந்து எங்கும் பரந்தானை	ஒருவர்க்கும் காணவொண்ணாதபடியிருந்து எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்கின்ற பரமாத்மாவை
		காண்பர்	ஸேவிக்கப்பெறுவர்கள்.

"வாரணங்குமுலைமடவார்மங்கை" என்று மங்கை நாட்டின் சிறப்பு சொன்னபடி. சோலை வாய்ப்பு, வயல்வீறு, மதிட்பொலிவு முதலியவற்றைச் சொல்லும் முகத்தால் நகரத்தின் சிறப்பை வெளியிடுதல்போல, மாதர்களின் மேன்மையைச் சொல்லும் முகத்தாலும் வெளியிடுதலுண்டு; "ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி" என்றாற்போல.

காரணங்களால் ஏத்த = ஐச்வர்யம வேணுமென்றும் புத்ரஸந்தானம் வேணுமென்றும் இந்திரலோகம் வேணுமென்றும் இப்படி பலபல அபேக்ஷைகள் காரணமாக ஏத்துமவர்களுக்கும் பலன் அளிக்க எங்கும் புகுந்து பரந்திருக்கிறான் எம்பெருமான். (௰)

அடிவரவு :—மஞ்சு சொந்து கொழுந்து தாங்கு கறை யுறி இருங்கை பார் தூவடிவின் வாரணம் இருந்தண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய பெரிய திருமொழி பதவுரையில் இரண்டாம்பத்து முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

மூன்றும்பத்து—முதல் திருமொழி—இருந்தண்மாநிலம்

(திருவயிந்திரபுரப்பதிகம்)

1148. இருந்தண்மாநிலமேனமதாய் வளைமருப்பினிலகத்தொடுக்கி*
கருந்தண்மாகடல்கண்டுயின்றவனிடம் கமலநன்மலர்த்தேற
லருந்தி* இன்னிசைமுரன்றெழுமளிகுலம்பொதுளி அம்பொழிலூடே*
செருந்திநாண்மலர்சென்றணைந்துழிதரு திருவயிந்திரபுரமே. (க)

இரு தண் மா நிலம்	மிகக் குளிர்ந்த பெரிய பூமியை	நல் கமலம் மலர் தேறல் அருந்தி	நல்ல தாமரைப்பூவின் தேனைக் குடித்து
ஏனம் அது ஆய் வளை மருப்பு அகத்தினில் ஒடுக்கி	வராஹ ரூபியாய் வளைந்த கோரப் பற்களினிடத்தே அடக்கினவனும்,	இன் இசை முரன்று எழும்	இனிய ராகங்களைப் பாடிக் கொண்டு கூத்தாடா நிற்கிற
		அளி குலம் பொதுளி	வண்டுகளின் கூட்டங்கள் நெருங்கி
கரு தண் மா கடல் கண் துயின்றவன்	கறுத்துக் குளிர்ந்து பெருத்த கடலில் யோக நித்திரை செய்தருள்பவனுயுமுள்ள எம்பெருமானுக்கு	செருந்தி நாள் மலர் சென்று அணைந்து உழிதரு	சுரபுன்னை மரத்தினுடைய அப்போதலர்ந்த பூவிலே போய்ச் சேர்ந்து ஸஞ்சரிக்கப் பெற்ற
இடம்	வாழுமிடம் (எதுவென்றால்);—	திரு அயிந்திர புரம்	திருவஹீந்த்ரபுரமாம்.
அம் பொழிலூடே	அழகிய சோலைகளினுள்ளே		

* * *—முன்னடிகளில் திவ்யதேசத் தெம்பெருமானுடைய சிறப்பும், பின்னடிகளில் திவ்ய தேசத்தின் சிறப்பும் சொல்லப்படுகின்றன. மேற்பாசுரங்கள் தோறும் இங்ஙனமே கண்டுகொள்க.

1. "உளங்கனிந்திருக்கு மடியவர் தங்களுள்ளத்துள் ஊறிய தேன்" என்னப்பட்ட பகவத் விஷயமாகிற மதுவை விரும்பியும், 2. "போந்ததென் னெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப்போதி லொண் சீராந் தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டி" என்கிறபடியே ஆசார்ய பாதாரவிந்த ஸேவை யாகிற மதுவைப் பருகுதலையே விரதமாக வுடைத்தாகியும், ஊர்த்த்வகதிக்கு ஸாதநமாகிய இரண்டு சிறகுகள்போன்ற கர்மஜ்ஞாநங்களை யுடையராகியும் ஸாரக்ராஹிகளாயு மிருக்கின்ற ஸ்ரீ வைஷ்ணவர் களை வண்டாகச் சொல்லுவது வழக்கம், அப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் பகவத் பாகவத போக்ய தைகளை அநுபவித்த ஆநந்தத்திற்குப் போக்குவீடாக, 3. "பண்கள் தலைக்கொள்ளப்பாடி" என்கிறபடியே நாரதமுனிவர் திருப்பாணாழ்வார் தம்பிரான்மார் முதலானவரைப் போலே இசைபாடுவ துண்டாகையாலே "இன்னிசை முரன்றெழும்" என்றது. பகவத் பாகவத குணாநுபவத்துக்கு வாய்த்த இடங்களே 'பொழில்' எனப்படும். செருந்தி என்று ஒரு வ்ருக்ஷ விசேஷத்தைச் சொல்லி அதன்மலரிலே சென் றணைவதாகச் சொன்னது—4. "தன்னைப்பா ரிலலப்பன் தந்தனன் தனதாள் நிழலே" என்றும் "வாஸுதேவ தருச்சாயா" என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸாரமாகிற கொடிய வெய்யிலிலே தபிக் கப்பட்டவர்களுக்கு நிழல் தந்து விடாய் தீர்க்கும் நன்மரமாகிய வாஸுதேவனுடைய பாதமா மலரிற் சென்று சேர்ந்திருக்குமிருப்பைச் சொன்னபடி. ஆக, ஸாரக்ராஹிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூட்டங்கூட்டமாகத் திரண்டு பகவத் பாகவத குணாநுபவக்களிப்பாலே யாழினிசை வேதத்தியல்களைப் பாடிக்கொண்டு பகவத் பாதாரவிந்த நிரதர்களாய் வாழுமிடம் திருவயிந்திரபுரம் என்றதாயிற்று. இவ் வகையான ஸ்வாபதேசார்த்தங்களைப் பாசுரந்தோறும் உய்த்துணர்க.

'அஹீந்த்ரபுரம்' என்ற வடசொல் அயிந்திரபுரம் என விகாரப்பட்டது. அஹீந்த்ரன்—திருவ னந்தாழ்வான்; அவன் பூஜித்த தலமாதல் பற்றி இத்திருப்பதிக்கு இத்திருநாமமாயிற் றென்பர். (க)

1149. மின்னுமாழியங்கையவன் செய்யவளுறைதருதிருமார்பன்*
பன்னுநான்மறைப்பல்பொருளாகிய பரனிடம்வரைச்சாரல்*
பின்னுமாதவிப்பந்தலில்பெடைவரப் பிணியவிழ்கமலத்து*
தென்னவென்றுவண்டின்னிசைமுரல்தரு திருவயிந்திரபுரமே. (உ)

மின்னும் ஆழி அம் கையவன்	ஜ்வலிக்கின்ற திருவாழியை அழகிய திருக்கையிலே உடையவனும்	செய்யவள் உறைதரு திரு மார்வன்	பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற திருமார்வை யுடையவனும்

1. பெரிய திருமொழி 4, 3, 9.
2. இராமாநுச நூற்றந்தாதி 99.
3. திருவாய்மொழி 3, 5, 2.
4. திருவாய்மொழி 6, 3, 9.

பன்னு நால் மறை பல் பொருள் ஆகிய பரன் இடம் — ஓதப்பட்டு வருகிற நான்கு வேதங்களின் பலவகைப் பொருள்களும் தானேயா யிருப்பவனுமான பரம புருஷனுக்கு வாழுமிடம் (எதுவென்றால்)

வண்டு — வண்டுகளானவை

வரை சாரல் — மலைப் பக்கங்களில்

பின்னும் மாதவி பந்தலில் பெடை வர — நெருங்கி யிருக்கின்ற குருக்கத்திப் பந்தலில் நின்றும் தம் பேடைகள் [பெண் வண்டுகள்] தம்மிடம் வந்து சேர்வதற்காக

பிணி அவிழ் கமலத்து தென்ன என்று இன் இசை முரல்தரு — கட்டு அவிழ்கிற தாமரைப் பூவிலே இருந்துகொண்டு தென்ன தெனவென்று இனிய இசைகளைப் பாடா நிற்கப்பெற்ற

திரு அயிந்திரபுரம்.

1150. வையமேழுமுண்டாலிலைவைகியமாயவன்* அடியவர்க்கு.
மெய்யனாகியதெய்வநாயகனிடம் மெய்தகுவரைச்சாரல்*
மொய்கொள்மாதவிசெண்பகம்முயங்கிய முல்லையங்கொடியாட*
செய்யதாமரைச்செழும்பணை திகழ்தரு திருவயிந்திரபுரமே. (௩)

வையம் ஏழும் உண்டு — (பிரளயகாலத்தில்) எல்லா வுலகங்களையும் திருவயிற்றி னுட்கொண்டு

ஆலிலை வைகிய மாயவன் — ஆலந்தளிரிலே போதுபோக்கின ஆச்சர்யபூதனும்,

அடியவர்க்கு மெய்யன் ஆகிய — தன்னை யடிபணிந்தவர்கட்கு உண்மையாக ஸேவை ஸாதிக்குமவனுமான

தெய்வநாயகன் இடம் — தெய்வநாயகப் பெருமானுக்கு உறைவிடம் ;—

மெய் தகுவரை சாரல் — அப்பெருமானுடைய திருமேனியோடொத்த நிறத்ததான மலையின் அருகில்,

மொய்கொள் மாதவி செண்பகம் முயங்கிய — நெருங்கிய குறுக்கத்திச் செடிகளோடும் செண்பக மரங்களோடும் தழுவிய

முல்லை அம்கொடி ஆட — அழகிய முல்லைக்கொடிகள் அசையாநிற்கப்பெற்றதும்

செய்ய தாமரை செழு பணை திகழ்தரு — செந்தாமரைப்பூக்கள் செழித்து வளர்கின்ற வயல்கள் விளங்கப்பெற்றதுமான

திரு அயிந்திரபுரம்—,

* * *—இத்திருப்பதியிலுள்ள தெய்வநாயகப் பெருமாளுக்கு 'தாஸஸத்ய:' (தாஸஸத்யன்) என்றொரு திருநாமமுண்டாகையால் 'அடியவர்க்கு மெய்யன்' என்கிறார். (௩.)

1151. மாறுகொண்டுடன்றெதிர்ந்தவல்லவுணன்தன் மார்வகமிருபிளவா*
கூறுகொண்டவன்குலமகற்கு இன்னருள்கொடுத்தவனிடம்*மிடைந்து
சாறுகொண்டமென்கரும்பிளங்கழைதகை விசும்புறமணிநீழல்*
சேறுகொண்டதண்பழனமதெழில்திகழ் திருவயிந்திரபுரமே. (௪)

மாறுகொண்டு உடன்று எதிர்ந்தவல் அவுணன் தன் — பகைமையைக் கொண்டு கறுவிக்கொண்டு எதிரிட்டு வந்த வலிவுள்ள இரணியாசுரனுடைய

மார்வகம் இரு பிளவு ஆ கூறு கொண்டு — மார்வானது இரண்டு பிளவாம்படி பிளந்தொழித்து

அவன் குலம் மகற்கு இன் அருள் கொடுத்தவன் இடம் — அவனது சிறந்த மகனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு நல்ல க்ருபை பண்ணின பெருமான் வாழுமிடமாவது ;—

மிடைந்து — ஒன்றோடொன்று நெருங்கி

சாறுகொண்ட — ரஸமயமா யிருக்கிற

மெல் கரும்பு இளகழை — மெல்லிய கரும்பின் இளந்தடிகளானவை

தகை விசும்பு உற — (தங்களை விம்மி வளரவொட்டாமல்) தடை செய்கின்ற ஆகாசத்தைக் கிட்டி வளர்ந்திருப்பதனால்

மணி நீழல் — அழகிய நிழலையுடையதும்

சேறுகொண்ட தண் பழனமது எழில் திகழ் — (கருப்பஞ் சாற்று வெள்ளத்தினால்) சேற்றை யுடைத்தாய்க் குளிர்ந்த நீர் நிலங்களின் அழகு விளங்கப்பெற்றதுமான

திரு அயிந்திரபுரம்—,

குலமகற்கு = 'குலம்' என்ற சொல் சிறப்புப் பொருள் பெறும். மகன் + கு ; மகற்கு. தகை விசும்பு = வினைத்தொகை ; தகைகின்ற விசும்பு. இது அதிசயோக்தி. (௪)

1152. ஆங்குமாவலிவேள்வியிலிரந்துசென்று அகலிடமளந்து*ஆயர்
பூங்கொடிக்கினவிடைபொருதவனிடம் பொன்மலர்திகழ்*வேங்கை
கோங்குசெண்பகக்கொம்பினில் குதிகொடுகுரக்கினமிரைத்தோடி*
தேன்கலந்ததண்பலங்கனிநுகர்தரு திருவயிந்திரபுரமே. (௫)

மாவலி வேள்வியில் சென்று இரந்து	மஹாபலியின் யாக பூமியிலே (மாணியுருவாகிச்) சென்று (மூவடிமண்) யாசித்துப் பெற்று
ஆங்கு	அவ்விடத்திலேயே
அகல் இடம் அளந்து	பரந்த உலகம் முழுவதையும் அளந்துகொண்டவனும்,
ஆயர் பூங்கொடிக்கு	அழகிய இடைப்பெண்ணான நப்பின்னைப் பிராட்டிக்காக
இனம் விடை	ஓரினமான ஏழு ரிஷபங்களையும்
பொருதவன் இடம்	போர்செய்து முடித்த பெருமானுடையும் இடமாவது ;—
குரங்கு இனம்	குரங்குகளின் கூட்டமானது,
பொன்மலர் திகழ்	பொன்னிறமான மலர்கள் விளங்காநின்ற
வேங்கை கோங்கு செண்பகம் கொம்பினில்	வேங்கைமரம், கோங்குமரம், செண்பக மரம் என்பனவற்றின் கொம்புகளிலே
குதிகொடு இரைத்து ஓடி	குதித்தல் செய்துகொண்டும் பெரிய ஆரவாரங்கள் செய்துகொண்டும் இங்குமங்கும் ஓடிக்கொண்டும்
தேன் கலந்த தண் பலங்கனி நுகர் தரு	தேன் மிக்க சிறந்த பலாப் பழங்களை உட்கொள்ளப் பெற்ற
	திரு அயிந்திரபுரம்—.

***—குரங்கு + இனம், குரக்கினம்; குரங்குகளைக் கூறியது சபலரான ஸம்ஸாரிகளைக்கூறியவாறும். * நின்றவா நில்லா நெஞ்சினை யுடையராய் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகிற க்ஷுத்ர பலார்த்திகளான ஸம்ஸாரிகளுக்கும் வாநரங்களுக்கும் ஸாம்யம் பொருந்துமன்றே: இப்படிப்பட்ட ஸம்ஸாரிகள் விஷய போகங்களிலே மண்டித் திரியாநிற்கச் செய்தேயும் பலங்கனிபோன்ற பகவத் குணங்களையும் இடையிடையே அநுபவித்து வாழும்படியைக் கூறியவாறு.

வேங்கைமரம், கோங்குமரம், செண்பகமரம் ஆகிய இவற்றின் பூக்கள் பொன்னிறமாயிருக்குமாதலால் 'பொன்மலர் திகழ்' என்றது. இம்மரங்களைச் சொன்னது (ஸ்வாபதேசத்தில்) நெஞ்சைக் கவர்கின்ற விஷயாந்தரங்களைச் சொன்னபடி, ''குதிகொடு'' என்றதில், குதி—முதனிலைத் தொழிற் பெயர்: ''கொம்பேற்றியிருந்து குதி பயிற்றும்'' என்றார் பெரியாழ்வாரும். (ரு)

1153. கூனுலாவியமடந்தைதன் கொடுஞ்சொலின்திறத்திளங்கொடியோடும்*
காநுலாவியகருமுகில்திருநிறத்தவனிடம் கவினாரும்*
வானுலாவியமதிதவழ்மால்வரை மாமதிள்புடைசூழ்*
தேனுலாவியசெழும்பொழில்தழுவிய திருவயிந்திரபுரமே. (சு)

கூன் உலாவிய மடந்தைதன் கொடும் சொலின் திறத்து	கூனேறின மந்தரையென்னும் ஸ்திரீயினுடைய கொடிய பேச்சுக்காக
இளகொடியோடும் கான் உலாவிய	இளங்கொடிபோன்ற பிராட்டியோடுகூட காட்டுக்கெழுந்தருளின
கருமுகில் திருநிறத்தவன் இடம்	காளமேகம் போன்ற வடிவையுடைய பெருமானுக்கு இடமாவது ;—
கவின் ஆரும்	அழகு நிரம்பிய
வான் உலாவிய மதிதவழ் மால் வரை மாமதிள் புடை சூழ	ஆகாசத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரன் தவழப்பெற்ற பெரிய மலையும் பெரிய மதிளும் பக்கங்களில் சூழ்ந்திருக்கப் பெற்றதும்
தேன் உலாவிய செழு பொழில் தழுவிய	வண்டுகள் ஸஞ்சரிக்கிற அழகிய சோலைகளால் சூழப்பட்டதுமான
	திரு அயிந்திரபுரம்—;

சந்திரமண்டலத்தளவும் ஓங்கின மலைகளாலும் மதிள்களாலும் பொழில்களாலும் சூழப்பெற்றதாம் இத்தலம். ''மால்வரை மாமதிள்'' என்றதை உம்மைத் தொகையாகக் கொள்ளாமல் உவமைத் தொகையாகக்கொண்டு, பெரிய மலைபோன்ற மதிள்களாற் சூழப்பெற்றதென்றலுமொன்று. (சு)

1154. மின்னினுண்ணிடைமடக்கொடிகாரணம் விலங்கலின்மிசையிலங்கை
மன்னன்*நீண்முடிபொடிசெய்தமைந்தனதிடம் மணிவரைநீழல்*
அன்னமாமலரரவிந்தத்தமளியில் பெடையொடுமினிதமர*
செந்நெலார்கவரிக்குலைவீசு தண்திருவயிந்திரபுரமே. (எ)

மின்னின் நுண் இடை மடம்	மின்போல் ஸூக்ஷ்மமான இடையை யுடையளும மடமைக் குணம் வாய்ந்தவளும்
கொடி காரணம்	கொடி போன்றவளுமான பிராட்டிக்காக,

விலங்கலின் மிசை இலங்கை மன்னன் நீள்முடி பொடி செய்த மைந்தனது இடம்	ஸுவேல மலையின்மீது அமைக்கப்பட்டிருந்த [ஸுரக்ஷிதமான] லங்காபுரிக்கு அரசனான இராவணனுடைய பெரிய முடிகள் பத்தையும் பொடிபடுத்தின மிடுக்கையுடைய பெருமானுக்கு இடமாவது;-
மணி வரை நீழல்	அழகிய மலையின் நிழலிலே
அன்னம் மா அரவிந்தம் மலர் அமளியில் பெடையொடும் இனிது அமர	ஹம்ஸங்களானவை பெரிய தாமரைப் பூவாகிய படுக்கையில் தங்கள் பேடைகளுடனே இனிதாகப் பொருந்தி வாழ்வதற்குப் பாங்காக
செந்நெல் ஆர் குலை கவரி வீசு	செந்நெல் நிறைந்த குலை சாமரம் வீசப்பெற்ற
	தண் திரு அயிந்திரபுரம்

* * *—விலங்கலின்மிசையிலங்கை=‘விலங்கல்’ என்று மலைக்குப் பெயர்; ஸுவேல பர்வதத்தின் மேலே த்ரிகூடத்தின்மீது இலங்காபுரி அமைக்கப்பட்டிருந்த தென்ப. அப்படிப்பட்ட இலங்கைக்கு அரசனாகையாலே ‘நமக்கு ஒருவராலும் ஒருநாளும் அழிவில்லை’ என்று மார்பு நெறித்துக் கிடந்தவனுடைய முடிகள் பத்தையும் நீறுக்கின பெருமிடுக்கன் நித்யவாஸம் பண்ணுமிடம் திருவயிந்திரபுரம்.

[மணிவரைநீழலித்யாதி.] இத்தலம் மலைசூழ்ந்ததாதலால் அம்மலையினருகே செந்நெற் கழனிகளிலே தாமரைத் தடாகங்களுள்ளன; அங்குள்ள தாமரை மலர்களிலே அன்னப் பறவைகள் துணையோடும் பிரியாதே ரமிக்க, அதற்குப் பாங்காகச் சாமரம் வீசுமாபோலே செந்நெற் கதிர்கள் இனிது வீசுகின்றனவாம்.

அன்னமானது, நீரும்பாலும் கலந்திருந்தால் அவற்றைப் பிரித்தெடுப்பதுபோல சாஸ்த்ரங்களில் ஸாரமாயும் அஸாரமாயு முள்ளவற்றைப் பகுத்தறிய வல்லவர்களாயும், “அன்னமதா யிருந்து அங்கு அறநூலுரைத்த” என்கிறபடியே ஹம்ஸரூபியாய் எம்பெருமான் சாஸ்த்ரங்களை யுபதேசித்தாப்போலே சிஷ்யர்களுக்கு சாஸ்த்ரங்களைக் கற்பிப்பவர்களாயும், “ந வ்யூநாதி ரதிம் ஹம்ஸ꞉ கூபா விஜ கூ- ரோஹஸி=அன்னம் ஒருபோதும் சேற்றுநீரில் பொருந்தாது” என்கிறபடியே அன்னம் சேற்றில் பொருந்தாதாப்போலே “பிறப்பாம் பொல்லா வருவினை மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்து-அழுந்தார்” என்கிறபடியே ஸம்ஸாரமாகிற பெருஞ்சேற்றிலே பொருந்தாதவர்களாயுமிருக்கிற கூரத்தாழ்வான் போல்வாரான மஹான்களை அன்னமென்கிறது ஸ்வாபதேசத்தில். “பேடையோடும்” என்கையாலே க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்துகொண்டே பகவத் பாகவத விஷயங்களில் ப்ராவண்யமுற்றிருக்கும்படியைச் சொல்லுகிறது. “அரவிந்தத்தமளி” என்றது எம்பெருமானுடையவும் ஆசார்யனுடையவும் பாதாரவிந்தங்களைச் சொன்னபடி. “செந்நெலார்கவரிக்குலைவீசு” என்றது—இப்படிப்பட்ட மஹான்களுக்கு நல்ல சிஷ்யர்கள் வாய்த்து அவர்கள் சாமரம் பணிமாறுதல் முதலிய கைங்கரியங்களைச்செய்து உஜ்ஜீவிக்கும்படியைச் சொன்னவாறு.

கவரி—“ சவரீ ” என்ற வடசொல்லின் விகாரம். (எ)

1155. விரைகமழ்ந்தமென்கருங்குழல்காரணம் வில்லிறுத்தடல்மழைக்கு*
நிரைகலங்கிடவரைகுடையெடுத்தவன் நிலவியவிடம்தடமார்*
வரைவளந்திகழ்மதகரிமருப்பொடு மலைவளரகிலுந்தி*
திரைகொணர்ந்தணைசெழுநதிவயல்புகு திருவயிந்திரபுரமே. (அ)

விரை கமழ்ந்த மென் கருங் குழல் காரணம் வில் இறுத்து	பரிமளம் வீசுகின்ற மெல்லிய கறுத்த கூந்தலையுடையளான பிராட்டிக்காக வில்லை முறித்தவனும்,
அடல் மழைக்கு நிறை கலங்கிட	அஸஹ்யமான பெருமழை வந்தபோது ஆநிரைகள் பரிதபித்து நிற்க
வரை குடை எடுத்தவன்	கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துக் காத்தவன்
நிலவிய இடம்	மகிழ்ந்து உறையும் இடமாவது;—
தடம் ஆர் வரை வளம் திகழ் மதகரி	தடாகங்கள் நிறைந்த மலைக்கு அழகுசெய்து விளங்குகின்ற மதயானைகளினுடைய
மருப்பொடு	தந்தங்களையும்
மலை வளர் அகில்	மலையில் வளர்கின்ற அகில் மரங்களையும்
திரை உந்தி கொணர்ந்து அணை	அலைகளினாலே தள்ளிக் கொண்டுவந்து சேருகிற
செழு நதி	அழகிய ஆறு
வயல் புகு	கழனிகளில் பாயப்பெற்ற
	திரு அயிந்திரபுரம்—.

* * *—[தடமார்வரைவள மித்யாதி] ஆறுகள் பெரு வெள்ளமாய்ப் பெருகும்போது யானைத் தந்தங்களையும் அகில் மரங்களையும் மற்றும் பலபல மணிமாணிக்கங்களையும் கொழித்துக்கொண்டு வருகிற வழக்கமாகையாலும் அங்ஙனே கவிகளும் கவிபாடுகிற வழக்கமாகையாலும், இங்கே கருடநதி ப்ரவஹிக்கும்படியை வருணிக்கிறாராயிற்று, (அ)

1156. வேல்கொள்கைத்தலத்தரசர்வெம்போரினில் விசயனுக்காய்*மணித்தேர்
கோல்கொள்கைத்தலத்தெந்தைபெம்மானிடம் குலவுதண்வரைச்சாரல்*
கால்கொள்கண்கொடிக்கையெழக் கமுகிளம்பாளைகள்கமழ்சாரல்*
சேல்கள்பாய்தருசெழுநதிவயல்புகு திருவயிந்திரபுரமே. (௬)

கைத்தலத்து வேல் கொள் அரசர் வெம் போரினில்	கையிலே வேலாயுதத்தையுடையரான (துரியோதனன் முதலிய) அரசர்களுடைய கடூரமான பாரத யுத்தத்தில்
விசயனுக்கு ஆய்	அர்ஜுநனுக்குத் துணையாகி
மணி தேர் கைத் தலத்து கோல் கொள் எந்தை பெம்மான் இடம்	(அவனுடைய) அழகிய தேரிலே கையில் கோல்பிடித்து நின்ற எம்பெருமானுக்கு இடமாவது :—
குலவு தண் வரை சாரல்	கொண்டாடத்தக்க குளிர்ந்த மலைச்சாரலில்,
கால் கண் கொள் கொடி கையெழ	வெற்றிலைக் கால்கள் கணுக்கள் தோறும் கிளைக்கின்ற (வெற்றிலைக்) கொடிகள் மிகுதியாக வளரப் பெற்றதும்
கமுகு இளம் பாளைகள் கமழ் சாரல்	பாக்கு மரங்களின் இளங் குருத்துகள் வாஸனை வீசப் பெற்ற சுற்றுப் பிரதேசங்களை யுடையதும்
சேல்கள் பாய்தரு செழு நதி வயல் புகு	மீன்கள் துள்ளி விளையாடுகிற அழகிய ஆறானது கழனிகளிலே பெருகப் பெற்றதுமான
	திரு அயிந்திரபுரமே—.

* * *—மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலரும் எதிரிகளாய் நிறைந்து கிடந்த பாரதயுத்தத்திலே பீஷ்ம த்ரோணாதிகளான மஹாவீரர் பிரயோகித்த ஆக்நேயாஸ்த்ரம் முதலியவற்றால் அர்ஜுநனது தேர் அழிந்துபோகாதபடி தனது திருவடிகளின் ஸம்பந்தத்தாலே உறுதியாயிருக்கச் செய்து, அந்த அர்ஜுநனால் தாங்கமுடியாத அஸ்த்ர சஸ்த்ரங்கள் வந்தால் தன் மார்பிலே ஏற்றுக்கொள்ளும்படி அவன் தேரின் முன்புறத்திலே ஸாரதியாய்த் தங்கியிருந்து வெற்றி பெறுவித்த வீரன் வாழுமிடம் திருவயிந்திரபுரம்.

அஃது எப்படிப்பட்ட தென்னில்; வெற்றிலைத் தோட்டங்களும் பாக்குச் சோலைகளும் நீர்வாய்ப்புள்ள கழனிகளும் நிறையப் பெற்றது. (௬)

1157. மூவராகியவொருவனை மூவுலகுண்டுமிழ்ந்தளந்தானை*
தேவர்தானவர்சென்றுசென்றிறைஞ்சத் தண்திருவயிந்திரபுரத்து*
மேவுசோதியைவேல்வலவன் கலிகன்றிவிரித்துரைத்த*
பாவுதண்டமிழ்பத்திவைபாடிடப் பாவங்கள்பயிலாவே. (௰)

மூவர் ஆகிய ஒருவனை	தானொருவனே மும்மூர்த்தியாக உருவெடுத்து முத்தொழில் நிகழ்த்துமவனை
மூ உலகு உண்டு உமிழ்ந்து அளந்தானை	மூன்று லோகங்களையும் (பிரளயகாலத்தில்) உட்கொண்டு (பிறகு) வெளிப்படுத்தி (மற்றொருகால் திரிவிக்கிரமனாகி) அளந்தவனை
தேவர் தானவர் சென்றுசென்று இறைஞ்ச	தேவரும் தானவரும் வந்து வந்து வணங்கலாம்படி
தண் திரு அயிந்திரபுரத்து மேவு சோதியை	குளிர்ந்த திருவயிந்திரபுரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற பரஞ்சோதியான பெருமானைக்குறித்து
வேல் வலவன் கலிகன்றி	வேல் பிடிக்கவல்ல திருமங்கை மன்னன்
விரித்து உரைத்த	விரிவாக அருளிச்செய்த
பாவு தண் தமிழ் இவை பத்து பாடிட	அழகிய விஸ்தார கவியாக அமைந்த இப்பத்துப் பாசுரங்களையும் பாடி யநுஸந்திக்குமளவில்
பாவங்கள் பயிலா	பாவங்கள் சேரமாட்டா.

அடிவரவு :—இருந்தண் மின்னும் வையம் மாறு ஆங்கு கூன் மின்னின் விரை வேல் மூவர் ஊன்.

மூன்றாம்பத்து—இரண்டாந்திருமொழி—ஊன்வாடவுண்ணாது

(தில்லைத்திருச்சித்திரகூடப்பதிகம்)

1158. ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்டு உடலில்பிரியாப்புலனைந்துமொந்து*
தாம்வாடவாடத்தவஞ்செய்யவேண்டா தமதாவிமையோருலகாளகிற்பீர்!*
கானாடமஞ்ஞைக்கணமாடமாடே கயலாடுகானீர்ப்பழனம்புடைபோய்*
தேனாடமாடக்கொடியாடுதில்லைத் திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே.

இமையோர் உலகு தமது ஆ ஆள கிற்பீர்	பரமபதத்தை ஸ்வாதீனமாக ஆளவேண்டி யிருக்குமவர்களே !,	கான் ஆட	சோலைகள் அசையும்படியாக
ஊன் வாட உண்ணாது	மாம்ஸம் வற்றி யுலரும்படி உபவாஸங்களிருந்து	மஞ்ஞை கணம் ஆட	மயில்களின் கூட்டங்கள் ஆடவும்
உயிர் காவலிட்டு	பிராணன் மாத்திரம் போகாதபடியாக (நீரையும் காற்றையும் உட்கொண்டு பிராணனைக்) காப்பாற்றி	மாடே	பக்கத்திலே
உடலில் பிரியா புலன் ஐந்தும் நொந்து	சரீரத்தை விட்டுப் போகாத பஞ்சேந்திரியங்களும் நோவ	தேன்	வண்டுகளானவை
தாம் வாடவாட	தாங்கள் மேன்மேலும் வாட்டமடையும்படி	கயல் ஆடுநீர் கால் பழனம் படை போய் ஆட	மீன்கள் துள்ளி விளையாடுகிற ஜலஸம்ருத்தியையுடைய வாய்க்கால்களை யுடைத்தான நீர்நிலங்களினருகே போய் (மதுவில்நசையாலே) மேலே பறக்கவும்
தவம் செய்ய வேண்டா	தபஸ்ஸு பண்ணவேண்டா;	மாடம் கொடி ஆடு	மாடங்களிலுள்ள கொடிகள் அசையாநிற்கவும் பெற்ற
		தில்லை திருசித்ர கூடம்	தில்லைத் திருச்சித்திரகூடமென்னுந் திருப்பதியை
		சென்று சேர்மின்கள்	சென்று சேருங்கள்.

(பின்னை என்ன செய்யவேண்டுமென்னில் ;)

* * *—'இமையோருலகைத் தமதாக ஆளகிற்பீர் !, தில்லைத் திருச்சித்ரகூடஞ் சென்று சேர்மின்கள் ; வாடவாடத் தவஞ்செய்யவேண்டா" என்கிறார். வேதங்களில் பிராமணர்கள் யாகம் செய்தும் தானஞ்செய்தும் தவம்புரிந்தும் பட்டினி கிடந்தும் பேறுபெறப் பார்க்கிறார்கள் என்று ஓதப்பட்டுள்ளது. சரீரத்தை வருத்தப்படுத்திச் செய்யவேண்டியவையாயும், அப்படி செய்தாலும் 'அது தப்பிற்று; இது தப்பிற்று' என்று சொல்லிப் பெரும்பாலும் பலனை இழக்கவேண்டியவையாயுமுள்ள அக்கருமங்களில் கைவைத்து அனர்த்தப்பட்டுப் போவதைக் காட்டிலும் தில்லைத்திருச் சித்திரகூடத்தைச் சென்று சேர்ந்தால் அங்குள்ள எம்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காகி எளிதாக வாழலாமாகையால் அது செய்யுங்களென்று முமுக்ஷுக்களை நோக்கி உபதேசிக்கிறார். (க)

1159.

காயோடுநீடுகனியுண்டு வீசுகடுங்கால்நுகர்ந்துநெடுங்காலம்*ஐந்து
தீயூடுநின்றுதவஞ்செய்யவேண்டா திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்!*
வாயோதுவேதம்மலிகின்றதொல்சீர் மறையாளர்நாளும்முறையால்வளர்த்த*
தீயோங்கவோங்கப்புகழோங்கு தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே (உ)

திரு மார்பனை சிந்தையுள் வைத்தும் என்பீர்	பிராட்டியைத் திருமார்பிற்கொண்ட பெருமானை நெஞ்சில் தரிப்போமென்றிருக்கிற பக்தர்களே!,		(பின்னை என்ன செய்யவேண்டுமென்னில்;)
காயோடு நீடு கனி உண்டு வீசு கடுங் கால் நுகர்ந்து	இளங்காய்களையும் நெடுநாளுலர்ந்த பழங்களையும் புஜித்தும் வீசுகிற உஷ்ணமான காற்றை உட்கொண்டும்	வாய் ஓது வேதம் மலிகின்ற	வாயாலே ஓதப்பட்டு வருகிற வேதங்கள் குறைவற்றிருக்கிற
நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று	நெடுநாள் வரையில் பஞ்சாக்கினி மத்தியில் நின்றுகொண்டு	தொல்சீர் மறையாளர் நாளும் முறையால் வளர்த்த	இயற்கையான நற்குணங்களமைந்தவைதிகர்களநாள்தோறும் கிரமமாக அநுஷ்டித்த
தவம் செய்ய வேண்டா	தபஸ்ஸு பண்ணவேண்டா;	தீ ஓங்க ஓங்க புகழ் ஓங்கு	அக்கினிகார்யங்கள் வளர வளர, (அதனாலே) கீர்த்தி வளரப்பெற்ற
			தில்லை திருசித்ரகூடம் சென்று சேர்மின்கள்—.

* * *—கீழ்ப்பாட்டில் 'உயிர் காவலிட்டு" என்றதை விவரிக்கிறார் "காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து" என்று; இளம்பிஞ்சுகளைத் தின்றும் வெய்யிலிலும் காற்றிலுமுலர்ந்து பசையற்ற பழங்களைப் புசித்தும் வீசுகின்ற வெட்டிய காற்றைப் பருகியும் பஞ்சாக்கிமத்யத்தில் நின்றுகொண்டு தவஞ்செய்தலாகிற வீண்தொழிலை விட்டிட்டுத் தில்லைத் திருச்சித்ர கூடஞ்சென்று சேர்மின்களென்கிறார். பிள்ளைப் பெருமாளையங்கார் இப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றித் திருவரங்கக் கலம்பகத்தில் "காயிலை தின்றுங்கானிலுறைந்துங் கதிதேடித், தீயிடைநின்றும் பூவலம் வந்துந் திரிவீர்காள், தாயினுமன்பன் பூமகள் நண்பன் தடநாகப், பாயன் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே" என்றருளிய பாசுரம் நோக்கத்தக்கது. (உ)

1160.
வெம்புஞ்சினத்துப்புனக்கேழலொன்றாய் விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த*
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தான் அடிப்போதணைவான்விருப்போடிருப்பீர்!*
பைப் பொன்னுமுத்தும்மணியுங்கொணர்ந்து படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த*
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே.(ங)

வம்பு உண் பொழில் சூழ் உலகு	வாஸனை வீசுகின்ற சோலைகளால் சூழப்பட்ட பூமியானது
விரி முதுநீர் வெள்ளம் உள் புக்கு அழுந்த	பரந்த கடல் வெள்ளத்தினுள்ளே புகுந்து மூழ்கிப் போக
அன்று	அக்காலத்து,
வெம்பும் சினம் புனம் கேழல் ஒன்று ஆய் எடுத்தான்	மிக்க கோபத்தை யுடைத்தாய் விலக்ஷணமான காட்டு வராகத் திருவுருவாகி (அப்பூமியை அங்கு நின்றும்) உத்தரிப்பித்துக் கொணர்ந்த பெருமானுடைய
அடிபோது அணைவான் விருப்போடு இருப்பீர்	பாதாரவிந்தத்தை சாரவேணுமென்னும் ஆசைகொண்டிருக்கும் அன்பர்களே!,
மன்னவன் பல்லவர்கோன்	பல்லவ ராஜன்
பை பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து	அழகிய பொற்பூக்களையும் முத்துக்களையும் மாணிக்கங்களையும் கொண்டு வந்து (ஸமர்ப்பித்து)
படை பணிந்த	தனது பரிவாரங்களோடுகூட ஆச்ரயிக்கப்பெற்றதும்
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த	அழகிய பொன்னாலும் ரத்னங்களாலும் செய்யப்பட்ட மாடங்களால் சூழப்பட்டதுமான

தில்லை...சேர்மின்கள்—.

1161.
அருமாநிலமன்றளப்பான்குறளாய் அவுணன்பெருவேள்வியில்சென்றிரந்த*
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம்பிறவித்துயர்நீங்குதுமென்னகிற்பீர்!*
கருமாகடலுள்கிடந்தானுவந்து கவைநாவரவினணைப்பள்ளியின்மேல்*
திருமால்திருமங்கையொடாடு தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே. (ச)

அன்று அரு மா நிலம் அளப்பான் குறள் ஆய்	முன்பொரு காலத்தில், ஒருவராலும் அளக்கமுடியாத பெரிய பூமியை அளப்பதற்காக வாமந ரூபியாகி
அவுணன் பெரு வேள்வியில் சென்று இரந்த பெருமான் திரு நாமம் பிதற்றி	மாவலியென்னு மசுரனுடைய பெரிய யாகபூமியிற் சென்று (மூவடிமண்) யாசித்த எம்பெருமானுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லி
நும் தம் பிறவி துயர் நீங்குதும் என்ன கிற்பீர்	உங்களுடைய ஸம்ஸார துக்கங்களைப் போக்கிக் கொள்ள நினைத்திருக்குமன்பர்களே !,
கரு மா கடலுள்	கறுத்துப் பெரிய கடலிலே
கவை நா அரவின் அணை பள்ளியின் மேல்	இரட்டை நாவையுடைய திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையின் மேல்
உவந்து கிடந்தான் திருமால்	மகிழ்ந்து சயனித்தருள்பவனான திருமால்
திரு மங்கையொடு ஆடு	பிராட்டியோடு நித்யவாஸம் பண்ணப்பெற்ற

தில்லை...சேர்மின்கள்—.

1162.
கோமங்கவங்கக்கடல்வையமுய்யக் குலமன்னரங்கம்மழுவில்துணிய*
தாமங்கமருள்படைதொட்ட வென்றித்தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர்!*
பூமங்கைதங்கிப்புலமங்கைமன்னிப் புகழ்மங்கையெங்குந்திகழப்புகழ்சேர்*
சேமங்கொள்பைம்பூம்பொழில்சூழ்ந்த தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே.

கோ மங்க	க்ஷத்ரியர்கள் அழிடவும்
வங்கம் கடல் வையம் உய்ய	மரக்கலங்கள் நிறைந்த கடலால் சூழப்பட்ட பூமியிலுள்ளார் உஜ்ஜீவிக்கவும்
குலமன்னர் அங்கம் மழுவில் துணிய	ராஜாக்களுடைய சரீரம் மழுவாலே துணிபடவும்
தாம்	தாமே
அங்கு அமருள்	அப்போதுண்டான போர்க்களத்திலே (புகுந்து)
படை தொட்ட	ஆயுதத் தொழில் புரிந்த
வென்றி தவம் மா முனியை	ஜயசீலனாய்த தபஸ்வியான பரசுராமனாக அவதாரம் பண்ணின பெருமானை

தமக்கு ஆக்க கிற்பீர்	ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள நினைக்கு மன்பர்களே !.	புகழ் மங்கை எங்கும் திகழ	கீர்த்தியாகிற மங்கை எல்லா விடங்களிலும் வியாபித்து விளங்கவும் பெற்று
பூ மங்கை தங்கி புலம் மங்கை மன்னி	பெரிய பிராட்டியார் (வலவருகே) தங்கியும் பூமிப் பிராட்டியார் (இடவருகே) பொருந்தியும்	புகழ் சேர் சேமம் கொள்	புகழோடு கூடிய க்ஷேமத்தை யுடைத்தாய்
		பை பூ பொழில் சூழ்ந்த	பரந்து பூத்த சோலைகளால் சூழப்பட்ட
			தில்லை ... சேர்மின்கள் —.

வங்கக் கடல்=வங்கமென்று கப்பலுக்குப் பெயர்; இனி "ஹஂமஹுஸாஂம ஊஜிூவூா" என்ற அமரகோசத்தின்படி **பங்கம்** என்ற வடசொல் அலைக்கு வாசகமாகையால் அச்சொல்லே வங்க மெனத் திரிந்ததென்று கொண்டு 'அலைகடல்' என்று பொருள்கொள்வதும் பொருந்தும்.

ஸ்ரீதேவி, பூதேவி, கீர்த்திதேவி என எம்பெருமானுக்கு மூன்று திவ்ய மஹிஷிகளாம்; இவர்களுள் முதல்தேவி எம்பெருமானுடைய வலப்பக்கத்தைப் பற்றினள்; இரண்டாந்தேவி இடப்பக்கத்தைப் பற்றினள்; (கீர்த்தியென்னும்) மூன்றாந்தேவி உலக முழுவதையும் இடமாகப் பற்றினள் என்று ஒரு சமத்காரம் பொலியப் பேசுகிறார் காண்மின். ஸ்ரீதேவி பூதேவிகட்கு வல்லபனென்று உலகம் நிறைந்த புகழ்பெற்றிருக்கிற எம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகிற தில்லைத் திருச்சித்ரகூட மென்றதாயிற்று. சேமம்—க்ஷேமம். (ரு)

1163.

நெய்வாயழலம்புதுரந்து முந்நீர்துணியப்பணிகொண்டணியார்ந்து* இலங்கு
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம்மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர்!*
அவ்வாயிளமங்கையர்பேசவுந்தான் அருமாமறையந்தணர்சிந்தைபுக*
செவ்வாய்க்கிளிநான்மறைபாடு தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே. (சு)

நெய் வாய் அழல் அம்பு துரந்து	கூர்மை பொருந்திய வாயை யுடைத்தாய் அக்நியைச் சொரிகின்ற அம்பை பிரயோகித்து	நும் தம் மனத்தே இருத்தும்படி வாழ வல்லீர்	உங்களுடைய நெஞ்சிலே (அவனை) இருத்தி வாழ நினைத்திருக்கு மன்பர்களே !,
முந்நீர் துணிய	ஸமுத்ரத்தை த்வம்ஸம் செய்ய முயன்று (பின்பு ஸமுத்ர ராஜன் அநுகூலித்து வந்தவாறே)	அவ்வாய் இள மங்கையர்	அப்படிப்பட்ட வாயையுடைய சிறு பெண்கள்
		அரு மா மறை பேசவும்	(காதால் கேட்டுக்கேட்டு முக பாடமான) அரிய பெரிய வேதவாக்கியங்களை சொல்லாநிற்க (அப்பெண்க ளுடனே கூட)
பணி கொண்டு	(அவன்மேலே அணை கட்டுகை யாகிற) கைங்கரியத்தை அவனால் கொண்டவனும்	செம் வாய்கிளி அந்தணர் சிந்தை புக நால் மறை பாடு	சிவந்த வாயையுடைய கிளிக ளானவை பிராஹ்மணர்கட் கும் மநோஹரமாக நான்கு வேதங்களையும் பாடுமிட மான
அணி ஆர்ந்து இலங்கு மை ஆர் மணிவண்ணனை எண்ணி	ஆபரணங்கள் நிறைந்து விளங்குகின்ற கருமணி போன்ற வடிவையுடைய னயு மிருக்கிற பெருமானை சிந்தித்து		தில்லை சேர்மின்கள் —.

1164.

மௌவல்குழலாய்ச்சிமென்தோள்நயந்து மகரஞ்சுழலச்சுழல்நீர்பயந்த*
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்*
கௌவைக்களிற்றின்மருப்பும்பொருப்பில் கமழ்சந்துமுந்திநிவாவலங்கொள்*
தெய்வப்புனல்சூழ்ந்தழகாய தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே. (எ)

மௌவல் குழல் ஆய்ச்சி மெல் தோள் நயந்து	முல்லைப்பூவைக் கூந்தலிலே அணிந்துள்ள நப்பின்னைப் பிராட்டியினுடைய மெல்லிய தோள்களை விரும்பி யணைந்த வனும்,	மகரம் சுழல சுழல் நீர் பயந்த தெய்வம் திரு மா மலர் மங்கை தங்கு திரு மார்பனை	மீன்கள் சுழலும்படி சுழன்று வருகிற கடலினால் பிரஸவிக் கப்பட்ட அழகிய பெரிய பிராட்டியார் நித்யவாஸம் பண்ணப்பெற்ற திரு மார்பை யுடையவனுமான பெருமானை

சிந்தையுள் வைத்தும் என்பீர்	நெஞ்சில் வைக்கவேண்டியிருக்குமன்பர்களே!,
கௌவை களிற்றின் மருப்பும்	(சிங்கத்தோடே பிணங்கிப்) பிளிறுகிற யானையின் கொம்புகளையும்
பொருப்பில் கமழ் சந்தும்	மலையிலுள்ள மணங்கமழ்கின்ற சந்தன மரங்களையும்
உந்தி	தள்ளிக்கொண்டு
நிவா வலங்கொள் தெய்வம் புனல் சூழ்ந்து அழகாய	'நிவா' என்கிற ஆறானது சுற்றிலும் பிரவஹிக்கப் பெற்றதும் புண்ய தீர்த்தங்களால் சூழப்பட்டு அழகியதுமான

தில்லை சேர்மின்கள்—.

* * *—பெரிய பிராட்டியார், பாற்கடல் கடையும்போது அதில் நின்றுந் தோன்றினவளாதலால் "நீர்பயந்த தெய்வத் திருமாமலர் மங்கை" என்றார். மகரம்—மீனுக்கும் முதலைக்கும் பெயர். கௌவை எனினும் கவ்வை எனினும் ஒக்கும்; பேரொலி என்று பொருள். (மதநீர் என்பாருஞ் சிலருண்டு.) சந்து—சந்தனமென்ற வடசொற் சிதைவு. நிவா—வெள்ளாறு; இத்தலத்திற் பெருகுவதொரு நதி. (எ)

1165.

மாவாயினங்கம்மதியாதுகீறி மழைமாமுதுகுன்றெடுத்து* ஆயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த்துலகுண்டமாயன் குரைமாகழல்கூடுங்குறிப்புடையீர்!*
மூவாயிரநான்மறையாளர்நாளும் முறையால்வணங்கவணங்காயசோதி*
தேவாதிதேவன்திகழ்கின்ற தில்லைத்திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே. (அ)

மா வாயின் அங்கம் மதியாது கீறி	கேசியென்னும் குதிரை வடிவாக வந்த அசுரனுடைய வாயோடுகூட (அதன்) உடலையும் அலக்ஷியமாகப் பிளந்தொழித்தவனையும்,
மழை மா முது குன்று எடுத்து	(இந்திரன் பெய்வித்த) பெரு மழைக்காக பெரிய பழைய கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்தவனையும்
ஆயர் தங்கள் கோ ஆய் நிரை மேய்த்து	இடையர்கட்குத் தலைவனாய் பசுக்களை மேய்த்தவனையும்
உலகு உண்ட	(பிரளய காலத்தில்) உலகங்களை உண்டவனுமிருக்கிற
மாயன்	எம்பெருமானுடைய
குரை மா கழல் கூடும் குறிப்பு உடையீர்	ஆபரணவொலி பொருந்திய சிறந்த திருவடிகளை சேர வேணுமென்னும் நினைவுடைய அன்பர்களே!,
மூவாயிரம் நான்மறையாளர்	மூவாயிரம் பிராமணர்கள்
நாளும் முறையால் வணங்க	நாள்தோறும் முறைமைப்படி வந்து பணியப்பெற்று
அணங்கு ஆய சோதி	அப்ராக்ருதமான தேஜஸ்ஸை யுடையனான
தேவாதி தேவன்	ஸர்வேச்வரன்
திகழ்கின்ற	விளங்குகின்ற

தில்லை சேர்மின்கள்—.

* * *—அணங்காயசோதி = அணங்கு—தெய்வம். திவ்யமான சோதியையுடைய என்றபடி. (அ)

1166.

செருநீலவேற்கண்மடவார்திறத்துச் சினத்தோடுநின்றுமனத்தால்வளர்க்கும்*
அருநீலபாவமகலப்புகழ்சேர் அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்!*
பெருநீர்நிவாவுந்திமுத்தம்கொணர்ந்து எங்கும்வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகள*
திருநீலநின்றுதிகழ்கின்றதில்லைத் திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே (கூ)

செரு நீலம் வேல் கண் மடவார் திறத்து சினத்தோடு நின்று	யுத்தத்திற்குக் கருவியாய் நீல நிறத்ததான வேல் போன்ற கண்களையுடைய ஸ்த்ரீகள் விஷயமாக வுண்டான கோபத்தோடு கூடியிருந்து
மனத்தால் வளர்க்கும் அரு நீலம் பாவம் அகல	நெஞ்சினாலே மேன்மேலும் வ்ருத்தி செய்விக்கப்படுகிற போக்கமுடியாத நெஞ்சை யிருள்மூடப் பண்ணுகிற பாவங்கள் நீங்கப்பெற்று
புகழ்சேர் அமரர்க்கும் எய்தாத அண்டத்து இருப்பீர்	புகழையுடைய பிரமன் முதலிய தேவர்கட்கும் துர்லபமான பரமபதத்திலே இருக்க வேண்டியிருக்கு மன்பர்களே!,
பெரு நீர் நிவா முத்தம் கொணர்ந்து உந்தி வித்தும் வயலுள் எங்கும்	மிக்க நீரையுடைய 'நிவா' என்னும் ஆறானது முத்துக்களைக் கொண்டுவந்து தள்ளி விதைவிதைத்தாற்போலே சொருகப்பெற்ற வயல்களிலெல்லாம்

கயல் பாய்ந்து உகள	மீன்கள் குதித்துத் துள்ளவும்	திரு நீலம் நின்று திகழ்கின்ற	அழகிய நெய்தல்மலர்கள் எப்போதும் விளங்கவும் பெற்ற

தில்லை சேர்மின்கள்—,

* * *—மடவார்திறத்துச்சினமாவது—மடவார் நிமித்தமாக வுண்டாகிற பகை; அதாவது என்னென்னில்; தான் ஒரு மாதரை ஆசைப்பட்டிருக்க மற்றொருவனும் அவளிடத்தே ஆசைவைத்து இவனை அருகு நாடவொட்டாமல் அடித்துத்தள்ள, எப்பாடுபட்டாவது அந்தமாதரைத் தான் பரிக்ரஹித்தே தீருவதென்கிற தீவ்ரமான நோக்கத்தினால் மற்றவனைக் கொலைசெய்துவிடு மளவுந் துணிந்து நிற்கை. இப்படிப்பட்ட துணிவினால் செய்யப்படும் பாவங்கள் பகவத் ப்ராப்திக்கு இடையூறுதலால் அவற்றை யகற்றி, தேவதைகட்கும் எட்டா நிலமாகிய பரமபதத்திற் சென்று சேர்ந்து நித்ய கைங்கரியம் பண்ண வேணுமென்று விருப்புற்றிருக்குமவர்களே! என்று அன்பர்களை விளிக்கிறார் முன்னடிகளில். அன்னவர்களை விளித்து, ‘நீங்கள் தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள்’ என்று சொல்லுவதன் கருத்து இருவகையதாம். சித்திரகூடத்திலே நீங்கள் சிலகாலமாவது வாழ்ந்தால்தான் உங்கட்குப் பரமபத ப்ராப்தி உண்டாகும் என்பதாக ஒருகருத்து; பரமபதத்துக்குப் போகவேணு மென்கிற விருப்பம் உங்கட்கு ஏதுக்காக?; வீணான அந்த விருப்பத்தை விட்டிட்டுச் சித்திரகூடம் சென்று சேர்ந்தீர்களாகில் அவ்விடத்திருப்பே உங்கட்குப் பரமபத வாழ்ச்சியாங்கிடீர் என்பதாக மற்றொரு கருத்து.

செருநீலவேற்கண் = செருச்செய்யும் வேலையும் நீலமலரையும் போன்ற கண்களையுடைய மடவார் என்றுரைத்தலுமாம். மடவாருடைய கலவிக்குப் பிரதிபந்தகர்களாமவர் விஷயத்திலுண்டாகுஞ் சினத்தை மடவார்திறத்துச்சின மென்றது—அதற்கு மடவார்களே மூலகாரணமாதல் பற்றியென்க. “கூனியின் சொல்லால் இராமன் வனவாசஞ்சென்றான்” என்பதை இதற்கு ஒருபுடை ஒப்பாகக் கொள்க.

அருநீலபாவமகல = அருமையாயும் நீலமாயுமிருக்கிற பாவம் நீங்க; எப்படிப்பட்ட ப்ராயச்சித்தங்களாலும் போக்கமுடியாதனவாதலால் ‘அரு’ என்றது; நெஞ்சை இருளப்பண்ணுதலால் நீலமென்றது. மூன்றாமடியில் “வித்தும்வயலுள்” என்றது வினைத்தொகை. வித்து—வினைப்பகுதி: வித்துதல்—விதைத்தல். இங்கு வித்தும்வயலென்றது—விதைக்கப்பெற்ற வயலென்றபடி. வெள்ளாறு பெரு வெள்ளமாய்ப் பெருகி வரும்போது முத்துக்களைக் கொழித்துக் கொண்டுவந்து கழனிகளில் தள்ள, அந்த முத்துக்கள் விதை விதைத்ததுபோல் விளங்க, அவற்றை மீன்கள்கண்டு ‘இவை என்னவோ!’ என்று வெருவித் தாவித் திரிகின்றன வென்று ஸ்வபாவோக்தியாகக் கூறினவாறு (கூ)

1167.

சீரார்பொழில்சூழ்ந்தழகாயதில்லைத் திருச்சித்ரகூடத்துறைசெங்கண்மாலுக்கு*
ஆராதவுள்ளத்தவர்கேட்டுவப்ப அலைநீருலகுக்கருளேபுரியும்*
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றாவொலிமாலையோரொன்பதோடொன்றும்வல்லார்*
பாராருலகமளந்தானடிக்கீழ்ப் பலகாலம்நிற்கும்படிவாழ்வர்தாமே. (ய)

சீர் ஆர் பொழில் சூழ்ந்து அழகாய தில்லை திரு சித்ர கூடத்து	சிறந்த சோலைகளால் சூழப்பட்டு அழகுபெற்ற தில்லைத் திருச்சித்திர கூடத்திலே	கார் ஆர் புயல் கை கலிகன்றி	காளமேகம்போல் உதாரரான திருமங்கையாழ்வார் (அருளிச்செய்த)
உறை செங்கண் மாலுக்கு	நித்யவாஸம் பண்ணுகிற புண்டரீ காக்ஷனை பெருமான் விஷயமாக,	குன்றா ஒலி மாலை ஓர் ஒன்பதோடு ஒன்றும் வல்லார் தாம்	குறையாத ஓசையை யுடைத்தான சொல்மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள்,
ஆராத உள்ளத்தவர் கேட்டு உவப்ப	எவ்வளவு பகவதநுபவம் பண்ணினாலும் திருப்தி பிறவாத நெஞ்சை யுடையரான அன்பர்கள் கேட்டு ஆநந்திக்கும்படி,	பார் ஆர் உலகம் அளந்தான் அடி கீழ்	பூமியையும் ஸ்வர்க்காதி லோகங்களையும் அளந்தவனான பெருமானுடைய திருவடிவாரத்திலே
அலை நீர் உலகுக்கு அருளே புரியும்	கடல் சூழ்ந்த இவ்வுலகத்தி லுள்ளார்க்கு அருள் செய்யுமவராய்	பல காலம் நிற்கும்படி வாழ்வர்	நெடுங்காலம் அடிமைசெய்து நிற்கும்படி வாழப் பெறுவர்.

அடிவரவு:—ஊன் காய் வெம்பும் அருமா கோ நெய் மௌவல் மாவாய் செரு சீரார் வாட.

மூன்ரும்பத்து—மூன்ருந்திருமொழி—வாடமருதிடைபோகி

(இதுவும் தில்லைத்திருச்சித்திரகூடப்பதிகம்).

அவதாரிகை ;—"தில்லைத்திருச்சித்ரகூடஞ் சென்றுசேர்மின்கள்" என்று பரோபதேசமாகச் சென்றது கீழ்த்திருமொழி ; தம்முடைய அநுபவமாய்ச் செல்லுகிறது இத்திருமொழி. *

1168. வாடமருதிடைபோகி மல்லரைக்கொன்ருெக்கலித்திட்டு*
ஆடல்நன்மாவுடைத்து ஆயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்*
கூடியமாமழைகாத்த கூத்தனெனவருகின்ருன்*
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. (௧)

மருது இடை வாட போகி	இரட்டை மருதமரங்களின் நடுவே அவை பங்கமடையும்படி தவழ்ந்து சென்றவனும்,	கூடிய மா மழை காத்த	திரண்ட பெருமழையைத் தடுத்து ரக்ஷித்தவனுமிருக்கிற
மல்லரை கொன்று	மல்லர்களைக் கொன்றவனும்,	கூத்தன் என	கூத்துகளாடின கோபால க்ருஷ்ணனென்று சொல்லும்படியாக
ஒக்கலித்திட்டு ஆடல் நல் மா உடைத்து	நடைபழகி ஆடிக்கொண்டு வந்த கொடிய (அசுரக்) குதிரையைக் கொன்றவனும்,	வருகின்ருன்	வருமவன்
அன்று ஆயர் ஆநிரைக்கு இடர் தீர்ப்பான்	முன்பொரு காலத்தில் இடையர்கட்கும் பசுக்கூட்டங்கட்கும் நேர்ந்த துன்பத்தைத் தீர்ப்பதற்காக	சேடு உயர் பூ பொழில் தில்லை சித்திர கூடத்து உள்ளான்	இளமை தங்கிய ஓங்கின பூஞ்சோலைகளையுடைய தில்லைத் திருச்சித்திர கூடத்திலுள்ளான்.

* * *—**ஒக்கலித்திட்டு** என்ற வினையெச்சம் மேலே இரண்டாமடியோடு கூடக்கடவது ; ஒக்கலித்திட்டாடல்செய்த குதிரை—நடைபழகுவதுபோல ஆடியசைந்துகொண்டுவந்த குதிரையென்க. "**நன்மா**" என்றது விபரீதலக்ஷணை, 'நல்லபாம்பு' என்னுமாபோலே.

கூத்தனெனவருகின்ருன் இப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் ஈற்றடியில் **வருகின்ருனென்**றும் **வருவானென்**றும் அருளிச்செய்யக் காண்கையாலே, ஆழ்வார் இத்திருப்பதிக்கெழுந்தருளின ஸமயம் பெருமாளுக்குத் திருவீதிப் புறப்பாடாக இருக்கலாமென்று சிலர் கூறுவதுண்டு. (௧)

1169. பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிதுவென்ருல்
மாநிலமாமகள் மாதர்கேள்வனிவனென்றும்*வண்டுண்
பூமகள்நாயகனென்றும் புலங்கெழுகோவியர்பாடி*
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௨)

பேய் மகள் கொங்கை நஞ்சு உண்ட இது	"பேய்ச்சியான பூதனையினுடைய முலையில் (தடவியிருந்த) விஷத்தை (அம்ருதமாக) உறிஞ்சியுண்ட இக்காரியம்	வண்டு உண் பூ மகள் நாயகன் என்றும் பாடி	"வண்டுகள் மதுவுண்கிற தாமரைப்பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு நாதன்" என்றும் சொல்லிப் பாடிக்கொண்டு
பிள்ளை பரிசு என்ருல்	இச் சிறுபிள்ளையின் செயல்" என்று சொல்லக் கேட்டதும்	தே(ன்) மலர் தூவ	செவ்விகுன்ருத புஷ்பங்களைப் பணிமாற
புலன் கெழு கோவியர்	அழகிய இடைப் பெண்களானவர்கள்,	வருவான்	(திருவாய்ப் பாடித் திருவீதிகளிலே) ஸஞ்சரித்த பெருமான்
இவன்	"இக் கண்ணபிரான்		
மா நிலமாமகள் மாதர் கேள்வன் என்றும்	பூமிப் பிராட்டிக்கு வல்லபன்" என்றும்	சித்திர கூடத்து உள்ளான்	(இப்போது) சித்திரகூடத்திலே ஸேவைஸாதிக்கின்ருன்.

* * *—**புலன்கெழு கோவியர்**—கண் மனம் முதலிய இந்திரியங்களைக் கவர்கின்ற அழகிய வடிவுபடைத்த இடைச்சிகளென்கை. **஗ோபீ** [கோபீ] என்ற வடசொல் பன்மையுருபேற்றுக் கோவியர் என்ருயிற்று, "**போலன்கெழூ**" என்ற பாடமும் உண்டென்று வியாக்கியானத்தினுல் விளங்குகின்றது ; **போலன்**-பொன்மயமான நகைகளினுல், **கெழூ**—விளங்குகின்ற=என்க. (௨)

1170. பண்டிவன்வெண்ணெயுண்டானென்று ஆய்ச்சியர்கூடியிழிப்ப *
எண்டிசையோரும்வணங்க இணைமருதூடுநடந்திட்டு *
அண்டரும்வானத்தவரு மாயிரநாமங்களோடு *
திண்டிறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௩)

பண்டு	முன்பொருகாலத்தில்,
இவன் வெண்ணெய் உண்டான் என்று ஆய்ச்சியர் கூடி இழிப்ப	"இச்சிறுபிள்ளை வெண்ணெயைத் (திருடித்) தின்றான்" என்று சொல்லி இடைச்சிகள் கும்பல் சேர்ந்து இழிவாகப் பேசப்பெற்றவனையும்,
எண் திசையோரும் வணங்க	எட்டுத்திக்கிலுள்ளாரும் வணங்கும்படியாக
இணை மருதூடு நடந்திட்டு	இரட்டை மருதமரத்தினிடையே நடைபயின்றவனையும்
அண்டரும் வானத்தவரும் ஆயிரம் நாமங்களோடு	இடையர்களும் தேவர்களும் ஸஹஸ்ரநாமங்களைச் சொல்லி
திண் திறல் பாட வருவான்	த்ருடமான ஆண்பிள்ளைத்தனத்தைப் பாடும்படி (திருவாய்ப்பாடியில்) ஸஞ்சரித்தவனையுமுள்ள பெருமான்

சித்திரகூடத்து உள்ளான்—.

* * *—சிலர் எளிமைக்குணத்திலே யீடுபட்டிருப்பர்கள், சிலர் மேன்மைக்குணத்திலே யீடுபட்டிருப்பர்களென்றுண்டே; அதன்படியே கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் முதலியவற்றைக் களவாடி யமுதுசெய்த எளிமைக்குணத்திலே நெஞ்சிழிந்தவர்கள். "அறியாதார்க்கு ஆனையனாகிப்போய் ஆய்ப்பாடி, உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்தான்காணேடீ" 1995. என்றாற்போலே ஏசிப்பேசிப் போதுபோக்குவர்கள்; மேன்மைக்குணத்திலீடுபட்டவர்கள் "கானமருங் கல்லதர்போய்க் காடுறைந்த பொன்னடிக்கள், வானவர்தஞ்சென்னி மலர்கண்டாய் சாழலே" 1992. என்றாற்போலே பேசி வணங்கிக்கிடப்பர்கள். ஆகவிப்படி ஏசுகைக்கும் ஏத்துகைக்கும் உரிய எளிமை மேன்மைகள் விளங்க நின்ற பெருமான் அக்குணங்களிரண்டும் குன்றாமே ஸேவை ஸாதிக்குமிடம் சித்ரகூடம் என்றாராயிற்று. (௩)

1171. வளைக்கைநெடுங்கண்மடவா ராய்ச்சியரஞ்சியழைப்ப *
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத் தண்தடம்புக்கண்டர்காண *
முளைத்தவெயிற்றழல்நாகத் துச்சியில்நின்றதுவாட *
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௪)

வளை கை நெடுங் கண் மடவார் ஆய்ச்சியர்	வளையல்களணிந்த கைகளையும் நீண்ட கண்களையுமுடைய இடைப்பெண்கள்
அஞ்சி	பயப்பட்டு
அழைப்ப	('காளிங்க மர்த்தனமாகிற இந்த பயங்கரமான செய்தியைவந்து பாருங்கள்' என்று) அழைக்க,
அண்டர்	இடையர்கள்
தளைத்து அவிழ் தாமரை பொய்கை தண் தடம் புக்கு	மலர்ந்த தாமரைப் பூக்களையுடைய வொரு பொய்கையின் குளிர்ந்த கரையிலே சென்று
காண	பார்த்தவளவிலே
முளைத்த எயிறு அழல் நாகத்து உச்சியில்	முளைத்த பற்களையுடையதும் விஷாக்நியை உமிழ்வதுமான காளியநாகத்தினுச்சியிலே
நின்று	நின்றுகொண்டு
அது வாட திளைத்து	அந்தநாகம் இளைக்கும்படி நர்த்தனஞ் செய்து
அமர் செய்து	(அந்த நாகத்தோடே யுத்தஞ் செய்து (வெற்றி பெற்று)
வருவான்	உல்லாஸமாக வீதியார எழுந்தருளின பெருமான்

சித்திரகூடத்து உள்ளான்—.

தளைத்தவிழ் தாமரைப்பொய்கை = தளைத்து அவிழ்—'கட்டுண்டிருந்து (பிறகு) அவிழ்ந்த' என்று பொருளாய் விகஸித்தபடியைச் சொல்லிற்றுகிறது. தாமரைகள் புஷ்பிக்கக்கூடிய பொய்கை என்று கருத்து: இப்படிப்பட்ட பொய்கையையன்றோ காளியன் தன் விஷாக்நியினால் கொதிப்பித்துக் கொண்டு கிடந்தானென்கை, **தடம்**—வடசொல்; கரை. (௪)

1172. பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து *
அருவித்திரள்திகழ்கின்ற ஆயிரம்பொன்மலையொத்து *
உருவக்கருங்குழலாய்ச்சிதிறத்து இனமால்விடைசெற்று *
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௫)

பருவம் கருமுகில் ஒத்து	கார்காலத்திலுண்டான காளமேகம் போன்றவனையும்
முத்து உடை மாகடல் ஒத்து	முத்துக்களையுடைய பெரிய கடல் போன்றவனையும்

அருவி திரள் திகழ்கின்ற ஆயிரம் பொன் மலை ஒத்து — அருவிகளின் கூட்டங்களால் விளங்குகின்ற ஆயிரம் பொன்மலைகள் போன்ற வனும்,

உருவம் கருகுழல் ஆய்ச்சி திறத்து — அழகிய கருத்த கூந்தலை யுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக

மால் விடை இனம் செற்று — பெரிய ரிஷபங்களின் திரளைத் தொலைத்தவனும்

தெருவில் திளைத்து வருவான் — (திருவாய்ப்பாடியின்) வீதியிலே கூத்தாடிக்கொண்டு வருமவன்

சித்திரகூடத்து உள்ளான்.—

* * *—திருவாய்ப்பாடித் திருவீதியிலே கண்ணபிரான் எழுந்தருளும்போது பார்த்தால், 'கார்காலத்துக் காளமேகந்தான் இங்ஙனே வடிவெடுத்து நடந்து செல்லுகின்றதோ!' என்று சிலர்க்கு உத்ப்ரேக்ஷிக்கலாம்படியிருக்கும். முத்துவடங்கள் முதலிய ஆபரணங்களை அணிந்துகொண்டுசெல்வதைப் பார்த்தால் முத்துக்கள் மலிந்த கருங்கடல்தான் இங்ஙனே வடிவெடுத்து நடந்து செல்லுகின்றதோ!'' என்றும், 'அருவிகள் விளங்குகின்ற பொன்மலைகள் பலகூடி இங்ஙனே உருவெடுத்து நடந்து செல்லுகின்றனவோ!' என்றும் சிலர்க்கு உத்ப்ரேக்ஷிக்கலாம்படியிருக்கும். ஆகவிப்படி உத்ப்ரேக்ஷிக்கத்தக்க வடிவழகு வாய்ந்து, நப்பின்னைப்பிராட்டியைத் திருமணம் புணர்வதற்குக் கொண்டகோலத்துடனே வீதியார வரும்போது யாதொரு அழகு விளங்கிற்றோ, அவ்வழகைப் பின்புள்ளாரும் ஸேவித்து மகிழும்படி ஸேவைஸாதிக்குமிடம் திருச்சித்ரகூடம் என்ருராயிற்று.

பருவக்கருமுகில்—பருவமாவது காலம்; அதாவது இங்கு மாரிகாலம். இரண்டாமடியில் **பொன்** மலையைச் சொன்னதால் ஆபரணச்சேர்த்தி விவக்ஷிதமென்க. "பலபலவேயாபரணம்" 2834, என்பவாதலால் "**ஆயிரம்** பொன்மலை யொத்து" என்ருர். (௫)

1173. எய்யச்சிதைந்ததிலங்கைமலங்க வருமழைகாப்பான்*
உய்யப்பருவரைதாங்கி ஆநிரைகாத்தானென்றேத்தி*
வையத்தெவரும்வணங்க அணங்கெழுமாமலைபோலே*
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௬)

எய்ய இலங்கை சிதைந்தது — "ஒரு அம்பை தொடுத்துவிட்ட மாத்திரத்திலே லங்காபுரியானது அழிந்தொழிந்தது; (அதுவுந் தவிர)

ஆநிரை மலங்க வரும் மழை காப்பான் — பசுக்களின் கூட்டம் துன்ப மடையும்படியாக வந்து ஏழுநாள் ஓயாமல் பெய்த மழையை தடுப்பதற்காகவும்

உய்ய — (ஆநிரைகள்) பிழைப்பதற்காகவும்

பருவரை தாங்கி காத்தான் — பெரிய கோவர்த்தன மலையை(க் குடையாக) எடுத்துப்பிடித்து எல்லாரையும் காப்பாற்றினன்"

என்று வையத்து எவரும் ஏத்தி வணங்க — என்று சொல்லி பூமியிலுள்ளாரெல்லாரும் துதித்துத் தொழும்படியாக

அணங்கு எழுமாமலைபோலே தெய்வம் புள் ஏறி வருவான் — தெய்வாவேசங் கொண்ட ஒரு பெரிய மலைபோலே யிருக்கிற திவ்ய பக்ஷியாகிய கருடன்மீதேறிக்கொண்டு எழுந்தருளும் பெருமான்

சித்திரகூடத்து உள்ளான்—.

மூன்ருமடியில் "வையத்தெவரும்" என்பதே பாடம். அரும்பதவுரைகாரர் "**வையத்தேவரும்**" என்று பாடங்கொண்டு நிலத்தேவர்களான பிராமணர்களென்று பொருளுரைத்தது பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளத்திற்குப் பொருந்தாது; ஓசையின்பமும் சிதையும்.

அணங்கெழுமாமலைபோலே=அணங்கெழுதலாவது தெய்வாவேசம் பெறுதல். "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்" 3573. என்ருற்போலே பொன்போல் மேனியனான கருடன்மீது கரியதிருமால் வீற்றிருப்பது பொன்மலையினுச்சியில் காளமேகம் படிந்தாற்போன்றிருத்தலால் "மாமலைபோலே தெய்வப்புள்" என்ருர். (௬)

1174. ஆவரிவைசெய்தறிவா ரஞ்சனமாமலைபோலே*
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்து*அழகாய
காவிமலர்நெடுங்கண்ணார் கைதொழவீதிவருவான்*
தேவர்வணங்குதண்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. (௭)

மா அஞ்சனம் மலைபோலே — "பெரிய கரிய மலைபோன்றதும்

மேவு சினம் — மிகுதியாகக்கொண்ட கோபத்தையுடையதும்

அடல் — மிக்க வலிமை யுடையதுமான

வேழம் — (குவலயாபீடமென்னும் கம்ஸனது) யானை

வீழ — மாண்டொழியும்படி

முனிந்து இவை செய்தறிவார் ஆவர்	சீறியருளினது முதலிய இப்படிப்பட்ட அருந்தொழில்களைச் செய்தறிவார் (இக் கண்ணபிரான் தவிர) வேறு யாருமில்லை '' (என்று சொல்லி)	வீதி வருவான்	(வடமதுரைத்) தெருவிலே கம்பீரமாக எழுந்தருளினவன்;
		தேவர் வணங்கு	நித்யஸூரிகளும் வந்து வணங்கப்பெற்ற
		தண்	அழகிய
அழகாய காவி மலர் நெடு கண்ணார் கைதொழ	அழகிய நீலோற்பலம்போன்ற நீண்ட கண்களையுடைய மாதர்கள் கைகூப்பித் தொழும்படியாக	தில்லை சித்திர கூடத்து உள்ளான்	தில்லைத்திருச் சித்திரகூடத்தில் ஸேவை ஸாதிக்கின்றான்

* * *—'' என்று '' என்றொரு சொல் இரண்டாமடியில் வருவித்துக் கொள்ளவேணும்; '' ஆவரிவை செய்தறிவாரென்று அழகாய காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதிவருவான்.''

இவை என்ற பன்மையில்—வழியிடையே வண்ணானைக்கொன்றது, ஆயுதச்சாலையிலே புகுந்து வில்லைமுறித்தது, கடைசியாகக் கம்ஸனைக்கொன்றது முதலியனவும் விவக்ஷிதம். (எ)

1175. பொங்கியமரிலொருகால் பொன்பெயரோனைவெருவ*
அங்கவனுகமளைந்திட்டு ஆயிரந்தோளெழுந்தாட*
பைங்கணிரண்டெரிகான்ற நீண்டவெயிற்றொடுபேழ்வாய்*
சிங்கவுருவின்வருவான் சித்திரகூடத்துள்ளானே. (அ)

ஒருகால் அமரில் பொன் பெயரோன் வெருவ பொங்கி	முன்பொரு காலத்தில் போர்க்களத்தில் ஹிரண்யாஸுரன் பயப்படும்படியாகக் கிளர்ந்து	எரிகான்ற இரண்டு பைங்கண்	நெருப்பை உமிழ்கின்ற பசுத்த இரண்டு திருக்கண்களையும்
அங்கு அவன் ஆகம் அளைந்திட்டு	அவ்விடத்திலே அவ்விரணியனது உடம்பிலே கை வைத்து	நீண்ட எயிற்றொடு பேழ் வாய் சிங்கம் உருவின் வருவான்	நீண்ட கோரப்பற்களையும் பெரிய வாயையுமுடைய நரஸிம்ஹ ரூபியாய்க் காட்சி தந்த பெருமான்
ஆயிரம் தோள் எழுந்தாட	(அவனைச்சித்திரவதம் பண்ணவேணுமென்கிற பதற்றத்தாலே) கைகள் பலமுகமாகப் பெருக்கமடைய,	சித்திரகூடத்து உள்ளான்—.	

பொன்பெயரோன்—வடமொழியில் 'ஹிரண்யம்' என்பதற்குப் 'பொன்' என்று பொருளாதலால் ஹிரண்யனென்னும் பெயருடைய அசுரனைப் பொன் பெயரோனென்கிறது: ஆகவே இது லக்ஷிதலக்ஷணை.

ஆயிரந்தோளெழுந்தாட = பரமபாகவத விரோதியான இரணியனைப் புடைப்பதிலே திருக்கைகளுக்குண்டான பதற்றத்தைப் பலமுகமாக்கி வருணித்தபடி. '**கான்ற**' என்னும் பெயரெச்சத்தில், 'கால்' என்பது வினைப்பகுதி. (அ)

1176. கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியும்சங்கும்*
பெருவிறல்வானவர்சூழ ஏழுலகும்தொழுதேத்த*
ஒருமகளாயர்மடந்தை ஒருத்திநிலமகள்*மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. (௯)

கருமுகில் போல்வது ஓர் மேனி	காளமேகம் போன்று விலக்ஷணமான திருமேனியோடும்	ஒருமகள் ஆயர் மடந்தை	விலக்ஷணையான நீளாதேவியோடும்
கையன ஆழியும் சங்கும்	திருக்கைகளிலுள்ள திருவாழி திருச்சங்குகளோடுங்கூடி,	ஒருத்தி நிலமகள்	ஒப்பற்ற பூமிப்பிராட்டியோடும்
பெருவிறல் வானவர் சூழ	மிக்க சக்தியையுடைய தேவர்கள் சுற்றிலும் சூழ்ந்து ஸேவிக்கவும்	மற்றை திருமகளோடும்	இன்னும் ஸ்ரீதேவியோடுங்கூடி
ஏழ் உலகும் தொழுது ஏத்த	உலகத்திலுள்ளாரெல்லாரும் வணங்கித் துதிக்கவும் பெற்று,	வருவான்	வருமவன்
		சித்திரகூடத்து உள்ளான்—.	

* * *—கீழ் எட்டுப்பாசுரங்களிலும் விபவாவதாரப்படிகளை அநுஸந்தித்துப் பேசினர்; இவ்வளவிலே சித்திரகூடத்தெம்பெருமான் ஆழ்வார் பக்கலிலே திருவுள்ளமுவந்து, 'ஆழ்வீர்!, நீர் ஒவ்

வொரு பாசுரத்திலும் **வருவான் வருவான் வருவான்** என்று பேசிக்கொண்டு வருகிறீராகையாலே நம்மு டைய புறப்பாடு காண்கையில் உமக்கு ஆவல் அதிகரித்திருப்பதாக அறிகின்றேன்; உமக்காக நான் இன்று ஒரு புறப்பாடு காட்டுகிறேன்; கண்டுகளித்துக் கவிபாடும்' என்று சொல்லி நாச்சிமார்களுடனே பெரிய திருவோலக்கமாகப் புறப்பாடு கண்டருள, அதனை ஸேவித்து மகிழ்ந்து பேசுகிறதுபோலேயிருக் கிறது இப்பாசுரம்.

திருமேனி காளமேகம் போன்றுள்ளது; அதற்குப் பரபாகமாகத் திருக்கைகளிலே திருவாழி திருச்சங்குகள் ஜ்வலிக்கின்றன. இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் வந்து சுற்றிலும் சூழ்ந்துவரு கின்றது. மற்றுமுள்ளாரும் தொழுது துதிக்கின்றனர். ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி என்ற நாய்ச்சிமார் மூவரும் விட்டுப்பிரியாதே கூடவே எழுந்தருளியிருக்கின்றனர்; ஆகவிப்படிப்பட்ட விபவம் பொலியப் புறப்பட்டெழுந்தருளா நின்றான் சித்திரகூடத் தெம்பெருமானென்று கண்ணாரக்கண்டு வாயாரப் பேசின ராயிற்று. (கூ)

1177. தேனமர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடமமர்ந்த*
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்*
ஊனமர்வேல்கலிகன்றி ஒண்டமிழொன்பதோடொன்றும்*
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே. (ய)

தேன் அமர் பூ பொழில் தில்லை சித்திர கூடம் அமர்ந்த	வண்டுகள் மொய்த்து அழகிய சோலைகளையுடைய தில்லைத் திருச்சித்திரகூடத்திலே நித்யவாஸஞ் செய்தருள்கிற	கலிகன்றி	திருமங்கையாழ்வார் (அருளிச் செய்த)
வானவர் தங்கள் பிரானை	தேவாதிதேவன் விஷயமாக,	ஒண் தமிழ் இவை ஒன்பதோடு ஒன்றும்	அழகிய தமிழினாலாகிய இப் பத்துப் பாசுரங்களையும்
மங்கையர் கோன்	திருமங்கையிலுள்ளார்க்குத் தலைவரும்	கற்று வல்லார் மேல்	ஓதித் தேறினவர்களிடத்தில்
மருவார் ஊன் அமர்வேல்	எதிரிகளின் சரீரத்திலே பொருந்தித் தைக்கும் வேற்படையையுடையவருமான	தீவினை சாரா	பாவங்கள் கிட்டமாட்டா

அடி வரவு—வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் ஒருகுறள்.

மூன்றாம் பத்து—நான்காந்திருமொழி, ஒருகுறளாய்

(காழிச்சீராமவிண்ணகரப்பதிகம்)

1178.
ஒருகுறளாயிருநிலமூவடிமண்வேண்டி யுலகனைத்துமீரடியாலொடுக்கி*ஒன்றும்
தருகவெனமாவலியைச்சிறையில்வைத்த தாடாளன்தாளணைவீர்!*தக்ககீர்த்தி
யருமறையின்திரள்நான்கும்வேள்வியைந்தும் அங்கங்களவையாறுமிசைகளேழும்*
தெருவில்மலிவிழாவளமுஞ்சிறக்குங் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (க)

ஒரு குறள் ஆய் இரு நிலம் மூ அடி மண் வேண்டி	விலக்ஷண வாமநரூபியாகி (மஹாபலியிடஞ் சென்று) விசாலமான இந்த பூமிக் குள்ளே மூவடி நிலத்தை மாத்திரம் யாசித்து		(அதற்கு அவன் தன்தலையைக் காட்டவே அதில் மூன்றாமடியை வைத்து)
	(அப்படியே அவன் தாரைவார்த்து தத்தஞ்செய்தவாறே)	மாவலியை சிறையில் வைத்த	அந்த மஹாபலியை(ப் பாதாளமாகிற) சிறையிலே கொண்டு வைத்த
உலகு அனைத்தும் ஈர் அடியால் ஒடுக்கி	கீழ்மேலுலகங்களெல்லாவற்றையும் இரண்டடியாலே ஆக்கிரமித்து,	தாடாளன்	பெருமை பொருந்திய ஸர்வேச்வரனுடைய
	(மூன்றாமடியை வைக்க இடம் காணாமையாலே)	தாள் அணைவீர்	திருவடிகளைச் சேரவேண்டியிருக்குமவர்களே!,
			(நீங்கள் செய்யத்தக்கது என்னவென்றால்)
ஒன்றும் தருக என	'மற்றோரடி வைப்புக்கு உரிய நிலத்தைக்கொடு' என்று சொல்லி	தக்க கீர்த்தி அரு மறையின் திரள் நான்கும்	தகுதியான கீர்த்தியையுடைய அரிய வேதங்களின் திரள்கள் நான்கும்
		வேள்வி ஐந்தும்	பஞ்சமஹாயஜ்ஞங்களும்

அங்கங்கள் அவை ஆறும்	வியாகரணம் முதலிய ஆறு அங்கங்களும்	காழி	காழியென்னும் க்ஷேத்திரத்தி லுள்ள
இசைகள் ஏழும்	ஸப்த ஸ்வரங்களும்	சீராம விண்ணகர்	சீராம விண்ணகரமென்னும் திருப்பதியை
தெருவில் மலி விழா வளமும்	வீதிநிறைந்த உத்ஸவவைபவங் களும் (ஆகிய இவற்றாலே)	நீர் சேர்மின்	நீங்கள் சென்று சேருங்கள்
சிறக்கும்	சிறப்புப்பெற்ற		

* * *—இப்பாட்டில் ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு என்னும் எண்கள் அழகாக அமைந்திருத்தல் நோக்கத்தக்கது. இத்திருப்பதியிலெழுந்தருளியிருக்கிற பெருமான் [மூல மூர்த்தி] உலகளந்த பெருமாளாதலால் **ஒருகுறளா** யென்று தொடங்குகிறார்.

இரண்டாமடியில் **‘என்ன’** என்கிற செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த காலவினையெச்சம் ‘என’ என்று தொக்கியிருக்கிறது; ‘என்று சொல்லி’ என்பது பொருள். **தாடாளன்**—பெருமை பொருந்தியவன், முயற்சியுள்ளவன். இத்தலம் **தாடாளன் ஸந்நிதி** என வழங்கப்படுதலுமுண்டு.

1179.

நான்முகனுள்மிகைத்தருக்கையிருக்குவாய்மை நலமிகுசீருரோமசனுல்நவிற்றி*நக்க
னூன்முகமார்தலையோட்டூணொழித்தவெந்தை ஒளிமலர்ச்சேவடியணைவீர்!*உழுசேயோடச்
சூன்முகமார்வளையளைவாயுகுத்தமுத்தைத் தோல்குருகுசினையெனச்சூழ்ந்தியங்க*எங்கும்
தேன்முகமார்கமலவயல்சேல்பாய் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (உ)

நான்முகன் நாள் மிகை தருக்கை	பிரமனுக்கு ஆயுள் மிகுதியினு லுண்டான கர்வத்தை,	சூல்முகம் ஆர் வளை அளைவாய் உகுத்த முத்தை	பிரஸவிக்குந் தருணத்திலிருந்த சங்குகள் வங்குகளிலே ஈன்ற முத்துக்களை
இருக்கு வாய்மை நலம் மிகுசீர் உரோமசனுல் நவிற்றி	வேதாத்யயநநிஷ்டனும் நற் குணங்க ளமைந்தவனுமான ரோமச மஹர்ஷியினுல் போக்கடித்தவனும்,	தொல்குருகு	பெரிய கொக்குகளானவை
		சினை என	(தங்களுடைய) முட்டை யென்று (மயங்கி)
நக்கன் ஊன்முகம் ஆர் தலை ஓடு ஊண் ஒழித்த எந்தை	திகம்பரச்சாமியான ருத்ரன் மாமிசம் முதலியவை தங்கி யிருந்த கபாலத்தைக் கொண்டு பிச்சையெடுத்தலை தவிர்த்தவனுமுள்ள எம் பெருமானுடைய	சூழ்ந்து இயங்க	(அந்த முத்துக்களைச்) சுற்றி ஸஞ்சரியா நிற்கப்பெற்ற தும்
		எங்கும்	எல்லாவிடங்களிலும்
		தேன்முகம் ஆர் கமலம்	தேனெழுகுகின்ற முகம் பொ ருந்திய தாமரைகளையுடைய தும்
ஒளிமலர் சேவடி அணைவீர்	அழகு பொருந்திய திருவடித் தாமரைகளை அணுகவேணு மென்றிருக்கு மன்பர்களே!,	சேல் பாய்	மீன்கள் துள்ளிக் குதிக்கப் பெற்றதுமான
(நீங்கள் செய்யவேண்டியதாவது,)		வயல்	கழனியையுடைய
உழு சே ஓட	உழுகிற எருதுகள் (வயல்களி லே ஓடுவதனுல்,		காழி.........சேர்மின்—.

* * *—மற்றெல்லாருடைய ஆயுளைக் காட்டிலும் நான்முகக் கடவுளின் ஆயுள் நீண்டதென்பது ப்ரஸித்தம். இதனுல் அவன் மிக்க அஹங்காரங்கொண்டிருந்தான்: சிரஞ்சீவிகளில் நமக்கு மேற்பட்டாரில்லை’ என்று செருக்குக்கொண்டிருந்த அந்த நான்முகனுடைய கர்வத்தை எம்பெருமான் **ரோமச**ரென்னும் ஒரு மஹர்ஷியினுல் தொலைத்திட்டன னென்கிறது முதலடியில். ரோமசரென்பவர் சரீரமுழுவதும் அடர்ந்த மயிர்களையுடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்டகாலம் வாழ்ந்திருந்து எம்பெருமானைச் சிந்தனை செய்யவேணுமென்று குதூஹலமுடையராய், தீர்க்காயுஸ் பெறுவதற்காக ஒரு புண்ய நதிக் கரையிலிருந்து தவஞ்செய்துகொண்டிருக்கையில் அளவு கடந்த ஆனந்தங்கொண்ட ஸ்ரீமந்நாராயணன் இவர் முன்னே வந்து ஸேவை தந்தருளி ‘உம்முடைய விருப்பத்தைக் கூசாதே வேண்டிக்கொள்ளும்’ என்று சோதிவாய் திறந்தருளிச்செய்ய, மாமுனிவரும் ‘இவ்வுடம்போடே உன்னை வெகுகாலம் வழிபடவேணுமென்று பேராசை கொண்டிருக்கிறேன் நான்: அனேகமாயிரம் ப்ரஹ்மாக்களுடைய ஆயுளை என்னொருவனுக்குக் கல்பித்தருளினுல் மஹாப்ரஸாதமாகும்’ என்று கைகூப்பி விண்ணப்பஞ்செய்ய எம்பெருமான் அப்படியே திருவுள்ளமுவந்து “மாமுனிவரே! ப்ரஹ்மாவினுடைய ஆயுளின் அவதி உமக்குத்தெரிந்ததே; ஒரு ப்ரஹ்மா காலஞ்சென்ருல் உம்முடைய உடம்பினின்றும் ஒரு ரோமம் இற்றுவிழக்கடவது; இப்படி ஒவ்வொரு ப்ரஹ்மாவின் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்றுவந்து ‘இனிஉம்முடைய உடம்பில் ஒரு ரோமமும் இல்லை’ என்று சொல்லத்தக்க நிலைமை நேருமளவும் நீர் ஜீவித்திருக்கக் கடவீர்” என்று வரந்தந்தருளி மறைந்திட்டனன்—என்பதாக இக்கதையின் விவரணம் கேட்டிருக்கை. இதிஹாஸ புராணங்களிலிருந்து இதற்கு ஆகரம் கண்டுகொள்க. பலகோடி நூறுயிரம் ப்ரஹ்மாக்களின் ஆயுளை ரோமச மஹர்ஷிக்கு வரங்கொடுத்த பெருமானென்று முதலடியாற் சொல்லிற்றுயிற்று.

“**மிகத்தருக்கை**” என்ற பாடம் ஒவ்வாது; “**மிகைத்தருக்கை**” என்றே ஓதுக. மிகையாவது ஆதிக்யம்; அதனுலுண்டான **தருக்கு**—செருக்கு. **இருக்குவாய்மை**—‘ருக்’ என்ற வடசொல் **இருக்கு**

எனத் திரிந்தது ; இச்சொல்—வேதங்களுக்குப் பொதுப் பெயராகவும் ஒரு வேதத்துக்குச் சிறப்புப் பெயராகவும் வழங்கும். **வாய்மை**—உச்சரித்தல். ‘‘**நவிற்றி**’’ என்னும் வினையெச்சத்திற்கு—‘போக்கடித்து’ என்று பொருள் கொள்ள வேண்டியிருத்தலால் ‘**நவிழ்த்தி**’ என்பது நவிற்றியென மருவியிருப்பதாகக் கொள்ளலாம். நவிழ்த்தல்—அவித்தல்.

‘**நக்ந:**’ என்ற வடசொல் நக்கனெனத் திரிந்தது ; ஆடையில்லாதவனென்று பொருள்: சிவனது நாமங்களில் ஒன்று. [**ஊன் முகம் ஆர்**] ‘முகம்’ என்றது வடசொல் விகாரம்: ‘முதலியவை’ என்று பொருள். ரக்தம் முதலியவற்றைக் கொள்க.

இத்தலத்தின் நிலநிலைமை பின்னடிகளில் வருணிக்கப்படுகின்றது: வயல்களிலே கருப்பங் கொண்டுள்ள சங்குகள் ப்ரஸவிக்கவிருக்கையில், அங்கு, உழுகிற எருதுகள் குறுக்கும் நெடுக்கும் ஓட, அவ்வதிர்ச்சியினால் அந்தச் சங்குகள் முத்துக்களைப் பிரஸவித்தன. வெள்ளை வெளேலென்றிருக்கிற அவற்றைக் கொக்குகள் கண்டு அவற்றைத் தம்முட்டையாக ப்ரமித்து அந்த முத்துக்களைச் சுற்றிப் பறந்து கொண்டிருக்கின்றனவாம்.

அளை—புற்று ; வாய்—எழனுருபு. (உ)

1180.

வையணைந்தநுதிக்கோட்டுவராகமொன்றாய் மண்ணெல்லாமிடந்தெடுத்துமதங்கள்செய்து*
நெய்யணைந்ததிகிரியினால்வாணன்திண்டோள் நேர்ந்தவன்தாளணைகிற்பீர்!*நெய்தலோடு
மையணைந்தகுவளைகள்தம்கண்களென்றும் மலர்க்குமுதம்வாயென்றும்கடைசிமார்கள்*
செய்யணைந்துகளைகளையாதேறுங் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (ங)

வை அணைந்த நுதி கோடு வராகம் ஒன்று ஆய்	கூர்மை பொருந்திய முனையையுடைய கோரப்பற்களையுடைத்தான விலக்ஷண வராஹரூபியாகி	அணைகிற்பீர்	சேர விரும்பியிருக்கு மன்பர்களே !,—
மண் எல்லாம் இடந்து எடுத்து மதங்கள் செய்து	பூமி முழுவதையும் அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித்து (கோட்டு நுனியில்) ஏந்திக்கொண்டு வந்து செருக்கு விளங்கும் வியாபாரங்களைச் செய்தவனையும்,	கடைசிமார்கள்	பள்ளச்சிகள்
		செய் அணைந்து	(களை பறிப்பதாகக்) கழினியிலே இழிந்து,
		நெய்தலோடு மை அணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும்	நெய்தல் மலரையும் கருமை நிறம் மிக்க குவளை மலரையும் தங்களுடைய கண்களாகவும்
வாணன் திண் தோள் நெய் அணைந்த திகிரியினால் நேர்ந்தவன்	பாணாஸுரனுடைய திடமான புஜங்களை கூர்மை பொருந்திய திருவாழியினால் அறுத்தவனையுமுள்ள பெருமானுடைய	குமுதம் மலர் தம் வாய் என்றும்	சிவந்த ஆம்பல் மலரை தங்களுடைய வாயாகவும் ப்ரமித்து
தாள்	திருவடிகளை	களை களையாது ஏறும்	களை பறியாமலே வெறுமனே கரையேறுமிடமான
			காழி.........சேர்மின்—

* * *—[**நெய்தலோடு இத்யாதி.**] இத்தலத்தில் வாழ்கின்ற கடைச்சாதிப் பெண்களும் அழகிற் சிறந்துள்ளாரென்பதை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார். **கடைசிமார்கள்**—உழவுத் தொழில் செய்யும் ஈனசாதி மாதர். கழனிகளில் பயிர்களினிடையே நெய்தல், குவளை, குமுதம் முதலியன உண்டாவது வழக்கம் ; அவற்றால் பயிரின் வளர்ச்சி குறைபடுமாதலால் அவற்றைக் களை பறிப்பதும் வழக்கம். அங்ஙனமே களை பறிப்பதாகக் கழனிகளில் இழிந்த இழிகுல மகளிர் அந்த நெய்தல் மலர்களையும் குவளை மலர்களையும் தங்களுடைய கண்களாகவே பாவித்தும், குமுதமலர்களைத் தங்கள் வாயாகவே பாவித்தும் ‘நம்முடைய அவயவங்களையேயோ நாம் பறித்தெறிவது !; இஃது என்ன காரியம்!’ என்று கையொழிந்து களை பறியாமலே வெளியேறுகின்றனராம். மயக்கவணி. பெரியாழ்வார் திருமொழியில் [3-5-3.] ‘‘தம்மைச் சரணென்ற தம்பாவையரைப் புனம் மேய்கின்ற மானினம் காண்மினென்று, கொம்மைப் புயக்குன்றர் சிலை குனிக்குங் கோவர்த்தனம்’’ என்ற பாசுரத்தின் தாற்பரியசைலியும் இங்கு ஸ்மரிக்கத் தக்கது. கோவர்த்தனகிரியில் வாழுங் குறத்திகள் மானேய்மடநோக்கிகள் என்பதைப் பெறுவிக்க நினைத்த பெரியாழ்வார் ஒரு வர்ணனை பண்ணினதுபோல இவ்வாழ்வாரும் இப்பாட்டில் இந்த வர்ணனை வைத்தாரென்க. கடைசிமார்களின் அழகே இப்படி யிருக்குமாயின், குலமாதர்களின் அழகு சொல்ல வேணுமோ என்று கைமுதிகந்யாயந்தோற்றக் கடைசிமார்களைக் கூறியவாறு. ஆடவர்களின் ஜ்ஞாநாநுஷ்டாநங்களை வருணித்தல்போல, மடவார்களின் அவயவ ஸௌந்தரியத்தை வருணித்தலும் நகர்க்குச் சிறப்புக் கூறுதலிற் சேர்ந்ததாமென்பது உணரத்தக்கது ; ‘‘ஒப்பவரில்லா மாதர்கள் வாழும மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி’’ என்றாரிறே கீழும்.

வை—கூர்மை- ‘‘**மதங்கள்செய்து**’’ என்றவிடத்து ‘‘வானத்தெழுந்த மழைமுகில்போல் எங்குங், **கானத்து மேய்ந்து களித்து விளையாடி**, ஏனத்துருவாய்’’ என்ற பெரியாழ்வார் பாசுரம் அநுஸந்திக்க

(ங)

1181.
பஞ்சியமெல்லடிப்பின்னைதிறத்துமுன்னாள்பாய்விடைகளேழடர்த்துப்பொன்னன்பைம்பூண்*
நெஞ்சிடந்துகுருதியுகவுகிர்வேலாண்ட நின்மலன்தாளணைகிற்பீர்!*நீலமாலைத்
தஞ்சுடையவிருள்தழைப்பத்தரளமாங்கே தண்மதியின்நிலாக்காட்டப்பவளந்தன்னால் *
செஞ்சுடர்வெயில்விரிக்குமழகார் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (சு)

முன் நாள்	முற்காலத்தில்
பஞ்சிய மெல் அடி பின்னை திறத்து	பஞ்சுபோன்று மிருதுவான திருவடிகளையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக
பாய் விடைகள் ஏழ் அடர்த்து	மேல்விழுந்து நலியுமியல்வுடைய ரிஷபங்களேழையும் வலியடக்கினவனையும்
பொன்னன் பை பூண் நெஞ்சு இடந்து	இரணியாசுரனுடைய அழகிய ஆபரணங்களணிந்துள்ள மார்வை பிளந்து
குருதி உக உகிர் வேல் ஆண்ட நின்மலன்	ரத்தம் பீறிப்புறப்படும்படி நகங்களையே வேலாயுதமாகக் கொண்டு வியாபரித்தவனையுமுள்ள பரிசுத்த பரமாத்மாவினது
தாள் அணைகிற்பீர்	திருவடிகளை சேர விரும்பும் அன்பர்களே!
நீலம்	(மாடங்களிற் பதித்த) நீல ரத்னங்கள்
மாலை தஞ்சு உடைய இருள் தழைப்ப	அந்திப்பொழுதை ஆதாரமாகவுடைய இருட்டை அதிகப்படுத்தவும்
ஆங்கே தரளம் தண் மதியின் நிலா காட்ட	அவற்றின் நடுவே யழுத்தின முத்துக்கள் குளிர்ந்த சந்திரனது நிலாவைக் காட்டவும்
பவளம் தன்னால்	(இடையிடையே அழுத்தப்பட்ட) பவழங்களாலே
சுடர் செம் வெயில் விரிக்கும்	(உதயகாலத்து) ஸூரியனுடைய சிவந்த காந்தியைப் பரப்பவும் பெற்று
அழகு ஆர்	அழகு பொருந்தியுள்ள

காழி.........சேர்மின்—.

* * *—[**நீலமாலை** யித்யாதி.] இத்தலத்தில் திருமாளிகைகளெல்லாம் நவமணிகளிழைக்கப் பெற்றுள்ளவை யென்பதை ஒரு வர்ணனையாக வெளிப்படுத்துகிறார்; சேராச் சேர்த்தியாயிருக்கிறதென்கிறார்;—இருள், சந்திரன், ஸூரியன் என்னும் இம்மூன்று வஸ்துக்களும் ஒன்றோடொன்று ஸம்பந்தப்படாமலே வேறு வேறு காலங்களிலும் வேறுவேறு தேசங்களிலும் இருக்கக்கூடியவை என்பது ப்ரஸித்தமானதே; இத்தலத்திலோவென்னில் இம்மூன்றும் கூடி வாழ்கின்றனவென்று சமத்காரமாக வருணிக்கிறார். அதாவது—நீலமணிகள் முத்துக்கள் பவழங்கள் இவை அங்குள்ள திருமாளிகைகளில் [அல்லது திருக்கோயிலில்] மாறிமாறிப் பதித்துள்ளதனால், நீலமணிகள் அழுத்தப்பெற்றுள்ள விடங்களில் நீலச்சுடர் மலிந்திருப்பது இருள்மூடிக் கிடப்பதுபோன்றுளது; முத்துக்கள் பதிக்கப்பெற்றுள்ள விடங்களில் அவற்றின் வெள்ளொளி நிலவுபோன்றுளது; பவழங்கள் பதிக்கப்பெற்றுள்ள விடங்களில் அவற்றின் செஞ்சுடரானது உதய காலத்து ஸூர்யனுடைய சிவந்த வெயில் போன்றுளது. ஆகவே வ்யதிகரணங்களாயிருக்கக்கூடிய பொருள்களும் ஸமாநாதிகரணங்களாயிருக்கப்பெற்ற அழகு வாய்ந்தது இத்தலம் என்றதாயிற்று.

தஞ்சு—தஞ்சம், இருளானது மாலைப் பொழுதைப் பற்றுக்கோடாக வுடையதாதலால் "**மாலை தஞ்சுடைய விருள்**" எனப்பட்டது.

தரளம்-முத்து. (சு)

1182. தெவ்வாயமறமன்னர்குருதிகொண்டு திருக்குலத்திலிறந்தோர்க்குத்திருத்திசெய்து *
வெவ்வாயமாகீண்டுவேழமட்ட விண்ணவர்கோன்தாளணைவீர்!*விகிர்த மாதர்
அவ்வாயவாள்நெடுங்கண்குவளைகாட்ட அரவிந்தம்முகங்காட்டவருகேயாம்பல் *
செவ்வாயின்திரள்காட்டும்வயல்சூழ் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே.

தெவ் ஆய மறம் மன்னர் குருதி கொண்டு	சத்துருக்களாகிய வீரராஜாக்களினுடைய ரத்தத்தாலே
திருக்குலத்தில் இறந்தோர்க்கு திருத்தி செய்து	தன் வம்சத்தில் மாண்டவர்களுக்குத் தர்ப்பணம் செய்த பரசுராமனாக அவதரித்தவனையும்
வெம் வாய மா கீண்டு	கொடிய வாயையுடைய குதிரையாக வந்த வசுரனைக் கிழித்தொழித்தவனையும்
வேழம் அட்ட	(கம்ஸனது) யானையைமுடித்தவனையுமுள்ள
விண்ணவர்கோன்	தேவாதி தேவனுடைய
தாள் அணைவீர்	திருவடிகளை சேரவிரும்புமன்பர்களே!,
குவளை விகிர்தம் மாதர் அவ்வாய வாள் நெடுங் கண் காட்ட	கருநெய்தற் பூக்களானவை விலக்ஷணைகளான ஸ்திரீகளுடைய அப்படிப்பட்ட அழகிய நீண்ட கண்கள் போன்று விளங்கவும்
அரவிந்தம் முகம் காட்ட	தாமரை மலர்களானவை (அவர்களது முகம் போன்று விளங்கவும்
அருகே ஆம்பல் செம் வாயின் திரள் காட்டும்	அருகிலுள்ள செவ்வல்லி மலர்களானவை (அவர்களது) சிவந்த வாய்களின் கூட்டம் போன்று விளங்கவும் பெற்ற
வயல் சூழ்	கழனிகளால் சூழப்பட்ட

காழி.........சேர்மின்—.

* * *—**தெவ்**—பகை, பகைவர். **திருத்தி**—'த்ருப்தி' என்னும் வடசொல்லின் விகாரம்: தர்ப்பணத்தைச் சொன்னபடி.

* * *—[**விகிர்தமாதர்** இத்யாதி.] **விகிர்தம்**-வடசொல். 'வேறுபாடுடைய' என்று பொருள். மற்றெல்லாரும் போலன்றியே வைலக்ஷண்யம் பொருந்தியமாதர் என்றபடி. அவர்கள், குவளை போன்ற கண்ணழகும் கமலம்போன்ற முகவழகும் செவ்வாம்பல்போன்ற வாயழகுமுடையராய் இத்தலத்தில் வாழ்கின்றாரென்றவாறு (ரு)

1183.

பைங்கண்விறல்செம்முகத்துவாலிமாளப் படர்வனத்துக்கவந்தனெடும்படையார்திண்கை *
வெங்கண்விறல்விராதனுகவிற்குனித்த விண்ணவர்கோன்தாளணைவீர்! *வெற்புப்போலும்
துங்கமுகமாளிகைமேலாயங்கூறும் துடியிடையார்முகக்கமலச்சோதிதன்னால் *
திங்கள்முகம்பனிபடைக்குமழகார் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (சு)

- பைங் கண் விறல் செம் முகம் வாலி மாள — பசுமைதங்கிய கண்களையும் மிடுக்கையும் (கோபத்தால்) சிவந்த முகத்தையுமுடைய வாலியென்னும் வானர ராஜன் முடியும்படியாகவும்.
- படர் வனத்து கவந்தனெடும் திண் படை ஆர் கை வெம் கண் விறல் விராதன் உக — பரந்த காட்டிலுள்ள கபந்த னென்பவனும் திடமான ஆயுதங்கள் நிறைந்த கைகளையும் உக்ரமான கண்களையும் வலிமையையுமுடைய விராதனென்பவனும் முடியும்படியாகவும்
- வில் குனித்த — வில்லை வளைத்து (அம்புகளைப் பிரயோகித்த)
- விண்ணவர் கோன் — தேவாதி தேவனுடைய
- தாள் அணைவீர் — திருவடிகளையடைய விரும்பு மன்பர்களே!;
- வெற்பு போலும் துங்கம் முகம் மாளிகை மேல் ஆயம் கூறும் — மலைபோன்று உயர்ந்த முகத்தையுடைய மாளிகைகளின் மேல் நிலத்திலே நின்று ஸ்நேஹமாகப் பேசிக்கொண்டிருக்கிற
- துடி இடையார் — உடுக்கைபோன்று நுண்ணிய இடையையுடைய மாதர்களது
- கமலம் முகம் சோதி தன்னால் — தாமரை போன்ற முகத்தின் காந்தியினாலே
- திங்கள் முகம் பனி படைக்கும் — சந்திரனுடைய முகத்திலே வருத்தமுண்டாக்கப்பெற்ற
- அழகு ஆர் காழி.........சேர்மின்—.

* * *—[**வெற்புப்போலு** மித்யாதி.] சந்திர மண்டலத்தளவும் ஓங்கியுள்ள மாடங்களின்மீது மாதர்கள் ஒருவர்க்கொருவர் தோழமை கொண்டாடி வார்த்தையாடாநிற்கையில் அவர்களுடைய முகச் சோதியைப் பார்த்துச் சந்திரன் 'இவர்கள் முன்னே நாம் பிழைக்கிற பிழைப்பு ஒரு பிழைப்பா!' என்று வெள்கி வருந்துகின்றானென்ற விதனால்—இத்தலத்து மாடமாளிகைகள் மிகவும் ஓங்கி விளங்குகின்றன வென்பதும், இத்தலத்து மாதர்கள் திங்கள்திருமுகத்துச் சேயிழையார் என்பதும் பெறுவிக்கப்பட்டனவாம்.

துங்கம்—வடசொல்; உந்நதமானது, **ஆயம்**—தோழி, தோழமை, **பனி**—அச்சம், துக்கம், நடுக்கம். (சு)

1184.

பொருவில்வலம்புரியரக்கன்முடிகள்பத்தும் புற்றுமறிந்தனபோலப்புவிமேல்சிந்த *
செருவில்வலம்புரிசிலைக்கைமலைத்தோள்வேந்தன் திருவடிசேர்ந்துய்கிற்பீர்! *திரைநீத்தெள்கி
மருவிவலம்புரிகைதைக்கழியூடாடி வயல்நண்ணிமழைதருநீர்தவழ்கால்மன்னி *
தெருவில்வலம்புரிதரளமீனுங் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (எ)

- பொருவு இல் வலம் புரி அரக்கன் முடிகள் பத்தும் புற்று மறிந்தன போல புவிமேல் சிந்த — ஒப்பற்ற வலிமையைக் கொண்டுள்ள இராவணனுடைய பத்துத் தலைகளும் புற்று சரியுமாபோலே (எளிதாகக்) கீழே இற்று விழும்படியாக
- செருவில் வலம் புரி சிலை கை மலை தோள் வேந்தன் — யுத்தத்தில் வலிமை காட்டுகிற வில்லை திருக்கையிலே யுடைய மலைபோன்ற தோள்களையுடைய சக்ரவர்த்தி திருமகனது
- திரு அடி சேர்ந்து உய்கிற்பீர் — திருவடிகளையடைந்து வாழ விரும்பு மன்பர்களே!,
- வலம்புரி — சங்குகளானவை
- திரை எள்கி நீத்து மருவி — ஸமுத்ரத்தை இகழ்ந்து விட்டு நீங்கி [கடலில் நின்றும் வந்து] (சீர்காழியிலே) வந்து சேர்ந்து
- கைதை கழியூடு ஆடி — தாழைகள் நிறைந்த கழியி னுள்ளே திரிந்து
- (பிறகு அங்கு நின்றும்)
- வயல் நண்ணி — கழனிகளைச் சென்று சேர்ந்து
- (பிறகு அங்கு நின்றும்)
- மழை தரு நீர் தவழ் கால் — மழை நீர் வெள்ளம் பெருகி வருகிற வாய்க்கால்கள் மூலமாக
- தெருவில் மன்னி — வீதிகளிலே வந்து சேர்ந்து
- வலம்புரி தரளம் ஈனும் — சங்குகளையும் முத்துக்களையும் (தெருக்களிலே) பிரஸவிக் கப்பெற்ற
- காழி...........சேர்மின்—.

* **—முன்னடிகளிலுள்ள **வலம் புரி** யென்ற சொற்களில், **வலம்**—‘ வலயம் ’ என்ற வடசொல் விகாரம். **புற்றுமறிந்தனபோல**—புற்றுக்களைச் சிதைப்பது எப்படி எளிதான காரியமோ அப்படி எளிதாகவே அரக்கன் முடிகள் பத்தையும் சிதைத்தமையைச் சொன்னபடி.

* * *—**திரைநீத்து** இத்யாதி.] கடலிலே வாழ்ந்து கொண்டிருந்த சங்குகளானவை, இத்தலத்தின் நீர்வளத்தைப் பார்த்துக் கடலில் வாஸத்தை இகழ்ந்து விட்டிட்டு இத்தலத்தில் தாழைகள் மலிந்த கழிகளிலே வந்துசேர்ந்து, பிறகு, வயல்களிலே சென்று பாய்கின்ற அக்கழிகள் மூலமாக வயல்களிலே வந்துசேர்ந்து, அவ்விடத்தில் மழைநீர் தேங்கிநின்று அது வாய்க்காலாலே ஊரிலே வந்துபுகுர அவ்வழியாலே தெருக்களிலே வந்தேறி, அந்நீர் வடிந்தவாறே பின்னைப் போகமாட்டாதே அவ்விடந்தன்னிலே கிடந்து சங்குகளையும் முத்துக்களையும் ப்ரஸவிக்கின்றனவாம். இத்தால் நீர்வள நிலவளங்கள் சொல்லப் பட்டன. (எ)

1185.
பட்டரவேரகலல்குல்பவளச்செவ்வாய் பணைநெடுந்தோள்பிணைநெடுங்கண்பாலாமின்சொல்*
மட்டவிழுங்குழலிக்காவானோர்காவில் மரங்கொணர்ந்தானடியணைவீர்!*அணில்கள் தாவ
நெட்டிலையகருங்கமுகின்செங்காய்வீழ நீள்பலவின்தாழ்சினையில்நெருங்கு*பீனத்
தெட்டபழஞ்சிதைந்துமதுச்சோரியுங் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (அ)

பட்டு அரவு ஏர் அகல் அல்குல்	பட்டுச்சேலை யணிந்துள்ளதும், பாம்பின் படத்தை யொத்து அழகியதும் அகன்றதுமான நிதம்ப ப்ரதேசத்தையும்
பவளம் செம் வாய்	பவழம்போற் சிவந்த அதரத்தையும்
பணை நெடு தோள்	மூங்கில்போன்று நீண்ட தோள்களையும்
பிணை நெடு கண்	பெண்மானின்கண் போன்று நீண்ட கண்களையும்
பால் ஆம் இன் சொல்	அமுதம்போன்று இனிமையான வாய்மொழிகளையும்
மட்டு அவிழும் குழலிக்கா	(முடியிலணிந்த மலர்களினின்றும்) தேன்வெள்ள மிடாநின்ற கூந்தலையும் உடையளான ஸத்யபாமைப் பிராட்டிக்காக
வானோர் காவின்	தேவலோகத்துச் சோலையில் நின்றும்
மரம் கொணர்ந் தான்	பாரிஜாத மரத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்த பெருமானுடைய
அடி அணைவீர்	திருவடிகளைச் சேர விரும்பு மன்பர்காள் !;
அணில்கள் தாவ	அணிற்பிள்ளைகள் கிளைகிளையாகத் தாவித்தவழ்வதனால்
நெடு இலைய கரு கமுகின் செங்காய் விழ	நீண்ட இலைகளையுடைய கறுத்த பாக்குமரங்களின் பழுக்காய்கள் உதிர்ந்துவிழ (அதனாலே)
நீள் பலவின் தாழ் சினையில் நெருங்கு	நீண்ட பலாமரங்களினுடைய (காய்களின் கனத்தால்) தாழ்ந்த கிளைகளில் நெருங்கியிருக்கிற
பீனம் தெட்ட பழம் சிதைந்து மது சொரியும்	பருத்த கனியப்பழுத்த (பலாப்) பழங்கள் நசுங்கி தேனைப் பொழியுமிடமான

காழி..........சேர்மின்—.

* * *—‘ **ப்ரவாளம்** ’ என்னும் வடசொல் **பவள**மெனத்திரிந்தது. **பணை**-மூங்கில். பசுமையிலும் நெய்ப்புடைமையிலும் திரண்ட வடிவத்திலும் மூங்கிலைத் தோளுக்கு உவமை கூறுவர். **பிணை**-மான்பேடை.

[**அணில்கள் தாவ** இத்யாதி,] இத்தலத்துச் சோலைகளின் நிலைமையை வருணிக்கிறார். அணிற்பிள்ளைகள் மரங்களிலே தாவித்திரிவது வழக்கமாகையாலே பாக்குமரங்களின் பணைகளிலே தாவும்போது அந்த உராய்தலினால் பழுக்காய்கள் உதிர்ந்து அவை பலாப்பழங்களின்மேல் ‘ தொப் ’ என்று விழ, அதனால் அப்பழங்கள் பிளவுற்று உள்ளிருந்து தேன் வெள்ளமிட்டுப் பெருகுகின்றதாம்.

நெடுமை + இலை நெட்டிலை, ‘ **க்ரமுகம்** ’ என்னும் வடசொல் **கமுகு** எனத்திரிந்தது, **பீநம்**—வடசொல். **தெட்டபழம்** = எம்பெருமானார் இத் திவ்யப்ரபந்த காலக்ஷேபம் நடத்தியருளும்போது இவ்விடத்திலுள்ள ‘ **தெட்ட** ’ என்பதற்குச் சரியான பொருள் விளங்கவில்லையென்று அருளிச்செய்துவைத்து, பின்பொருகால் திவ்யதேச யாத்திரை யெழுந்தருளும்போது இத்தலத்தின் சோலைவழியே வந்து கொண்டிருக்க, அங்கே நாவல் மரங்களின் மீது சில சிறுபிள்ளைகள் ஏறிப் பழம்பறியாநிற்கையில் கீழேயிருந்த சிலபிள்ளைகள் ‘ அண்ணே ! **தெட்டபழ**மாகப் பார்த்துப் பறித்துப்போடு ’ என்ன ; அதை யாத்ருச்சிகமாகக் கேட்டருளின எம்பெருமானார் ‘ பிள்ளாய் ! தெட்ட பழமென்றால் என்ன ?’ என்று வினவியருள, ‘ கனியப் பழுத்த பழம் ’ என்று இப்பிள்ளைகள் சொல்ல, உடையவரும் திருவுள்ளமுவந்து ‘ இது ஒரு திசைச் சொல்போலே யிருந்தது ’ என்றாரென்று பெரியோர்க ளருளிச் செய்யக்கேட்டிருக்கை. (அ)

1186. பிறைதங்குசடையானைவலத்தேவைத்துப் பிரமனைத்தன்னுந்தியிலேதோற்றுவித்து *
கறைதங்குவேல்தடங்கண் திருவைமார்பில் கலந்தவன்தாளணைகிற்பீர்*கழுநீர்கூடித்
துறைதங்குகமலத்துத்துயின்று கைதைத்தோடாரும்பொதிசோற்றுச்சுண்ணம்நண்ணி*
சிறைவண்டுகளிபாடும்வயல்சூழ் காழிச்சீராமவிண்ணகரேசேர்மினீரே. (கூ)

பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து	சந்திரகலை தங்கியிருக்கப் பெற்ற சடைமுடியை யுடையனான சிவனை வல வருகே வைத்துக்கொண் டிருப்பவனும்	சிறை வண்டு	இறகையுடைய வண்டுகளான வை
		கழுநீர் கூடி	செங்கழுநீர்ப்பூக்களில் (பேடையோடு) சேர்ந்திருந்து
பிரமனை தன் உந்தியிலே தோற்றுவித்து	நான்முகனைத் தனது நாபிக்கம லத்தில் படைத்தவனும்	துறை தங்கு கமலத்து துயின்று	நீர்நிலங்களிளுள்ள தாமரைப் பூவிலே (புகுந்து தேனைப் பருகி அங்கே) உறங்கி (அதன் பிறகு)
கறை தங்கு வேல் தட கண் திருவைமார்வில் கலந்தவன்	(சத்ருக்களின்) ரத்தமாம்ஸக் கறை தங்கிய வேல்போன்று விசாலமான திருக்கண்களை யுடைய பிராட்டியைத் திரு மார்பிலே கொண்டுள்ளவனு யுமிருக்கிற பெருமானுடைய	கைதை தோடு ஆரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி	தாழைமடல்களில் பொருந்தியுள்ள பூந்தாதுத் துகள்களிலே புரண்டு
தாள் அணைகிற்பீர்	திருவடிகளைச்சேர விரும்பு மன் பர்களே !,	களி பாடும் வயல் சூழ்	களித்து இசைபாடப்பெற்ற கழனிகளால் சூழப்பட்ட

காழி.........சேர்மின்—.

* * *—[**கழுநீர்கூடி** இத்யாதி.] வண்டுகளானவை செங்கழுநீர் மலர்களிலே பேடைகளுடன் கூடி ரமித்து அதனாலுண்டான துவட்சிக்குப் பரிஹாரமாகத் தாமரைப் பூக்களிலே வந்து துயில் கொண் டிருந்து (தேனைப் பருகிக் களைதீர்ந்து) பின்பு தாழைமடற் சுண்ணங்களிலே போய்ப்புரண்டு களிப்பின் மிகுதியாலே இசைபாடுகின்றனவாம்.

"**கேதகி**" என்னும் வடசொல் '**கைதை**' எனவும், '**சூர்ணம்**' என்னும் வடசொல் '**சுண்ணம்**' எனவும் திரிந்தன. (கூ)

1187. செங்கமலத்தயனனையமறையோர் காழிச்சீராமவிண்ணகரின்செங்கண்மாலை*
அங்கமலத்தடவயல்சூழாலிநாடன் அருள்மாரியரட்டமுக்கியடையார்சீயம்*
கொங்குமலர்க்குழலியர்வேள்மங்கைவேந்தன் கொற்றவேற்பரகாலன்கலியன்சொன்ன
சங்கமுகத்தமிழ்மாலைபத்தும்வல் லார் தடங்கடல்சூழுலகுக்குத்தலைவர்தாமே. (ய)

செங்கமலத்து அயன் அனைய மறையோர்	(திருநாபிக்) கமலத்திற் பிறந்த பிரமனையொத்த வைதிகர் கள் வாழ்கிற	கொங்கு மலர் குழலியர் வேள்	தேன்மிக்க பூக்களையணிந்த கூந்தலையுடைய மாதர்க்கு விரும்பத்தக்கவரும்
காழி சீராம விண்ணகரின்	காழிச் சீராம விண்ணகரத்தி லுள்ள	மங்கை வேந்தன்	திருமங்கைக்கு நிர்வாஹகரும்
செங் கண் மாலை	செந்தாமரைபோற் கண்ண னை பெருமான் விஷயமாக	பர காலன்	எதிரிகட்கு யமன்போன்ற வரும்
அம் கமலம் தடம் வயல் சூழ் ஆலி நாடன்	அழகிய தாமரைத்தடாகங்களை யுடைய வயல்களால் சூழப் பட்ட திருவாலிநாட்டுக்குத் தலைவரும்	கொற்றம் வேல்	வெற்றி பொருந்தியவேற்படை யையுடையவருமான
		கலியன்	ஆழ்வார்
		சொன்ன	அருளிச்செய்த
அருள் மாரி	(பக்தர்கட்கு) அருளைப் பொழி யும் மேகம்போன்றவரும்	சங்கம் முகம் தமிழ் மாலை பத்தும் வல்லார் தாம்	(புலவர்) கூட்டங்கூடிக் கொண்டாடத்தகுந்த தமிழ்ப் பாசுரங்களான இப்பத்தை யும் ஓதவல்லவர்கள்
அரட்டு அமுக்கி	தீங்குசெய்யுமவர்களைத் தலை யெடுக்கவொட்டாதே அமுங் கச் செய்பவரும்	தட கடல்சூழ் உல குக்கு தலைவர்	பரந்த கடலால் சூழப்பட்ட உலகத்திலுள்ளார்க்கெல் லாம் மேலாயிருக்கப் பெறுவர்
அடையார் சீயம்	சத்ருக்களுக்கு ஸிம்ஹம் போன்றவரும்		

அடி வரவு—ஒருகுறள் நான்முகன் வை பஞ்சிய தெவ்வாய பைங்கண் பொருவில் பட்டு பிறை செங்கமலத்து வந்து.

மூன்றாம் பத்து—ஐந்தாந்திருமொழி வந்துனதடியேன்

(திருவாலிப்பதிகம்)

1188, வந்துனதடியேன்மனம்புகுந்தாய் புகுந்ததற்பின்வணங்கும்*என்
சிந்தனைக்கினியாய் திருவேயென்னுருயிரே.!*
அந்தளிரணியார் அசோகினிளந்தளிர்கள்கலந்து*அவையெங்கும்
செந்தழல்புரையும் திருவாலியம்மானே! (க)

அம் தளிர் அணி ஆர் அசோகின் இள தளிர்கள் அவை	அழகிய தளிர்களாலுண்டான அழகு பொருந்திய அசோக மரத்தினது இளந்தளிர்களானவை	என் ஆர் உயிரே	எனது அருமையான உயிர் போன்றவனே!,
எங்கும் கலந்து	எல்லாவிடங்களிலும் பரவியிருப்பதனாலே	வந்து	நீயாகவே நிர்ஹேதுக விஷயீகாரம்பண்ணி
செம் தழல் புரையும்	சிவந்த அக்னி ஜ்வலிப்பதுபோலேயிருக்கப்பெற்ற	உனது அடியேன் மனம் புகுந்தாய்	உன்னடியனை என்னுடைய மனத்திலே வந்து புகுந்தருளினாய்;
திரு ஆலி அம் மானே	திருவாலியில் எழுந்தருளியிருக்கும் பெருமானே!,	புகுந்ததற்பின்	அப்படி நீ வந்து புகுந்த பின்பு
திருவே	எனக்குச் செல்வ மானவனே!	வணங்கும் என் சிந்தனைக்கு இனியாய்	வணக்கமுற்ற என் மனத்துக்கு போக்யனானாய்

* * *—எம்பெருமானுக்கு. பரமபதத்திலும் திருப்பாற்கடலிலும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான உகந்தருளின விடங்களிலும் இருப்பதிற் காட்டிலும் மெய்யடியாருடைய ஹ்ருதய கமலத்திலே வாழ்வதே பரமோத்தேச்யமாகையாலே இப்போது அப்பெருமான் இவ்வாழ்வாரது திருவுள்ளத்திலே வந்து குடிகொண்டான். தம்முடைய பிரார்த்தனை யின்றியே அவன் தானாகவே விரும்பி வந்து புகுந்த மகிழ்ச்சி உள்ளடங்காமல் "**வந்துனதடியேன் மனம் புகுந்தாய்**" என்று வாய்விட்டுப் பேசுகின்றார். [**புகுந்ததற்பின் வணங்குமென் சிந்தனைக்கினியாய்!;**] அவன்றானாகவே வந்து புகுந்தாலும் 'உன்னை இங்கிருக்க வொட்டேன்' என்று அடித்துத் துரத்தும் பாவிகளுமுண்டே ஸம்ஸாரத்தில்; அப்படியல்லாமல் "இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழிருத்துமம்மானே 3202" என்னுமாபோலே பெருநன்றி பாராட்டின தமக்குத் தித்தித்திருந்தமை சொன்னபடி. ஆழ்வாருடைய திருவாராதனத் திருமூர்த்திக்குச் **சிந்தனைக்கினியா**னென்று திருநாமம் ப்ரஸித்தம். இத்திருநாமங் கொண்ட திவ்யமங்கள விக்ரஹம் இன்றைக்கும் கலியன் ஸந்நிதியில் ஸேவை ஸாதிப்பர்.

அருமை + உயிர், **ஆருயிர்**. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" 3293 என்னலாம்படி எனக்குத் தாரகங்களெல்லாம் தானேயாயிருப்பவன் என்றபடி. எம்பெருமானுடைய நினைவாலே, பக்தர்கள் அவனுக்கு உயிராயிருப்பர்; பக்தர்களுடைய நினைவாலே அவன் இவர்கட்கு உயிராயிருப்பன்; "அறிவிலேனுக் கருளாய் **அறிவாருயிரானாய்**" 3322 என்றவிடத்து அறிவார்களுக்கு [ஜ்ஞானிகளுக்கு] உயிராயிருப்பவனே! என்றும் அறிவார்களை உயிராகவுடையவனே! என்றும் இரண்டுவகையான நிர்வாஹங் காண்க.

[**அந்தளிரித்யாதி.**] இத்தலத்தின் சோலைப்புறமெங்கும் அசோகமரங்கள் அடர்ந்து கிடப்பதால் அவற்றின் செந்நிறமான தளிர்களின் ஒளி எங்கும் வீசி அக்நிஜ்வாலை பரவியிருப்பதுபோல் விளங்குகின்றது; ஆகவிப்படி எங்கும் நெருப்புக் கொளுத்தினாற்போலே அழகியதாய்த் திகழ்கின்ற திருவாலிமாநகரில் எழுந்தருளியிருக்கு மெம்பெருமானே! நீ என்னுடைய சிந்தையிற்புகுந்து தித்தித்திருக்கின்றாய் என்றாராயிற்று.

"**சிந்தனைக்கினியாய்**" என்பதை முற்றாகக்கொள்ளாமல் விளியாகக்கொண்டால் '**வாழ்க**' என்றொரு வினைமுற்று வருவித்து முடிக்க. (க)

1189. நீலத்தடவரை மாமணிநிகழக்கிடந்ததுபோல்*அரவணை
வேலைத்தலைக்கிடந்தாய் அடியேன்மனத்திருந்தாய்*
சோலைத்தலைக்கணமாமயில்நடமாட மழைமுகில்போன்றெழுந்து*எங்கும்
ஆலைப்புகைகமழும் அணியாலியம்மானே! (உ)

சோலைத்தலை மாமயில் கணம் நடம் ஆட	சோலையிலே அழகிய மயில்களின் கூட்டமானது (களித்துக்) கூத்தாடும்படியாக	வேலைத்தலை அரவு அணை கிடந்தாய்	திருப்பாற்கடலிலே சேஷசயனத்திலே (கௌஸ்துப மணி விளங்கப்) பள்ளி கொண்டிருந்தாய் முன்பு;
ஆலை புகை மழை முகில் போன்று எங்கும் எழுந்து கமழும்	கருப்பஞ்சாறு அட்டபுகையானது காளமேகம்போலே எங்குங் கிளர்ந்து பரவி பரிமளிக்கப்பெற்ற	அடியேன்மனத்து இருந்தாய்	(இப்போது) என்னுடைய மனத்திலே புகுந்து நீங்காதிருக்கின்றாய்
நீலம் தடவரை மாமணி நிகழ கிடந்தது போல்	நீலநிறமுள்ள பெரியவொரு மலையானது (தன்மேல்) ஒரு நீலரத்னம் விளங்கப்பெற்றுப் படுத்திருப்பது போன்று		அணி ஆலி அம்மானே!—.

* * *—"**அரவணை வேலைத்தலைக் கிடந்தாய் அடியேன் மனத்திருந்தாய்**" என்ற சொற்சேர்த்தியால்—அடியேனுடைய மனத்தில் ஸமயம் பார்த்து வந்து சேர்வதற்காகவே நீ திருப்பாற்கடலில் உபாய சிந்தனை பண்ணிக்கொண்டு கிடந்தாய் என்ற கருத்து விளங்கும். நீலநிறத்ததொரு மலையின்மேல் மாமணி விளங்குவதுபோலத் திருப்பாற் கடலில் அரவணைமேற் கிடந்தாய் என்றவிதனில், நீலமலையின் ஸ்தானத்

திலே எம்பெருமானையும் மாமணியின் ஸ்தாநத்திலே ஸ்ரீகௌஸ்துப மணியையும் உபமேயமாகக் கொள்ளவேணும். ஆகவே "**அரவணை வேலைத்தலை**" என்ற வாக்கியத்திற்கு உபமேயகோடியில் அந்வயமில்லை; அந்வயம் வேணுமென்னில்; எம்பெருமானுடைய கரிய திருமேனியின் நிழலீட்டாலே பாற்கடலும் பாம்பணையும் நீலநிறம் பெற்றனவென்றுகொண்டு, பாற்கடற்பாம்பணையை நீலத் தடவரைக்கு உபமேயமாகவும் எம்பெருமானை மாமணிக்கு உபமேயமாகவுங் கொள்ளலாம்.

மாமணி நிகழ=நிகழ்தல்—விளங்குதல். **வேலைத்தலை**=கடற்கரைக்கு வாசகமான '**வேலா**' என்னும் வடசொல் வேலையென ஐயீறுகி ஆகுபெயரால் கடற்கு வாசகமாயிற்று. **தலை**—ஏழனுருபு. வேலையிலே அரவணைக் கிடந்தாய் என்க.

[**சோலைத்தலை** இத்யாதி.] கரும்பாலைகளில் கருப்பஞ்சாறு அடுவதனல் விசேஷமாகப் புகை கிளம்பி எங்கும் பரவியிருப்பதைக் கண்டமயில்கள் அப்புகைத்திரளை மேகத்திரளாக மயங்கிக் களித்துக் கூத்தாடுகின்றனவாம். மயில்கள் மேகங்களைக் கண்டு தோகை விரித்துக் கூத்தாடுதல் இயல்பு. (உ)

1190.

நென்னல்போய்வருமென்றென்றெண்ணியிராமை யென்மனத்தேபுகுந்தது*
இம்மைக்கென்றிருந்தேன் எறிநீர்வளஞ்செறுவில்*
செந்நெற்கூழைவரம்பொரீஇ அரிவார்முகத்தெழுவாளைபோய்*கரும்பு
அந்நற்காடணையு மணியாலியம்மானே. (ங)

எறி நீர் வளம் செறுவில்	அலையெறிகின்ற நீர்வளம் பொருந்திய வயல்களிலே
செந்நெல் கூழை	செந்நெற்பயிர்களை
வரம்பு ஒரீஇ	வரப்புகளின்மேலே சாயவிட்டு
அரிவார் முகத்து	அறுக்கிறவர்களுடைய முகத்திலே
எழு வாளை	(அக்கதிர்களில் நின்றும்) குதித்துப்பாய்ந்த மீன்களானவை
போய்	(அபாயமுள்ள இவ்விடம் இனி நமக்குத் தகாதென்று அவ்விடம் விட்டுப்) புறப்பட்டுப் போய்
அ நல் கரும்பு காடு அணையும்	அப்படிப்பட்ட நல்ல கருப்பஞ்சோலைகளிலே சேரப்பெற்ற
அணி ஆலி அம்மானே !—;	
நென்னல் போய் வரும் என்று என்று எண்ணி இராமை	'நேற்றுப்போனன், இன்று வருவன் இன்று வருவன் இன்று வருவன்' என்றிப்படி பாரித்துக்கொண்டு போதுபோக்கவேண்டாதபடி
என் மனத்தே புகுந்தது	(ஸ்திரப்ரதிஷ்டையாக நீ) என் நெஞ்சிலே புகுந்தவிது
இம்மைக்குஎன்று இருந்தேன்	இந்தஜந்மம் முழுமைக்குமாம் என்று துணிந்திருக்கிறேன்.

* * *—இனி போக்குவரத்து இல்லாமே ஸ்திரப்ரதிஷ்டையாம்படி என் மனத்திலே புகுந்தாயென்கிறது முதலடி. **நென்னல் போய் வருமென்றென்றெண்ணியிராமை**=உலகத்திலே ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிய நேர்வதுண்டே; காதலியைக் காதலன் விட்டுப்பிரிந்து தேசாந்தரஞ் சென்றால் விரஹவ்யஸநத்தை ஒருவாறு ஆற்றிக்கொள்வதற்காக 'நேற்றுப் போனர், இன்று வந்திடுவர்' என்று சொல்லிக்கொண்டே காதலி காலங்கழிப்பது வழக்கம்; அப்படிச்சொல்லிக்கொண்டு ஏங்கிக்கிடக்க வேண்டாதபடி வயலாலிமணவாளன் ஆழ்வார் தம்முடைய திருவுள்ளத்தை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப்பிரியாதிருக்கின்றமையைச் சொன்னபடி. "**நென்னல் போய் வரும்**" என்பதற்கு மற்றொரு வகையாகவும் பொருள் சொல்லலாம்; நேற்று ஒரு நாள் கழிந்தது, இற்றை நாள் வந்தது; இதுவுங்கழிந்து' நாளை நாள் வரக்கடவது, அதுவுங் கழிந்து அடுத்த நாள் வரக்கடவது என்றிப்படியே (பரதாழ்வான் போலே) பல்லைக் கடித்துக் கொண்டு பிரிவு நாள்களை எண்ணியிருக்க வேண்டாதபடி—என்றுமாம்.

ஆழ்வீர்! இப்போது உம்முடைய நெஞ்சிலே எம்பெருமான் இப்படி வந்து புகுந்தாலும் அடுத்த க்ஷணத்திலே ஓடிப்போய்விட மாட்டானோ வென்று பிறர் சங்கிக்க இடமில்லாதபடி "**இம்மைக்கென்றிருந்தேன்**" என்கிறார். இந்த ஜன்மம் முழுமைக்கும் இப்படியே நித்ய ஸம்ச்லேஷம் குறையின்றி நிலைநிற்குமென்று நிச்சயித்திருக்கிறேனென்றவாறு, **இருந்தேன்**=நிகழ் காலத்தை இறந்த காலத்தாற் சொல்லுவதுமுண்டு.

எறிநீர்வளஞ் செறுவில் என்றுதொடங்கித் திருவாலியின் வயல் நிலைமையை வருணிக்கிறார். கழனிகளில் செந்நெற் பயிர்கள் வானோங்கி வளர்ந்திருந்ததனல் அவற்றை நேரே நின்று அறுக்க முடியாமல் கதிர்த்தலைகளை மடக்கி வரப்புகளிலே படியவைத்து அறுக்கின்றார்களாம் பயிர்த்தொழிலாளர்; அப்படி யறுக்கும்போது அக்கதிர்களைச் சேரப்பிடித்த பிடியிலே அகப்பட்டுக்கொண்ட வாளைமீன்கள் அவர்களுடைய முகத்திலே எழப்பாய்ந்து அபாயமுள்ள அவ்விடத்தைவிட்டுக் கவலையின்றி வாழ்வதற்காக ஸமீபத்திலுள்ள கருப்பங் காட்டிலே சென்று சேர்கின்றனவாம்.

செந்நெல் கூழை—'கூழை' என்று ஏகாரவீற்றதான சொல்லாகவே கொள்ளுதலும். '**கூழ்**' என்ற சொல் இரண்டாம் வேற்றுமையுருபு ஏற்றிருப்பதாகக் கொள்ளுதலும் பொருந்தும். **கூழை** என்று தலை மயிர்க்குப் பேராய் இலக்கணையால் தலையைச் சொல்லிற்றாய் 'செந்நெல் தலை' என்றபடி. பிந்தின யோஜனையில், **கூழ்** என்ற உணவின் பெயர் அதன் காரணமான பயிரைக் குறித்தது; காரியவாகுபெயர், **ஒரீஇ**—ஒருக்கி; சொல்லிசையளபெடை.
(ங)

1191. மின்னின்மன்னுநுடங்கிடை மடவார்தம்சிந்தைமறந்துவந்து* நின்
மன்னுசேவடிக்கே மறவாமைவைத்தாயால் *
புன்னைமன்னுசெருந்தி வண்பொழில்வாயகன்பணைகள் கலந்தெங்கும் *
அன்னமன்னும்வயல் அணியாலியம்மானே. (௪)

புன்னை செருந்தி மன்னு வண் பொழில் வாய்	புன்னை மரங்களும் சுரபுன்னை மரங்களும் பொருந்தியிருக்கிற அழகிய சோலைகளிலே	மின்னின் மன்னு நுடங்கு இடை மடவார் தம் சிந்தை மறந்து வந்து	மின்னல் போன்று துவண்ட இடையையுடைய ஸ்த்ரீகளைப் பற்றின சிந்தனையை தவிர்ந்துவந்து
அகன் பணைகள் எங்கும்	விசாலமான தடாகங்களிலெங்கும்		
அன்னம் கலந்து மன்னும்	அன்னப்பறவைகள் சேர்ந்து வாழப் பெற்றதாயும்	நின் மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாய்	உன் இணைத்திருவடிகளையே நான் நித்தியம் அநுஸந்திக்கும்படி அருள்செய்து வைத்திருக்கிறாய்;
வயல்	வயல்களையுடைத்தாயுமிருக்கிற		
அணி ஆலி அம்மானே	அழகிய திருவாலிநகர்க்கு இறைவனே !;	ஆல்	ஆச்சரியம் !.

* * *—ஆழ்வார் தம்முடைய பழைய நிலைமையையும் இப்போதைய நிலைமையையும் நினைந்து எம்பெருமானிடத்திலே பெருநன்றி பாராட்டுகின்றார். பிரானே ! அநாதி காலமாக நான் எப்படியிருந்தவன் ; மாதர்களின் இடையழகிலே மயங்கிக் கிடந்தவனன்றோ ; அப்படிப்பட்ட என்னை அவ்விஷயத்தைக் காறியுமிழ்ந்து உன் திருவடிகளையே சிக்கனப்பிடித்துக்கொண்டு வாழுமாறு பண்ணிவைத்தாயே !, இந்த மஹோபகாரத்தை நான் மறக்கலாகுமோ? என்கிறார். மூன்றாமடியில், **பவண**—'பண்ணை' என்பதன் தொகுத்தல் ; குளம். (௪)

1192. நீடுபன்மலர்மாலையிட்டு நின்னிணையடிதொழுதேத்தும் * என்மனம்
வாடநீநினையேல் மரமெய்தமாமுனிவா ! *
பாடலின்னொலிசங்கினோசைபரந்து பல்பணையால்மலிந்தெங்கும் *
ஆடலோசையறா அணியாலியம்மானே. (௫)

பாடல் இன் ஒலி சங்கின் ஓசை பரந்து	(பகவத்விஷயப்) பாட்டுக்களின் மதுரமான தொனியும் சங்குகளின் முழக்கமும் எங்கும் வியாபித்திருக்கப் பெற்றதும்	மரம் எய்த மா முனிவா	(ஸுக்ரீவனுடைய நம்பிக்கைக்காக) மராமரங்களேழின் மேலும் அம்புவிட்டுத் துளைத்த ஸத்யஸங்கல்பனே !,
		நின் இணை அடி	உன் இணைத்திருவடிகளில்
பல் பணையால் மலிந்து	பலவகைப்பட்ட வாத்ய கோஷங்களாலும் நிறைந்திருக்கப் பெற்றதும்	பல் மலர்மாலை நீடு இட்டு	பலவகைப்பட்ட புஷ்பமாலைகளை நெடுங்காலம் ஸமர்ப்பித்து
எங்கும் ஆடல் ஓசை அறா	எவ்விடத்தும் கூத்தாட்டங்களின் ஓசைவிட்டு நீங்காதிருக்கப் பெற்றதுமான	தொழுது ஏத்தும் என் மனம் வாட	ஸேவித்து துதிசெய்கின்ற அடியேனுடைய நெஞ்சு (உன்னைப்பிரிந்து) வாட்டமடையும் வகை
அணி ஆலி அம்மானே	அழகிய திருவாலிநகர்க்கு ஸ்வாமியே !,	நீ நினையேல்	நீ நினைக்கலாகாது [என்னை விட்டு நீ பிரியலாகாது.]

* * *—எப்போதும் உன்னுடைய திருவடிகளிலேயே 'அந்தரங்கப்பணிவிடைகள் செய்துகொண்டு போதுபோக்காநின்ற என்னுடைய மனத்தை நீ ஒருபோதும் வாடச்செய்ய நெஞ்சால் நினைக்கவுங்கூடாது ; [இந்த நித்ய ஸம்ச்லேஷத்துக்கு ஒரு குறை நேர்ந்தால் இவருடைய மனம் வாடிப்போகுமாதலால் ஒரு நாளும் பிரியாதிருக்கவேணு மென்றவாறு.]

பிரானே ! ஸுக்ரீவனுக்கு நம்பிக்கையுண்டாக்குவதற்காக அருந்தொழில் செய்தாய் ; எனக்காக அப்படிப்பட்ட செயலொன்றும் நீ செய்யவேண்டா ; என்னைவிட்டுப் பிரியாதிருந்தால் போதுமானது என்ற கருத்துத் தொனிக்கும் **மரமெய்த மாமுனிவா** ! என்ற விளியினால். (௫)

1193. கந்தமாமலரெட்டுமிட்டு நின்காமருசேவடிகைதொழுதெழும்*
புந்தியேன்மனத்தே புகுந்தாயைப்போகலொட்டேன்*
சந்திவேள்விசடங்குநான்மறை ஓதியோதுவித்தாதியாய்வரும்*
அந்தணாளரறா அணியாலியம்மானே. (௬)

சந்தி வேள்வி சடங்கு நால் மறை	ஸந்தியாவந்தனம் முதலிய நித்ய கர்மங்களையும் யாகம் முதலிய நைமித்திக கருமங்களையும் காம்ய கருமங்களையும் தெரிவிக்கிற நான்கு வேதங்களையும்
ஆதியாய் ஓதிஓது வித்து வரும் அந்தணர் அரு	அநாதிகாலமாக தாங்கள் ஓதியும் பிறர்க்கு ஓதுவித்தும் வருகின்ற பிராம்மணர்கள் விட்டுநீங்காத [நித்யவாஸம் பண்ணுமிடமான]
அணி ஆலி அம்மானே!—;	
நின்காமரு சே அடி	உனது அழகிய திருவடிகளிலே
கந்தம் மா மலர் எட்டும் இட்டு	மணம் மிக்க சிறந்த எட்டு வகைப் பூக்களையும் ஸமர்ப்பித்து
கை தொழுது எழும் புந்தியேன் மனத்தே	வணங்கி உஜ்ஜீவிக்கவேணுமென்கிற அத்யவஸாயமுடையேனை என்னுடைய நெஞ்சிலே
புகுந்தாயை போகல் ஒட்டேன்	வந்து புகுந்த வுன்னை இனி வேறோரிடம் போகவொட்டேன்

* * *—கீழ்ப்பாட்டில் "என் மனம் வாட நீ நினையேல்" என்று மறைபொருளாகச் சொன்னதின் கருத்து வெளிப்படுமாறு இப்பாசுர மருளிச்செய்கிறார். "गन्ध" என்ற வடசொல் **'கந்தம்'** என்று கிடக்கிறது; மணம் மிக்க மாமலரெட்டு எவையென்னில்; கருமுகை, கற்பகம், நாழல், மந்தாரம், ஸௌகந்தி, செங்கழுநீர், தாமரை, தாழை என்பனவாம். இவற்றைச் சொன்னது மற்றும் தேவார்ஹமாயுள்ள புன்னை முதலிய புஷ்பங்களுக்கும் உபலக்ஷணமாம்.

"மாமல ரெட்டு மிட்டு" என்றவிதற்கு—ஒவ்வொரு அக்ஷரமும் நறுமலர்போலே அவனுக்கு போக்யமாம்படியிருக்கையாலே எட்டு மலர்கள் போன்ற எட்டெழுத்தோடுங்கூடின திருமந்திரத்தை அநுஸந்தித்து என்பதாகவும் பொருள் கூறலாம். அன்றியே; **"அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ: 1. ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:. ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யானம் புஷ்பம் ததைவ ச—ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம்பவேத்."** என்கிறபடியே அஹிம்ஸை, இந்திரிய நிக்ரஹம், ஸர்வ பிராணிகளிடத்திலும் இரக்கம், பொறுமை, ஞானம், தவம், தியானம், ஸத்யம் என்று எட்டு வகையான புஷ்பங்களாகச் சொல்லப்பட்டவற்றை ஸமர்ப்பித்து என்றுமாம். (இப்பொருள்கள் ஆசார்யஹ்ருதய (99 ஸூ) வியாக்கியானத்திலுள்ளவை.)

காமரு சேவடி='காமம் தரு' என்பது **'காமரு'** என மருவிக்கிடக்கிறது; ஆசையை விளைவிக்க வல்ல திருவடி என்றபடி; எனவே, அழகிய திருவடி என்றதாயிற்று. உனது ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைக் கைதொழுது உஜ்ஜீவிக்க வேணுமென்னும் அத்யவஸாய முடையேனை என்னுடைய ஹ்ருதயத்திலே, நானுன்னை விரும்பாதிருக்க நீயாகவே வந்து புகுந்தபின்பு இனிப்போகவொட்டேன்: தானாகவே விரும்பி வந்துசேர்ந்த செல்வத்தைத் தள்ளுவாருண்டோ? என்கிறார்.

அறு தொழிலந்தணர்கள் நிறைந்திருக்குந் திருவாலி யென்கிறது பின்னடிகளில். (சு)

1194. உலவுதிரைக்கடற்பள்ளிகொண்டுவந்து உன்னடியேன்மனம்புகுந்த*அப்
புலவ!புண்ணியனே; புகுந்தாயைப்போகலொட்டேன்*
நிலவுமலர்ப்புன்னைநாழல்நீழல் தண்டாமரைமலரின்மிசை*மலி
அலவன்கண்படுக்கும் அணியாலியம்மானே. (எ)

நிலவு மலர் புன்னை நாழல் நீழல்	எப்போதுமுள்ள புஷ்பங்களையுடைய புன்னை மரங்களென்ன ஞாழல் மரங்களென்ன (இவற்றினுடைய நிழலில்)
தண் தாமரை மலரின்மிசை	குளிர்ந்த தாமரைப் பூவின் மேலே
மலி அலவன்கண் படுக்கும்	பெரிய ஆண் நண்டுகள் பள்ளி கொண்டிருக்கப் பெற்ற
அணி ஆலி அம்மானே!—	
திரை உலவு கடல்	திரைக் கிளப்பத்தையுடைய திருப்பாற்கடலில்
பள்ளிகொண்டு	சயனித்திருந்து (ஸமயம் பார்த்திருந்து)
வந்து உன் அடியேன் மனம் புகுந்த அப் புலவ	அங்கு நின்றும் ஓடிவந்து உனது தாஸனை என்னுடைய மனத்திலே புகுந்த அப்படிப்பட்ட ஸர்வஜ்ஞனே!
புண்ணியனே	எனது பாக்கியம் வடிவெடுத்துள்ளவனே!
புகுந்தாயை போகல் ஒட்டேன்	என்னிடம் வந்து சேர்ந்த வுன்னை இனி வேறிடம் போகவொட்டேன்

* * *—எம்பெருமான் திருப்பாற்கடல் முதலியவிடங்களில் வாழ்வதானது அவ்விடமே உத்தேச்யமென்கிற எண்ணத்தினாலன்று; எந்த ஸமயத்திலே எந்த அன்பருடைய உள்ளத்திலே புகுந்து கொள்ளலாமென்று பார்த்துக்கொண்டு உபாயாநுஷ்டானம் பண்ணுமவன்போல அங்கே கிடக்கிறானென்பர்; இவ்வர்த்தம் ஸ்ரீவசநபூஷணத்தில்—"'திருமாலிருஞ் சோலைமலையே' என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீர ஏகதேசத்திலே பண்ணும்; அங்குத்

தைவாஸம் ஸாதநம், இங்குத்தைவாஸம் ஸாத்யம். ‘கல்லுங்கனைகடலும்’ என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும். ‘இளங்கோயில் கைவிடேல்’ என்று இவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாயிருக்கும்.’’ 170-3 என்ற ஸ்ரீஸூக்திகளால் நன்கு விசதமாகும். இதுவே இப்பாட்டின் முதலடியிலுறையும் பொருளாம். உலவு திரைக்கடலில் பள்ளிகொண்டிருந்தது அடியேன் மனத்தில் புகுருகைக்காக வென்கிறார். இப்படி நெடுநாள் பாரித்து ஸமயம் பார்த்து என் மனத்திலே புகுந்த உன்னை இனி நான் போகவொட்டேனென்கிறார். “[**அப்புலவ**;] விசேஷஜ்ஞனல்லையோ? அவஸரமறியாயோ புகுருகைக்கு’’ என்ற பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்க. ‘**புண்ணியனே!**’ என்றது—உன்னைப் பெறுவதற்கு உறுப்பாக என்பக்கலிலே யாதொரு ஸுக்ருதமுங் கண்டதில்லை; நீயே யன்றோ மூலஸுக்ருதம் என்றபடி.

பின்னடிகளின் வியாக்கியானத்திலே—‘ வயலாலி மணவாளனுடைய வ்யாபாரத்தோடு “வாசியற்றிருக்கிறதாயிற்று இவர்க்கு, அந்நிலத்திலுள்ளவை யாகையாலே’’ என்றுள்ள ஸ்ரீஸூக்தி அங்குள்ள திர்யக்குக்களுடைய வ்யாபாரத்தோடு அநுஸந்திக்கத்தக்கது. **அலவன்**—ஆண் நண்டு. (எ)

1195. சங்குதங்குதடங்கடல் கடன்மல்லையுட்கிடந்தாய்*அருள்புரிந்து
இங்கென்னுள்புகுந்தாய்! இனிப்போயினாலறையோ ’*
கொங்குசெண்பகமல்லிகைமலர்புல்கி யின்னிளவண்டுபோய்*இளந்
தெங்கின்தாதளையும் திருவாலியம்மானே. (அ)

இன் இள்வண்டு	இனிய இள வண்டுகளானவை
கொங்கு செண் பகம் மல்லிகை மலர் புல்கி	மணம் மிக்க செண்பகப்பூவையும் மல்லிகைப் பூவையும் தழுவிப்பார்த்து
(அவை கொதித்தபடியாலே)	
போய்	அவற்றைவிட்டுப்போய்
இளதெங்கின் தாது அளையும்	இளைய தென்னை மரங்களின் பாளைகளிலே அளையப் பெற்ற
திரு ஆலி அம்மானே!—;	
சங்கு தங்கு தட கடல் கடல் மல்லையுள் கிடந்தாய்	சங்குகள் தங்கிய பெரிய திருப்பாற்கடலிலும் திருக்கடன்மல்லையிலும் (முன்பு) பள்ளிகொண்டிருந்தாய்;
இங்கு அருள் புரிந்து என்னுள் புகுந்தாய்	இப்போது கருணைகூர்ந்து என்னெஞ்சிலே பிரவேசித்தாய்;
இனி போயினால் அறையோ	இனி நீயே விட்டுப்போக நினைத்தாயாகில் அறையோ வறை

* * *—“**சங்கு தங்கு தடங்கடல்**’’ என்பதைக் கடன்மல்லைக்கு விசேஷணமாக்கியு முரைக்கலாம்; சங்குகள் தங்குகிற கடற்கரையிலேயிருக்கிற திருக்கடன்மல்லைத் திருப்பதியிலே என்றபடியாம். அர்ச்சாவதாரங்களில் ‘எழுந்தருளியிருப்பதும் அன்பருடைய உள்ளத்திலே புகுருகைக்கு ஸாதநமாக வென்க. பரமபோக்யமான திருப்பதிகள் பலவுமிருக்க, அவற்றைவிட்டு நிர்ஹேதுக க்ருபையாலே என்னெஞ்சிலே வந்து புகுந்தாய்; இனி இவ்விடம்விட்டு நீ போவதென்றால் அது உன்னாலாகாது; போக முடியுமானால் புறப்பட்டுப்பார்; என்னுடைய வார்த்தை மெய்யாகிறதோ, உன்னுடைய எண்ணம் நிறைவேறுகிறதோ, பார்ப்போமென்கிறார் முன்னடிகளில்.

இனிப்போயினால் அறையோ = அறையோ என்பது தோற்றவர் முன்னே ஜயித்தவர் சொல்லும் வார்த்தைக்குறிப்பு. “அறையோவென நின்ற திருங்கருங்கடல்’’ என்றார் நம்மாழ்வாரும் திருவிருத்தத்தில். “இனிப்போயினா லறையோ’’ என்னுமிவ்விடத்தில் வெற்றி தோல்விகளொன்று மில்லையே யென்னில்; எம்பெருமானே! நீ இவ்விடம்விட்டுப் பேர முடியாது; எப்படியாவது அகன்று போய்விட வேணுமென்று நீ முயன்றாலும் உன் முயற்சி தோற்றுப்போய் என் வார்த்தையே வெற்றிபெற்றதாகும் என்பதாகக்கொள்க. நீ இங்கே வந்து புகுந்ததற்குக் காரணமான பேரருள் மாறினாலன்றோ இவ்விருப்பு மாறப்போகிறது; அருளும் மாறாது, இவ்விருப்பும் மாறாது என்றவாறு.

பின்னடிகளின் கருத்து:—நறுமணம் மிக்க செண்பக மல்லிகை மலர்களிலே மதுவைப்பருக இழிந்த வண்டுகள் அவற்றோடே தழுவியிருந்து, அவை கொதித்தவாறே அந்தக் கொதிப்பை ஆற்றுகைக்காக, கோடையிலே நோவு பட்டவர்கள் சந்தனச்சேற்றிலே கைவைத்துக்கொண்டு கிடக்குமாபோலே இளந்தெங்கிலே போய் அதின் தாதுகளிலே அளைகின்றன வென்பதாம். (அ)

1196. ஓதியாயிரநாமமும்பணிந்தேத்தி நின்னடைந்தேற்கு*ஒருபொருள்
வேதியர்!அரையா உரையாயொருமாற்றமெந்தாய்!*
நீதியாகியவேதமாமுனியாளர் தோற்றமுரைத்து*மற்றவர்க்கு
ஆதியாயிருந்தாய் அணியாலியம்மானே. (கூ)

* திர்யக்குகள்—நண்டு வண்டு முதலியன.

நீதி ஆகிய வேதம்	(நாட்டார் அநுஷ்டிக்க வேண்டு மவற்றை) விதிக்குமவை யான வேதங்களையும்	அரையா	தேவாதி தேவனே!
மாமுனியாளர் தோற்றம்	(அந்த வேதங்களிலுள்ள மந்தி ரங்களை தர்சநம் பண்ணின வர்களான) மஹர்ஷிகளின் வரலாற்றையும்	எந்தாய்	எமக்கு ஸ்வாமியானவனே!
உரைத்து	வெளியிட்டவனும்		அணி ஆலி அம்மானே!—;
மற்றவர்க்கு ஆதி ஆய் இருந்தாய்	மற்றுமுள்ள எல்லார்க்கும் காரணபூதனுயு மிருக்கு மவனே!	ஆயிரம் நாமமும் ஓதி	(உனது) ஸஹஸ்ர நாமங்களை யுஞ் சொல்லி
வேதியா	வேதமொன்றினலேயே அறி யத்தக்கவனே!	பணிந்து ஏத்தி	வணங்கித் துதித்து
		நின் அடைந் தேற்கு	உன்னைத் தஞ்சமாகப்பற்றி யுள்ள எனக்கு
		ஒரு பொருள் ஒரு மாற்றம் உரையாய்	ஒரு அர்த்தத்தையாவது ஒரு சொல்லையாவது அருளிச் செய்யவேணும்.

* * *—கீழ்ப் பாசுரங்களிலே "புகுந்தாயைப் போகலொட்டேன்" என்று இவர்தாம் சொல்லிவைத்தாலும், "உன் மனத்தா லென்னினைந்திருந்தாய் ?" என்றும் "இனியென் திருக்குறிப்பே?" என்றும் அவன் திருவுள்ளத்தை யநுஸரித்து நிற்கவேண்டிய ஸ்வரூபவுண்மையை உணர்ந்தவரான ஆழ்வார், ஸ்வரூபத்துக்குத் தகுதியாகவன்றே பேசவேணும்; அப்படியே பேசுகிறு ரிப்பாட்டில்; பல் பன்னிரண்டையுங் காட்டிப் பிரார்த்திக்கின்றார்; அடியேன் தேறியிருக்கும்படி உன் சோதிவாய் திறந்து ஒரு நல்வார்த்தை சொல்லவேணும்; கடற்கரையிலே நின்று "**ந த்யஜேயம் கதஞ்சந**" என்ற வார்த்தை யையாவது தேர்த்தட்டிலே நின்று "**மா சுச:**" என்ற வார்த்தையையாவது அடியேனை நோக்கி யருளிச் செய்யவேணுமென்கிறார். நீ ஸ்வதந்த்ரனுகையாலே இன்று அநுக்ரஹித்து வந்துசேர்ந்தது போலே நாளை நிக்ரஹித்து அகன்றுபோய் விடவுங்கூடும்; இங்ஙனே நான் சங்கித்துக் கலங்கியிருக்க வொண்ணுத படி 'இனி நானுன்னை விட்டொருநாளும் பிரியேன்' என்று சோதிவாய்திறந்து ஒரு வார்த்தைசொல்லி என்னைத் தேற்றுவிக்கவேணு மென்கிறார்.

"**ஒரு பொருள் உரையாய்**" "**ஒரு மாற்ற முரையாய்**" என்று இரண்டு வாக்கியமாக அந்வயித் துக் கொள்ளலாம்; 'என்னைப் பெறுகைக்கு இத்திருவடிகளே ஸாதநம்' என்கிற ஒரு பொருளையும், "**மாசுச:=**துக்கப்படாதே" என்ற ஒரு சொல்லையும் சொல்ல வேணுமென்கை.

நீதியாகிய வேதம்="ஸத்யம் வத, தர்மம் சர = மெய்யே சொல்லு, தருமத்தை நடத்து" இத்யாதி வாக்யங்களால் நீதியை யுணர்த்துகின்ற வேதம் என்றபடி. (௯)

1197. புல்லிவண்டறையும்பொழில்புடைசூழ் தென்னுலியிருந்தமாயனை*
கல்லின்மன்னுதிண்டோள் கலியனொலிசெய்த*
நல்லவின்னிசைமாலை நாலுமோரைந்துமொன்றும்நவின்றுதாமுடன்*
வல்லராயுரைப்பார்க்கு இடமாகும்வானுலகே. (௰)

வண்டு புல்லி அறையும் பொழில் புடை சூழ்	வண்டுகளானவை ஒன்றே டொன்று அணைந்து இசை பாடப்பெற்ற சோலைகளா லே சுற்றிலுஞ் சூழப்பட்ட	நல்ல இன் இசை மாலை நாலும் ஓரைந்தும் ஒன்றும்	அழகிய இனிய இசையை யுடைத்தானசொல்மாலை யாகிய இப்பத்துப் பாசுரங்களையும்
தென் ஆலி இருந்த மாயனை	திருவாலியிலே எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான் விஷயமாக,	நவின்று	அப்யஸித்து
கல்லின் திண் மன்னு தோள்	மலைபோலே திடமாயும் நித்யமாயு மிருக்கிற தோள்களையுடைய	தாம் உடன் வல்ல ராய் உரைப் பார்க்கு	அர்த்தாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டுரைக்கு மவர்கட்கு
கலியன் ஒலி செய்த	திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த	வான் உலகு இடம் ஆகும்	பரமபதம் இருப்பிடமாகும்.

அடிவரவு:—வந்து நீல நென்னல் மின்னின் நீடு கந்தம் உலவு சங்கு ஓதி புல்லி தூவிரிய.

மூன்றும்பத்து—ஆறுந்திருமொழி—தூவிரியமலருழக்கி

(இதுவும் திருவாலிப்பதிகம்)

அவதாரிகை:—இதில், முதல் நான்கு பாசுரங்கள் தூதுரைப்பன; மேற்பாசுரங்கள் எம்பெரு மானை நோக்கித் தமது ஆற்றுமையைத் தாமே சொல்லிக் கதறுவன.

நஞ்சீயர், திருமேனி நோவுசாத்திக் கொண்டெழுந்தருளி யிருக்கையில் அவருடைய ஸ்ரீ பாதத்து முதலிகளில் ஒருவரான **பெற்றி** யென்பவர் விசாரிக்கச் சென்று வார்த்தையாடுகையில் ‘இப்போது ஸ்வாமிக்கு என்ன திருவுள்ளம்?’ என்று கேட்க; அதற்கு நஞ்சீயர் “*தூவிரிய மலருழக்கித் திருமொழிப் பாசுரங்களைக் காதாரக் கேட்கவும், பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து ஸேவிக்கவும் இஷ்டமா யிருக்கின்றது” என்றருளிச் செய்ய, அப்போதே வரந்தரும் பெருமாளரையர் என்பவரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து இத்திருமொழியை ஸேவிக்கச் சொல்லிக் கேட்டருளா நிற்கையில், நாலாம்பாட்டிலே “தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கு ஓர் மீனாய கொடி நெடுவேள் வலி செய்ய மெலிவேனோ?” என்னுமளவிலே வந்தவாறே ‘நோவுபடுவதற்கு முன்பே வந்து உதவாமற் போனாலும் நேர்ந்த நோயைப் பரிஹரிக்கவாகிலும் வந்தாலாகாதோ?’ என்றருளிச்செய்து மிகவும் தளர்ந்து வருந்தினரென்பது ப்ரஸித்தம். ஆகவே, இத்திருமொழி பகவத் காமுகர்களை நன்கு உக்கருமென்க. ... ... *

1198. தூவிரியமலருழக்கித் துணையோடும்பிரியாதே*
பூவிரியமதுநுகரும் பொறிவரியசிறுவண்டே!*
தீவிரியமறைவளர்க்கும் புகழாளர்திருவாலி*
ஏவரிவெஞ்சிலையானுக்கு என்னிலைமையுரையாயே. (க)

தூ விரிய மலர் உழக்கி	சிறகு விரியும்படியாக இருந்து புஷ்பங்களை மிதித்து	வளர்க்கும் புகழ் ஆளர் திரு ஆலி	குறைவின்றி நடத்துகையால் வந்த கீர்த்தியையுடைய வைதிகர்கள் வாழ்கிற திருவாலியிலே நித்யவாஸம் பண்ணுகிற
துணையோடும் பிரியாதே	தன் துணைவியைவிட்டுப் பிரியாமலிருந்து		
பூ விரிய மது நுகரும்	பூக்கள் விகஸிக்க, அவற்றிலுள்ள தேனைப் பானம் பண்ணுகிற	ஏ வரி வெம் சிலையானுக்கு	அம்புகள் தொடுக்கப்பெற்று அழகியதாய் (சத்துருக்களுக்கு)க் கொடிதா யிருந்துள்ள வில்லை ஆளவல்ல எம்பெருமானுக்கு
பொறி வரிய சிறு வண்டே	புள்ளிகளையும் ரேகைகளையுமுடைய சிறிய வண்டே!		
தீ விரிய	அக்நி காரியங்கள் விஸ்தாரமாகப் பரவும்படி	என் நிலைமை உரையாய்	என்னுடைய அவஸ்தையை சொல்லுவாயாக.
மறை	வைதிக மரியாதைகளை		

* * *—வயலாலிமணவாளன் பக்கலிலே சென்று தமது நிலைமையைச் சொல்லுமாறு ஒரு வண்டை நோக்கிக் கூறுகிறாள். அந்த வண்டு தன் பேடையோடே கலந்து மலரிலே மதுபானம் பண்ணிக் கொண்டிருந்தமையால், ‘நான் துணைவனைப் பிரிந்து உணவும் உறக்கமுமற்று வருந்திக் கிடக்கும்போது நீ இப்படி உன் காரியமே கண்ணாக இருப்பது தகுதியோ?’ என்னுங் கருத்து முன்னிரண்டடிகளில் வெளிவரும். வண்டுகள் சிறகுகளை விரித்துக்கொண்டு மலரை மிதித்தேறி மதுவைப் பருகுதல் இயல்பாதலால் “**தூவிரியமலருழக்கி**” எனப்பட்டது. ‘**தூ**’ என்றும் ‘**தூவி**’ என்றும் சிறகுக்குப் பெயர். **உழக்கல்**-மிதித்தல், சிதிலமாக்குதல்.

* * *—முதலடியில் “**தூவிரியும்** மலருழக்கி” என்ற பாடமுண்டென்று பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தினால் தெரிகின்றது; தூய்தாக விரியும் மலரை=நன்றாக அலர்ந்த மலரை என்றபடி. **பொறிவரிய**=புள்ளிகளும் ரேகைகளும் வண்டுக்கு இயல்பு.

முன்னடிகளால், வண்டை விளித்து, இனிப் பின்னடிகளால் தனக்காகச்செய்யவேண்டுங் காரியத்தை நியமிக்கிறாள் பரகாலநாயகி. வயலாலி மணவாளனை நீ இங்கே அழைத்துக்கொண்டு வர வேண்டா; ‘இன்னாள் இன்னபாடு பட்டுக்கொண்டிருக்கிறாள்’ என்று ஒரு சொல் அவன்செவியிலே விழவிட்டால் போதுமென்கிறாள்.

* * *—**என்னிலைமையுரையாயே** என்ற விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தின் அழகு காண்மின்;—“[**உரையாயே.**] கொடுவரவேண்டா; அறிவிக்குமித்தனையிறே இத்தலைக்கு வேண்டுவது; வருகை அவன் பணியே; வாராதொழியுமன்று ரக்ஷகனுக்குக் குறையாமே: நீங்களறிவித்தவநந்தரம் உங்கள் பேச்சுக் கேட்டுத் தானே வாராநிற்கும்” என்று. (க)

1199. பிணியவிழும்நறுநீல மலர்கிழியப்பெடையோடும்*
அணிமலர்மேல்மதுநுகரும் அறுகாலசிறுவண்டே!*
மணிகெழுநீர்மருங்கலரும் வயலாலிமணவாளன்*
பணியறியேன்நீசென்று என்பயலைநோயுரையாயே. (உ)

பிணி அவிழும் நறு நீலமலர் கிழிய	கட்டு அவிழ்கின்ற மணம் மிக்க நீலோற்பல மலர்கள் கிழியும்படியாக	ஆலி	திருவாலியிலே யெழுந்தருளி யிருக்கிற
பெடையோடும் அணி மலர் மேல் மது நுகரும்	பேடையுடனே அழகிய அந்த மலர்களிலிருந்துகொண்டு மதுபானம் பண்ணுகிற	மணவாளன் பணி	மணவாளப்பிள்ளை போன்ற எம்பெருமானுடைய செய்தியை
அறு கால சிறு வண்டே	ஆறு கால்களையுடைய சிறிய வண்டே!,	அறியேன்	இன்னதென்று நானறிகின்றேனில்லை ;
		நீ சென்று	நீ போய்
மணி கெழுநீர் மருங்கு அலரும் வயல்	அழகிய செங்கழுநீர்ப் பூக்கள் நாற்பக்கத்திலும் விகஸிக்கப்பெற்ற கழனிகளையுடைய	என் பயலை நோய் உரையாய்	என்னுடம்பு வேறுபட்டிருத்தலாகிற நோயை சொல்லுவாயாக.

* * *—இப்பாசுரமும் வண்டைத் தூதுவிடுவதாம், மலரத் தொடங்கின நீலமலரிலே குடும்பத்தோடு சென்றிழிந்து மதுபானம் பண்ணுநிற்கிற வண்டே! வயலாலி மணவாளன் என்னோடு கலந்து பிரிந்துபோனது முதலாக அவன் நினைத்திருப்பது இன்னதென்று தெரியவில்லை; என்னை மறந்திட்டானோ; அன்றி என்னையே நினைத்துக்கொண்டு கிடக்கிறானோ ; இங்கே வருவதாக இருக்கிறானோ ; என்னை அங்கு வரவழைத்துக் கொள்வதாக இருக்கிறானோ - அன்றி நானொருத்தி இருக்கிறேனென்பதைக் கணிசியாமலே கிடக்கிறானோ; இப்போது அவன் செய்வதும் செய்ய நினைத்திருப்பது மொன்றும் எனக்குத் தெரியவில்லை; என்னைப் பிரிந்து அவன் வருத்தமற்றிருப்பது போலவே நானும் அவனைப் பிரிந்து வருத்தமற்றிருக்கிறேனாக அப்பெருமான் நினைத்து ஆறியிருக்கவுங்கூடும்; நான் இங்ஙனே நோவுபடுகிறேனென்பது தெரிந்தால் இங்குவந்து சேரத் தாமஸிக்கமாட்டானாதலால், நீ அங்குச்சென்று நான் படுகிறநோயைத் தெரிவிக்க வேணுமென்கிறாள்.

* * *—**பயலைநோய்**—மேனிநிறத்தை வேறுபடுத்திக்கிடக்கிற நோய். **பயலை**—பசலை ; நிற வேறுபாடு. (உ)

1200. நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநெடுமால்* தன்
தாராயநறுந்துளவம் பெருந்தகையேற்கருளானே ! *
சீராரும்வளர்பொழில்சூழ் திருவாலிவயல்வாழும் *
கூர்வாயசிறுகுருகே குறிப்பறிந்துகூறாயே. (௩)

நீர் வானம் மண் எரி கால் ஆய் நின்ற நெடுமால்	பஞ்ச பூதங்களுக்கு நிர்வாஹகனா யிருக்கிற ஸர்வேச்வரன்	வளர் பொழில் சூழ்	வளர்கின்ற சோலைகளாலே சூழப்பட்ட
		திரு ஆலி	திருவாலிமாநகரில்
தன் தார் ஆய நறு துளவம்	தன்னுடைய மாலையாகிய மணம்மிக்க திருத்துழாயை	வயல் வாழும் கூர்வாய சிறு குருகே	கழனியிலே வாழ்கின்ற கூர்மையான வாயலகையுடைய சிறிய கொக்கே !
பெரும் தகையேற்கு அருளானே	மிகவும் தகுதியையுடையளான எனக்கு கொடுத்தருள்கின்றானில்லையே ;	குறிப்பு அறிந்து	(திருவாலி யெம்பெருமானுடைய) திருவுள்ளக் கருத்தை அறிந்து கொண்டு வந்து
சீர் ஆரும்	சீர்மை பொருந்திய	கூறாய்	(எனக்குச்) சொல்லவேணும்.

* * *—சோலை வாய்ப்புப் பொருந்திய திருவாலியின் கழனிகளிலே மேய்ந்து வாழ்கின்ற சிறு குருகே !, எல்லாப் பொருள்களும் தானேயாய் நிற்கிற ஸர்வேச்வரனான வயலாலி மணவாளன் தனது திருத்துழாய்மாலையை எனக்கு அருள் செய்கின்றிலன் ; (அதாவது—மார்பிலணிந்துள்ள மணமாலை என் கொங்கைத்தடத்தில் நெருக்குண்ணும்படி வந்து ஸம்ச்லேஷிக்கின்றானில்லை.) அவனுடைய திருவுள்ளம் என்மேல் மாறிவிட்டதோ அறியேன் ; நீ சென்று அவனது திருவுள்ளத்தைத் தெரிந்துகொண்டு வந்து எனக்குச் சொல்லவேணும் ; நானொருத்தியிருக்கிறேனென்கிற நினைவோடேயிருந்து இவ்விடம் வருவதாக இருக்கிறானா? அல்லது, இத்தலையை மறந்தேயொழிந்தானா? அபிப்ராய மிருக்கும்படியை அறிந்து கொண்டுவந்து எனக்குச் சொல்லாய் என்கிறாள்.

குறிப்பறிந்து கூறாய்=அவனுடைய திருவுள்ளத்தை யறிந்து வந்து என்னிடம் சொல்லு என்ற பொருள்தவிர, மற்றொரு பொருளும் சொல்லலாம் ; அதாவது—நான் உனக்குத் தூதுசொல்லும் வார்த்தையை அவனிடஞ்சென்று திடீரென்று சொல்லிவிடாதே ; எந்த ஸமயத்தில் சொன்னால் பலிக்குமோ அந்த ஸமயத்தில் சொல்லவேண்டுமாதலால் அந்தக் குறிப்புத்தெரிந்துகொண்டு என் வார்த்தையை அவனிடம் சொல்லு என்பதாம்.

இரண்டாமடியில், "பெருந்தகையேற்கு" "பெறுந்தகையேற்கு" என்பன பாட பேதங்கள். இரண்டு பாடமும் பொருந்தும். பிந்தின பாடத்தில், திருத்துழாயைப் பெறுவதற்குத் தகுதியுடையளான எனக்கு அருள் செய்கின்றானில்லையே என்று பொருள் கொள்க (௩)

1201. தானாகநினையானேல் தன்னினைந்துநைவேற்கு * ஓர்
மீனாயகொடிநெடுவேள் வலிசெய்யமெலிவேனோ ? *
தேன்வாயவரிவண்டே திருவாலிநகராளும் *
ஆனாயற்கென்னுறுநோய் அறியச்சென்றுரையாயே. (௪)

தான் ஆக நினையான் ஏல்	அவன் தானாகவே என்னை நினையாதிருந்தாலும்	தேன் வாய வரி வண்டே	தேன்போல் இனிய வாய்ப் பேச்சையும் ரேகையையு முடைய வண்டே !,
தன் நினைந்து நைவேற்கு	அவன் தன்னையே நினைத்துக் கொண்டு மனம் தளர்ந் திருக்கிற என்னை	திரு ஆலி நகர் ஆளும்	திருவாலி நகரியை ஆட்சி புரிகின்ற
ஓர் மீன் ஆய கொடி நெடு வேள் வலி செய்ய	மகரத்வஜனான மன்மதன் துன்பப்படுத்த	ஆன் ஆயற்கு சென்று	கோபாலகிருஷ்ணன் பக்கலிலே போய்
		என் உறு நோய்	எனது அதிகமான மனோவியாதியை
மெலிவேனோ	இப்படியும் நான் இளைத்துப் போவேனோ?	அறிய உரையாய்	தெளிவாகத் தெரிவிக்க வேணும்.

* * *—உடையவன் உடைமையை விட்டுப்பிரிந்தால் 'ஐயோ! உடைமையை இழந்தோமே!, மறுபடியும் அதனை நாம் பெறவேணுமே!, எப்படி பெறப்போகிறோம்' என்று துணுக்குத் துணுக்கென்றிருந்து ஸொத்தின்மேலேயே கருத்தூன்றியிருக்கவேண்டுவது முறைமை; இந்த முறைமையை எம்பெருமான் நோக்குகின்றிலன்; தன் சரக்காகிய என்னைப் பிரிந்து கவலையற்றிருக்கின்றானே; உடையவன் கவலையற்றிருந்தானாகிலும் உடைமை கவலை கொள்வது நியாயமன்று; அசேதநமாயிருந்துவிட்டால் கவலை கொள்ளாமலிருக்கலாம்; சைதந்ய முண்டாகையாலே கவலை கொள்ளாதிருக்கமுடியவில்லை; என்பது முதலடியின் கருத்து. "நாம் அவனைப்போலே யாகமாட்டோமே; நாமும் நினையாமைக்கு ஒரு நெஞ்சு படைக்கப்பெற்றிலோம்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

ஓர்மீனாய கொடி நெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ?=அப்பெருமானை நினைந்திருப்பதே குற்றமாக மன்மதன் என்னை நோவுபடுத்துகின்றானே; நல்லதோ கெட்டதோ எம்பெருமானாலே விளைவதாயிருந்தால் ஸஹிக்கலாம்; இடையிலே மன்மதனென்னும் சிறுபையல் ஹிம்ஸிக்கும்படியாகவோ நம்முடைய கதி! என வருந்துகின்றாள். "காமற்கு என்கடவேன் கருமாமுகில் வண்ணற்கல்லால், பூமேல் ஐங்கணைகோத்துப் புகுந்தெய்யக் காமற்கு என் கடவேன்" (1948) என்று மேலே அருளிச்செய்வதுங் காண்க. ஆசை அதிகரித்துச் செல்லுவதையும், அது கைகூடாமையாலே கஷ்டம் மீதூர்ந்து செல்லுவதையும், காமனுடைய ஹிம்ஸையாகச் சொல்லுவது மரபு. (௪)

1202. வாளாயகண்பனிப்ப மென்முலைகள்பொன்னரும்ப*
நாணாளும் நின்னினைந்துநைவேற்கு*ஓ !மண்ணளந்த
தாளாளா !தண்குடந்தைநகராளா! வரையெடுத்த
தோளாளா!*என்றனக்கோர்துணையாளனாகாயே. (௫)

ஓ மண் அளந்த தாளாளா	பூமியை யளந்துகொண்ட திருவடிகளை யுடையவனே !	மெல் முலைகள் பொன் அரும்ப	மெல்லிய முலைகளில் நிற வேறுபாடு தோன்றவும்
ஓ தண் குடந்தை நகர் ஆளா	குளிர்ந்த திருக்குடந்தையை ஆளுமவனே !	நாள் நாளும் நின் நினைந்து நைவேற்கு என்தனக்கு	நாள்தோறும் உன்னையே நினைத்துக்கொண்டு மனம் தளர்கின்ற எனக்கு
ஓ வரை எடுத்த தோள் ஆளா	கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துப் பிடித்த திருத்தோள்களை யுடையவனே !		
வாள் ஆய கண் பனிப்ப	வாள்போன்ற (எனது) கண்கள் நீரைப்பெருக்கவும்	ஓர் துணையாளன் ஆகாய்	நீ சிறந்த துணைவனாக வேணும்

* * *—கீழ் நான்கு பாசுரங்களும் தூது விடுவனவாய்ச் சென்றன. வயலாலி மணவாளனையே இடைவிடாது நெஞ்சில் பாவனை செய்துகொண்டிருந்ததனால், அவன் கண்முன்னே வந்து தோற்றுகிறானாகக்கொண்டு அவனோடு நேரே வார்த்தை சொல்லுவதாகச் செல்லுகின்றன சில பாசுரங்கள். பிராட்டி அசோகவனத்தில் திருவடியை நோக்கிப் பெருமாளுக்குத் தூதுமொழிகள் சொல்லிக்கொண்

டிருக்கும்போது இடையிலே பெருமாளையே ஸம்போதநம் பண்ணி 'நாதா! என் விஷயத்தில் சிறிது அபராதம் பண்ணின காகத்தின் விஷயத்தில் உன் பராக்கிரமத்தைப் பெரிதாகக் காட்டினாய்; என்னை அடியோடு பிரித்துக்கொணர்ந்து சிறைவைத்திருக்கின்ற மஹாபாபியான இராவணன்மேல் பொறுமை பாராட்டி நிற்கின்றாய்; இஃது என்ன?' என்றிப்படிப்பட்ட சில வார்த்தைகளை முன்னிலையாகவே சொன்னதுபோல இப்பரகால நாயகியும் வயவாலி மணவாளனை முன்னிலையாக்கிச் சில பாசுரங்கள் பேசுகிறாள்.

மென்முலைகள் பொன்னரும்ப = முலைகளின் நிறம் வேறுபட்டுப் பசலை பூத்திருப்பதைப் பொன்னரும்பியிருப்பதாகச் சொல்லுகிறது. ஆழ்வார் ஸ்திரீ பாவனையை மானஸிகமாக ஏறிட்டுக்கொண்டாலும் மார்பில் மெய்யே முலைகள் முளைக்கமாட்டாவே, அப்படியிருக்க "**மென்முலைகள் பொன்னரும்ப**" என்று சொல்லுவது எங்ஙனே? என்று சங்கிக்கக்கூடும். நாயகனை அநுபவிப்பதற்கு முலை ஸாதநமாயிருப்பதுபோல எம்பெருமானை அநுபவிப்பதற்கு பக்தி (ஆசை) ஸாமக்ரியாக இருப்பதனால் அந்த பக்தியே முலையெனப்படுகிறதாகக் கொள்க. ஆகவே '**மென்முலைகள் பொன்னரும்ப**' என்றது—எம்பெருமானை அநுபவித்து மேன்மை பெறவேண்டிய என் ஆசையானது அவ்வநுபவங் கிடையாமையாலே பாழாய்ப்போக என்றபடி.

"ஓ மண்ணளந்த தாளாளா!" என்று தொடங்கி மூன்று விளிகள் மூன்று லோகங்கேட்க விளிக்கிறார். 'ஓ' என்பதை ஒவ்வொரு விளியோடுங் கூட்டுக. ஒருவரும் அபேக்ஷியாதிருக்க எல்லார் தலையிலும் திருவடியைக் கொண்டுபோய் வைத்தவனன்றோ நீ. அக்காலத்தில் இழந்தவர்களுக்கும் இனிமை பயக்கிறேனென்று திருக்குடந்தையில் திருக்கண்வளருமவனன்றோ நீ; இடக்கை வலக்கை யறியாதவர்களையும் வாயில்லாச் சீவன்களையும் மலையெடுத்து மழைதடுத்துக் காத்தவனன்றோ நீ; இவ்வளவு குணசாலியாயிருந்து வைத்து என்னொருத்திக்கேயோ வேம்பாகவேணும் என்கிறாள்.

என்றனக்கு ஓர் துணையாளனாகாய்—கோவர்த்தனமலையாகிற பெருஞ்சுமையைத் தூக்கி நின்றாயென்பது ஒரு பெருமையல்ல; என்னுடைய ஆற்றாமையிலே சிறிதளவாகிலும் உன்னால் சுமக்கமுடியுமா பாராய் பிரானே! என்கிறாள் போலும். (ரு)

1203. தாராயதண்டுளவ வண்டுழுதவரைமார்பன்*
போரானைக்கொம்பொசித்த புட்பாகனென்னம்மான்*
தேராரும்நெடுவீதித் திருவாலிநகராளும்*
காராயனென்னுடைய கனவளையும்கவர்வானே! (சு)

தார் ஆய தண் துளபம் வண்டு உழுத வரை மார்பன்	மாலையாகிய திருத்துழாயிலுள்ள வண்டுகளாலே (தேனும் சுண்ணமுங் கொண்டு) சேறு செய்யப்பட்ட மலைபோன்ற திருமார்பையுடையவனும்	தேர் ஆரும் நெடு வீதி	திருத்தேர் எழுந்தருள்வதற்குப் பாங்கான பெருமை பொருந்திய வீதிகளையுடைய
போர் ஆனை கொம்பு ஒசித்த	போர்புரிய நின்ற (கம்ஸனது) யானையினுடைய தந்தங்களை முறித்தொழித்தவனும்	திரு ஆலி நகர் ஆளும்	திருவாலி நகரை ஆள்பவனுமான
புள்பாகன்	கருடனை வாஹநமாகக் கொண்டு நடத்துமவனும்	கார் ஆயன்	கரியகோலக் கண்ணபிரான்
என் அம்மான்	எனக்கு ஸ்வாமியானவனும்	என்னுடைய	(வேறு புகலற்றிருக்கிற) என்னுடைய
		கனம் வளையும்	பொன் வளைகளையும்
		கவர்வானே	அபஹரிப்பனே! [அபஹரிப்பது தகுமோ].

* * *—கீழ்ப்பாட்டொன்றும், இப்பாட்டுக்கு மேற்பாட்டுக்களும் வயலாலி மணவாளனையே முன்னிலைப்படுத்திச் சொல்லுவனவாயிருக்க, இப்பாட்டொன்றே அவனைப்படர்க்கையாக்கிப் பேசுவது. அநுபவம் போகிற போக்குக்களாம் இவை.

* * *—திருத்துழாய் மாலையில் மதுவெள்ளத்தாலே சேறு செய்யப்பெற்ற திருமார்வையுடையவனும், கம்ஸனுடைய அரண்மனைவாசலில் புகும்போதே தன்னைக் கொல்லுவதாகச் சீறிவந்த குவலயாபீடமென்னும் மதயானையின் தந்தங்களை முறித்தொழித்தவனும், அடியார்களிருக்குமிடத்தேறச் சென்று உதவுகைக்காகப் பெரிய திருவடியை வாஹநமாகவுடையவனுமான வயலாலி மணவாளன் என்னுடைய நாண் மடம் அச்சம் முதலிய ஆத்மகுணங்களைக் கொள்ளைகொண்டவளவோடு த்ருப்திபெறாமல் கையில் வளைகளையுங் கவர்ந்துகொண்டானே! என்கிறாள். (சு)

1204. கொண்டரவத்திரையுலவு குரைகடல்மேல்குலவரைபோல்*
பண்டரவினணைக்கிடந்து பாரளந்தபண்பாளா!*
வண்டமரும்வளர்பொழில்சூழ் வயலாலிமைந்தா!*என்
கண்டுயில்நீகொண்டாய்க்கு என்கனவளையும்கடவேனே! (எ)

ஸ்ரீ:

மகிழ்ச்சி அறிவிப்பு

சென்னை பகவத்கதா பிரஸங்க ஸபையின் சாசுவத ஞாபக சின்னமாக இந்த வெளியீடு நடத்தவேணுமென்று அடியேனுக்கு எம்பெருமானருளால் எண்ணம் தோன்றினவுடனே 9—1—44 தேதியன்று காலக்ஷேபகோஷ்டியில் இதைப்பற்றி ப்ரஸ்தாவம் செய்தேன். இதுகேட்ட அன்பர்கள் யாவரும் அபரிமிதமான ஸந்தோஷத்தை வெளியிட்டுக் கரகோஷம் செய்து இந்த மனோரதம் தவறாது நிறைவேறவேணுமென்று எல்லாரும் ஏகமனமாக ஆசம்ஸித்தார்கள். அவர்களுடைய மங்களாசாஸனம் மனமார்ந்திருந்தபடியாலே தாமதமின்றியே இக்காரியம் தொடங்கப்பெற்று த்ருப்திகரமான முறையில் நடைபெற்று வருகின்றது.

ஷை ஸபையின் வைஸ் பிரஸிடென்டாகிய ப்ரஹ்மஸ்ரீ நடேச சாஸ்த்ரியாரவர்கள் B. A. B. L, Advocate, ஷை ஸபையின் தலைமைக் காரியதரிசியாகிய திருவாளர் ஏ. ஷண்முக ஸுந்தர முதலியாரவர்கள், ஸ்ரீமான் உ. வே. M. ஸுதர்சநமையங்கார் ஸ்வாமிகள், அப்பா அண்டு கம்பெனித் தலைவர் ஸ்ரீமான் K. நாராயணப்ப நாயுடு அவர்கள், மயிலை ப்ரஹ்மஸ்ரீ பண்டித யஜ்ஞநாராயணையரவர்கள் முதலான பல பிரமுகர்கள் இந்த வெளியீட்டில் விசேஷ அபிமானம் பூண்டிருப்பதனால் இப்பெரிய காரியம் இடையூறென்றுமின்றி விரைவில் நிறைவேறுமென்று திண்ணமாகக் கூறலாம்.

ப்ரஹ்மஸ்ரீ R. நாராயணையரவர்கள் I. C. S., (Rd.) 9, Barnaby Road Kilpauk Madras இப்பெரியார் நம்முடைய அபேக்ஷை சிறிதுமில்லாமலே இக்கைங்கரியத்திற்காக 50 ரூபா உதவியளித்து உத்ஸாஹமூட்டினது மிகமிகப் பாராட்டத்தக்கது.

கால நிலைமைக்கேற்ப இப்பெரிய காரியம் மஹத்தான பரிச்ரமத்தினாலேயே நிறைவேறவேண்டியிருப்பதனால் மற்றும் பல பெரியோர்களும் டொனேஷனைப் பொருளுதவி புரிந்து இதை பூர்த்தி செய்விக்கவேணுமென்று கோரப்படுகிறது.

இங்ஙனம்:

P. B. Annangaracharyar,

10—2—44